உ கணபதிதுணை.

தாயுமானஸ்வாமிக

திருவாய்மலர்ந்தருளிய

திருப்பாடற்றிரள்.

இஃது

காஞ்சீபுரம்

ஆதியப்பமுதலியார்புத்திர[illegible]

அரங்கமன்னாறுமுதலியாரு

சீதைசிறைகளைந்தநகர்,

கஸ்தூரிநாயகர்பௌத்திரர்

தணிகாசலநாயகரும்,

தாயுமானஸ்வாமிகள்

சந்ததியில், ஐந்தாவதுபட்டம்

அம்பலவாணஸ்வாமிகள் மாணாக்கராயும்,

அந்தவாதீனத்துக்குரியவராயுமிருக்கின்ற,

எடுத்துக்கட்டி

அருணாசலநாயனாரவர்களால்

பரிசோதித்து,

திராவிடதீபிகைஅச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது

சாலிவாகனசக௵ ௲௭௱௬௰௫ல், நிகழ்கின்ற சோபகிருது௵ ஆனி

இதன் விலை - ரூ௪௨.

~~1844~~ 1843

செ. பொன்னுசாமிமுதலியாரால்

நிறைவேறியது.

இப்புத்தகம்

திரு. வேங்கடாசல முதலியாரால்

அச்சடிக்கி பிரசுரஞ் செய்யப்பட்டது.

தாயுமானசுவாமிகளது

சரித்திரச்சுருக்கம்.

தென்னாடுகள் பலவற்றினும் சிறந்து விளங்குகின்ற சோழமண்டலத்திலே உள்ள வேதாரணியமென்னும் வடமொழிப் பெயரையுடைய திருமறைக்காடாகிய சிவஸ்தலத்திலே சற்றேறக்குறைய ௱௫௰ - வருஷத்துக்கு முன்பாக வேளாண்குல திலகராயும், குருலிங்க சங்கமபத்தியிலேசிறந்தவராயும், கேடிலியப்பப்பிள்ளையென்பவரொருவர் இருந்தார். அவராலேஅந்தச்சிவஸ்தலவிசாரணை நடத்தப்பட்டுக்கொண்டிருந்தது. அக்காலத்திலே திரிசிரபுரத்திலே அரசாட்சி செய்துகொண்டிருந்த விஜயரகுநாதசொக்கலிங்கநாயகரென்பவர் கேடிலியப்பப்பிள்ளையினுடைய நற்குணங்களையுங் கணக்குவல்லமையையும் சிலர்சொல்லக்கேட்டு அவரை அழைப்பித்துப்பரீக்ஷித்து அவருக்குப்பெரியசம்பிரதி யுத்தியோகம் கொடுத்துத் தம்மிடத்தே வைத்துக்கொண்டார். அந்தக்கேடிலியப்பப்பிள்ளையானவர் சந்ததியில்லாதவரா யிருந்த தமையனாருக்குத் தம்முடைய - ஒரே, பேறாகிய சிவசிதம்பர பிள்ளையென்னுங் குமாரனைக் கொடுத்து விட்டிருந்ததினால் தமக்குச் சந்ததி உண்டாக அருள்செய்யும்படிக்கு அந்தத் திரிசிரபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற தாயுமானேசுரரைத் தெரிசித்துக்கொண்டுவந்தார். அக்கடவுளது திருவருளினாலே ஓராண்பிள்ளைபிறந்தது. அதுகண்டு தகப்பனார் மகிழ்கூர்ந்து அக்கடவுளுக்குக்காணிக்கைமுதலானவைசெலுத்திக் குமாரனுக்குத் தாயுமானவரென்கிற அக்கடவுளது பெயரைக்கொடுத்தார். அந்தத் தாயுமானவர் தந்தகப்பனாருக்கு மிகவும் மனமகிழ்ச்சி யுண்டாகும்படிக்கு அவர் செய்யுமுயற்சி யளவிற்கு அதிகமான கீர்வாணம் தமிழ் முதலிய கல்விப்பயிற்சியிலே சிறந்தவரானார். உண்மை அன்பு பொறுமை அடக்கம் இரக்கம் இவைமுதலிய நற்குணங்களெல்லாம் அவரோடு [illegible]டவே வளர்ந்தன. ஓர் அஞ்ஞானியினது மனமானது நிலையில்லாத செல்வப்பொருளை எப்படி விரும்புமோ அப்படியே இவரது மனமானது தத்துவப்பொருளையே விரும்பிநின்றது. அப்படி யிருக்கையில் திருமூலநாயனார் மரபிலே எழுந்தருளிய மௌனதேசிகர் தாயுமானவரைச்சந்தித்து அவரது அதிதீவிர பக்குவத்தைக்கண்டு வேதாகமங்களின் முடிவான தத்துவப்பொருளை உபதேசித்தருளினார். அதுமுதலாகத் தாயுமானவர் தமது ஞானாசாரியரிடத்தே மிகுந்தபக்தியுடையவராய் அவ்வுபதேசப்பொருளைச் சிந்தித்துத்தெளிந்துதினந்தோறும் தக்ஷிணாமூர்த்திசன்னிதியிலே நிஷ்டைசெய்துகொண்டுவந்தார். பின்பு தாயுமான

ருக்குத் தகப்பனார் தேசவியோகத்தை அடைதலினாலே அவரது லௌகி
கத்தொழிலை அரசனது வேண்டுதல்பற்றி அதில் விருப்பமில்லாதவரா
யிருந்தும் ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. அரசனானவன் அவரை
முதலிலே ஞானவானென்று அறிந்திலனாகினும் கேடிலியப்பப்பிள்ளை
யினும் இவர் யோக்கியரென்று நன்குமதித்து மிகவுஞ் சிறப்புச்செய்து
வைத்திருந்தான். ஆனால் கழைக்கூத்தனுடையகருத்து உடல்காப்பினும்
அவனதுசெய்கை கூத்திலும் எப்படிவைக்கப்பட்டிருக்குமோ அப்படி
யே தாயுமானவரதுகருத்துச் சிவத்திலும் அவரதுசெய்கை லௌகிகத்தி
லும் வைக்கப்பட்டிருந்தன. இப்படிக்குச் சிலநாள்கள் சென்றமேல்
அரசன் அவரிடத்தேவிளங்கிய அபூர்வமான சிலசெய்கைகளைக்கண்டு அவ
ரதுமகிமையை அறிந்துகொண்டான். உடனே விவேகியாகிய அவ்வரச
னுக்கு அவரைக்குறித்து அச்சமும் அன்பும் உண்டாதலால் அவரை
அழைப்பித்து உயர்ந்த ஆதனத்தின்மேல் இருந்தருளப்பண்ணி சுவாமீ
அடியேன் இதுவரையிலே உமது மகிமையைக் கண்டுகொள்ளமாட்டா
தவனாயிருந்ததனாலே உமக்கு ஊழியம் செய்யத்தக்க நான் உம்மை
எனது ஊழியத்திலே வைத்திருந்தேன். ஆயினும் இது பெரிய குற்ற
மாகலின் கிருபாமூர்த்தியாகிய தேவரீர் இக்குற்றத்தைப் பொறுத்தருளி
இன்றுமுதலாக அடியேனால் ஆகவேண்டியவற்றைச் செய்வித்துக்கொ
ண்டு நிஷ்டைக்குக் குறைவுபடாமல் இருந்தருளலாமென்று வேண்டு
தல்செய்தான். அது கேட்டவுடனே தாயுமானவர் திருவுளமகிழ்ந்து
அன்றுமுதலாக அலைவற்ற ஞானயோகத்திலே இருந்துகொண்டு கடவு
ளையும் குருவையும் அற்புதசின்மயமதுரமான தமிழ்ச்செம்பாடல்களைப்
பாடித் துதிசெய்துகொண்டுவந்தார். இப்படியிருக்கையில் அவ்வரசன்
இறந்துபோய்விட்டான். அவ்வரசன்மனைவி தாயுமானவரது திருமேனி
யின்கண்ணேயுள்ள அழகைக் கேள்விப்பட்டு அவரை அழைப்பித்துக்
கண்களிகூர நோக்கிக் கேள்விப்பட்டவளவினும் அதிகமாய் விளங்குத
லால் உளமருண்டு அவரைத் தன்னரசாட்சிக்குத்தலைவராக்கவும் தன்னால்
விரும்பப்பட்டதகாதசெய்கைக்குஉடன்படுத்தவும், தான்கொண்டகரு
த்தைக் குறிப்பித்தாள். அக்கருத்தை அறிந்த தாயுமானவரோவென்றால்
உடனே ஒருபாயவழியினாலே அங்கிருந்து தம்மை விடுவித்துக்கொண்
டு அவள் அரசாட்சியி னெல்லையைக்கடந்து இராமநாதபுரத்துச்சீமை
கு எழுந்தருளினார். இது செய்தி சிவசிதம்பரபிள்ளையின் செவியை
அடைந்ததனாலே அவரும் சிறியதாய் குமாரராகிய அருளையப்பிள்ளையு
ம்தேடிக் கண்டுபிடித்துச் சந்ததி விளங்கவேண்டுமென்னும் கருத்தைக்
கொண்டு திருக்கல்யாணம் செய்யும்படி முயற்சி செய்தார்கள். தாயுமா
னசுவாமிகளுக்கு அதுகாரியத்திலே சிறிதும் திருவுள மில்லாதிருந்தும்
தமையனாரது வேண்டுதலின் மிகுதியினாலே உடன்படவேண்டியதாயி
ற்று. உடனே பத்தினியார் ஓராண்பிள்ளையைப் பெற்றுவைத்துச் சிவபத
அடைந்தார் அந்தப் பிள்ளைக்குக் கனகசபாபதிப்பிள்ளையென்று பெ

யர் இடப்பட்டது. அதுமுதலாகத் தாயுமானசுவாமிகள் கௌபீனத்தோடு பரிசுத்த சிவஸ்தலந்தோறும் சஞ்சரித்துக்கொண்டு இவ்வுலகத்திலுள்ள மனிதர்களெல்லாம் மெய்ஞ்ஞான வொளியைப்பெற்று அஞ்ஞான விருளினின்று நீங்கி உய்யும்படிக்குப் பலவகைப்பட்ட அற்புதமானபாடல்களைச்செய்தருளினார் அருளையரென்பவரும் அவரிடத்தே தத்துவோபதேசம் பெற்றுக் கொண்டு அவரைவிட்டு நீங்காமல் பணிவிடை செய்து கொண்டு வந்தார்.

தாயுமானசுவாமிகள் அகண்டபரிபூரண சச்சிதானந்தசொரூபமாகிய சிவத்திலேகலந்தபின்பு அருளையசுவாமிகள் அகவற்பாவினாலே குருவைத் துதித்துச் சிவயோகத்திலே யிருந்து தமக்குப்பின் பக்குவப்பட்டுவரும் அடியார்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும்படி மேற்படி கனகசபாபதிப்பிள்ளைக்கு அபிஷேகம் செய்தருளினார். இக்குருபரம்பரையில் தஞ்சைமாநகரத்துக்குக் கீழ்பால் அன்னப்பன் பேட்டையிலுள்ள மடத்தில் இப்போது இருக்கின்ற அம்பலவாண சுவாமிகளுடைய அடியார் கூட்டத்திலே ஒருவராகியும் அந்த ஆதீனத்துக்கு உரியவராகியும் உள்ள எடுத்துக்கட்டி - அருணாசலநாயனாரவர்க - ளிடத்திலிருந்த ஆதீன புஸ்தகத்தை அழைப்பித்து ஒப்பிட்டு அச்சிற் பதிப்பித்ததென்றறிக.

தாயுமானசுவாமிகளது சரித்திரச்சுருக்கம்.

முற்றும்.

நூலின் பதிகங்கள்.

முற்றும்.

திருப்பாடலகராதி.

ஆ.

பாட்டு. பக்கம்.

திருப்பாடலகராதி

முற்றிற்று.

சிறப்புப்பாயிரம்.

வெள்ளமருவும்விரிசடையான் வேதவனத்தான்விமலேசன் *
உள்ளமருவத்திருமூலருறவின்மருவுமொருமௌன *
வள்ளலருளுங்கருணைவெள்ளவாரிமடுத்தேமறைசைநகர்ப் *
பிள்ளையவர்களருண்முகிலாய்ப்பெய்தகருணைத்தமிழ்மழையே. (க)

பெற்றமதிலுமூர்த்தியினும்பிரியாப்பெருமான்பேரருளே *
சுத்தமவுனர்மூவர்களாய்த்தோன்றும்வுனிதனைக்கரத்தால் *
குற்றமகலக்கருணையினுல்கொடுக்கவாங்கிக்கொண்டெழுந்த *
அத்தன்றாயுமானவனுமறைத்தகவிதைக்கடிவரவே. (உ)

வேறு.

ஆயுமாகமுமளக்கவருட்கடலைச்சுருக்கியனந்தமெய்ம்மைக் *
கேயுமானந்தமழைபொழியுமறைசைக்கேடிலிக்கிவாய்த்த *
சேயுமானவனுலகச்செய்கைபோன்றதிவரனுச்சிரமியான *
தாயுமானவனுரைத்தானருந்தமிழாலானந்தசதகமாமே. (ங)

வேறு.

வேதவனத்திறையவனையாழினையேயழித்த மென்மொழியாளுடன்
வீரகத்திவிநாயகனைச், சாதகனைச்சந்தானசமயகுருமரபைச்சரிதைமுத
னெறிநான்குந்தாங்குதபோதனனைத். தீதறவேதிருமூலர்சுகர்வாமதே
வர்திருமௌனயவர்மரபிற்சித்தர்கணத்தோனை, நாதனருட்டாய்தாயு
மானவனேடிவர்களுமநிலைநவிற்றிநறைபூர்தொழுவோநாமே. (ச)

வேறு.

வன்னிவனத்துறைவோனைவாழைவனத்திருப்போனை மலர்மாதென்னும்
கன்னிகைபூசித்தோனைக்கடலரசன்முதலர்சர்காண்கின்றோனைப் *
பன்னுமெழுமுனிவருக்கருள்வோனைவணிகன்விடம்பறிக்கின்றோனைச்
சென்னியைந்துமுடையோனைத்திருமருகல்வாழ்வோனைச்சிந்தைசெய்வாம்

விடந்தீர்த்தவிநாயகனைச்சிங்காரவேலவனைவிமலஞானம் *
தொடர்ந்தேத்தென் றருள்கொடுத்த வண்டுவார்குழலுமையைச்சுருதிஞான
படர்ந்தேத்துஞ்சயஞ்சோதிமாணிக்கவண்ணமயபட்டடிவந்தனை *
அடைந்தேத்துமபடிக்கிரங்கித்தடுத்தாண்டமருகலாற்கன்புவைப்பாம்.

பஞ்சசாதாக்கியமாயருவுருவாயெங்குநிறைபரமாய்ஞான *
விஞ்சைகளாலெந்தொழிலும்விகாரமின்றிச்செய்யுநவவிதமாய்வேறற் *
றஞ்செழுத்துக்காருயிராயானைமுதலெறும்பீறுமாவிக்குள்ள *
வஞ்சமறுத்தொளிர்மருகன்மாணிக்கமலையினையாம்வணக்கஞ்செய்வாம்.

வேறு.

ஒருமுகமாய்ப்பலகோடியனந்தசத்தியுருவாகியைந்தொழிற்குமுரி
த்தாய்ஞானத், திருவருளாய்மூவிதமாயொன்றாயைந்தாய்ச்செயசித்தர

வெவ்வுயிர்க்குஞ்சிறந்ததாயாய்த், தரும்விஞ்சையொருநான்காய்விட்டு
நீங்காத்தற்பரமநிலையெல்லாந்தானேதானாய், வருமருளாரமிர்தாய்மா
மருகல்வாழும்வண்டுவார்குழலுமையையவணக்கஞ்செய்வாம். (௮)

வேறு.

பணிவிடைகள்பலகோடிசெய்தானைமகிழ்வித்தேயசக்கரானோர் *
துணிவினெடுஞ்சுவர்க்காதிபதமடைந்தாரொழுபிறவிதோயாநாயேன் *
றினியமநக்கற்கனைந்தேசிவபணிகளநுதினமுஞ்செய்துவாழ்க *
வணிகன்விடந்தீர்த்துய்த்தவாரணமாமுகத்தானைவணக்கஞ்செய்வாம். ௯

வெங்காமவேட்கைமுதலாசைபலகோடியினும்வீழ்ந்தேமாறித் *
தங்காவன்சுழல்கறங்காய்த்தரணியெலாந்திரிந்துழலுந்தவிப்புத்தீர்த்து *
மங்காதபேரின்பவாழ்வளிக்குஞ்சன்மார்க்கமருவிவாழ்கச் *
சிங்காரவேலவனைச்சேவித்தேயவனருளைச்சிந்திப்போமே. (௰)

வேறு

இடைமருதூரிறையவனைமாகாளத்தானை யிலந்துறைமாநகரானையிரு
மருகலானை, விடைமருவுங்கொடியாடுந்திருமறைக்காட்டானைவிளங்கு
நறையூரானைவியனுறைகையானை, புடையமருந்திருவம்பற்றிருப்பனந்தா
ளானைப்புறம்பியமாநகரானைப்பூசுரன்சோமாசி, சடையரவேதொழவச்
சந்தவிர்த்தவிநாயகனைச் சந்ததமும்புந்தியினால் சிந்தனைசெய்வோமே.

வேறு.

இறையவனைத்திருவருளையைங்கரனையறுமுகனையிமையோர்தம்மை *
மறையவரைமாதவரைமுனிவர்சித்தர்கணத்தோரைமார்க்கமெல்லாம் *
அறையுமறையாகமத்தையஞ்செழுத்தையாலயத்தைபறத்தைஞானத் *
துறைநிறைவைமெய்ஞ்ஞானத் தொண்டரையருளோடுந் தொழுது
வாழ்வாம். - வேறு - - (௰௨)

வகுத்திடுந்தெய்வ வணக்கமுங்குருவின் வணக்கமும் வாழ்பாயிர
மாய்த், தொகுத்திடுந்தமிழும் பரசிவவணக்கத்தொகுதியு முன்னதாய்
துதித்தே,பகுத்தறிவதனாலஞ் ஞூற்றெண்பத்தேழ் பாடலுங்கண்ணியின்
பகுதி. மிகுத்திடுமென்னூற் றறுபத்தைந்துடனே விரம்புவோமக
வல்வண்ணமுமே. - - - - (௰௩)

வேறு.

விண்ணூறுந்தேவர்கண்முனிவர்கணங்கள்சித்தர்புகழ்மௌனிவியப்
பால்ஞானத், தண்ணூறுந்தண்டமிழ்மாலை யஞ்ஞூற்றெண்பத்தேழுந்
தாயுமானோன், எண்ணூறுங்கண்ணிகளெண்ணூற் றறுபத்தைந்தகவல்
வண்ணமிரண்டும்பாடி, மண்ணூறுநால்வகைமாந்தர் தமக்காகப்பக்கு
வர்பால்வைத்தானன்றே. - - (௰௪)

வேறு.

சாந்தமுறுந்தவகுணமேவடிவாய்நின்றதாயுமானவன் ஞானத்தலை
மைபூண்ட, வேந்தர்முதன்மேதினிபோ ரெல்லாம்வாழ்த்த விரிதமிழா
லநுபூதியாகவிளைவையெல்லாம்,பாந்தமுறப் பலபாவி னடைக்கிவ்சும்

பைந்தமிழினடிவரவேபதிகமாகச், சேர்ந்ததொகையட்டவணை யதிகார
மவைவாய்ச்சேகரித்ததிருவிருத்தத்திருநாமத்திரளே. - (௧௫)

வேறு.

பரசிவவணக்கமெனுந்திருப்பாட்டும்பாயிரப்பனுவலும்பாங்காய் *
உரைசெய்தபெரியகவிதையாதியதாயுள்ளசெந்தமிழ்மாலையொருங்கே *
திருமுறையொன்றிற்றிகழ்ந்திடுங்கண்ணிசேருமீரடிவண்ணமகவல் *
ஒருமுறையொளிருந்தாயுமானவனுமுத்தமனுரைத்தவுண்மைகளே. ௧௬

வேறு.

பொங்குதிரைக்கடலுடுத்தபுவிகள்பதினாலும்புகழ்மௌனிதிருவருளாம்புணரியினின்மூழ்கிக், கங்குல்பகலற்றதிருக் காட்சியினிற் கலந்தே காசினியிலஞ்ஞானக் கங்குலிரிந்தோடச், செங்கமலக் கரமதனு லருட்படையைத்தாங்கிச் சிவஞானக்களிறேறித் தேசமெலாந்திசழத், தங்குசிவானந்தமெனுமருண்மழையைவாயாற் றாயுமானவன்பொழிந்த தமிழ்த்தொகையிதாமே. (௧௭)

வேறு.

மருவுபரசிவவணக்கமாதியாகமலைவளர்காதலிமேற்பாவைருமீறாய்த், திருநடுவிற்பெரியதமிழ்க்கவிதைவாழ்சச் செந்தமிழ்மூவிருநூறுஞ்செறிகவெங்கும், அருவுருவமுருவருவமாயல்லாம லருமறையாகமநெறியினநுபோகத்தைதக், குருவருளாலருள்வாயாற்றாயுமானேன் கூறுதமிழ்முறையருளாங்கோயிலாமே. - - - (௧௮)

ஆதிபரசிவவணக்கங்காப்பதாக வருட்பெரியகவிதைநடுவாகமேவ, காதலிமாதுமைமீறாங்காட்சியாகக் கருணைவெள்ளக்கவிதைமழைகதிக்கவெங்கும், சோதிசிவானந்தமடன் றாயுமானேன் சொரிதமிழாலநுபோகஞ்சொன்னநூலை, ஆதரங்கூர்ந்தருள்வசத்தாயவனைநாடியநுதினமும் வெகுமதிசெய்தடைவோம்யாமே. - - - - (௧௯)

வேறு.

சிராப்பளிமாமலைமேவுந்தக்ஷிணாமூர்த்தியருள்செய்யவாங்கிப் *
பராபரமுமெந்நாளும்பைங்கிளியும்பலபாவும்பாடிப்பாடித் *
தராதலமானிடர்க்கெல்லாந்தண்ணமிர்தாய்த்தந்தருளுந்தாயுமான *
நிராமயனாருள்பெரியக்கவிதையினுற்பொருளதனை நினைந்துநிற்பாம்.

வேறு.

வையமுழுதுமகிழ்ந்தோங்கமறைநசைநசரும்வாழ்ந்தோங்கத் *
துய்யவடியார்தொழுதோங்கத்துதிக்குமடியார்தொகையோங்க *
வெய்யபிறவிக்கடனீங்கவிசங்கருணைவிளைந்தோங்க *
ஐயன்றாயுமானவனுமறைந்தகண்ணிக்கடிவரவே. (௨௧)

வேறு.

நீடிடுமாதிபரசிவவணக்கநிறைதமிழாதியாய்நடுவே *
கூடிடுந்தமிழுந்தேவைமாதுமைமேற்கூறியதமிழ்க்கவிமீறாய்த் *
தேடிடுந்தந்தைதாய்முதற்கண்ணிச்திரணடுவெழுந்தசெந்தமிழும் *
பாடிடுமகவல்வண்ணமீறெழுதும்பைந்தமிழ்த்தொடையடைந்தே.

நீரணிசடைப்பாணிருமலவாதனிட்களசகளமாய்நிறைவோன் *
சீரணிகருணைத்திருவுருவாகித்திருமறைக்காட்டெழுஞ்செல்வன் [வாய்ப்
ஈரடிக்கண்ணித்தொடையதாய்ப்புனைந்தவிருந்தமிழ்த்தொகைக்கடிவா
பாரணைந்தியங்கவவனருணுவாய்ப்பாடுவேன்றிருவருட்பண்பால். (௨௩)

வேறு

அன்னையாய்ப்பிதாவாய்க்குருவுமாய்த்தேவா யமர்பிள்ளையவர்கள் மெய்யருளால், சொன்னவாக்கியத்தையவனருளறியாத்தொழும்பனே னொருதலைத்துணிவாய், என்னறிவதனுக்கெட்டுமவ்வளவா யியம்பிய நாற்கடிவாவாய்ப், பன்னுசெந்தமிழாலாதிபந்தமதாய்ப் பாடுவேனவ ளருட்பரிவால். (௨௪)

வேறு.

பரசிவவணக்கம்பாட்டொருமூன்றும்பரிபூரணானந்தம்பத்தாம் *
திருப்பொருள்வணக்கமாதிரண்டொன்றாஞ்சுகுபதுசின்மயானந்தம் *
ஒருகுருமௌனகுருபதினைந்தாமருங்கருணாகரக்கடவுள் *
திரமுறுசித்தர்கணமதொகைபத்தாந் தேர்தமிழ்ப்பெயர்வழித்தெரிவே.

ஆனந்தமானபரமொருபத்தாமருட்சுகவாரியீராறும் *
மாநிலமெங்குநிறைகின்றபொருளாய்வருவது மொருபதோடொன்று
ஞானமார்சச்சிதானந்தசிவமுநற்பதினொன்றதாஞானத் [ம்
தேனுறுந்தேசோமயம்பதினொன்றுஞ்சிற்சுகோதயமுமீரைந்தே (௨௫)

அரியவாகாரபுவனமாறைந்துமாறனாகூடுமள்வரம் *
பரியதேன்மும்மும்பத்தாஞானப்பனுவல்பன்மலைபும்பத்தாம் [ல்
திருமலஞானநினைவொன்றுமொன்பானிகழ்பொன்னைமாதனைப்புலியி
விரகினுல்வண்டாதெழுபதோடெட்டாமேவுபத்தாரணமிகவே (௨௭)

வாயினாற்சொல்லற்கரியதும்பத்தாம்வம்பனேனென்பதும்பத்தாம் *
சேபனேயமைபாள்சிவன்செயல்பத்தாந்திகழ்தன்னையென்பதும்பத்
தாயினேனாசையெனுந்திருப்பாடனாற்பதாஞ்செயலுறுஞானம் [தாம்
எபுமாபாடலிருபதோடெட்டாமெனக்கெனச்செயலிலையென்றே. ௨௮

மண்டலமென்னுந்தமிழ்பதினொன்றுமற்பாயப்புலியைம்பத்தொன் பான், விண்டிடுமுடல்பொய் யெண்பதாறனையாம் விரவுமேசற்றலும் பத்தாம், கண்டிடுங்காடுங்கனாயுமோர்மூன்றுங் கனமுறவெடுத்ததேக த்தின், தண்டமிழிரண்டா முகமெலாமொன்றுஞ் சார்பதுநிடமுறுந் தமிழே. (௨௯)

பருவரலாறக்தன்னையாக்குவைபும்பாடினன்பைந்தமிழிரண்டால் *
கருவறுங்கவிதைபேழினுலமைத்தான்கற்புறுசிந்தையாங்கருத்தை *
வருமலைவரர்காதலிக்கிருநான்குவண்டமிழ்யமூத்தினன்வாக்கால் *
பெரியநாயகி யகிலாண்டநாயகியைப் பேணினாளிருதமிழ்ப்பிணைபால்.

தந்தைதாயேழாம்பெற்றவட்கென்றேசாற்றியதமிழ்ப்பதினென்றும், எந்தையார்கல்லாவீழன்றுமுப்பதுவாமெண்ணியபராபரக்கண்ணி, நந்திருப்பாடன்மூன் றூற்றெண்பத்தொன்பா னல்லடைங்கிளியைம்பத்தெட்டாம், சிந்தையாரொந்நாளோரிருநூறிந்சேர்தமிழ் முப்பதோடிரண்டே. - - - - - (௰௧)

காண்பேனோவென்றுந்தமிழ்முப்பத்தேழாங் காட்சியுங்காண்பதுங்கா
ஆணவமகற்றுங்கவிதையெழுவேழுமாகாதோவென்றருளியதாம் [படா
வீண்பொழுதகலவில்லையோஞானவிளக்கெனவிளம்பியதாரும் *
பாண்பிறப்பகற்றவேண்டாவோவென்றுபாடியபைந்தமிழாறே. (௰௨)

நல்லறிவேயெனுந் தமிழொருநான்காநாடுதே - யே-வே -றே-னேயாய்ச், சொல்லியவினுவலவகைக்கண்ணிக் தொகைபனிரொண்டாந்கோய்மோப், புல்லியவினுவலந்ததாம்-யோ - நோ - புகல்வினுவேழதாம்புணர்ந்தோர், வல்லிதாய்நின்ற நில்லொருமூன்று மறைசைநாயகன்வகுத்ததுவே. - - - - (௰௩)

பாய்புனற்பொன்னிவாத்ததாய்ஞானப்பகிரதியெனுமருட்பனுவல் *
வாயினுற்சொரிந்தான்பாவினம்பலவாய்வகுத்தினநுபவம்வைத்தே *
ஆய்பவன்பாடுகின்றதற்கைந்துமானந்தக்களிப்புக்கையாறும் *
தோய்வுறவகவல்வண்ணமும்வகுத்தான் றென்மையன்றாயுமானவனே.

வேறு.

நீருநெருப்புநெடுங்காற்றுநிறைபூதலமுநீள்விசும்பும் *
சேருங்கதிருந்திசழ்மதியுஞ்சிவத்திரளுந்திருவுருவா *
யாருங்கருணைக்கடன்மூழ்கியருந்தியெழுந்தேயருள்வாயால் *
சாருங்கண்ணித்தமிழ்மழையைத்தந்தான்றாயுமானவனே. (௰௪)

வேறு.

மகபதிமாலயனமரர் தமக்குமரிதாய மந்திரமாலிகைமூலர் மரபிலெழுமௌனி, சுகர்வாமதேவர்முதன்ஞானிமார்சனங்கள்சுத்தர்நித்தர்முத்தர்சித்தர்பத்தருங்கொண்டாட, இகவாழ்வும்பரகதியுமெவ்வுயிர்க்குமீயுமீசனருளாயெழுந்தயெழிற்றாயுமானேன், சகமேழுமணக்குமருட்டண்மலரார்புனைந்ததர்மீரடிக்கண்ணித்தமிழ்த்தொகையிதாமே. (௰௫)

வேறு.

தந்தைதாய்முதலாகவகவல்வண்ணமீருகத்தாயுமானேன் *
விந்தையாயநுபோகவிதமெல்லாம்விபகாரவினேதமாக *
எந்தையார்திருவருளாவிரடிக்கண்ணிகளாகவியமபுநூலைச் *
சிந்தைநோய்தீர்த்தருளைச் சேர்ந்தொளிரவனுதினமுஞ்சிந்திப்போமே.

வேறு.

செப்பபாசந்திரிக்கோமரின்செவ்வனைசிக்கென்மனைமசைவாம்வானைச்

சிறந்தஞான, ஐயனருளாண்டவனை மௌனஞான வநுபோகமருந் தமிழாலருளின்வாக்கால், வையமுய்யவருக்தானைத்தாயுமானவரோதய னைமறவாமல் வாழ்த்திவாழ்த்தித், துய்யதிருவகவலருள் விலாசநீதி சூழ் பலநூலொருத்தானைத்தொழுதுவாழ்வாம். - - (௩௮)

வேறு.

திருவேதவனமதனிற்றிருவவதாரந்தான்செய்துதிருவருளுருவாய்த் திகழ்தாயுமானோன், பொருளுருவாஞ்சிவானந்தபூரணவிலாசப்பொலிவாகியெழுந்தருளிப்பூரணமெய்ஞ்ஞான, அருளுருவாமநுபோகசம்பிரதாயத்தை யருள்வாக்காலருந்தமிழா லமைத்தருளுமதற்கு, குருதுதிதெய்வதைவணக்கம்வாழிவரலாறுங்கூறியபாயிரங்கூறிக்கூறுவதாங் குணமே. - - - - - (௩௯)

வேறு.

அடிவரவாதிகுருதுதிவாழியரியதேவதைவழிபாடும் *
நெடியபாயிரமும்பரசிவவணக்கநிறைவையுஞ்சிந்தனைநிகழ்த்தி *
வடிதமிழ்வகுத்தவள்ளலைநினைவில்வைத்தருட்கவிதைமாரியினைப் *
பொடிமணிபுனைந்தவன்புடனிதமும்போற்றுவார்புநிதமாதவரோ. (௪௰)

சைவசித்தாந்தசமயசந்தானத்தபோதனர்நடுநிலைசார்ந்தோன் *
ஐவகைத்தொழிலுமத்துவாவாறுமாறுதாரமுங்கடந்தார்வோன் *
மெய்வகையாயவநுபவநிலையைவிரிதமிழ்க்கவிதையால்விரித்தே *
செய்தவந்தெரித்த தாயுமானவனைத் தினந்தொறுஞ் சிந்தனைசெய்வாம்.

வேறு.

மாயுமாபாதகமுமறுபிறப்புந்துறவறத்தான்மாறவிசி *
ஆயும்வேதாகமத்தாலருள்வலியாற்சிவஞானவாழிமூழ்கி *
பாயுமால்விடைப்பரமன் பலநிலையும்பார்த்துணர்ந்துபரத்தினொன்றும் *
தாயுமானவனுபயசரண்மலராச்சிரமதனிற்றரித்துவாழ்வாம். (௪௨)

இராஜராஜாங்கவாக்காயெடுத்தவடிமடங்கியிளைத்திடாமல் *
தராசுமுனையாய்நிருவிச்சாயாமலநுபோகத்தமிழைப்பாடும் *
பராவுசிவமயமாகிப்பரஞானவுபயநெறிப்பரிமேலேறி *
நிராமயதேயத்தேகிநிறைதாயுமானவனைநினைந்துவாழ்வாம். (௪௩)

வேறு.

மறைக்காட்டுமெய்ஞ்ஞானமாணிக்கமலையைமௌனிதிருவருளாற் றில்வளருநவமணியை, கறைக்காட்டுமெஞ்ஞானக்களிம்பற்றகடலைக்காசினியைமறந்தருளைகலந்தகதிரொளியை, நிறைக்காட்டும் பேரின்பநீணிலத்துநிதியைநீடியபேரானந்த நெடுங்கடல்வாய்நிறைவை, குறைக்காட்டுமஞ்ஞானக் குறும்பறுக்குங்கோனை குணத்தாயுமானவனை கும்பிடுவன்குறித்தே. - -

வேதவனந்தனின்முளைத்தமெய்ஞ்ஞானவித்தைவேதமாகமஞ்சாந்த மேதினியின்விளைவை. ஆதவன்போலெங்குமொளிபளிக்குமருட்சதிரை யருண்மவுனிதிருவருளையள்ளியுண்டவறிவை, மாதவமேதிருவுருவாய் வந்ததிருவருளைமகாமுனிவனருளுதன்வணங்கியமெய்வாழ்வைச், சாத கருக்காதரவாய்த்தழைத்ததனிமுதலைத் தாயுமானவனருளைச்சந்ததமுந் துதிப்பாம். - - - - - (சரு)

வாய்த்தபெருங்கருணைமயன்திருமூலவரதன் மந்திரமாலிகைபுனைந் தோன்மரபினெழுமௌனி, ஆய்ந்ததிருவருணிறைவையக்ஷயபாத்திரம தாக்கியதிற்சிவஞானவநுபோகவமுதை, காய்ந்தபிறவிக்கோடைகாலம லைதணிக்கக்கருணைகலந்திடுமேதிவாங்கரமதனல்வாங்கி, தோய்ந்தசிவா னந்தமுறையருந்துசிவஞானத் துறைதாயுமானவனைத் தொழுதெழு வோம்யாமே. - - - - (சசா)

வேறு.

பாண்டவர்ஆதனுமயனுந்தேடரியமெய்ஞ்ஞானப்படிவர்தாங்கி *
ஆண்டசிவனருளாழிமூழ்கியெழுந்தொளிர்மௌனியருளைவாரி *
வேண்டல்வெறுப்பனைத்தறவிழுங்கியருந்தவஞானவீரனாகி *
நீண்டசிவானந்தமதினிறைதாயுமானவனை நினைவோம்யாமே. (சஎ)

வேறு.

வாரிசூழ்புவனமெலாம்வாழ்த்தமகிழ்ந்தோங்கி மகாமௌனதே சிகனைமறவாதமனத்தான், பேரின்பவாழ்வினுறும்பெருந்தகைமாதவ த்தோன்பேரின்பநாடாளும்பேராளன்பெருமை, யாரறிவாரவன்பெரு மையவன்றனேயறிவானவனருளையணைந்தவருமறிவார்களதனல் சிறிய செந்தமிழ்முசமாய்த்திகழ்தாயுமானான் சேவடியையநுதினமுஞ் சிந் தனைசெய்வோமே. - - - - - (சஅ)

வேறு.

மறைநசைநாயகனேஞானசாதகனுமௌனியேயருட்குருவரதன் *
குறைவிலாமூலர்குழாங்களேகுழாங்கள்சோதிலாஞானமேகுலமாம் *
நிறைபரம்பொருளும்பனையுமேதெய்வநீடுபேரின்பமேயின்பம் *
அறையும்வாச்சியத்திற்றாயுமானவன்வாக்கநுபவமநுபவமாமால் (சகூ)

ஞானதேசிகனேமௌனியாமவனைநம்பியதொண்டரோதொண்டர் *
ஈனமின்மௌனிமரபினேசொல்லாமிறையருளெய்தினோரியம்பின் *
ஆனசற்குருவையணையமாதவங்களாற்றினோர்தவமருந்தவமாம் *
தானவனுக்குஞ்சற்குருவாய்க்கத்தவஞ்செய்தோன்றாயுமானவனே. ருய

தென்மறைக்காட்டினெழுந்தருண்மௌனிதிருவருட்புணரியிற்றி ளைத்தே, பொன்மலைவில்லான்முப்பொருள்விலாசப்பொலிவினைவிசார ணைபுரிந்தே, [illegible]

யெனக்கழறும், தன்மயத்தமிழைச்சந்ததந்துதிக்குந்தவத்தரோதாயுமானவனே. - - - - - - (௫௧)

அங்கையினெல்லிக்கனிபோலஞானவநுபவநிலையெலாமறிவோன், துங்கமாதவருக்கருணிலைதோன்றத்தொகுத்தமிழ்மாரியைச்சொரிவோன், திங்கள்வேணியனுமௌனதேசிகனைத்தினந்தொறுஞ்சிந்தனைசெய்வோன், தங்குபேரின்பவாழ்வினையுடையோன்றாயுமானவனென்னத்தகுமே. - - - - - - (௫௨)

வாமதேவனாயுஞ்சுகனாயுஞ்சவர்மரபையும்பொருளெனமதிப்போன் *
காமமாதியதாமிருவகையைந்துங்கடந்தவன்கடவுளர்கோமான் *
பூமகள்கொழுநனயன்முதற்றேவர்புண்ணியர்பதமெலாம்பொருந்தான்
சேமமாரின்பவாழ்வினையுடையோன்றிருவருட்டாயுமானவனே. (௫௩)

வேறு.

பரங்கிரிக்கோன்பாலகனைமௌனஞானபண்டிதற்குமுரியவனைப் பரமென்றெங்கும், கரங்குவிக்குங்காதலனைத்தாயுமானோன்காட்டிய சன்மார்க்கநெறிநிலைக்கொள்வானை, வரங்கொடுக்குஞ்செவ்வேளையாசானைப்பரசிவனைமதித்துட்கொண்டே, இரங்கிநிற்குமருட்குருவையிறைஞ்சியவன்பாடலையுமியம்புவோமே. - - - (௫௪)

சண்முகவேள்சந்ததியைத்தாயுமானோன்சகோதரனைமௌனகுருதயவால்ஞானக்,கண்ணையருளுருவாகுந்தாயுமானோன்காரணகாரியமதனூற்கைக்கொள்வானை, விண்முதலாமைம்பூதநாதமீறாய் விளங்குதவவிதந்தோயாவிளைவிற்றோய்ந்தே, பண்ணினுறும்யசுத்துவம்போய்ப்பதியாய்நின்றபான்மையன்யாக்கருந்தமிழைப்படிப்போம்பாமே (௫௫)

மறைசைநகர்வாழ்பெரியஞானவேந்தன் மறைக்காடற்கன்புநிலைவளர்க்குஞ்சாந்தன், நிறைவினொடுகுறைவுமறநிறைந்தநீதனீண்மௌனகுருவருளைநீங்காநேயன், இறையவருந்தருமுதவி யெல்லாந்தேர்ந்தேயெச்செயலுமிறைசெயலென்றியம்புமேகன், நறைசையிற்பூப்பணிவிடைசெய்தீசற்காக்குநாதனருளாண்டவனைநாடிவாழ்வாம். (௫௬)

சரியைநெறியொருநான்குந்தாங்குவானைசீசாலோகமுதனான்குஞ்சாருவானை, கிரியைநெறிநான்குமுறுங்கேண்மையானைக் கிளர்யோகநெறிநான்குங்கிடைத்தார்வானை,பரஞானநெறிநான்கும்படர்ந்தாய்வானைப்பதினாறாய்வருநெறியும்பாய்ந்தோய்வானை, அரிதாயசெயலூறுதிவாய்நிற்பானையருளானபெருந்தகையையணைவோம்யாமே. (௫௭)

வேறு.

இலந்துறைநகரிலெழுந்தசற்குருவேயிணையிலாஞானதேசிகனும் *
குலந்தனைக்கூறிலவனிடத்தமருங்குழாங்களேதிருவருட்குலமாம் *
மலந்தலைசாய்க்கும்போதனுசத்திவாழ்மனையவனருள்வாயால் *
திலந்தனிலவனுக்கொப்புபாவாதநிசமித்துமோ யறிஞர்நெஞ்சகமே.

காசியேமுதலாய்க்கன்னியாகுமரிகடலளவாகவேகலந்த *
தேசிகர்நிறைவிற்சைவசித்தாந்தத்திறத்திலிப்போதிருப்பாரில் *
ஆசிலாச்சுவர்க்கபுரத்தருட்குருவேயதிசமாமவன்றனக்கிணையாய் *
மாசிலாமறைசைத்தாயுமானவனைமதிக்கலாம்வழுத்தமற்றிலையே. (௫௯)

கருத்திருவருக்குமொன்றதாமவர்கள்கழறியவாக்கியங்காணில் *
பொருத்துறுந்தமிழுமநுபவப்பயனும் பூரணவிலாசமாய்ப்பொலியும்
ஒருத்தருக்கொருத்தருயர்வுதாழ்விலையாவன்மையாமநுபவவொழுங்கால் *
திருத்துமாகாளச்செம்மலுமறைசைச்செம்மலுஞ்சரிதெரிந்தோர்க்கே.

வரந்தருமறைசைத் தாயுமானவனுமாகாளத்தெழுந்தமர்குருவும், புரந்திடுங்கருணைப்பொருளதாவெழுந்தோர் போதனுசத்தியைப்புணர்ந்தோர், சுரந்திடுங்கருணைத் தமிழ்மழை சொரிந்தோர் சூனிய வெளியிடைதோய்ந்தோர், நிரந்தரஞான சைவசித்தாந்த நெறியின ருபயதாணிணைவாம் - - - - - (௬௧)

தமியருக்குரித்தாய்வருமிருதிறருந்தாய்பிதாகுருதெய்வர்தானும் *
உமிழ்முளைதவிடாயுயர்மலஞ்சாரவுத்தமரோர்ருவருமே *
அமிர்தெனஞானவநுபவத்திரளையருளியவருந்தமிழணை *
நிமிஷமாயினுஞ்சிந்தனைசெய்தன்னேனை நினைவனேவிளையநெஞ்சுகந்தே

அழகியதிருச்சிற்றம்பலகுருவுமவனருள்பெறுமிருவர்களும் *
மழைமுகிலென்னவருட்கவிமாரிவழங்கியதாயுமானவனும் *
குழைவுதந்தெமையாள்குரவராமவர்கள்கூறியதமிழருட்குழாமாம் *
விழைவுறுஞானசந்தானருங்குருவாம்வேறொருவனைவிரும்பேனே (௬௩)

வேறு.

ஊழிதோறூழியெனக்குறுதுணையாய்நிரந்தரமாயொளிருமீசன் *
வாழிமாமருகலுறைமாணிக்கமலையனையவரதனெனச் *
சோழியவேளாளர்குலத்துற்பவிக்கத்தொகுத்தழைத்தேதொழும்பனுக்கி *
ஏழுலகுக்கொருமுதலாய்ச்சுவர்க்கபுரத்திருந்தானையிறைஞ்சிவாழ்வாம்

எனைத்தடுத்தாட்கொண்டசிவன்மருகலானெம்பெருமானேழைபாகன்
தனைத்தகுந்தாரில்லாதானெனக்குமொருதெய்வந்தானேதானாய் *
அனைத்தினுக்குமனுகூலன்சுவர்க்கபுரத்தரசனுமமர்ந்தேநாயேன் *
நினைத்தபடிகூட்டிமுடித்துபதேசித்தருணிலைநவினிறுத்தினனே (௬௫)

ஆதலினாலெனைத்தடுத்தாட்கொண்டசிவன்மருகலானவனேபின்னும் *
போதகனாய்ச்சுவர்க்கபுரத்தெழுந்தருளியிருந்தறிவைப் போதித்தேபின்
வேதமுதலாகமத்தின்பயனறிவித்தருஞானவிளைவால்பாலத் *
தீதகலச்செய்தபிரான்செய்தநன்றிமறவாமற்சிந்திப்பேனே. (௬௬)

மழவிடையானானந்தவாரியிலேபடிந்தருளைவாரிவாரிப் *
பழமறையாசமப்பயிர்கள்படர்ந்தோங்கயருணீரைப்பாச்சிப்பாச்சித் *
தழலனையபிறப்பிறப்பிற்றாழுமுயிர்ப்பயிர்க்கருளைத்தந்தாட்கொள்ளும்
அழகியசிற்றம்பலவனடியிணையையநுதினமுமகத்துள்வைப்பாம்(எ)

வேறு.

தக்கபரிபூரணமாயெழுந்தபராபரத்தைச்சகளநிஷ்களசகளாஅகளமெனுந்தனியை, விக்கிரகவடிவுகளாய்விளங்கியமெய்வடிவை வேதாந்தஞ்சித்தாந்தம்விளங்கியமெய்ப்பொருளை, நிக்கிரகமநுக்கிரக நிகழ்த்தியநின்மலத்தை நிராமயமா யொளிவெளியாய் நின்றிடுநிச்சயத்தை, துக்கசுகந்தோயாதசுயஞ்சோதிச்சுடரைச் சுவர்க்கபுரத்தெழுஞான சூரியனைத்தொழுவாம். - - - - (சூஅ)

சித்தாந்தச்சிவசைவச்சமயகுரு மரபைத்தேசொளிருஞ் சந்தானத்தேசிகர்சேவடியைச், சத்தாமெய்த்தவவேடங் கதிக்கவருங்குழாத்தைக் காரணகாரியங்காணுக்கருணையன்மெய்வடிவைச், சக்காருஞ்சிவபத்தசரணங்கடிருமரபைத்தாணுவினால் வருமுதவிதனைமறவாதவனைச், சுத்தாங்கமாகவருஞ்சுவர்க்கபுரத்தானைதொண்டர்குழாத்திரளினொடுந் தொழுதுமகிழ்வோமே. - - - - (சூகூ)

மாகாளமிலந்துறையைச்சுவர்க்கபுரமாகவகுத்ததனிற்சிவஞானவரோதயனாய்மருவித், தேகாதிப்ரவஞ்சத் திமிரமெலாமகற்றுந்தினகரன்போன்மலமகற்றுந்திருவருட்செங்கதிரா, யோகாநுபூதிக்குந்தாரகமாயொளிருமுயர்ஞானவநுபோக வுயர்வையருள்வாக்கால், ஆகாயமனைத்தினையுமடக்கிநிற்குமாபோலருளியவாக்கியமறிவா னந்தசமுத்திரமே. (எய)

பொன்னவிருஞ்சுடர்மகுடப்புரவலன்மாதவத்தோன்போதகனாய்ச்சுவர்க்கபுரப்புவியினெழும்புநிதன், அன்னவன்வாக் சசனாலேயருண்மழையாய்ப்பொழிந்தவறிவானந்தக்கடலையதிகாரமூன்றாய்ச்,சொன்ன சகசானந்த வுல்லாசவாழ்வுஞ் சூழ்ந்தமலபரிபாக வாழ்வினொடுந்தொகுத்த, உன்னரியவுபதேசக்கிரமமூவகைக்கு முயர்கவிதைபதினொருநூறுடனைம்பத்தேழே - - - - (எக)

வள்ளலெனத்தமிழ்மாரிவழங்குமருள்வாயான்மாகாளமிலந்துறையில்வருபரமகுரவன், தென்னுதமிழ்க் கிளிவிடுதூ தாதியாய்ப் பலநூற்செய்துபலநாம நிலைசெய்துதுகைசெய்தே, விள்ளரியமெய்க்குருவைச்சீடனானவனும்வினாவிமகிழ்தலுங்கூறியறிந்தழுங்கல்விளம்பி,அள்ளிமகிழ்ந்துணவறிவானந்தசமுத்திரமுமரியதிரிபதார்த்ததீபமுமருளினானே. (எஉ)

ஆசமத்தினெழுந்த சிவானந்தமயப்பொருளை யழகியசிற்றம்பலவ னாகியவற்புதத்தைச், சோகம்பாவிக்கினெழுஞ் சூனியமாஞ் சுடம்பைச் சுத்தவெளிவெறுவெளியாய்ச் சூழ்ந்தபரவெளியைப், போசமதிலழுந்தாத பூரணவாரிதியைப்புநிதர்திருமாசாளப் பூவினைழும்பொலிவை, ஏசநாயசகுருவாயெழுந்தருளுமிறையையேயுலகும் புகழமகிழ்ந் திறைஞ்சி நிற்போமியாமே. - - - - (எங)

நலந்தழையுமிலந்துறையானழகிய சிற்றம்பலவன் ஞானமுபதேசிக்கஞானநிட்டாபரராய்த், திலமளவுஞ்சாங்சமிலாச்சிவ ஞானகுருவாய்த் திகழேசநாயகசின்மயரச்சனிட்டராகி, நிலம்புகழ மகிழ்ந்தெழுந்தநிறைஞானபரராய்நேசிக்குஞ்சரியைகிரியாயோகஞானப், பலந்தழையச் சுவர்க்கபுரத்தெழுந்தருளியிருந்த பராயோகி வயித்தியலிங்கப் பரகுருவைப்பணிவாம். - - - - (எச)

எறிதிரைநீர்க்கடல்சூழ்ந்தவேழுலகும்வாழ்கயேகபரிபூரணமாயிருக்குமிறைவாழ்சக், குறிகுணமற்றொளிர்ஞானக்குழாமனைத்தும்வாழ்சக் குருலிங்கசங்கமமாங்கூட்டமெலாம்வாழ்க, அறிவானந்தக்கடலு மருளுமிகவாழ்கவதினாற்றுட்பதினைந்தாமருட்டுறையும்வாழ்க, நெறிடருஞ்சிவனேசர்நீடூழிவாழ்க நேரியனுஞ்சுவர்க்கபுர நிமலனும்வாழ்ந்திடவே. - - - - - (எரு)

ஆதிரடுவந்தமுருவகண்டிதமும்வாழ்க வாரணமுமாகமமுமருணிறைவும்வாழ்க, மாதினொடுங்கலந்தகலாவானவனும்வாழ்க மாலடனாந்திரனிமையோர்மகாமுனிவர்வாழ்க. போதகராஞ்சந்தானப்புரவலரும்வாழ்கபுண்ணியருஞ்சமயகுருப் புனிதரெல்லாம்வாழ்கத், தீதகன்றசித்தர் முதற்றிருமௌனிவாழ்கத் திருமறைக்காட்டெற்றை முதற்செந்தமிழ் வாழ்ந்திடவே. - - - - - (எசு)

தேனிதழித்தார்புனைந்தோன் சிவாலயங்கள்வாழ்கத்திருநீறுங்கண்டிகையுந்திருவருளும்வாழ்க, ஆனினமுமந்தணரு மஞ்செழுத்தும்வாழ்கவாசமசித்தாந்தசைவத்தருந்தவரும்வாழ்க, நானிலமு மன்னவரும் நற்குடியும்வாழ்க நாமகளுநற்கமலைஞாலமதில்வாழ்க, வானின்முகின்மும்மாரிவழங்கிவையம்வாழ்க மனுநீதிதருமநெறி மாதவம்வாழ்ந்திடவே. - - - - - (எஎ)

அந்திநிறத்தாரமுது மம்பிகையும்வாழ்க வைங்கரனுமறுமுகனுமருந்தவரும்வாழ்க, நந்திமுதற்கணத்தோரும் நால்வருமேவாழ்க ஞானகுருமுதற்கல்லாலன்னீழல்வாழ்கப். பந்தமற்றோர் பசுத்தொகையும் பதித்துவமாய்வாழ்கப் பாசமற்றுநேசமுற்ற பத்தரெல்லாம்வாழ்கச், செந்தமிழாலருநூலைச்செய்தோரும்வாழ்கத் தென்மறைசைப் பிள்ளை முதற்றெளிதமிழ்வாழ்ந்திடவே. - - - (எஅ)

தவவிகமாயைந்தொழிலுநடத்திவிப்பாய்போற்றி ஞானபரிபூரணமாய்நண்ணிநிற்பாய்போற்றி, சிவமயமாந்தேசிகராய்ச்செறிந்தொளிர்வாய்போற்றி சிவலிங்கமாயெழுந்த செழுஞ்சுயம்பேபோற்றி, தமபவமாந்திருவேடர்க்கனுவெடிப்பாய்போற்றி சராசரமாமுயிரையெல்லாந் தாங்கிநிற்பாய்போற்றி, பவமகன்றபசுக்கருளைப் பதிவிப்பாய்போற்றி பாதகரைப்பரிந்தாளும்பரசிவமேபோற்றி. (௭௯)

மதமனைத்துங்கரந்ததுவாய்வாழ்பவனேபோற்றிமகாதீதமாகியெங்கும்வதிந்தவனேபோற்றி, முதல்வனுமாய்மூவகைக்கு முன்னவனேபோற்றி மூவிதமாமுயிர்க்கறிவாய்முளைத்தவனேபோற்றி, பதவிமுதலிசமுத்திப் பாருடையாய்போற்றி பாரித்தமுச்சகமேபணியநிற்பாய் போற்றி சிதம்பரமாரூர்காசிவிஷேத்திரனேபோற்றிதேசுருமாருயிர்க்குயிராஞ்சிற்சிவமேபோற்றி. (௮௰)

சிறப்புப்பாயிரம்.

முற்றிற்று.

இந்தக்குருஸ்துதிசிறப்புப்பாயிரச்செய்யுள் (௮௰)ம், தாயுமானஸ்வாமிகள் திருவடியடியார்மரபில்அரங்கொத்தைசுப்பநாயகஞவர்கள் அருளிச்செய்ததென்றறியவும்.

அருள்வாக்கிய அகவல்.

திருவளர் கருணைச் சிவானந்த பூரணம்
ஒருவரு மறியா வொருதனிச் சித்து
நவந்தரு பேதமாய் நாடக நடித்துத்
பவந்தனை நீக்கிப் பரிந்தருள் பராபரம்
கன்னலுங் கருத்துங் கதிரொளி போல
நண்ணிட வெனக்கு நல்கிய நன்மை
ஒன்றாய்ப் பலவா யொப்பிலா மோனக்
குன்றாய் நிறைந்த குணப்பெருங் குன்றம்
மண்ணையும் புனலையும் வளியையுங் கனலையும்
விண்ணையும் படைத்த வித்திலா வித்துப்
பந்த மனைத்தையும் பாழ்பட நூறியென்
சிந்தையுட் புகுந்த செழுஞ்சுடர்ச் சோதி
விள்ளொணா ஞானம் விளங்கிய மேலோர்
கொள்ளை கொண் டுண்ணக் குறைவிலா நிறைவு
தாட்டா மரைமலர்த் தாணினைப் பவர்க்குக்
காட்டா வின்பங் காட்டிய கதிநிலை
வாக்கான் மனத்தான் மதித்திட வரிதென
நோக்கா திருக்க நோக்கிய நோக்கம்
ஆதியா யறிவா யகண்டமா யகண்ட
சோதியாய் விரிந்து துலங்கிய தோற்றம்
பரவெளி தன்னிற் பதிந்தவென் றுளத்தின்
விரவி விரவி மேற்கொளும் வெள்ளம்
சுட்டுக் கடங்காச் சோதி யடியார்
மட்டுக் கடங்கும் வான்பெருங் கருணை
எல்லைக் கடங்கா வேதப் பெருவெளி
தில்லைப் பொதுவிற் திருநடத் தெய்வம்
வாதவூ ரெந்தையை வரிசையாய் விழுங்கும்
போதவூர் மேவுசீர்ப் பூர விளக்குச்
சகளை யகண்டத் தூவெளி யெல்லாம்
திகழவே காட்டுஞ் சின்மய சாக்ஷி
செழுந்தமி ழப்பரைச் சிவலிங்க மாகி
விழுங்கிய ஞான வித்தக வேழம்
எழிறரு பட்டினத் திறைவனை யென்றும்
அழிவிலா விலிங்க மாக்கிய வருதி
சாந்தபூமி தண்ணருள் வெள்ளம்
ஆர்ந்த நீழ லசையாக் ககனம்
பரவுவார் நெஞ்சிற் பரவிய மாட்சி
இரவுபக லற்ற வேகாந்தக் காட்சி

ஆட்சியோ விருக்கு மகிலந் தனக்குச்
சாக்ஷியா யிருக்குந் தாரகத் தனிமுதல்
ஆணும் பெண்ணு மலியுமல் லாததோர்
தாணுவாய் நின்ற சத்தாந் தனிச்சுடர்
எள்ளு மெண்ணெயு மெப்படி யப்படி
உள்ளும் புறம்பு முலாவிய வொருபொருள்
அளவிலா மதந்தொறு மவரவர் பொருளென
உளநிறைந் திருக்கு மொருபொற் பணிதி
துள்ளு மனப்பேய் துடிக்கத் தறிக்கக்
கொள்ளு மோனவாள் கொடுத்திடு மரசு
பெரிய பேறு பேசாப் பெருமை
அரிய வுரிமை யளவிலா வளவு
துரிய நிறைவு தோன்று வதிதம்
விரியுதல் லன்பு விளைத்திடும் விளைவு
தீராப் பிணியாஞ் ஜெனன மறுக்க
வாரா வரவாய் வந்தசஞ் சீவி
ஆலைக் கரும்புபா சமுதக் கட்டிநீள்
சோலைக் கனிபலாச் சுளைகத லிக்கனி
பாங்குறு மாங்கனி பாறேன் சருக்கரை
ஓங்குகற் கண்டுசேர்த் தொன்றாய்க் கூட்டி
அருந்திய ரசமென வறிஞர் சமாதியிற்
பொருந்திய வின்பம் பொழிசிற் சுகோசயம்
எங்கணு நிறைந்த வியல்பினை யெனக்குச்
செங்கையால் விளங்கத் தெரித்தமெய்த் தேசிகன்
தன்னையறி வித்துத் தற்பர மாகி
என்னுளத் திருந்தரு ளேக நாயகன்
அடிமுடி யில்லா வரும்பொரு டனக்கு
முடியடி யிதுவென மொழிந்திடு முதல்வன்
மெய்யலான் மற்றவை மெய்யல வெல்லாம்
பொய்யென வறியெனப் புன்னகை புரிந்தோன்
அருளும் பொருளு மபேதமா யிருந்தும்
இருதிற னென்னு மியலுமுண் டென்றோன்
அருளெனக் குண்டே லருளும் வெளிப்படும்
பொருண்மயந் தானேபொருந்துமென் றுரைத்தோன்
சத்தசத் திரண்டு தன்மையுந் தானே
ஒத்தலாற் சதசத் துனக்கென வுரைத்தோன்
ஆணவ மறுவிடி னருளுறு தென்னக்
காணரு நேர்மையாற் காணவே யுரைத்தோன்
சென்மமுள் ளளவுந் தீரா திழுக்கும்
கன்மம் விடாதெனக் காட்டிய வள்ளல்

உளதில தெனவு முற்தலான் மாயை
வளமில தெனவும் வகுத்தினி துரைத்தோன்
இல்லறத் திருந்து மிதய மடக்கிய
வல்லவன் றானே மகாயோகி யென்றோன்
துறவறத் திருந்தஞ் சூழ்மனக் குரங்கொன்
றறவகை யறியா னஞ்ஞானி யென்றோன்
இறவா மனந்தா னிறக்க வுணர்த்திப்
பிறவா வரந்தரும் பேரறி வாளன்
அத்தன தருளா லனைத்தையு மியக்கும்
சுத்தமா மாயையின் றோற்றமென் றுரைத்தோன்
இருண்மல மகல விசுசந்ததி லழுத்தும்
பொருளருட்டிரோதைப்பொற்பெனப்புகன்றோன்
வீறு சிவமுதல் விளம்பிய படியே
ஆறும னாதியென் றறிஞருக் குரைப்போன்
கொல்லா விரதங் குவலயத் தோர்கள்
எல்லாம் பெறுமினென் றியம்பிய தயாநிதி
தருமமுந் தானமுந் தவமும் புரியவர்க்
குரிமையா யவரோ டுறவு கலப்பவன்
தன்னுயிர் போலத் தரணியின் மருவிய
மன்னுயி ரனைத்தையும் வளர்த்திடும் வேந்தன்
களவுவஞ் சனைகள்செய் கருமிக டமக்கும்
தெளிவுவத் துறவருள் செய்திடுந் திறத்தோன்
தான்பெறும் பேறு சகமெலாம் பெறவே
வான்பெருங் கருணை வழங்கிய மாரி
தஞ்சமென் றடைந்த தாபதர் தம்மை
அஞ்சலென் றாளு மறிஞர் சிகாமணி
சீவ கோடிகளுஞ் சித்தர் கோடிகளும்
யாவரும் புகழ யாவையு முணர்ந்தோன்
யானென தென்னு மிறைவனெம் பெருமான்
றானவ னாகிய தலைவனெங் கோமான்
அருண கிரியார்க் காறுமுகன் சொலும்
பொருணல மல்லது பொருளென மதியான்
பூத முதலாய்ப் பொலிந்திடு நாத
பேதமுங் கடந்த பெருந்தகை மூர்த்தி
மூலா தார முதலா யுள்ள
மேலா தாரமும் வெறுவெளி கண்டவன்
மண்டல மூன்றிலு மன்னிய வுருவிலும்
கண்டவை யத்திலுங் கடவுளாய் நின்றோன்
பகர்சம யந்தொறும் பரமே யிருந்து
சுகநடம் புரியுந் தொழிலெனச் சொன்னோன்

பேத வபேத பேதா பேத
போத மிதுவெனப் புகன்றிடும் புண்ணியன்
அதுநா னெனவே யாற்றிடு மநுபவஞ்
சதுர்வே தாந்தத் தன்மையென் றுரைத்தோன்
அல்லும் பகலு மறிவா னோர்க்குச்
சொல்லும் பொருளுஞ் சுமையெனச் சொன்னோன்
சுதனே குருவாஞ் சுவாமி நாயகற்கெனில்
அதிகமெய்ஞ் ஞான மல்லவோ வென்றோன்
நேசயோ கத்துறு நிருபரொல் லாந்தொழும்
இராஜயோ கத்திறை யிராஜ யோகத்தான்
பொறுமை தெளிவு புனித வாசார
மறுவிலா வண்மை வார மியற்கை
தண்மைமா சாந்தந் தயங்கிய கீர்த்தி
எண்ணெண் கலைபயி லிணையிலாக் கல்வி
நல்ல விரக்க நடுநிலை சத்தியம்
இல்லையென் றுமை லெவர்க்குந் தருங்கொடை
நற்குண மெல்லா நண்ணிய பெருந்தகை
சிற்குண வாரி திருவருட் செல்வன்
கரமே லெடுத்துக் கருத்துற வணங்கிப்
பரமே யுனக்குப் பரமெனப் பகர்ந்தோன்
ஆலடி மேவு மரசினை யடுத்தே
சீலமெய்ஞ் ஞானந் தெளிந்தன னென்னவும்
சித்த மௌனி திடசித்த மாக
வைத்த நிலையின் வளர்ந்தன னெனவும்
மூலன் மரபின் முளைத்த மௌனிதன்
பாலன்யா னெனவும் பரிவொடும் பகர்ந்தோன்
வடமொழி யியற்கையின் மகிமையை யுணர்ந்து
திடமுற முப்பொருட் டிறத்தையுந் தெளிந்து
கண்டமு தென்னக் கனிரச மென்னத்
தண்டமிழ் மாரி தன்னைப் பொழிந்து
சித்தியு முத்தியுஞ் சிறந்தருள் கொழிக்கும்
நித்திய நிரஞ்சன நிராலம்ப நிறைவைப்
பாடியு நாடியும் பணிந்தெழுந் தன்பால்
ஆடியு மரற்றியு மகங்குழை வெய்தியும்
உடலங் குழைய வுரோமஞ் சிலிர்ப்பப்
படபடென் றுள்ளம் பதைத்துப் பதைத்துப்
பாங்குறு நெட்டுயிர்ப் பாகிப் பரதவித்
தேங்கி யேங்கி யிரங்கி யிரங்கி
ஓய்ந்த பம்பரம்போ லொடுங்கியே சிறிதும்
ஏய்ந்த விழிக ளிமைப்பது மின்றிச்

சோர்ந்து சோர்ந்து துவண்டு துவண்டுமெய் *
யார்த்த வன்போ டவசமுற் றடிக்கடி *
புண்ணடுக் குறவே யுருகியே சற்றுக் *
தண்ணமர் மொழியுந் தழுதழுத் திடவே *
உள்ளும் புறம்பு மொருமித் துருகி *
வெள்ள நீர்போல் விழிநீர் பெருக்கிக் *
கன்று பசுவைக் கருதிக் கதறிச் *
சென்றுசென் றோடித் திகைப்பது போல *
என்புநெக் குடைய விருகரங் குவித்துப் *
புன்புலால் யாக்கை பொருந்தா தினியென் *
உணர்ந்துணர்ந் தன்பா யுவகைமேற் கொண்டினிக் *
கணம்பிரி யேனெனக் சருகியே குறித்துத் *
திருவுரு வெல்லாந் திருநீ றிலங்க *
இருகர நளின மியன்முடி குவித்துப் *
பூரண சந்திரன் போலொளி சாட்டும் *
காரண வதனங் கவின்குறு வெயர்வுற *
இளநிலா வெனவே யிலங்கிய சிறுநகை *
தளதள வென்னத் தயங்கி யெழில்பெற *
இத்தன்மை யெல்லா மிசைந்து மிவனருள் *
சித்தெனச் சிவகதி தேர்ந்தவ ருரைப்பப் *
பாத்திர மாடப் பரிவுட னோடிச் *
சாத்திரங் காட்டித் தயவுசெய் தருளும் *
வல்லவ னெனவே மன்னுயிர்க் காக *
எல்லையி லன்ப னிவனென விளங்கி *
யீன வுலகத் தியற்கைபெ ய் யென்றே *
ஞான நூன் மெய்யென நவின்றினி திரங்கிக் *
கேவல சகலங் கீழ்ப்பட மேலாய் *
மேவருஞ் சுத்த மெய்ப்பிணை நல்க *
அருளே யுருவுகொண் டவனியில் வந்த *
பொருளே யிவனெனப் பொலிந்திடும் புனிதன் *
சைவஞ் சிவனுடன் சம்பந்த மென்பது *
மெய்வளர் ஞானம் விளக்குமென் றிசைத்தோன் *
கதிர்விழி யொளியுறக் கலத்தல் சித்தாந்த *
விதிமுறை யாமென விளம்பிய மேலோன் *
முடிவினி லாகம முறைமையி னுண்மையை *
அடியனைக் குறித்துரைத் தருளிய வண்ணல் *
சிதம்பர நேர்மை திறமா வுரைத்திறை *
பதம்பர வெனப்பகர் பரமமெய்ஞ் ஞானி *
முத்தியுஞ் சாக்கர முறைமையி லயிக்கியஞ் *

சத்திய மிதுவெனச் சார்ந்தவர்க் குரைத்தோன் *
அஞ்செழுத் துள்ளே யனைத்தையுங் காட்டியென் *
நெஞ்சழுத் தியகுரு நீதி மாதவன் *
எல்லா நிறைந்த விறைவன் செயலெனக் *
கல்லா வெனக்குங் கருணைசெய் கடவுள் *
குருவரு ளாலே கூடுவ தல்லால் *
திருவரு ளுருதெனத் தெரிந்திட வுரைத்தோன் *
குருவுரு வருளென்னக்கொண்டபின் குறையாப் *
பொருண்மய மாமெனப் புகன்றிடு போதன் *
எந்த மூர்த்திகளையு மெழிற்குரு வடிவெனச் *
சிந்தையிற் றியக்கறத் தேர்ந்தவர்க் குரைத்தோன் *
சதாசிவ மென்றபேர் தான்படைத் ததுதான் *
எதாவதேபொருளென்றெடுத்தெடுத்துரைத்தோன் *
கல்லானை கன்னல் கவர்ந்திடச் செய்தவன் *
எல்லாம் வல்லசித் தெம்மிறை யென்றோன் *
எவ்வுயிர் தோறு மிறைமே வியதிறஞ் *
செவ்விய பிரம்படி செப்பிடு மென்றோன் *
எவ்வண மெவரொவ ரிசைத்தன ரவரவர்க் *
கவ்வண மாவனெம் மானென வறைந்தோன் *
ஒருபா ணனுக்கே யொருசிவ னட்படின் *
வருமடி யார்திறம் வழுத்தொணு தென்றோன் *
சிய னடியாரைச் சிவனெனக் காண்பவன் *
எவனவன் சிவனே யென்றெடுத் துரைத்தோன் *
விருப்பு வெறுப்பினை வேரறப் பறித்துக் *
கருப்புகா தென்னைக் காத்தருள் செய்தோன் *
இருசொல் லுரையா தியானின்ப மெய்த *
ஒருசொல் லுரைத்த வுயர்குண பூதரன் *
அத்துவா மார்க்க மாறையு மகற்றி *
தத்துவா தீதத் தன்மையைத் தந்தோன் *
திருமகன் மருவிய திகழ்வள மறைசையில் *
வருமுணர் வாளன் மருளிலா மனத்தான் *
எண்ணிய வெண்ணமெல் லாந்தெரிந் தெனக்குத் *
தண்ணருள் செய்தவன் றாயு மானவன் *
ஒருமொழி பகர்ந்த வுதவியா லவன்றன் *
இருபத மூப்போ திறைஞ்சிவாழ்த் துவனே. *

அருள்வாக்கியவகவல் - முற்றுப்பெற்றது.

இஃது. தாயுமானசுவாமிகளினது சிறியவன்னை புதல்வராயும், ஷெ சுவாமிகள் மாணாக்கராயும் விளங்கிய அருளையரவர்கள் தாயுமானசுவாமிகளைத் துதிசெய்தது.

ஹர:

கணபதி துணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தாயுமானசுவாமிகள்

பாடல்.

திருவருள்விலாசப்பரசிவவணக்கம்.

ஆசிரியவிருத்தம்.

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமா *
யானந்த பூர்த்தி யாகி *
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே *
அகிலாண்ட கோடி யெல்லாம் *
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த் *
தழைத்ததெது மனவாக் கினில் *
தட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாம் *
தந்தெய் வமெந்தெய் வமென் *
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது *
எங்கணும் பெருவ ழக்கா *
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா *
யென்றைக்கு முள்ள தெதுமேல் *
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது *
கருத்திற் கிசைந்த ததுவே *
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவும் *
கருதியஞ் சலிசெய்கு வாம். (க)

உளரனந் தம்பெற்ற பேரனந் தஞ்சுற்றும்
உறவனந் தம்வி னையினால்
உடலனந் தஞ்செயும் வினையனந் தங்கருத்
தோவனந் தம்பெற் றபேர்
சீரனந் தஞ்சொர்க்க நரகமு மனந்தநற்
றெய்வமு மனந்த பேதம்
திகழ்கின்ற சமயமு மனந்தமத னான்ஞான
சிற்சத்தி யாலு ணர்ந்து
காரனந் தங்கோடி வருஷித்த தெனவன்பர்
கண்ணும்விண் ணுந்தேக் கவே
கருதரிய வானந்த மழைபொழியு முகிலைநங்
கடவுளைத் துரிய வடிவைப்
பேரனந் தம்பேசி மறையனந் தஞ்சொலும்
பெரியமௌ னத்தின் வைப்பைப்
பேசரு மனந்தபத ஞானவா னந்தமாம்
பெரியபொரு ளைப்ப ணிகுவாம். (௨)

அத்துவித வஸ்துவைச் சொற்ப்ரகா சத்தனியை
அருமறைகண் முரச றையவே
அறிவினுக் கறிவாகி யானந்த மயமான
ஆதியை யனாதி யேக
தத்துவ சொரூபத்தை மதசம்ம தம்பெறுஞ்
சாலம்ப ரகித மான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபத வ்யோம நிலையை
நித்தநிர் மலசகித நிஷ்ப்ரபஞ் சப்பொருளை
நிர்விஷய சுத்த மான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராம யத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதே சோம யத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலி செய்வாம். (௩)

திருவருள்விலாசப் பரசிவவணக்கம்

முற்றிற்று.

பரிபூரணானந்தம்.

வாசா கயிங்கரிய மன்றியொரு சாதன *
மனோவாயு நிற்கும் வண்ணம் *
வாலாய மாசவும் பழகியறி யேன்றுறவு *
மார்க்கத்தி னிச்சை போல *
நேசானு சாரியாய் விவகரிப் பேனந்த *
நினைவையு மறந்த போது *
நித்திரைகொள் வேன்றேக நீங்குமென வெண்ணிலோ *
நெஞ்சந் துடித்த யருவேன் *
பேசாத வானந்த நிட்டைக்கு மறிவிலாப் *
பேதைக்கும் வெகுதூ ரமே *
பேய்க்குண மறிந்திந்த நாய்க்குமொரு வழிபெரிய *
பேரின்ப நிட்டை யருள்வாய் *
பாசா டவிக்குளே செல்லா தவர்க்கருள் *
பழுத்தொழுகு தேவ தருவே *
யார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற *
பரிபூர ணானந் தமே. (௧)

தெரிவாக வூர்வன நடப்பன பறப்பன *
செயற்கொண் டிருப்பன முதல் *
தேகங்க ளத்தனையு மோகங்கொள் பௌதிகஞ் *
ஜென்மித்த வாங்கி றக்கும் *
விரிவாய பூதங்க ளொன்றொடொன் றாயடையு *
மேற்கொண்ட சேட மதுவே *
வெறுவெளி நிராலம்ப நிறைசூன்ய முபசாந்த *
வேதவே தாந்த ஞானம் *
பிரியாத பேரொளி பிறக்கின்ற வருளருட் *
பெற்றோர்கள் பெற்ற பெருமை *
பிறவாமை யென்றைக்கு மிறவாமை யாய்வந்து *
பேசாமை யாகு மெனவே *
பரிவா யெனக்குநீ யறிவிக்க வந்ததே *
பரிபாக கால மலவோ *
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற *
பரிபூர ணானந் தமே. (௨)

ஆராயும் வேளையிற் பிரமாதி யானாலும் *
ஐயவொரு செயலு மில்லை *
அமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ர *
ராமென விருந்த பேரும் *
நேராக வொருகோப மொருவேளை வரவந்த *
நிறைவொன்று மில்லா மலே *

நெட்டுயிர்த் துத்தட் டழிந்துளறு வார்வசன *
நிர்வாக ரென்ற பேரும் *
பூராய மாயொன்று பேசுமிட மொன்றைப் *
புலம்புவார் சிவராத் திரிப் *
போது துயி லோமென்ற விரதியரு மறிதுயிற் *
போலே யிருந்து துயில்வார் *,
பாராதி தனிலுள்ள செயலெலா முடிவிலே *
பார்க்கினின் செயலல் லவோ *
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற *
பரிபூர ணானந் தமே (௩)

அண்டபகி ரண்டமும் மாயா விகாரமே *
அம்மாயை யில்லா மையே *
ஆமெனவு மறிவுமுண் டப்பாலு மறிகின்ற *
அறிவினை யறிந்து பார்க்கில் *
எண்டிசை விளக்குமொரு தெய்வவரு ளல்லாமல் *
இல்லையெனு நினைவு முண்டிங் *
கியானென தறத்துரிய நிறைவாகி நிற்பதே *
இன்பமெனு மன்பு முண்டு *
கண்டன வெலாமல்ல வென்றுகண் டணைசெய்து *
கருவிகர ணங்க ளோயக் *
கண்மூடி யொருகண மிருக்கவென் றாற்பாழ்த்த *
கர்மங்கள் போராடுதே *
பண்டையுள கர்மமே கர்த்தா வெனும்பெயர் *
பகவநா னிச்சிப் பனே *
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற *
பரிபூர ணானந் தமே. (௪)

சந்ததமு மெனதுசெய லினதுசெய லியானெனும் *
தன்மைநினை யன்றி யில்லாத் *
தன்மைபால் வேறலேன் வேதாந்த சித்தாந்த *
சமரச சுபாவ மிதுவே *
இந்தநிலை தெளியநா னெக்குருகி வாடிய *
இயற்கைதிரு வுளமறி யுமே *
இந்நிலையி லேசற் றிருக்கவென் றால்மடமை *
இதசத்ரு வாக வந்து *
சிந்தைகுடி கொள்ளுதே மலமாயை கன்மம் *
திரும்புமோ தொடுவ ழக்காய்ச் *
சென்மம்வரு மோவெனவும் யோசிக்கு தேமனது *
சிரத்தையெனும் வாளு முதவிப் *

பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந் தந்தெனைப் *
பாதுகாத் தருள்செய் குவாய் *
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற *
பரிபூர ணானந் தமே. (ரு)

பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர் *
பொறிபுல னடங்கு மிடமே *
பொருளென்பர் சிலர்கரண முடிவென்பர் சிலர்குணம் *
போனவிட மென்பர் சிலபேர் *
நாதவடி வென்பர்சிலர் விந்துமய மென்பர்சிலர் *
நட்டநடு வேயி ருந்த *
நாமென்பர் சிலருருவ மாமென்பர் சிலர்கருதி *
நாடிலரு ளென்பர் சிலபேர் *
பேதமற வுயிர்கெட்ட நிலயமென் றிடுவர்சிலர் *
பேசினரு ளென்பர் சிலபேர் *
பின்னுமுன் னுங்கெட்ட சூனியம தென்பர்சிலர் *
பிறவுமே மொழிவ ரிவையால் *
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலால் *
பரமசுக நிஷ்டை பெறுமோ *
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற *
பரிபூர ணானந் தமே (சு)

அந்தகா ரத்தையோ ரகமாக்கி மின்போலென் *
அறிவைச் சுருக்கி னவரார் *
அவ்வறிவு தானுமே பற்றினது பற்று *
யழுந்தவுந் தலைமீதிலே *
சொந்தமா யெழுதப் படித்ததார் மெய்ஞ்ஞான *
சுகநிஷ்டை சேரா மலே *
சோற்றுத் துருத்தியைச் சதமெனவு முண்டுண்டு *
தூங்கவைத் தவரார் கொலோ *
தந்தைதாய் முதலான வகிலப்ர பஞ்சந் *
தனைத்தந்த தெனதா சையோ *
தன்னையே நோவனோ பிறனையே நோவனோ *
தற்கால மதைநோ வனோ *
பந்தமா னதுதந்த வினையையே நோவனோ *
பரமார்த்த மேது மறியேன் *
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற *
பரிபூர ணானந்தமே. (எ)

வாரா தெலாமொழிய வருவன வெலாமெய்த *
மனது சாக்ஷியதா கவே *

மருவநிலை தந்ததும் வேதாந்த சித்தாந்த *
மரபுசம ரசமாகவே *
பூராய மாயுணர ஆகமது தந்ததும் *
பொய்யுடலை நிலையன் றெனப் *
போதநெறி தந்ததுஞ் சாசுவத வானந்த *
போகமே வீடென் னவே *
நீராள மாயுருக வுள்ளன்பு தந்ததும் *
நின்னதரு ளின்னு மின்னும் *
நின்னையே துணையென்ற வென்னையே காக்கவொரு *
நினைவுசற் றுண்டா கிலோ *
பாராதி யறியாத மோனமே யிடைவிடாப் *
பற்றாக நிற்க வருள்வாய் *
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற *
பரிபூர ணானந் தமே (௮)

ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோகொடிய *
வாலமமு தாக விலையோ *
அக்கடலின் மீதுவட வனனிற்க வில்லையோ *
அந்தரத் தகில கோடி *
தாழாம னிலைநிற்க வில்லையோ மேருவும் *
தனுவாக வளைய விலையோ *
சப்தமே கங்களும் வச்ரதர னாணையிற் *
சஞ்சரித் திடவில் லையோ *
வாழாது வாழவே யிராமனடி யாற்சிலையு *
மடமங்கை யாக விலையோ *
மணிமந்த்ர மாதியாய் வேண்டுசித் திகளுலக *
மார்க்கத்தில் வைக்க விலையோ *
பாழான வென்மனங் குவியவொரு தந்திரம் *
பண்ணுவ துனக்க ருமையோ *
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற *
பரிபூர ணானந் தமே (௯)

ஆசைக்கொ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி *
ஆளினுங் கடன்மீ திலே *
ஆணைசெல வேநினைவ ரளகேச னிகராக *
அம்பொன்மிக வைத்த பேரும் *
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர் *
நெடுநா ளிருந்த பேரும் *
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி *
நெஞ்சுபுண் ணாவ ரெல்லாம் *

யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது *
முறங்குவது மாக முடியும் *
உள்ளதே போதுமினி நானு மெனக்குறையி *
ஒன்றைவிட் டொன்று பற்றிப் *
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற *
பரிசுத்த நிலையை யருள்வாய் *
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற *
பரிபூர ணானந் தமே (௰)

பரிபூரணானந்தமுற்றிற்று. ஆ ௰௫.

பொருள்வணககம்.

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச் *
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை சுடராயெல்லாம்
வைத்திருந்த தாரகமாயானந்தமயமாகி மனவாக்கெட்டாச் *
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச் சிந்தை
செய்வாம். (௧)
யாதுமன நினையுமந்த நினைவுக்கு நினைவாகி யாதின்பாலும் *
பேதமற நின்றுயிருக் குயிராகி யன்பருக்கே பேரானந்தக் *
கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறியொன் றறத்தன்னைக்கொடுத்துக்காட்டும்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச் சிந்தைசெய்வாம் (௨)

பெருவெளியா யைம்பூதம்பிறப்பிடமாய்ப்பேசாதபெரியமோனம் *
வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப மயமாய் ஞானக் *
குருவருளாற் காட்டிடவு மன்பராக்கொத்தறவிழுங்கிக்கொண்டப்பாலும்
தெரிவரிதாய்க் கலந்ததெந்தப் பொருளந்தப்பொருளினையாஞ்சிந்தை
[செய்வாம் (௩)
இகபரமு முயிர்க்குயிரா யானெனதற் றவருறவை யெந்தநாளும் *
சுகபரி பூரணமான நிராலம்ப கோசரத்தைத் துரிய வாழ்வை *
அகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை யமிர்தை நாடி *
மொகுமொகென விருவிழிநீர் முத்திறைப்பக் கரமலர்கள் முகிழ்த்து
நிற்பாம். (௪)
சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத் தன்மைநாமம் *
ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும்பிரிவறநின்றியக்கஞ்செய்யும் *
சோதியைமாத் தூவெளியை மனதவிழநிறைவான துரிய வாழ்வைத் *
தீதில்பர மாம்பொருளைத்திருவருளே நினைவாகச்சிந்தைசெய்வாம் (௫)

இந்திரஜா லங்கனவு கானலினீ ரெனவுலக மெமக்குத்தோன்றச் *
சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச் சார்ந்து வாழ்க *
புந்திமகி ழுறநாளுந் தடையறவா னந்தவெள்ளம் பொலிகவென்றே *
வந்தருளுங் குருமௌனிமலர்த்தாளையனுதினமும்வழுத்தல்செய்வாம்

பொருளாகக்கண்டபொருளெவைக்குமுதற்பொருளாகிப்போதமாகித்
தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப் பருகவந்த செழுந்தேனாகி *
அருளானோர்க் ககம்புறமென் றன்னாத பூரணவா னந்தமாகி *
இருடீரவிளங்குபொருளியாதந்தப் பொருளினையா மிறைஞ்சிநிற்பாம்.
(எ)

அருமறையின்சிரப்பொருளாய்விண்ணவர்மாமுனிவர்சித்தராதியானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணங்கற் பனைகடந்த செல்வமாகிக் *
கருதரியமலரின்மணமெள்ளிலெண்ணெயுட லுயிர்போற்கலந்தெந்நாளும்
துரியநடு வூடிருந்த பெரியபொரு ளியாததனைத் தொழுதல் செய்வாம்.
(அ)

விண்ணாதி பூதமெல்லாந் தன்னகத்தி லடக்கிவெறு வெளியாய்ஞானக் *
கண்ணாரக் கண்டவன்பர் கண்ணூடே யானந்தக் கடலாய் வேறொன் *
றெண்ணாத படிக்கிரங்கித் தானாகச் செய்தருளு மிறையே யுன்றன் *
றண்ணாருஞ் சாந்தவரு டனைநினைந்து கரமலர்க டலைமேற் கொள்வாம்.
(கூ)

விண்ணிறைந்தவெளியாயென்மனவெளியிற்கலந்தறிவாம்வெளியினூடும் *
தண்ணிறைந்தபேரமுதாய்ச்சதானந்தமானபெருந்தகையேநின்பால் *
உண்ணிறைந்த பேரன்பா லுள்ளுருகி மொழிகுளறி யுவகையாகிக் *
கண்ணிறைந்த புனலுகுப்பக் கரமுகிழ்ப்ப நின்னருளைக்கருத்தில்வைப்
[பாம். (ய)

வேறு.

ஆதியந்தங் காட்டாத முதலா யெம்மை *
அடிமைக்கா வரைத்தெடுத்த வன்னை போல *
நீதிபெறுங் குருவாகி மனவாக் கெட்டா *
நிச்சயமாய்ச் சொச்சமதாய் நிமல மாகி *
வாதமிடுஞ் சமயநெறிக் கரிய தாகி *
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்கா நின்ற *
சோதியையென் னுயிர்த்துணையை நாடிக் கண்ணீர் *
சொரியவிருகரங்குவித்துத்தொழுதல்செய்வாம் (யக)

அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறா *
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்து மாகிப் *
பகர்வனவெல் லாமாகி யல்ல தாகிப் *
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித் *
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாந் *
தோயாத வறிவாகிச் சுத்த மாகி *
நிகரில்பசு பதியான பொருளை நாடி *
நெட்டுயிர்த்துப் பேரன்பா னினைதல் செய்வாம். (யஉ)

பொருள்வணக்கமுற்றுப்பெற்றது. ஆக உயரு.

சின்மயானந்தகுரு.

அங்கைகொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப *
அன்பினா லுருகி விழிநீர் *
ஆறாக வாராத முத்தியின தாவேச *
ஆசைக் கடற்குண் மூழ்கிச் *
சங்கர சுயம்புவே சம்புவே யெனவுமொழி *
தழுதழுத் திடவ ணங்குஞ் *
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந் *
தண்ணருள் கொடுத்தாள் வையோ *
துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்கள் *
தொழுதருகில் வீற்றி ருப்பச் *
சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்தியே *
சொரூபானு பூதி காட்டிச் *
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர் *
சித்தாந்த முத்தி முதலே *
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே *
சின்மயா னந்த குருவே. (௧)

ஆக்கையெனு மிடிகரையை மெய்யென்ற பாவிநான் *
அத்துவித வாஞ்சை யாத *
அரியகொம் பிற்றேனை முடவனிச் சித்தபடி *
ஆசுமறி வவிழ வின்பந் *
தாக்கும்வகை யேதிநாட் சரியைகிரி யாயோக *
சாதனம் விடுத்த தெல்லாஞ் *
சன்மார்க்க மல்லவிவை நிற்கவென் மார்க்கங்கள் *
தாராத பேரறிவ தாய் *
வாக்குமன மணுகாத பூரணப் பொருள்வந்து *
வாய்க்கும் படிக்கு பாயம் *
வருவித்து வட்டாத பேரின்ப மானசுக *
வாரியினை வாய் மடுத்துத் *
தேக்கித் திளைக்கநீ முன்னிற்ப தென்றுகாண் *
சித்தாந்த முத்தி முதலே *
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே *
சின்மயா னந்த குருவே. (௨)

அவ்விய மிருக்கநா னென்கின்ற வாணவம் *
அடைந்திட் டிருக்க லோபம் *
அருளின்மை கூடக் கலந்துள் ளிருக்கமேல் *
ஆசா பிசாச முதலாம்

வெவ்விய குணம்பல விருக்குமென் னறிவூடு *
மெய்யணி விற்றி ருக்க *
விதியில்லை யென்னிலோ பூரண னெனும்பெயர் *
விரிக்கிலுனை வேறு முரைதோ *
சவ்வுமல மாகின்ற நாசபா சத்தினாற் *
கட்டுண்ட வுயிர்கண் மூர்ச்சை *
கடிதகல வலியவரு ஞானசஞ் சீவியே *
சதிபான பூமி நடுவுட் *
செவ்விதின் வளர்ந்தோங்கு திவ்யகுண மேருவே *
சித்தாந்த முத்தி முதலே *
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே *
சின்மயா னந்த குருவே. (௩)

ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனுள் *
அசரசர பேத மான *
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை *
யாதிநூ லையும் வகுத்துச் *
சைவமுத லாவளவில் சமடமும் வகுத்துமேற் *
சமயங் கடந்த மோன *
சமரசம் வகுத்தநீ யுன்னைநா னணுகவுந் *
தண்ணருள் வகுக்க விலையோ *
பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே *
பொய்யிலா மெய்ய ரறிவில் *
போதபரி பூரண வகண்டிதா காரமாய்ப் *
போக்குவர வற்ற பொருளே *
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே *
சித்தாந்த முத்தி முதலே *
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே *
சின்மயா னந்த குருவே. (௪)

ஐந்துவகை யாகின்ற பூதபே தத்தினால் *
ஆகின்ற வாக்கை நீர்மேல் *
அமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்னநான் *
அறியாத கால மெல்லாம் *
புத்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே *
போதநெறி யென்றி ருந்தேன் *
பூராய மாகநின தருள்வந் துணர்த்தவிவை *
போனவழி தெரிய வில்லை *
எந்தநிலை பேசினு மிணங்கவிலை யல்லால் *
இறப்பொடு பிறப்பை யுள்ளோ *

எண்ணிறு னெஞ்சதுப் கிறொனுந் துயில்வுரு *
திருவிழியு மிரவு பகலாய்ச் *
செந்தமிழின் மெழுகான தங்கமினவ யென்கொலோ *
சித்தாந்த முத்தி முதலே *
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே *
சின்மயானந்த குருவே. (௫)

காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற *
கண்ணிலாக் குழவி யைப்போல் *
சட்டுண் டிருந்தவெனை வெளியில்விட்டல்லலாங் *
காப்பிட்ட தற்கிசைந்த *
பேரிட்டு மெய்யென்று பேசபாழ்ம் பொய்யுடல் *
பெலக்சவினை யமுத மூட்டிப் *
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற *
பெரியவிளை யாட்ட மைத்திட் *
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட் *
டிடருற வுறுக்கி விடர்தீர்த் *
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில் *
இசைந்து துயில்கொண்மி னென்று *
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே *
சித்தாந்த முத்திமுதலே *
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே *
சின்மயா னந்தகுருவே (௬)

கருமருவு குகையனைய காயத்தி னடுவுட் *
களிம்புதோய் செம்ப னையயான் *
காண்டக விருக்சநீ ஞானவனல் மூட்டியே *
கனிவுபெற வுள்ளுருக்கிப் *
பருவம தறிந்துநின் னருளான குளிகைகொடு *
பரிசித்து வேதிசெய்து *
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட *
பக்ஷத்தை யென்சொல் லுகேன் *
அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்த *
மாதியா மந்த மீது *
அத்துவித நிலையரா யென்னையாண் டுன்னடிமை *
யானவர்க ளறிவி னூடுந் *
திருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற *
சித்தாந்தமுத்திமுதலே *
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே *
சின்மயா னந்த குருவே (௭)

கூடுத லுடன்பிரித லற்றுநீர்த் தொந்தமாய்க் *
குவிதலுடன் விரித லற்றுக் *
குணமற்று வரவினொடு போக்கற்று நிலையான *
குறியற்று மலமு மற்று *
நாடுதலு மற்றுமேல் கீழ்நடுப் பக்கமென *
நண்ணுதலு மற்று விந்து *
நாதமற் றைவகைப் பூதபே தமுமற்று *
ஞாதுருவின் ஞான மற்று *
வாடுதலு மற்றுமே லொன்றற் றிரண்டற்று *
வாக்கற்று மனமு மற்று *
மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே *
வாய்மடுத் துண்ட வசமாய்த் *
தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே *
சித்தாந்த முத்தி முதலே *
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே *
சின்மயா னந்த குருவே (௮)

தாராத வருளெலாந் தந்தருள மௌனியாய்த் *
தாயினைய கருணை காட்டித் *
தாளிணையென் முடிசூட்டி யறிவிற் சமாதியே *
சாசுவத சம்ப்ர தாயம் *
ஓராமன் மந்திரமு முன்னுமல் முத்திநிலை *
யொன்றோ டிரண்டெ னுமல் *
ஒளியெனவும் வெளியெனவு முருவெனவு நாதமாம் *
ஒலியெனவு முணர்வு றுமல் *
பாராது பார்ப்பதே யேதுசா தனமற்ற *
பரமவனு பூதி வாய்க்கும் *
பண்பென் றுணர்த்தியது பாராம லந்நிலை *
பதித்தநின் பழவடி யர்தம் *
சீரா யிருக்கநின தருள்வேண்டு மையனே *
சித்தாந்த முத்தி முதலே *
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே *
சின்மயா னந்த குருவே (௯)

போதமா யாதிநடு வந்தமு மிலாத தாய்ப் *
புனிதமா யவிகாரமாய்ப் *
போக்குவர வில்லாத வின்பமாய் நின்றநின் *
பூரணம் புகலி டமதா *
ஆதரவு வையாம லறிவினை மறைப்பது நின் *
அருள்பின்னு மறிவின்மை தீர்த் *

தறிவித்து நிற்பதுநி னருளாகி லெளியனேற் ※
கறிவாவ தேத றிவிலா ※
வேதம்வரு வகையேது வினையேது வினைதனக் ※
கீடான காய மேதென் ※
இச்சா சுதந்தரஞ் சிறிதுமிலை யிகபர ※
மிரண்டினுண் மலைவு தீரத் ※
தீதிலருள் கொண்டினி புணர்த்தியெனை யாள்வையோ ※
சித்தாந்த முத்தி முதலே ※
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே ※
சின்மயா னந்த குருவே. (௰)

பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப் ※
பரப்பை வலமாக வந்தும் ※
பரவையிடை மூழ்கியு நதிகளிடை மூழ்கியும் ※
பசிதாக மின்றி யெழுநா ※
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை ※
வன்பசி தனக்க டைத்தும் ※
மௌனத் திருந்துமுயர் மலைநுழைவு புக்கியும் ※
மன்னுதச நாடி முற்றும் ※
சுத்திசெய் தும்மூல ப்ராணனோ டங்கியைச் ※
சோம வட்டத்த டைத்தும் ※
சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க ※
ளோறுநிலை நிற்க வீறு ※
சித்திசெய் துஞ்ஞான மலதுகதி கூடுமோ ※
சித்தாந்த முத்தி முதலே ※
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே ※
சின்மயா னந்த குருவே. (௰௧)

சின்மயானந்தகுரு முற்றுப்பெற்றது. ஆ ௩௪.

மௌனகுருவணக்கம்.

ஆசைநிக ளத்தினை திரிதூளி படவுதறி ※
ஆங்கார முளையை யெற்றி ※
அத்துவித மதமாகி மதமாறு மாருக ※
அங்கையின் விலாழி யாக்கிப் ※
பாசவிரு டன்னிழ லெனச்சுளித் தார்த்துமேற் ※
பார்த்துப் பரந்த மனதைப் ※

பாரித்த கவளமாய்ப் பூரிக்க வுண்டுமுக *
படாமன்ன மாயை நூறித் *
தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச் *
செங்கைக் குளேய டங்கிச் *
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்துநின் *
திருவருட் பூர்த்தி யான *
வாசமுறு சற்சார மீதென்னை யொருஞான *
மத்தகஜ மெனவ ளர்த்தாய் *
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் *
மரபில்வரு மௌன குருவே. (௧)

ஐந்துவகை யாகின்ற பூதமுத லாதமும் *
அடங்கவெளி யாக வெளிசெய் *
தறியாமை யறிவாதி பிறிவாக வறிவார்கள் *
அறிவாக நின்ற நிலையில் *
சிந்தையற நில்லென்று சும்மா விருத்திமேற் *
சின்மயா னந்த வெள்ளந் *
தேக்கித் திளைத்துநா னதுவா யிருக்கநீ *
செய்சித்ர மிகநன் றுகாண் *
எந்தைவட வாற்பரம குருவாழ்க வாழவரு *
ளியநந்தி மரபு வாழ்க *
வென்றடியர் மனமகிழ வேதாக மத்துணி *
பிரண்டில்லை யொன்றென் னவே *
வந்தகுரு வேவீறு சிவஞான சித்திநெறி *
மௌனோப தேச குருவே *
மந்த்ரகுரு வேயோக தந்தரகுரு வேமூலன் *
மரபில்வரு மௌன குருவே. (௨)

ஆதிக்க நல்கினவ ராரித்த மாயைக் கென் *
னறிவின்றி யிடமில் லையோ *
அந்தரப் புஷ்பமுங் கானலின் னீருமோ *
ரவசரத் துபயோ கமோ *
போதித்த நிலையையு மயக்குதே யபயநான் *
புக்கவரு டோற்றி டாமல் *
பொய்யான வுலகத்தை மெய்யா நிறுத்தியென் *
புந்திக்கு ளிந்த்ர ஜாலஞ் *
சாதிக்குதேயிதனை வெல்லவு முபாயநீ *
தந்தருள்வ தென்று புகல்வாய் *
சண்மத ஸ்தாபனமும் வேதாந்த சித்தாந்த *
சமரசநிர் வாக நிலையும் *
*

மாதிக்கொ டண்டப் பரப்பெலா மறியவே ❋
வந்தருளு ஞான குருவே ❋
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் ❋
மரபில்வரு மௌன குருவே. (௩)

மின்னனைய பொய்யுடலை நிலையென்று மையிலகு ❋
விழிகொண்டு மையல் பூட்டும் ❋
மின்னார்க ளின்பமே மெய்யென்றும் வளர்மாட ❋
மேல்வீடு சொர்க்க மென்றும் ❋
பொன்னையழி யாதுவளர் பொருளென்று போற்றியிப் ❋
பொய்வேஷ மிகுதி காட்டிப் ❋
பொறையறிவு துறவீத லாதிநற் குணமெலாம் ❋
போக்கிலே போக விட்டுத் ❋
தன்னிகரி லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத் ❋
தரணிமிசை லோகா யுதன் ❋
சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த ❋
சமரச சிவானு பூதி ❋
மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டன்பின் ❋
வாழ்வித்த ஞான குருவே ❋
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் ❋
மரபில்வரு மௌன குருவே. (௪)

போனக மிருக்கின்ற சாலையிடை வேண்டுவ ❋
புசித்தற் கிருக்கு மதுபோற் ❋
புருஷர்பெறு தர்மாதி வேதமுட னாகமம் ❋
புகலுமதி னாலாம் பயன் ❋
ஞானநெறி முக்யநெறி காட்சியனு மானமுதல் ❋
நானா விதங்க டேர்ந்து ❋
நானென்னக் கூறு படைபுடை பெயர்த்திடவு ❋
நான்குசா தனமு மோர்ந்திட் ❋
டானநெறி யாஞ்சரியை யாதிசோ பானமுற் ❋
றணுபக்ஷ சம்பு பக்ஷம் ❋
ஆமிரு விகற்பமு மாயாதி சேவையும் ❋
அறிந்திரண் டொன்றென் னுமோர் ❋
மானத விகற்பமற வென்றுநிற் பதுநமது ❋
மரபென்ற பரம குருவே ❋
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் ❋
மரபில்வரு மௌன குருவே. (௫)

கல்லாத வறிவுமேற் கேளாத கேள்வியுங் ❋
கருணைசிறி தேது மில்லாக் ❋

காட்சியுங் கொலைகளவு கட்காம மாட்சியாக் *
காதலித் திடுநெஞ் சமும் *
பொல்லாத பொய்ம்மொழியு மல்லாது நன்மைகள் *
பொருந் துகுண மேது மறியேன் *
புருஷர்வடி வானதே யல்லாது கல்விலும் *
புருஷார்த்த மேது மில்லேன் *
எல்லா மறிந்தநீ யறியாத தன்றெனக் *
கெவ்வண்ண முய்வண் ணமோ *
இருளையிரு ளென்றவர்க் கொளிதா ரகம்பெறு *
மெனக்குநின் னருடா ரகம் *
வல்லா னெனும்பெய ருனக்குள்ள தேயிந்த *
வஞ்சகனை யாள நினையாய் *
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் *
மரபில்வரு மௌன குருவே. (௬)

கானக மிலங்குபுலி பசுவொடு குலாவுநின் *
கண்கான மதயா னைநீ *
கைகாட்ட வுங்கையா னெகிடிக் கெனப்பெரிய *
கட்டைமிக வேந்தி வருமே *
போனக மமைந்ததென வக்காம தேனுநின் *
பொன்னடியி னின்று சொலுமே *
புவிராஜர் கவிராஜர் தவராஜ னென்றுனைப் *
போற்றிஜய போற்றி யென்பார் *
ஞானகரு ணாகர முகங்கண்ட போதிலே *
நவநாத சித்தர் களுமுன் *
னட்பினை விரும்புவார் சுகர்வாம தேவர்முதன் *
ஞானிகளு முனைமெச் சுவார் *
வானகமு மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடுமுன் *
மகிமையது சொல்ல வெளிதோ *
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் *
மரபில்வரு மௌன குருவே. (௭)

சருகுசல பக்ஷணிக ளொருகோடி யல்லாற் *
சகோர பக்ஷிகள் போலவே *
தவரநில வொழுகமிர்த தாரைவுண் டழியாத *
தன்மைய ரனந்த கோடி *
இருவினைக ளற்றிரவு பகலென்ப தறியாத *
ஏகாந்த மோன ஞான *
இன்பநிஷ் டையர்கோடி மணிமந்த்ர சித்திநிலை *
எய்தினர்கள் கோடி சூழக் *

குருமணி யிழைத்திட்ட சிங்கா தனத்தின்மிசை ✻
கொலுவீற் றிருக்கு நின்னைக் ✻
கும்பிட்ட னந்தமுறை தெண்டனிட் டென்மனக் ✻
குறையெலாந் தீரும் வண்ணம் ✻
மருமல ரொடுத்துனிரு தாளையர்ச் சிக்கவெனை ✻
வாவென் றழைப்ப தெந்நாள் ✻
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் ✻
மரபில்வரு மௌன குருவே. (அ)

ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த ✻
வாணவத் தினும்ப விதுகாண் ✻
அறிவினை மயக்கிடு நடுவறிய வொட்டாதி ✻
யாதொன்று தொடினு மதுவாய்த் ✻
தாங்காது மொழிபேசு மரிகரப் பிரமாதி ✻
தம்மொடு சமான மென்னும் ✻
தடையற்ற தேரிலஞ் சுருவாணி போலவே ✻
தன்னிலசை யாது நிற்கும் ✻
ஈங்கா ரெனக்குநிக ரென்னப்ர தாபித் ✻
திராவண கார மாகி ✻
இதயவெளி யெங்கணுந் தன்னரசு நாடுசெய். ✻
திருக்குமித னொடெநே ரமும் ✻
வாங்காவி லாவடிமை போராட முடியுமோ ✻
மௌனோப தேச குருவே ✻
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் ✻
மரபில்வரு மௌன குருவே. (௯)

பற்றுவெகு விதமாகி யொன்றைவிட் டொன்றனைப் ✻
பற்றியுழல் கிருமி போலப் ✻
பாழ்ஞ்சிந்தை பெற்றநான் வெளியாக நின்னருள் ✻
பகர்ந்துமறி யேன்று விதமோ ✻
சிற்றறிவ தன்றியு மெவரோனு மொருமொழி ✻
திடுக்கென் றுரைத்த போது ✻
சிந்தைசெவி யாகவே பறையறைய வுதரவெந் ✻
தீநெஞ்ச மரவ ராவ ✻
உற்றுணர வுணர்வற்றுன் மத்தவெறி யினர்போல ✻
உளறுவேன் முத்தி மார்க்கம் ✻
உணர்வதெப் படியின்ப துன்பஞ் சமானமா ✻
யுறுவதெப் படியா யினும் ✻
மற்றெனக் கையநீ சொன்னவொரு வார்த்தையினை ✻

மலையிலக் கெனநம் பினேன் *
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் *
மரபில்வரு மௌன குருவே. (௰)

மௌனகுருவணக்கம் முற்றும்பெற்றது. ஆ. ௪௬.

கருணாகரகடவுள்.

நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப *
நிர்விஷய கைவல்ய மா *
நிஷ்கள வசங்கசஞ் சலரகித நிர்வசன *
நிர்த்தொந்த நித்த முக்த *
தற்பரவி ப்ஃவாதீத வ்யோமபரி பூரண *
சதானந்த ஞான பகவ *
சம்புசங் கரசிவ சர்வேச வென்றுநான் *
சர்வகா லமுநி னைவனே *
அற்புத வகோசர நிவர்த்திபெறு மன்பருக் *
கானந்த பூர்த்தி யான *
அத்துவித நிச்சய சொரூபசா க்ஷாத்கார *
அநுபூதி யநுகூல முங் *
கற்பனை யறக்காண முக்கணுடன் வடநிழற் *
கண்ணா டிருந்த குருவே *
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு *
கருணா கரக்க டவுளே. (௧)

மண்ணாதி யைந்தொடு புறத்திலுள கருவியும் *
வாக்காதி சுரோத் ராதியும் *
வளர்கின்ற சப்தாதி மனமாதி கலையாதி *
மன்னு சுத்தாதி யுடனே *
தொண்ணூற் றொடாறுமற் றுள்ளனவு மௌனியாய்ச் *
சொன்னவொரு சொற்கொண் டதே *
தூவெளிய தாயகண் டானந்த சுகவாரி *
தோற்றுமதை யென்சொல் லுகேன் *
பண்ணாரு மிசையி னொடு பாடிப் படித்தருட் *
பான்மைநெறி நின்று தவருப் *
பக்குவ விசேஷராய் நெக்குநெக் குருகிப் *
பணிந்தெழுந் திருகை கூப்பிக் *
கண்ணாறு கரைபுரள நின்றவன் பரையெலாங் *
கைவிடாக் காட்சி யுறவே *
*

கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு *
கருணா கரக் கடவுளே. (உ)

எல்லாமு னடிமையே யெல்லாமு னுடைமையே *
எல்லாமு னுடைய செயலே *
எங்கணும் வியாபிநீ யென்றுசொலு மியல்பென் *
றிருக்காதி வேதமெல்லாஞ் *
சொல்லான் முழக்கியது மிக்கவுப காரமாச் *
சொல்லிறந் தவரும்விண்டு *
சொன்னவையு மிவைநல்ல குருவான பேருந் *
தொகுத்த நெறி தானுமிவையே *
யல்லாம லில்லையென நன்றாவறிந்தேன் *
அறிந்தபடி நின்றுசுகநான் *
ஆகாத வண்ணமே யிவ்வண்ண மாயினேன் *
அதுவுநின தருளென் னவே *
கல்லாத வறிஞனுக் குள்ளே யுணர்த்தினை *
கதிக்குவகை யேது புகலாய் *
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு *
கருணா கரக் கடவுளே. (ரு)

பட்டப் பகற்பொழுதை யிருளென்ற மருளர்தம் *
பக்ஷமோ வெனது பக்ஷம் *
பார்த்தவிட மெங்கணுங் கோத்தநிலை குலையாது *
பரமவெளி யாக வொருசொல் *
திட்டமுடன் மௌனியா யருள்செய் திருக்கவும் *
சேராம லாசா கநான் *
சிறுவீடு கட்டியதி னடுசோற்றை யுண்டுண்டு *
தேக்குசிறி யார்கள் போல *
நட்டணைய தாக்கற்ற கல்வியும் விவேகமும் *
நன்னிலைய மாக வுன்னி *
நானென்று நீயென் றிரண்டில்லை யென்னவே *
நடுவே முளைத்த மனதைக் *
கட்டவறி யாமலே வாடினே னெப்போது *
கருணைக் குரித்தா வனோ *
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு *
கருணா கரக் கடவுளே. (சு)

மெய்விடா தாவுள்ள மெய்யரு ளிருந்துநீ *
மெய்யானமெய்யையெல்லாம் *
மெய்யென வுணர்த்தியது மெய்யிதற் கையமிலை *
மெய்யே கு மறியா மெவரும்

பொய்விடாப் பொய்யினே னுள்ளத் திருந்துதான் *
பொய்யான பொய்யை யெல்லாம் *
பொய்யெனு வண்ணமே புகலவைத் தாயெனிற் *
புன்மையே னென் செய்குவென் *
மைவிடா தெழுநீல கண்டகுரு வேவிஷ்ணு *
வடிவான ஞான குருவே *
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே *
மதங்கமொடாறு நின்ற குருவே *
கைவிடா தேயென்ற வன்பருக் கன்பாய்க் *
கருத்தூ டுணர்த்து குருவே *
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு *
கருணா கரக் கடவுளே. (௫)

பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே *
பாவித் திறைஞ்ச வாங்கே *
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப் *
பனிமல ரெடுக்க மனமும் *
நண்ணே னலாமலிரு கைதான் குவிக்க வெனில் *
நாணுமென் னுளநிற்றி நீ *
நான்கும் பிடும்போ தரைக்கும் பிடாதலால் *
நான்பூசை செய்யன் முறையோ *
விண்ணேவி ணாதியாம் பூதமே நாதமே *
வேதமே வேதாந் தமே *
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள் *
வித்தேய வித்தின் முளையே *
கண்ணே கருத்தேயெ னெண்ணே யெழுத்தே *
கதிக்கான மோன வடிவே *
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு *
கருணா கரக்க டவுளே. (௬)

சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது *
தான்வந்து முற்று மெனலால் *
சகமீ திருந்தாலு மரணமுண் டென்பது *
சதாநிஷ்டர் நினைவ தில்லை *
சித்தையறி யார்க்கிது போதிப்ப தல்லவே *
செப்பினும் வெகுதர்க் கமாம் *
திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள் *
சித்தாந்த நித்ய ரலவோ *
இந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுளர் *
இருக்காதி வேத முனிவர் *

எண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்கள் *
இரவிமதி யாதி யோர்கள் *
கந்தருவர் கின்னரர்கள் மற்றையர்க ளியாவருங் *
கைகுவித் திடுதெய் வமே *
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு *
கருணா கரக் கடவுளே. (௭)

துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்கர்ம *
துஷ்டதே வதைக ளில்லை *
துரியநிறை சாந்ததே வதையா முனக்கே *
தொழும்பனன் பபிஷேக நீர் *
உள்ளுறையி லென்னாவி நைவேத்தியம் ப்ராணனே *
ஓங்குமதி தூப தீபம் *
ஒருகாலமன்றிது சதாகால பூசையா *
வொப்புவித் தேன்கருணை கூர் *
தெள்ளிமறை வடியிட்ட வமுதப் பிழம்பே *
தெளிந்ததே னேசீ னியே *
திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே *
தெவிட்டாத வானந்தமே *
கள்ளனறி ஓடுமே மெள்ளமெள்ள வெளியாய்க் *
கலக்கவரு நல்லவுறவே *
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு *
கருணா கரக் கடவுளே. (௮)

உடல்குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்கள் *
உளற்றென வெதும்பி யூற்ற *
உளசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே *
யோருறவு முன்னியுன்னிப் *
படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப் *
பாடியா டிக்குதித்துப் *
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை *
பரப்பியார்த் தார்த்தெழுந்து *
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி *
வானேய வானி லின்ப *
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி *
வாழியென வாழ்த்தி யேத்துங் *
கடன்மடை திறந்தனைய வன்பரன் புக்கெளியை *
சன்னெஞ் சனுக்கெளியையோ *
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு *
கருணா கரக் கடவுளே. (௯)

இங்கற்ற படியங்கு மெனவறியு நல்லறிஞர் *
எக்காலமும் முதவுவார் *
இன்சொறவ ஞர்பொய்மை யாமிழுக் குணாயார் *
இரங்குவார் கொலைகள்யயிலார் *
சங்கற்ப சித்தரவ ருள்ளக் கருத்திலுறை *
சாக்ஷிநீ யிகப ரத்துஞ் *
சந்தான கற்பகத் தேவா யிருந்தே *
சமஸ்தவின் பமு முதவுவாய் *
சிங்கத்தை யொத்தெனைப் பாயவரு வினைபினைச் *
சேதிக்க வருசிம் புளே *
சிந்தா குலத்திமிர மகலவரு பானுவே *
தீனனேன் கரையே றவே *
கங்கற்ற பேராசை வெள்ளத்தின் வரைருட் *
ககனவட் டக்கப் பலே *
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு *
கருணா கரக்க டவுளே. (ம)

கருணாகரக்கடவுள் முற்றுப்பெற்றது. ஆக ருய்சு.

சித்தர்கணம்.

திக்கொடு திகந்தமும் மனவேகமென்னவே *
சென்றோடி யாடி வருவீர் *
செம்பொன்மக மேருவொடு குணமேரு வென்னவே *
திகழ்துருவ னரவ ராவி *
உக்ரமிகு சக்ர தர னென்ன நிற் பீர்கையில் *
உழுந்தமிழு மாச மனமா *
ஓரேழு கடலையும் பருகவல் லீரிந்த்ரன் *
உலகுமயி ராவ தமுமே *
கைக்கெளிய பந்தா வெடுத்துவிளை யாடுவீர் *
ககனவட் டத்தை யெல்லாங் *
கடுகிடை யிருத்தியே யஷ்டகுல வெற்பையுங் *
காட்டுவீர் மேலு மேலு *
மிக்கசித் திகளெலாம் வல்லநீ ரடிமைமுன் *
விளங்கவரு சித்தியிலையோ *
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற *
வித்தகச் சித்தர் கணமே. (க)

யாட்டளி துணைந்துவர்ர் கற்பகந னீழலைப்
பாரினிடை வரவ ழைப்பீர்
பத்மநிதி சங்கநிதி யிருபாரி சத்தி லும்
பணிசெயுந் தொழிலா ளர்போற்
கேட்டது கொடுத்துவர் நிற்கவைப் பீர்பிச்சை
கேட்டுப் பிழைப்போ னாயுங்
கிரீடபதி யாக்குவீர் கற்பாந்த வெள்ளமொரு
சேணியிடை குறுக வைப்பீர்
ஓட்டினை யெடுத்தா யிரத்தெட்டு மாற்றாக
ஒளிவிடும் பொன்னாக் குவீர்
உரகனு மிளைப்பாற யோகதண் டத்திலே
யுலகுசுமை யாக வருளால்
மீட்டிடவும் வல்லநீ ரொன்மனக் கல்லையனல்
மெழுகாக்கி வைப்ப தரிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே. (௨)

பாரொடுநன் னீராதி யொன்றொடொன் றாகவே
பற்றிலய மாகு போது
பரவெளி யின்மருவுவீர் கற்பாந்த வெள்ளம்
பரந்திடி னதற்கு மீதே
நீரிலுறை வண்டாய்த் துவண்டுசிவ யோகநிலை
நிற்பீர் விகற்ப மாகி
நெடியமுகி லேழும் பரந்துவரு ஷிக்கிலோ
நிலவுமதி மண்டல மதே
யூரொன விரங்குவீர் பிரமாதி முடிவில்விடை
யூர்தியரு ளாலுலவு வீர்
உலகங்கள் கீழ்மேல தாகப் பெருங்காற்
றுலாவினற் றரணியி னால்
மேருவென வசையாம னிற்கவல் லீருமது
மேதக்க சித்தி யெளிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே. (௩)

எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான்
இயாதினும் மரிதரிது காண்
இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
வேதுவரு மோவறிகி லேன்
கண்ணக னிலத்துநா னுள்ளபொழு தேயருட்
சகளவட் டத்தி னின்று

காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு *
கலந்துமதி யவச முறவே *
பண்ணுவது நன்மையிந் நிலைபதியு மட்டுமே *
பதியா யிருந்த தேகப் *
பவுரிகுலை யாமலே கௌரிகுண் டலியாயி *
பண்ணவித னருளி னாலே *
விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே *
வேண்டுவே னுமதடிமை நான் *
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற *
வித்தகச் சித்தர் கணமே. (௪)

பொய்திகழு முலகநடை யென்சொல்கே னென்சொல்கேன்
பொழுது போக் கேதென்னிலோ *
பொய்யுட னிமித்தம் புசிப்புக் கலைந்திடல் *
புசித்தபின் கண்ணுறங்கல் *
கைதவ மலாமலிது செய்தவம தல்லவே *
கண்கெட்ட பேர்க்கும் வெளியாய்க் *
கண்டதிது விண்டிதைக் கண்டித்து நிற்றலெக் *
காலமோ வதையறி கிலேன் *
மைதிகழு முகிலினங் குடைநிழற் றிடவட்ட *
வரையினொடு செம்பொன் மேரு *
மால்வரையின் முதுகூடும் யோகதண் டக்கோல் *
வரைந்துஜப விருது காட்டி *
மெய்திகழு மஷ்டாங்க யோகபூ மிக்குள்வரர் *
வேந்தரோ குணசாந்தரோ *
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற *
வித்தகச் சித்தர் கணமே. (௫)

கெஜதுரக முதலான சதுரங்க மனமாதி *
கேள்வியி னிசைந்து நிற்பக் *
கெடிகொண்ட தலைமாறு மும்மண் டலத்திலும் *
கிள்ளாக்கு செல்ல மிக்க *
தெசவிதம தாய்நின்ற நாதங்க ளோலிடச் *
சிங்காச னாதி பர்களாய்த் *
திக்குத் திகந்தமும் பூரண மதிக்குடை *
திகழ்ந்திட வசந்த காலம் *
இசையமலர் மீதுறை மணம்போல வானந்தம் *
இதயமேற் கொள்ளும் வண்ணம் *
என்றைக்கு மழியாத சிவராஜ யோகமா *
யிந்த்ராதி தேவர்க ளெலாம் *

விஜயஜய ஜயவென்ன வாசிசொலவேகொலு *
விருக்குநும் பெருமை யெளிதோ *
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற *
வித்தகச் சித்தர் கணமே. (௬)

ஆணிலே பெண்ணிலே யென்போல வொருபேதை *
யகிலத்தின் மிசையுள் ளதோ *
ஆடிய கறங்குபோ லோடியுழல் சிந்தையை *
யடக்கியொரு கணமேனும் யான் *
காணிலேன் றிருவருளை யல்லாது மௌனியாய்க் *
கண்மூடி யோடு மூச்சைக் *
கட்டிக்கலா மதியை முட்டவே மூலவெங் *
கனலினை யெழுப்ப நினைவும் *
பூணிலே னிற்றைநாட் கற்றதுங் கேட்டதும் *
போக்கிலே போக விட்டுப் *
பொய்யுலக நயினே நயினுங் கடையான *
புன்மையே னின்ன மின்னம் *
வீணிலே யலையாமன் மலையிலக் காகநீர் *
வெளிப்படத் தோற்றல் வேண்டும் *
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற *
வித்தகச் சித்தர் கணமே. (எ)

கன்னலமு தெனவுமுக் கனியெனவும் வாயூறு *
கண்டெனவு மடியெடுத்துக் *
கடவுளர் கடந்ததல வழுதழுது பேய்போல் *
கருத்திலெழு கின்றதெல்லாம் *
என்னதறி யாமையறி வென்னுமிரு பகுதியால் *
ஈட்டுதமி ழென்ற மிழினுக் *
கின்னல்பக ராதுலக மாராமை மேவிட் *
டிருத்தலா வித்த மிழையே *
சொன்னவணி யாவனவன் முத்திசித் திகளெலாம் *
தோய்ந்த நெறியே படித்தீர் *
சொல்லுமென வவர்நீங்கள் சொன்னவவையிற்சிறிது *
தோய்ந்தகுண சாந்த னெனவே *
மின்னல்பெற வேசொல்ல வச்சொல்கேட் டடிமைமனம் *
விகசிப்ப தெந்த நாளோ *
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற *
வித்தகச் சித்தர் கணமே. (அ)

பொற்பினொடு கைகாலில் வள்ளுகிர் படைத்தலாற் ❋
  போந்திடை யொடுக்க முறலால் ❋
பொலிவான வெண்ணீறு பூசியே யருள்கொண்டு ❋
  பூரித்த வெண்ணீர் மையால் ❋
எற்பட விலங்குகக ணத்தினை யாவிழி ❋
  இசைந்துமே னேக்க முறலால் ❋
இரவுபக லிருளான கனதந்தி படநூறி ❋
  இதயங் களித்திடு தலாற் ❋
பற்பல விதங்கொண்ட புலிகலையி னுரியது ❋
  படைத்துப் ப்ரதாப முறலாற் ❋
பனிவெயில்கள் புகுதாம னெடியவான் றொடர்நெடிய ❋
  பருமர வனங்க ளாரும் ❋
வெற்பினிடை யுறைதலாற் றவராஜ சிங்கமென ❋
  மிக்கோ ருமைப் புகழ்வர்காண் ❋
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற ❋
  வித்தகச் சித்தர் கணமே (௯)

சல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள் ❋
  சற்றுமறி வில்லாத வென் ❋
சர்மத்தை யென்சொல்கேன் மதியை யென்சொல்லு கேன் ❋
  கைவல்ய ஞான நீதி ❋
நல்லோ ருணாக்கிலோ கர்மமுக் கியமென்று ❋
  நாட்டுவேன் கர்ம மொருவன் ❋
நாட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று ❋
  நவிலுவேன் வட மொழியிலே ❋
வல்லா னொருத்தன்வர வுந்த்ரா விடத்திலே ❋
  வந்ததா விவக ரிப்பேன் ❋
வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின் ❋
  வசனங்கள் சிறிது புகல்வேன் ❋
வெல்லாம லெவனாயு மருட்டிவிட வகைவந்த ❋
  வித்தையென் முத்தி தருமோ ❋
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற ❋
  வித்தகச் சித்தர் கணமே. (௰)

சித்தர்கணம்-முற்றுப்பெற்றது. ஆக ௬௬.

ஆனந்தமானபரம்.

கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்குமக் ⁕
குணமொன்று மொன்றி லேன்யாற் ⁕
சோரமெத் தனைபக்ஷ பாதமெத் தனைவன் ⁕
குணங்களெத் தனைசெடிய பாழ்ங் ⁕
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக் ⁕
கள்ளமெத் தனையுள் ளசற் ⁕
காரியஞ் சொல்லிடினு மறியாமை யெத்தனை ⁕
சதிக்கென் றமைத்த வருளிற் ⁕
செல்லாமை யெத்தனைவிர் தாகோஷ்டி யென்னிலோ ⁕
செல்வமெத் தனைமுயற்சி ⁕
சிந்தையெத் தனைசலன மிந்த்ரஜா லம்போன்ற ⁕
தேகத்தில் வாஞ்சை முதலா ⁕
யல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை ⁕
யானே னிவைக்கு மாளோ ⁕
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி ⁕
யானந்த மான பரமே. (௧)

தெருளாகி மருளாகி யுழலுமன மாய்மனஞ் ⁕
சேர்ந்துவளர் சித்தாகி யச் ⁕
சித்தெலாஞ் சூழ்ந்தசிவ சித்தாய் விசித்ரமாய்த் ⁕
திரமாகி நானுவிதப் ⁕
பொருளாகியப்பொருளை யறிபொறியு மாகியைம் ⁕
புலனுமா யைம்பூ தமாய்ப் ⁕
புறமுமா யகமுமாய்த் தூரஞ் சமீபமாய்ப் ⁕
போக்கொடு வரத்து மாகி ⁕
இருளாகி யொளியாகி நன்மைதீ மையுமாகி ⁕
இன்றாகி நாளையாகி ⁕
என்றுமா யொன்றுமாய்ப் பலவுமா யாவுமா ⁕
யிவையல்ல வாய நின்னை ⁕
அருளாகி நின்றவர்க ளறிவதல் லாலொருவர் ⁕
அறிவதற் கெளி தாகுமோ ⁕
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி ⁕
யானந்த மான பரமே. (௨)

மாறுபடு தர்க்கந் தொடுக்கவறி வார்சாண் ⁕
வயிற்றின் பொருட்ட தாக ⁕
மண்டலமு விண்டலமு மொன்றாகி மனதுழல ⁕
மாலாகி நிற்க வறிவார் ⁕

வேறுபடு வேடங்கள் கொள்ளவறி வாரொன்றை *
மௌனமௌனன் றகம்வேறதாம் *
வித்தையறி வாரொமைப் போலவே சந்தைபோன் *
மெய்ந்நூல் விரிக்க வருவார். *
சீறுபுலி போற்சீறி மூச்சைப் பிடித்துவிழி *
செக்கச் சிவக்க வறிவார் *
திரமென்று தந்தம் மதத்தையே தாமதச் *
செய்கைகொடு மூளற வறிவார் *
ஆறுசம யங்கடொரும் வேறுவே றாகிவிளை *
யாடுமுனை யாவரறிவார் *
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி *
யானந்த மான பரமே. (௩)

காயிலை யுதிர்ந்தகனி சருகுபுனன் மண்டிய *
கடும்பசி தணக்க டைத்தும் *
கார்வரையின் முழையிற் கருங்கல்போ லசையாது *
கண்மூடி நெடி திருந்தும் *
தீயினிடை வைகியுந் தோயமதின் மூழ்கியும் *
தேகங்க ளென்பெலும் பாய்த் *
தெரியநின் றுஞ்சென்னி மயிர்கள்கூ டாக்குருவி *
தெற்றவெயி லாடி ருந்தும் *
வாயுவை யடக்கியு மனதினை யடக்கியும் *
மௌனத் திலேயி ருந்தும் *
மதிமண்ட லத்திலே கனல்செல்ல வமுதுண்டு *
வனமூ டிருந்து மறிஞர் *
ஆயுமறை முடிவான வருணாடி ணரடிமை *
அகிலத்தை நாடன் முறைபோ *
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி *
யானந்த மான பரமே. (௪)

சுத்தமு மசுத்தமுந் துக்கசுக பேதமும் *
தொந்தமுட னிர்த்தொந்தமும் *
ஸ்தூலமொடு சூக்ஷமமு மாசையுநி ராசையும் *
சொல்லுமொரு சொல்லின் முடிவும் *
பெத்தமொடு முத்தியும் பாவமொட பாவமும் *
பேதமொட பேத நிலையும் *
பெருமையொடு சிறுமையு மருமையுட னெளிமையும் *
பெண்ணினுட னாணுமற்று *
நித்தமு மநித்தமு மஞ்சன நிரஞ்சனமும் *
நிஷ்களமு நிசஷ்ச களமும் *
*

நீதியும நீதியு மாதியொட நாதியும் *
நிர்விஷய விஷய வடிவும் *
அத்தனையு நீயலதெ ரத்தனையு மில்லையெனில் *
யாங்சருணை யன்றி யுண்டோ *
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி *
யானந்த மான பரமே. (௫)

காராரு மாணவக் காட்டைக் களைந்தறக் *
கண்டகங் கார மென்னுங் *
கல்லைப் பிளந்துநெஞ் சகமான பூமிவெளி *
காணத் திருத்தி மேன்மேற் *
யாராதி யறியாத மோனமாம் வித்தைப் *
பதித்தன்பு நீரா கவே *
பாய்ச்சியது பயிராகு மட்டுமா மாயைவன் *
பறவையணு காத வண்ணம் *
நேராக நின்றுவிளை போகம் புசித்துண்ட *
நின்னன்பர் கூட்ட மெய்த *
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே *
நின்னருட் பார மென்றும் *
யாராரு மறியாத சூதான வெளியில்வெளி *
யாகின்ற துரிய மயமே *
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி *
யானந்த மான பரமே. (௬)

வானாதி பூதமா யகிலாண்ட கோடியாய் *
மலையாகி வளைக டலுமாய் *
மதியாகி யிரவியாய் மற்றுள வெலாமாகி *
வான்கருணை வெள்ள மாகி *
நானாகி நின்றவனு நீயாகி நின்றிடவும் *
நானென்ப தற்றி டாதே *
நானு னெனக்குளறி நானு விகாரியாய் *
நானறிந் தறியா மையாய்ப் *
போனு லதிட்டவலி வெல்லவெளி தோபகற் *
பொழுதுபுகு முன்கண் மூடிப் *
பொய்த்துயில்கொள் வான்றனை யெழுப்பவச மோகினிப் *
போதிப்ப தெந்த நெறியை *
யானு மென்கொடுமை யநியாய மநியாயம் *
யார்பா லெடுத்து மொழிவேன் *
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி *
யானந்த மான பரமே. (௭)

பொய்யினேன் புலையினேன் கொலையினே னின்னருள் *
    புலப்பட வறிந்து நிலையாப் *
புன்மையேன் கல்லாத தன்மையே னன்மைபோற் *
    பொருளலாப் பொருளை நாடும் *
வெய்யனேன் வெகுளியேன் வெறியனேன் சிறியனேன் *
    வினையினே னென்றென் னைநீ *
விட்டுவிட நினைவையேற் றட்டழிவ தல்லாது *
    வேறுகதி யேது புகலாய் *
துய்யனே மெய்யனே யுயிரினுக் குயிரான *
    துணைவனே யிணையொன் றிலாத் *
துரியனே துரியமுங் காணு வதீதனே *
    சுருதிமுடி மீதிருந்த *
ஐயனே யப்பனே யெனுமறிஞ ரறிவைவிட் *
    டகலாத கருணை வடிவே *
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி *
    யானந்த மான பரமே. (அ)

எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினுமென் *
    னிதயமு மொடுங்க வில்லை *
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவில்லை *
    யாதினும் மபிமாந மென் *
சித்தமிசை குடிகொண்ட தீமையொ டிரக்கமென் *
    ஜென்மத்து நானறிகி லேன் *
சீலமொடு தவவிரத மொருகனவி லாயினும் *
    தெரிசனங் கண்டு மறியேன் *
பொய்த்தமொழி யல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி *
    புகன்றிடேன் பிறர்கேட் கவே *
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள் *
    பொருந்திடாப் பேதை நானே *
யத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா *
    யவனிமிசை யுண்டோ சொலாய் *
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி *
    யானந்த மான பரமே. (கூ)

எக்கால முந்தனக் கென்னவொரு செயலிலா *
    வேழைநீ யென்றி ருந்திட் *
டெனதாவி யுடல்பொருளு மௌனியாய் வந்துகை *
    யேற்றுநம தென்ற வன்றே *
பொய்க்கால தேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும் *
    பொய்யுடலை மெய்யென் னலும் *

பொய்யுரவு பற்றலும் பொய்யாகு நானெனல் ✲
பொய்யினும் பொய்யா கையால் ✲
மைக்கா விருட்டனைய விருளில்லை யிருவினைகள் ✲
வந்தேற வழியு மில்லை ✲
மனமில்லை யம்மனத் தினமில்லை வேறோர் ✲
வரவில்லை போக்கு மில்லை ✲
ஆக்கால மிக்காவ மென்பதிலை யெல்லாம் ✲
அதீதமய மான தன்றோ ✲
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி ✲
யானந்த மான பரமே. (ம)

ஆனந்தமானபரம் - முற்றுப்பெற்றது. ஆ எசு.

சுகவாரி.

இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதேன் ✲
எனருசித் திடவலிய வந் ✲
தின்பங் கொடுத்தநினை யெந்நேர நின்னன்பர் ✲
இடையரு துருகி நாடி ✲
உன்னிய கருத்தவிழ வுளைகுளநி யுடலெங்கும் ✲
ஒய்ந்தயர்ந் தவச மாகி ✲
உணர்வரிய பேரின்ப வநுபூதி யுணர்விலே ✲
யுணர்வார்க ளுள்ள படிகாண் ✲
கன்னிகை யொருத்திசிற் றின்பம்வேம் பென்னினுங் ✲
கைக்கொள்வள் பக்கு வத்திற் ✲
கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்னெனக் ✲
கருதிநகை யாவளதுபோற் ✲
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை ✲
தோற்றிற் சுகாரம்ப மாம் ✲
சுத்தநிர்க குணமான பரதெய்வ மேபரஞ் ✲
சோதியே சுகவா ரியே. (க)

அன்பின்வழி யறியாத வென்னைத் தொடர்ந்தென்னை ✲
யறியாத பக்கு வத்தே ✲
ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்துநா ✲
னற்றே னலந்தே னென ✲
என்புல மயங்கவே பித்தேற்றி விட்டா ✲
யிரங்கியொரு வழியா யினும் ✲

இன்பவெள்ள மாகவுந் துள்ளங் களிக்கவே *
எனைநீ கலந்த துண்டோ *
தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு *
தன்முகை தனக்கு முண்டோ *
தமியனேற் கிவ்வணந் திருவுள மிரங்காத *
தன்மையாற் றனியிருந்து *
துன்பமுறி னெங்ஙனே யழியாத நின்னன்பர் *
சுகம்வந்து வாய்க்கு முனையாய் *
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ் *
சோதியே சுகவாரியே. (௨)

கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென் *
கன்னெஞ்ச முருகவிலையே *
கருணைக் கிணங்காத வன்மையையு நான்முகன் *
கற்பிக்க வொருகடவுளோ *
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு *
வழக்குக் கிழுக்கு முண்டோ *
வானமாய் நின்றின்ப மழையா யிரங்கியெனை *
வாழ்விப்ப துன்பரங்காண் *
பொல்லாத சேயெனிற் றாய்தள்ள லீதமோ *
புகலிடம் பிறிது முண்டோ *
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப் *
புன்மையே னுவ னந்தோ *
சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச் *
சும்மா விருக்க வருளாய் *
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ் *
சோதியே சுகவாரியே. (௩)

என்பெலா நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்பவுடல் *
இரசமன தழலின் மெழுகாய் *
இடையறா துருகவரு மழைபோ லிரங்கியே *
இருவிழிக ணீரி றைப்ப *
அன்பினல் மூர்ச்சித்த வன்பருக் கங்ஙனே *
அமிர்த சஞ்ஜீவிபோல்வந் *
தானந்த மழைபொழிவை யுள்ளன் பிலாதவெனை *
யார்க்காக வடிமை கொண்டாய் *
புன்புலான் மயிர்தோ னரம்பென்பு மொய்த்திடு *
புலைக்குடிலி லருவ ருப்புப் *
பொய்யல்ல வேயிதனை மெய்யென்று நம்பியென் *
புத்தி செலுமோ பாழிலே *

துன்பமா யலையவோ வுலகநடை யையவொரு *
சொற்பனத் திலும்வேண் டிலேன் *
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ் *
சோதியே சுகவா ரியே. (௪)

வெந்நீர் பொருதெனுடல் காவின்முட் டைக்கவும் *
வெடுக்கென் றகைசத்தெ டுத்தால் *
விழியிலைமக் தங்கனே தண்ணருளை நாடுவேன் *
வேறொன்றை யொருவர் சொல்லின் *
அந்நேர மையோவென் முகம்வாடி நிற்பதுவும் *
ஐபநின் னருள றியுமே *
ஆனாலு மெத்தப் பயந்தவனி யானென்னை *
யாண்டநீ கைவி டாதே *
இந்நேர மென்றிலை யுடற்சுமைய தாகவும் *
எடுத்தா லிறக்க வென்றே *
எங்கெங்கு மொருதீர்வை யாயமுண் டாயினும் *
இறைஞ்சுசுக ராதி யான *
தொன்னீர்மை யாளர்க்கு மானிடம் வகுத்தவருள் *
துணையென்று நம்பு கின்றேன் *
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ் *
சோதியே சுகவா ரியே. (௫)

பற்றுவன வற்றிடுநி ராசையென் றொருபூமி *
பற்றிப் பிடிக்கு மியோகப் *
பாங்கிற் பிராணலய மென்னுமொரு பூமியிவை *
பற்றின் மனமறு மென்னவே *
சற்றையஞ் சடைமௌனி தானே கனிந்தகனி *
கனிவிக்ச வந்த கனிபோற் *
கண்டதிந் நெறியெனத் திருவுளக் கனிவொடு *
கனிவாய் திறந்து மொன்றைப் *
பெற்றவனு மல்லேன் பெருதவ னுமல்லேன் *
பெருக்கத் தவித்து ழறியே *
பெண்ணீர்மை யென்னவிரு கண்ணீ ரிறைத்துநான் *
பேய்போ லிருக்க வுலகம் *
சுற்றிநகை செய்யவே யுலையவிட் டாயெனிற் *
சொல்லவினி வாயு முண்டோ *
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ் *
சோதியே சுகவா ரியே. (௬)

அரும்பொனே மணியேயெ னன்பேயெ னன்பான *
அறிவேயெ னறிவி லூறும் *
ஆனந்த வெள்ளமே யென்றென்று பாடினேன் *
ஆடினே னாடி நாடி *
விரும்பியே கூவினே னுலறினே னலறினேன் *
மெய்சிலிர்த் திருகை கூப்பி *
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே *
வேசற் றயர்ந்தே னியான் *
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனு னாலுமுனை *
இடைவிட்டு நின்ற துண்டோ *
என்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ *
யாதேனு மறியா வெறும் *
துரும்பனே னென்னினுங் கைவிடுத னீதியோ *
தொண்டரொடு கூட்டு கண்டாய் *
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ் *
சோதியே சுகவா ரியே. (எ)

பாராதி யண்டங்க ளத்தனையும் வைக்கின்ற *
பரவெளியி னுண்மை காட்டிப் *
பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னிற்றோய்ந்த *
பாவியேன் பரிசு காட்டித் *
தாரார மாய்நிற்க நிற்சிந்தை காட்டிச் *
சதாகால நிஷ்டை யெனவே *
சகசநிலை காட்டினை சுகாதீத நிலையுந் *
தனைக்காட்ட நாள் செல்லுமோ *
காரார வெண்ணரு மனந்தகோ டிகணின்று *
காலூன்றி மழைபொழிதல் போல் *
கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாங் *
கம்மியா னந்த வெள்ளம் *
சோராது பொழியவே கருணையின் முழங்கியே *
தொண்டரைக் கூவு முகிலே *
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ் *
சோதியே சுகவா ரியே. (அ)

பேதித்த சமயமோ வொன்றுசொன படியொன்று *
பேசாது துறவா கியே *
பேசாத பெரியோர்க ளிருவிகற் பத்தினுற் *
பேசார்கள் பரம குருவாய்ப் *
போதிக்கு முக்கணிறை நேர்மையாய்க் கைக்கொண்டு *
போதிப்ப தாச்சறிவிலே *

போக்குவர வறவின்ப நீக்கமற வசனமாய் *
போதிப்ப தெவனாயனே *
சாதித்த சாதனமு மியோகியர்க ணமதென்று *
சங்கிப்ப ராத லாலே *
தன்னிலே தானுயயர்ந்துவிடு வோமெனத் *
தனியிருத் திடி னங்ஙனே *
சோதிக்க மனமாயை தனையேவி னலடிமை *
சுகமாவ தெப்படி சொலாய் *
சுத்தநிர்க் குணமான பரதெய்வமேபரஞ் *
சோதியே சுகவா ரியே. (௬)

அண்டமுடி தன்னிலோ பகிரண்ட மதனிலோ *
அலரிமண் டல நடுவிலோ *
அனலடுவி லோவமிர்த மதிநடுவி லோவன்பர் *
அகமுருகி மலர்க ளேவித் *
தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ திக்குத் *
திகந்தத்தி லோவெளியி லோ *
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ வேதாந்த *
சித்தாந்த நிலைதன்னி லோ *
கண்டபல பொருளிலோ காணாத நிலையெனக் *
கண்டசூ னியமதனி லோ *
காலமொரு மூன்றிலோ பிறவினிலை தன்னிலோ *
கருவிகர ணங்க ளோய்ந்த *
தொண்டர்க ளிடத்திலோ நீயூற் றிருப்பது *
தொழும்பனேற் குரைவு புகலாய் *
சுத்தநிர்க் குணமான பரதெய்வமேபரஞ் *
சோதியே சுகவா ரியே. (௭)

எந்தநாள் கருணைக் குரித்தாகு நாளெனவும் *
என்னிதய மெனைவாட் டுதே *
ஏதென்று சொல்லுவேன் முன்னெடுபின் மலை வரவும் *
இற்றைவரை யாது பெற்றேன் *
பந்தமா னதிலிட்ட மெழுகாகி யுள்ளம் *
பதைத்துப் பதைத்து ருகவோ *
பரமசுக மாவது பொறுப்பரிய துயரமாய்ப் *
பலகாலு மூர்ச்சிப் பதோ *
சிந்தையா னதுமறிவை யென்னறிவி லறிவான *
தெய்வநீ யன்றி யுரைதோ *
தேகநிலை யல்லவே யுடைகப்பல் கப்பலாய்த் *
திரையாழி யூடு செலுமோ *

சொந்தமா யாண்டநீ யறியார்கள் போலவே *
துன்பத்தி லாழ்த்தன் முறையோ *
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ் *
சோதியே சுகவாரியே. (௰௧)

எந்நாளு முடலிலே யுயிரா முனைப்போ *
லிருக்கவிலை யோமன தெனும் *
இயானுமென் னட்பாம் பிராணனு மெனுமச்சடம *
தென்றுனைச் சித்தென்று மே *
அந்நாளி லெவனோ பிரித்தா னதைக்கேட்ட *
அன்றுமுத லின்று வரையும் *
அநியாய மாயெமை யடைக்கிக் குறுக்கே *
அடர்ந்தரசு பண்ணி யெங்கள் *
முன்னாக நீயென்ன கோட்டைகொண் டாயென்று *
மூடமன மிகவு மேச *
மூண்டெரியு மனலிட்ட மெழுகா யுளங்கருகல் *
முறைமையோ பதினா யிரம் *
சொன்னாலு நின்னரு ளிரங்கவிலை யேயினிச் *
சுகம்வருவ தெப்படி சொலாய் *
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ் *
சோதியே சுகவாரியே. (௰௨)

சுகவாரி-முற்றிற்று. ஆக ௮௰௮.

எங்குநிறைகின்றபொருள்.

அவனன்றி யோரணுவு மசையா தெனும்பெரிய *
ஆப்த்தர்மொழி யொன்று கண்டால் *
அறிவாவ தேதுசில வறியாமை யேதிவை *
யறிந்தார்க ளறியார் களார் *
மௌனமொ டிருந்ததா ரென்போ லுடம்பெலாம் *
வாயாய்ப் பிதற்று மவரார் *
மனதெனவு மொருமாயை யெங்கே யிருந்துவரும் *
வன்மையொ டிரக்க மெங்கே *
புவனம் படைப்பதென் கர்த்தவிய மெவ்விடம் *
பூதமே தங்க ளெவிடம் *
பொய்மெயித மகிதமேல் வருநன்மை தீமையொடு *
பொறைபொரு மையுமெவ் விடம் *
எவர்சிறிய ரெவர்பெரிய ரெவருறவ ரெவர்பகைஞர் *
யாதுமுனை யன்றி யுண்டோ *

இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி *
எங்கு நிறைகின்ற பொருளே. (௧)

அன்னை யனையெனுஞ் சிலசமய நின்னையே *
ஐயாவை யாவென் னவே *
அலறிடுஞ் சிலசமய மல்லாது பேய்போல *
அலறியே யொன்று மிலவாய்ப் *
பின்னேது மறியாம லொன்றைவிட் டொன்றைப் *
பிதற்றிடுஞ் சிலசமய மேல் *
பேசரிய வொளியென்றும் வெளியென்று நாதாதி *
பிறவுமே நிலய மென்றுந் *
தன்னே ரிலாததோ ரணுவென்று மூவிதத் *
தன்மையாங் கால மென்றும் *
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச் *
சதாஞான வானந்த மாய் *
என்னே யெனேகருணை விளையாட் டிருந்தவா *
றெம்மனோர் புகல வெளிதோ *
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி *
எங்குநிறை கின்ற பொருளே. (௨)

வேதமுட னாகம புராணமிதி காசமுதல் *
வேறுமுள கலைக ளெல்லாம் *
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே *
விரிவா யெடுத் துரைக்கும் *
ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை *
யுண்டுபண் ணுஞான மாகும் *
உளசமய னுபவவசன மூன்றுக்கு மொவ்வுமீ *
துபயவா திகள்சம் மதம் *
ஆதலி னெனக்கினிச் சரியையா திகள்போது *
மியாதொன்று பாவிக்க நான் *
அதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கில் *
அத்துவித மார்க்க முறலாம் *
எதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செய் *
எந்தைநீ குறையு முண்டோ *
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி *
எங்குநிறை கின்ற பொருளே. (௩)

சொல்லான திற்சற்றும் வாராத பிள்ளையைத் *
தொட்டில்வைத் தாட்டி யாட்டித் *
துடையினைக் கிள்ளல்போற் சங்கற்ப மொன்றிற் *
றொடுக்குந் தொடுத்த ழிக்கும் *

பொல்லாத வாதனை யெனுஞ்சப்த பூமியிடை *
போந்து தலைசுற்றி யாடும் *
புருஷனி லடங்காத பூவைபோற் றானே *
புறம்போந்து சஞ்ச ரிக்கும் *
கல்லோ டிரும்புக்கு மிகவன்மை காட்டிடும் *
காணாது கேட்ட தெல்லாம் *
கண்டதாக் காட்டியே யணுவாச் சுருக்கிடும் *
கபடநா டகஜா லமோ *
எல்லாமும் வலதிந்த மனமாயை யேழையாம் *
என்னா லடக்க வசமோ *
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி *
எங்குநிறை கின்ற பொருளே. (௪)

கண்ணார நீர்மல்கி யுள்ளநெக் குருகாத *
கள்ளனே னானாலு மோ *
கைகுவித் தாடியும் பாடியும் விடாமலே *
கண்பனித் தாரை காட்டி *
அண்ணா பரஞ்ஜோதி யப்பா வுனக்கடிமை *
யானெனவு மேலெ ழுந்த *
அன்பாகி நாடக நடித்ததோ குறைவில்லை *
அகிலமுஞ் சிறிதறியு மேல் *
தண்ணாரு நின்னதரு ளறியாத தல்லவே *
சற்றேனு மினியி ரங்கிச் *
சாசுவத முத்திநிலை யீதென் றுணர்த்தியே *
சகசநிலை தந்து வேறொன் *
றெண்ணாம லுள்ளபடி சுகமா யிருக்கவே *
ஏழையேற் கருள்செய் கண்டாய் *
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி *
எங்குநிறை கின்ற பொருளே. (௫)

காசமா னதுகோடி கூடுகின் றாலுமொரு *
கல்லின்முன் னெதிர் நிற்குமோ *
கர்மமா னதுகோடி முன்னேசெய் தாலுநின் *
கருணை ப்ரவாக வருளைத் *
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ *
தமியனேற் கருட்டாக மோ *
சற்றுமிலை யென்பதுவும் வெளியாச்சு வினையெலாஞ் *
சங்கேத மாய்க்கூடி யே *
தேகமா னதைமிகவும் வாட்டுதே துன்பங்கள் *
சேராமல் யோக மார்க்க *

சித்தியோ வரவில்லை சகசநிஷ் டைக்குமென்
சிந்தைக்கும் வெகுதூ ரநான்
ஏகமாய் நின்னோ டிருக்குநா ளெந்தநாள்
இந்நாளின் முற்று றுதோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்ற பொருளே. (௬)

ஒருமைமன தாகியே யல்லலற நின்னருளில்
ஒருவனுன் வந்தி ருக்கில்
உலகம் பொருததோ மாயாவிசித்ர மென
வோயுமோ விடமில்லை யோ
அருளுடைய நின்னன்பர் சங்கைசெய் திடுவரோ
அலதுகிர்த் தியகர்த்த ராய்
அகிலம் படைத்தெம்மை யாள்கின்ற பேர்சிலர்
அடாதென்பு ரோ வகன்ற
பெருமைபெறு பூரணங் குறையுமோ பூதங்கள்
பேய்க்கோல மாய்வி தண்டை
பேசுமோ வலதுதான் பரிபாக காலம்
பிறக்கவில்லை யோ தொல்லையாம்
இருமைசெறி சடவினை யெதிர்த்துவாய் பேசுமோ
ஏதுவரவு சிறிது புகலாய்
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்ற பொருளே. (௭)

நில்லாது தேகமெனு நினைவுண்டு தேகநிலை
நின்றிடவு மௌனி யாகி
நேரோ யுபாயமொன் றருளினையை யோவிதனை
நின்றனுஷ் டிக்க வென்றால்
கல்லாத மனமோ வொடுங்கியுப ரதிபெறக்
காணவில்லை யாகை யாலே
கையேற் றுணும்புசிப் பொவ்வாதெ நாளுமுன்
காட்சியி லிருந்து கொண்டு
வல்லாள ராயியம நியமாதி மேற்கொண்ட
மாதவர்க் கேவல் செய்து
மனதின் படிக்கெலாஞ் சித்திபெற லாஞானம்
வாய்க்குமொரு மனுவெ னக்கிங்
கில்லாமை யொன்றினையு மில்லாமை யாகவே
இப்போ திரங்கு கண்டாய்
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்ற பொருளே. (௮)

மரவுரி யுடுக்கு மலை வனநெற் கொறித்துமுதிர் *
வனசருகு வாயில் வந்தால் *
வன்பசி தவிர்க்குமனல் வெயிலாதி மழையால் *
வருந்தியும் மூல வனலைச் *
சிரமஏ வெழுப்பியு நீரினிடை மூழ்கியுந் *
தேகநம தல்ல வென்று *
சிற்சுகவ பேக்ஷயாய் நின்னன்பர் யோகஞ் *
செலுத்தினு ரியாம் பாவியேம் *
விரவுமறு சுவையினெடு வேண்டுவ புசித்தணையில் *
வேண்டுவ வெலா முடுத்தி *
மேடைமா ளிகையாதி வீட்டினிடை வைகியே *
வேறொரு வருத்த மின்றி *
இரவுபக லேழையர்கள் சையோக மாயினும் *
எப்படி பிழைப்ப துனையாய் *
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி *
எங்குநிறை கின்ற பொருளே. (சு)

முத்தனைய மூரலும் பவளவா யின்சொலும் *
முகத்திலகு பசுமஞ் சளும் *
மூர்ச்சிக்க விரகசன் னதமேற்ற விருகும்ப *
முலையின்மணி மாலை நால *
வைத்தெமை மயக்கியிரு கண்வலையை வீசியே *
மாயா விலாச மோக *
வாரிதியி லாழ்த்திடும் பாழான சிற்றிடை *
மடந்தையர்கள் சிற்றின்ப மோ *
புத்தமிர்த போகம் புசித்துவிழி யிமையாத *
பொன்னுட்டும் வந்த தென்றால் *
போராட்ட மல்லவோ பேரின்ப முத்தியிப் *
பூமியி லிருந்து காண *
எத்தனை விகாதம்வரு மென்றுசுகர் சென்றநெறி *
இவ்வுலக மறியாத தோ *
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி *
எங்கு நிறைகின்ற பொருளே. (எ)

உன்னிலையு மென்னிலையு மொருநிலை யெனக்கிடந் *
துளறிடு மவத்தை யாகி *
உருவுதான் காட்டாத வாணவமு மொளிகண் *
டொளிக்கின்ற விருளென்னவே *
தன்னிலைமை காட்டா தொருங்கவிரு வினையினுந் *
தாவுசுக துக்க வேலை *

தட்டழிய முற்றுமில் லாமாயை யதனுற் *
நடித்தகில பேத மான *
முன்னிலை யொழித்திட வகண்டிதா காரமாய் *
மூதறிவு மேலு திப்ப *
முன்பின்னொடு கீழ்மே னடுப்பக்க மென்னுமல் *
முற்றுமா னந்த நிறைவே *
என்னிலைமை யாய்நிற்க வியல்புகூ ரருள்வடிவம் *
எந்நாளும் வாழி வாழி *
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி *
எங்குநிறை கின்ற பொருளே (௰௪)

எங்குநிறைகின்றபொருள்முற்றிற்று ஆ௨கூ௰௬.

சச்சிதானந்தசிவம்.

யாராதி ககனப் பரப்புமுன் டோவென்று *
படர்வெளிய தாகி யெழுநாப் *
பரிதிமதி காணுச் சுயஞ்ஜோதி யாயண்ட *
பகிரண்ட வுயிரொ வைக்கும் *
நேராக வறிவா யகண்டமா யேகமாய் *
நித்தமாய் நிர்த்தொந்த மாய் *
நிர்க்குண விலாசமாய் வாக்குமன மணுகாத *
நிர்மலா னந்த மயமாய்ப் *
பேராது நிற்றிநீ சும்மா விருந்துதான் *
பேரின்ப மெய்தி டாமல் *
பேய்மனதை யண்டியே தாயிலாப் பிள்ளையோற் *
பித்தாக வேர்மனதை நான் *
சாராத படியறிவி னிருவிகற் பாங்கமாம் *
சாசுவத நிஷ்டை யருளாய் *
சர்வபரி பூரண வகண்ட தத்துவமான *
சச்சிதா னந்த சிவமே. (௧)

குடக்கொடு குணக்காதி திக்கினை யுழக்கூடு *
கொள்ளரல்போ லைந்து பூதம் *
கூடுஞ் சுருங்கிலைச் சாலேக மொன்பது *
குலாவுநடை மனையை நாறும் *
வடக்கயிறு வெண்ணரம் பாவென்பு தசையினுல் *
மதவேள் விழா நடத்த *
வைக்கின்ற கைத்தேனை வெண்ணீர்செ நீர்கணீர் *
மலநீர்பு ணீரி றைக்கும் *

விடக்குத் துருத்தியைக் கருமருந்துக் கூட்டை *
வெட்ட வெட்டத் தளிர்க்கும் *
வேட்கைமர முறுகின்ற சுடுகாட்டை முடிவிலே *
மெய்போ லிருந்து பொய்யாம் *
சடக்கைச் சடக்கென்ச் சதமென்று சின்மயந் *
தானாகி நிற்ப தென்றோ *
சர்வபரி பூரண வகண்டதத் துவமான *
சச்சிதா னந்த சிவமே. (உ)

பாகத்தி னாற்கவிதை பாடிப் படிக்கவோ *
பத்திநெறி யில்லை வேத *
பாராய ணப்பனுவன் மூவர்செய் பனுவலது *
பகரவோ விசையு மில்லை *
யோகத்தி லேசிறிது முயலவென் றாற்றேகம் *
ஒவ்வாதி வூண்வெ றுத்தால் *
உயிர்வெறுத் திடலொக்கு மல்லாது கிரியைக *
ளுபாயத்தி னாற்செய்ய வோ *
மோகத்தி லேசிறிது மொழியவிலை மெய்ஞ்ஞான *
மோனத்தி னிற்க வென்றால் *
முற்றாது பரிபாக சத்திக ளனேகநின் *
மூதறிவி லேயெ ழுந்த *
தாகத்தி லேவாய்க்கு மமிர்தப்,ப்ர வாகமே *
தன்னந் தனிப்பெ ருமையே *
சர்வபரி பூரண வகண்டதத் துவமான *
சச்சிதா னந்த சிவமே. (௩)

இமையவரவு போதையொரு கற்பகா லம்பண்ணும் *
இவ்வுலக மெவ்வுலகமோ *
என்றெண்ணம் வருவிக்கு மா தர்சிற் றின்பமோ *
என்னின்மக மேரு வாக்கிச் *
சுமையெடுமி னென்றுதான் சும்மாடு மாயெனைச் *
சுமையாளு மாக்கி நாளும் *
துர்ப்புத்தி பண்ணியுள நற்புத்தி யாவையுஞ் *
சூறையிட் டிந்த்ர ஜாலம் *
அமையவொரு கூத்துஞ் சமைந்தாடு மனமாயை *
அம்மம்ம வெல்ல லெளிதோ *
அருள்பெற்ற பேர்க்கெலா மொளிபெற்று நிற்குநீ *
தருளோ வலாது மருளோ *
சமயநெறி காணாத சாக்ஷிநீ சூக்ஷமமாத் *
தமியனேற் குளவுபுகலாய் *

சர்வபரி பூரண வகண்டதத் துவமான ✻
சச்சிதா னந்த சிவமே. (௪)

இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி ✻
ஏங்குதே நெஞ்ச மையோ ✻
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரொன் ✻
றெண்ணவோ திடமில் லையே ✻
அனியாய மாயிந்த வுடலைநா னென்றுவரும் ✻
அந்தகற் காளாக வோ ✻
ஆடித் திருத்துநான் கற்றதுங் கேட்டதும் ✻
அவலமாய்ப் போத னன்றோ ✻
சனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு ✻
கந்தமூ லங்க ளேனும் ✻
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான் ✻
கண்மூடி மௌனி யாகித் ✻
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது ✻
சாமிநீ யறியா ததோ ✻
சர்வபரி பூரண வகண்டதத் துவமான ✻
சச்சிதா னந்த சிவமே. (௫)

மத்தமத கரிமுகிற் குலமென்ன நின்றிலகு ✻
வாயிலுடன் மதியகடு தோய் ✻
மாடகூ டச்சிகர மொய்த்தசந் திரகாந்த ✻
மணிமேடை யுச்சி மீது ✻
முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகை யார்களொடு ✻
முத்துமுத் தாய்க்கு லாவி ✻
மோகத் திருந்துமென் யோகத்தி னிலைநின்று ✻
மூச்சைப் பிடித்த டைத்துக் ✻
கைத்தல நசப்படை விரித்தபுலி சிங்கமொடு ✻
கரடிநுழை நூழை கொண்ட ✻
கானமலை யுச்சியிற் குகையூ டிருந்துமென் ✻
கரதலா மலக மென்னச் ✻
சத்தமற மோனநிலை பெற்றவர்க ளுய்வர்காண் ✻
ஜனகாதி துணிவி தன்றோ ✻
சர்வபரி பூரண வகண்டதத் துவமான ✻
சச்சிதா னந்த சிவமே. (௬)

கைத்தலம் விளங்குமொரு நெல்லியங் கனியெனக் ✻
கண்டவே தாக மத்தின் ✻
காக்ஷிபுரு ஷார்த்தமதின் மாட்சிபெறு முத்திபது ✻

சருதி னநுமான மாகி *
யுத்திபல வாநிருவிகற்பமே வில்லையால் *
ஒன்றோ டிரண்டென்னவோ *
உரையுமில்லை நீயுமில்லை நானுமில்லை யென்பது *
முபாயநீ யுண்டு நானுஞ் *
சித்தமுரை ஞனில்லை யெனும்வசன நீயறிவை *
தெரியார்க டெரிய வசமோ *
செப்புகே வலநீதி யொப்புவமை யல்லவே *
சின்முத்தி ராங்க மரபில் *
சத்தமற வெனையாண்ட குருமௌனி கையினாற் *
றமியனேற் குதவு பொருளே *
சர்வபரி பூரண வகண்டதத் துவமான *
சச்சிதா னந்த சிவமே. (எ)

காயாத மரமீது கல்லேறு செல்லுமோ *
கடவுணீ யாங்க ளடியேம் *
கர்மபந் தத்தினாற் சன்மபந் தம்பெறக் *
கற்பித்த துன்ன தருளே *
வாயார வுண்டபேர் வாழ்த்துவது நொந்தபேர் *
வைவதுவு மெங்க ளுலக *
வாய்பாடு நிற்கநின் வைதிக வொழுங்குநினை *
வாழ்த்தினாற் பெறு பேறுதான் *
ஓயாது பெறுவனோ முறையிட்ட தாற்பின்னர் *
உளறுவது கரும மன்றும் *
உபயநெறி யிதென்னி னுசிதநெறி யெந்தநெறி *
உலகிலே பிழைபொ றுக்கும் *
தாயான கருணையு முனக்குண் டெனக்கினிச் *
சஞ்சலங் கெடவருள்செய் வாய் *
சர்வபரி பூரண வகண்டதத் துவமான *
சச்சிதா னந்த சிவமே. (அ)

இன்னம் பிறப்பதற் கிடமென்னி னிவ்வுடலம் *
இறவா திருப்ப மூலத் *
தெழுமங்கி யமிர்தொழுகு மதிமண் டலத்திலுற *
என்னம்மை குண்ட லினியாற் *
பின்னம் பிறக்காது சேயென வளர்த்திடப் *
பேயேனை நல்க வேண்டும் *
பிறவாத நெறியெனக் குண்டென்னி னிம்மையே *
பேசுகர்ப் பூர தீப *
பின்னும் படிக்ககண் டாகார வன்னையால் *

வினையேனை யொப்பு வித்து *
விட்டுநெறி கூட்டிடுதன் மிகவுநன் றிவையன்றி *
விவகார முண்டென்னி லோ *
தன்னந் தனிச்சிறிய னாற்றிலேன் போற்றிவவர் *
சன்மார்க்க முத்தி முதலே *
சர்வபரி பூரண வகண்டதத் துவமான *
சச்சிதா னந்த சிவமே. (௯)

வேதாகைவ யிவ்வணம் விதிக்சதே தென்னினுன் *
வினைப்பகுதி யென்ப னந்த *
வினைபேச வறியாது நிற்கவிவை மனதால் *
விளைந்ததான் மனதை நாடிற் *
போதமே நிர்குமப் போதத்தை நாடிலோ *
போதமு நினுல்வி ரக்கம் *
பொய்யன்று தெய்வமறை யாவுமே நீயென்று *
போக்குவர வறநி சழ்த்தும் *
ஆதார வாதேய முழுதுநீ யாதலால் *
அகிலமீ தென்னை யாட்டி *
ஆடல்கண் டவனுநீ யாடுகின் றவனுநீ *
அருளுநீ மௌன ஞான *
தாதாவு நீபெற்ற தாய்தந்தை தானுநீ *
தமருநீ யாவுநீ காண் *
சர்வபரி பூரண வகண்டதத் துவமான *
சச்சிதா னந்த சிவமே (௰)

கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னிழல் வைகினுங் *
குளிர்தீம் புனற்கை யள்ளிக் *
கொள்ளுகினு மந்நீ ரிடைத்திளைக் தாடினுங் *
குளிர்சந்த வாடை மடவார் *
வந்துலவு கின்றதென முன்றிலிடை யுலவவே *
வசதிபெறு போதும் வெள்ளை *
வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதர *
மகிழ்போதும் வேலை யமுதம் *
விந்தைபெற வறுசுவையில் வந்ததென வமுதுண்ணும் *
வேளையிலு மாலை கந்தம் *
வெள்ளிலை யடைக்காய் விரும்பிவேண் டியவண்ணம் *
விளையாடி விழிதுயிலினுஞ் *
சந்ததமு நின்னருளை மறவா வரந்தந்து *
தமியேனை ரக்ஷை புரிவாய் *

(௰௧)

சர்வபரி பூரண வகண்டதத் துவமான *
சச்சிதா னந்த சிவமே. (௰௧)

சச்சிதானந்தசிவம் - முற்றுப்பெற்றது. ஆ ௱௰.

தேசோமயானந்தம்.

மருமலர்ச் சோலைசெறி நன்னீழன் மலையாதி *
மன்னுமுனி வர்க்கே வலாய் *
மந்த்ரமா லிகைசொல்லு மியமநிய மாதியா *
மார்க்கத்தி னின்று கொண்டு *
கருமருவு காயத்தை நிர்மலம தாகவே *
கமலா சனுதி சேர்த்துக் *
காலைப் பிடித்தனலை யம்மைகுண் டலியடிக் *
கலைமதியி னூடு தாக்கி *
உருகிவரு மமிர்தத்தை யுண்டுண் டுறங்காமல் *
உணர்வான விழியை நாடி *
ஒன்றோ டிரண்டெனுச் சமரச சொரூபசுக *
முற்றிடவென் மனதின் வண்ணம் *
திருவருண் முடிக்கவித் தேகமொடு காண்பனோ *
தேடரிய சத்தாகி யென் *
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே *
தேசோ மயானந் தமே. (௧)

இப்பிறவி யென்னுமோ ரிருட்கடலின் மூழ்கிநா *
னென்னுமொரு மகர வாய்ப்பட் *
டிருவினை யெனுந்திரையி னெற்றுண்டு புற்புத *
மெனக்கொங்கை வரிசை காட்டுந் *
துப்பிதழ் மடந்தையர் மயற்சண்ட மாருதச் *
சுழல்வந்து வந்த டிப்பச் *
சோராத வாசையாங் கானாறு வானதி *
சுரந்ததென மேலு மார்ப்பக் *
கைப்பரிசு காரர்போ லறிவான வங்கமுங் *
கைவிட்டு மதிம யங்கிக் *
கள்ளவங் கக்காலர் வருவரென் றஞ்சியே *
கண்ணருவி காட்டு மெளியேன் *
செப்பரிய முத்தியாங் கரைசேர வுங்கருணை *
செய்வையோ சத்தாகி யென் *
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே *
தேசோ மயானந் தமே. (௨)

தந்தைதாய் தமர்தார மகவென் னு மிவையெலாஞ் *
சந்தையிற் கூட்ட மிதிலோ *
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை *
சதுரங்க சேனையுடனே *
வத்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரஜா லக்கோலம் *
வஞ்சனை பொருமை லோபம் *
ஙவத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ *
வாஞ்சனையி லாதகனவே *
எந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே *
இரவுபக லில்லா விடத் *
தேசமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே *
யானென்ப தறவு மூழ்கிச் *
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்சொலோ *
தேடரிய சத்தாகி யென் *
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே *
தேசோ மயானந் தமே. (௩)

ஆடாம லோய்ந்திட்ட பம்பரம்போல்விசை *
யடங்கி மனம் விழநேரோ *
யறியாமை யாகின்ற விருளகல விருளொளியு *
மல்லா திருந்த வெளிபோற் *
சோடா தெனைக்கண் டெனக்குணிறை சாந்தவெளி *
கூடியின் பாதீத முங் *
கூடினே னேசரியை கிரியையின் முயன்றுநெறி *
கூடினே னேவல்ல னியான் *
ஈடாக வேயாறு வீட்டினி னிரம்பியே *
இலகிவளர் பிராண னென்னும் *
இருநிதி யினைக்கட்டி யோகபர னாகாமல் *
ஏழைக் குடும்ப னாகித் *
தேடா தழிக்கவொரு மதிவந்த தென்கொலோ *
தேடரிய சத்தாகி யென் *
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே *
தேசோ மயானந் தமே (௪)

பாடாது பாடிப் படித்தளவில் சமயமும் *
பஞ்சுபடு சொல்ல னிவனைப் *
பார்மினோ பார்மினோ வென்றுசபை கூடவும் *
பரமார்த்த மிது வென்னவே *
யாடாது மாடிநெஞ் சுருகிநெக் காடவே *
யமலமே யேக மேயெம் *

மாதியே சோதியே யெங்குநிறை கடவுளே *
யரசே யெனக்கூவி நான் *
வாடாது வாடுமென் முகவாட்ட முங்கண்டு *
வாடா வெனக் கருணை நீ *
வைத்திடா வண்ணமே சங்கேத மா[illegible]ந்த *
வன்மையை வரர்ப்பித்த தார் *
தேடாது தேடுவோர் தேட்டற்ற தேட்டமே *
தேடரிய சத்தாகி யென் *
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே *
தேசோ மயானந் தமே. (௬)

பிரியாத சன்னருட் சிவஞானி யாய்வந்து *
பேசரிய வாசி யாலே *
பேரின்ப வுண்மையை யளித்தனையென் மனத்தூறப் *
பேரம்ப லக்க டவுளா *
யறிவா யிருந்திடு நாதவொலி காட்டியே *
யமிர்தப் ப்ர வாக சித்தி *
யருளினைய லாதுதிரு வம்பலமு மாகியெனை *
யாண்டனை மி னெய்தி நெறியாய்க் *
குறிதா னளித்தனை நன் மரவுரிகொ ளத்தனைக் *
கோலமா யசயா நலங் *
கூறினபின் மௌனியாய்ச் சும்மா விருக்கநெறி *
கூட்டினை யெலாமி ருக்கச் *
சிறியேன் மயங்கிமிக வறிவின்மை யாவனே *
தேடரிய சத்தாகி யென் *
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே *
தேசோ மயானந் தமே. (௭)

ஆரா ரெனக்கென்ன போதித்து மென்னவென் *
னறிவினை மயக்க வசமோ *
அண்டகோ டியையெலாங் கருப்பவறை போலவும் *
அடுக்கடுக் காவமைத்துப் *
பேராம னின்றபர வெளியிலே மனவெளி *
பிறங்குவ தலாதொன் றினும் *
பின்னமுற மருவாது நன்னயத் தாலினிப் *
பேரின்ப முத்தி நிலையுந் *
தாராது தள்ளவும் போகாது ஞலது *
தள்ளினும் போகே னியான் *
தடையேது மில்லையான் டவனடிமை யென்னுமிரு *
தன்மையி லுமென் வழக்குத். *

தீராது விடுவதில்லை நடுவான கடவுளே *
தேடரிய சத்தாகி யென் *
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே *
தேசோ மயானந் தமே. (எ)

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம் *
கரடிவெம் புலிவா யையும் *
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம் *
கட்செவி யெடுத்தாட் டலாம் *
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும் *
வேதித்து விற்றுண்ண லாம் *
வேறொருவர் காணாம லுலகத்து லாவலாம் *
விண்ணவரை யேவல்கொள் ளலாம் *
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு *
சரீரத்தி னும்புகு தலாம் *
ஜலமே னடக்கலாங் கனன்மே லிருக்கலாம் *
தன்னிகரில் சித்தி பெறலாம் *
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற *
திறமரிது சத்தாகி யென் *
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே *
தேசோ மயானந் தமே. (அ)

எல்லா மறிந்தவரு மேதுமறி யாதவரும் *
இல்லையெனு மிவ்வு லகமீ *
தேதுமறி யாதவ னென்னப்பெயர் தரித்துமிக *
ஏழைக்கு ளேழை யாகிக் *
கல்லாத வறிவிற் கடைப்பட்ட நானன்று *
னக்கயினு லுண்மை ஞானங் *
கற்பித்த நின்னருளி னுக்கென்ன கைம்மாறு *
காட்டுவேன் குற்றே வலன் *
அல்லார்ந்த மேனியொடு குண்டுகட் பிறையெயிற் *
றுபாச வடிவ மான *
அந்தகா நீயொரு பகட்டாற் பகட்டுவ *
தடாதடா காசு நம்பால் *
செல்லா தடாவென்று பேசவா யதுதந்த *
செல்வமே சத்தாகி யென் *
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே *
தேசோ மயானந் தமே. (கூ)

மின்போலுமிடையொடியுமொடியுமெனமொழிதல்போல்
மென்சிலம் பொலிகளார்ப்ப *
சிங்கிப் புடைத்துவிழு சுமைபன்ன சொங்கைமட *
மின்னார்கள் பின்னே வலால், *
என்போ லலைந்தவர்கள் கற்றார்கள் கல்லார்கள் *
இருவர்களி லொருவ ருண்டோ *
என்செய்கே னம்மம்ம வென்பாவ மென்கொடுமை *
ஏதென் றெடுத்து மொழிவேன் *
அன்பால் வியந்துருகி யடியற்ற மரமென்ன *
அடியிலே வீழ்ந்து வீழ்ந்தேம் *
மடிசகோ யுமதடிமை யாங்களெனு நால்வருக் *
கறமாதி பொருளு ரைப்பத் *
தென்பாலின் முகமாகி வடவா லிருக்கின்ற *
செல்வமே சத்தாகி யென் *
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே *
தேசோ மயானந் தமே. (௰)

புத்தமிர்த போகமுங் கற்பகந னிழலிற் *
பொலிவுற யிருக்கு மியல்பும் *
பொன்னுலகி லயிரா வதத்தேறு வரிசையும் *
பூமண்ட லாதிக் கமும் *
மத்தவெறி யினர்வேண்டு மாலென்று தள்ளவுமெம் *
மாலுமொரு சுட்டு மறவே *
வைக்கின்ற வைப்பாளன் மௌனதே சிகனென்ன *
வந்தநின் னருள்வாழி காண் *
சுத்தபரி பூரண வகண்டமே யேகமே *
சுருதிமுடி வான பொருளே *
சொல்லரிய வுயிரினிடை யங்கங்கு நின்றருள் *
சுரந்துபொழி கருணை முகிலே *
சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே *
தேடரிய சத்தாகி யென் *
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே *
தேசோ மயானந் தமே. (௰க)

தேசோமயானந்தம் - முற்றுப்பெற்றது. ஆ ௱௨க.

காக மோடுகழு கலகை நாய்நரிகள் சுற்று சோறிடுது ருத்தியைக் *
சாவி ரண்டுநவ வாசல் பெற்றுவளர் காம வேணடன சாலையை *
மோகவாசைமுறியிட்டபெட்டியையும் மலமிகுந்தொழுகு சேணியை
மொய்த்துவெங்கிருமிதத்து கும்பியைமுடங்கலார்கிடைசரக்கினை *
மாக விந்த்ரதனு மின்னை யொத்திலக வேத மோதியகு லாலனார் *
வனைய வெய்யதடி கார னாயமன் வந்தடிக்குமொரு மட்கலத் *
தேக மானபொயை மெய்யெ னக்கருதி யைய வையமிசை வாடவோ *
தெரிவ தற்கரிய பிரம மேயமல சிற்சு கோதய விலாசமே. (க)

குறிக ளோடுகுண மேது மின்றியன லொழுக நின்றிடு மிரும்பனற் *
கூட மின்றியது வாயி ருந்தபடி கொடிய வாணவ வறைக்குளே *
அறிவ தேதுமற வறிவி லாமைமய மாயி ருக்குமெனை யருளினால் *
அளவி லாததனு கரண மாதியை யளித்த போதனை யறிந்துநான் *
பிறிவிலா தவண நின்றி டாதபடி பலதி றங்கவரு முமலமாய்ப் *
பெரிய மாயையி லழுந்தி நின்னது ப்ரசாத நல்லருண் மறந்திடும் *
சிறிய னேனுமுனை வந்த ணைந்துசுகமாயி ருப்பதினி யென்றுகாண் *
தெரிவதற்கரிய பிரம மேயமல சிற்சுகோதய விலாசமே. (உ)

ஐந்து பூதமொரு கான னீரென வடங்க வந்தபெரு வானமே *
ஆதி யந்தநடு வேது மின்றியரு ளாய்நி றைந்திலகு சோதியே *
தொந்த ரூபமுட னரூப மாதிகுறி குணமிறந்துவளர் வஸ்துவே *
துரிய மேதுரிய வுயிரி னுக்குணர்வு தோன்ற நின்றருள் சுபாவமே *
எந்த நாளுநடு வாகி நின்றொளிரு மாதி யேகருணை நீதியே *
எந்தை யேயென விடைந்திடைந் துருகு மெளியனேன்கவலைதீரவும்
சிந்தை யானதை யறிந்து நீயுனருள் செய்ய நானுமினி யுய்வனோ *
தெரிவ தற்கரிய பிரம மேயமல சிற்சு கோதய விலாசமே. (௩)

ஐவ ரொன்றபுல வேடர் கொட்டம தடங்க மர்க்கடவன் முட்டியாய் *
அடவி நின்றுமலை யருகி னின்றுசரு காதி தின்றுபனி வெயிலினால் *
மெய்வ ருந்துதவ மில்லைநற்சரியை கிரியையோகமெனு மூன்றதாய் *
மேவு கின்றசவு பான நன்னெறி விரும்ப வில்லையுல கத்திலே *
பொய்மு டங்குதொழில் யாததற்குநல சாரதித் தொழி னடத்திடும் *
புத்தி யூகமறி வற்ற மூசமிவை பொருளெனக்கருது மருளன்யான் *
தெய்வ நல்லருள் படைத்த வன்பரொடு சேர வுங்கருணை கூர்வையோ *
தெரிவ தற்கரிய பிரம மேயமல சிற்சு கோதய விலாசமே. (ச)

ஏகமானவுரு வான நீயருளி னால னேகவுரு வாகியே *
எந்த நாளகில கோடிசிர்ஷ்டிசெய விசையுநாள் வரையநான்முதல் *
ஆகநாளது வரைக்கு முன்னடிமை கூடவே ஜனன மானதோ *
அனந்த முண்டுநல ஜனன மீதிதனு ளறிய வேண்டுவன வறியலாம் *

மோக மாதிதரு பாசமானதை யறிந்து விட்டுனையு மெனையுமே *
முழுதுணர்ந்துபரமானவின்பவெள மூழ்கவேண்டுமிதுவின்றியே *
தேகமேநழுவி நானுமோ நழுவின் பின்னை யுய்யும்வகை யுள்ளதோ *
தெரிவதற்கரிய பிரம மேயமல சிற்சு கோதய விலாசமே. (௫)

நியம லக்ஷணமு மியம லக்ஷணமு மாச னுதிவித பேதமும் *
நெடிதுணர்த்திதய பத்ம பீடமிசை நின்றிலங்குமச பானலத் *
தியல் றிந்துவளர் மூல குண்டலியை யினிதிறைஞ்சியவ ளருளினால் *
எல்லையற்றுவளர்சோதிமூலவன லெங்கண்மோனமனுமுறையிலே *
வயமிகுந்துவரு மமிர்த மண்டல மதிக்கு ளேமதியை வைத்துநான் *
வாய்மடுத்தமிர்த வாரியைப்பருகி மன்னு மாரமிர்த வடிவமாய்ச் *
செயமிகுந்துவரு சித்த யோகநிலை பெற்று ஞானநெறி யடைவனோ *
தெரிவதற்கரிய பிரம மேயமல சிற்சு கோதய விலாசமே. (௬)

எறிதிரைக்கடனி கர்த்த செல்வமிக வல்ல லென்றொருவர் பின்செலா *
தில்லை யென்னுமுனா பேசிடாதுலகி லெவருமாமென மதிக்கவே *
நெறியின்வைகிவளர்செல்வமும்முதவி நோய்களற்றசுகவாழ்க்கையாய் *
நியம மாதிநிலை நின்று ஞானநெறி நிஷ்டை கூடவுமெந்நாளுமே *
அறிவினின்றுகுரு வாயுணர்த்தியது மன்றி மோனகுரு வாகியே *
அகிலமீதுவர வந்தசிரருளை யையவையினி யென்சொல்கேன் *
சிறிய னேழைநம தடிமை யென்றுனது திருவுளத்தினி லிருந்ததோ *
தெரிவதற்கரிய பிரம மேயமல சிற்சு கோதய விலாசமே. (௭)

எவ்வுயிர்த்திரளு முலகி லென்னுயி ரெனக்குழைந்துருகி நன்மையா *
யிதமுரைப்பவெனதென்றயாவையுமெடுத்தெறிந்துமதயானைபோற்
கவ்வை யற்றநடை பயில வன்பரடி கண்டதே வருளின் வடிவமாக் *
கண்ட யாவையு மகண்ட மென்னவிரு கைகுவித்து மலர் தூவியே *
பவ்வவெண்டிரைகொடுத்த தண்டரளம்விழியுதிர்ப்பமொழிகுளறியே
பாடியாடியுளுடைந்துடைந்தெழுது பாவையொத்தசைதவின்றியே
திவ்ய வன்புருவ மாகியன்பரொடு மின்ப வீட்டினி லிருப்பனோ *
தெரிவதற்கரிய பிரம மேயமல சிற்சு கோதய விலாசமே. (௮)

மத்தர்பேயரொடு பாலர் தன்மையது மருவியே துரிய வடிவமாய் *
மன்னு தேசமொடு காலமாதியை மறந்துநின் னடியரடியிலே *
பத்தியாய் நெடிது நம்புமென்னை யொருமையறத்தகில மாயையைப்
பாருபாரெனநடத்த வந்ததென பாரதத்திலுமி துள்ளதோ *
சுத்த நித்தவியல் பாகுமோ வுனது விசுவ மாயைநடு வாகவே *
சொல்லவேணும்வகைநல்லகாதிகதை சொல்லுமாயையினுமில்லையென்
றித்தமிப்படி மயங்குமோ வருளை நம்பினோர்கள்பெறு பேறிதோ *
தெரிவதற்கரிய பிரம மேயமல சிற்சு கோதய விலாசமே. (௯)

பன்முகச்சமய நெறிபடைத்தவரு மியாங்களேசடவு ளென்றிடும் ✻
பாதகத்தவரும் வாததர்க்கமிடும் படிறருந்தலை வணங்கிடத் ✻
தன்முகத்திலுயிர் வரவழைக்குமெம தருமனும்பசுமேய்க்கியாய்த் ✻
தனியிருப்பவட நீழலூடுவளர் ஜனகனுதிமுனிவோர்கடஞ் ✻
சொன்மயக்கமது தீரவங்கைகொடு மோனஞானமதுணர்த்தியே ✻
சுத்தநித்தவரு ளியல்பதாகவுள சோமசேகரகிர் பானுவாய்த் ✻
தென்முகத்தின்முகமாயிருந்தழகொழுவெம்முகத்தினும்வணங்குவேன்
தெரிவதற்கரிய பிரமமேயமல சிற்சுகோதய விலாசமே. (ம)

சிற்சுகோதயவிலாசமுற்றுப்பெற்றது. ஆ௨ருக.

ஆகாரபுவனம்

சிதம்பரரகசியம்.

ஆகாரபுவனமின்பா காரமாக ✻
வங்ஙனே யொருமொழியா லகண்டா கார ✻
யோகானுபூதிபெற்ற வன்பராவிக் ✻
குறுதுணையே யென்னளவு முகந்த நட்பே ✻
வாகாரும் படிக்கிசைகின் கிணிவா யென்ன ✻
மலர்ந்தமல ரிடைவாசம் வயங்குமாபோல் ✻
தேகாதி யுலகமெங்குங் கலந்து தானே ✻
திகழனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே. (க)

அனந்தபத வுயிர்கடொரு முயிரா யென்றும் ✻
ஆனந்த நிலையாகி யவரைக் கெட்டாத் ✻
தனந்தனிச்சின் மாத்திரமாய்க் கீழ்மேல் காட்டாச் ✻
சதசத்தா யருட் கோயிற் றழைத்த தேவே ✻
இனம்பிரிந்த மான்போனு னிடையா வண்ணம் ✻
இன்பமுற வன்பர்பக்க விருத்தி வைத்துக் ✻
கனந்தருமா கனமேதண் ணருளிற் றானே ✻
கனுபவித்த வானந்தக் கட்டிப் பேறே. (உ)

பேறனைத்து மனுவெனவே யுதறித் தள்ளப் ✻
பேரின்ப மாகவந்த பெருக்கே பேசா ✻
வீறனைத்து மிந்நெறிக்கே யென்ன வென்னை ✻
மேவென்ற வரத்தேயாழ் வெய்ய மாயைக் ✻
கூறனைத்துங் கடந்த வெல்லைச் சேடமாகிக் ✻
குறைவறநின் றிடுநிறைவே குலவா நின்ற ✻

வாறனைத்தும் புகுங்கடல்போற் சமயகோடி *
யத்தனையுந் தொடர்ந்துபுகு மாதி நட்பே. (௩)
ஆதியந்த மெனுமெழு வாயீறற் றோங்கி *
யருமறையின் னமுங்காணா தாற்ற நாணா *
பேதமதங் களுமலைய மலைபோல் வாதப் *
பெற்றியரும் வாய்வாதப் பேய ராகச் *
சாதகமோ னத்திலென்ன வடவா னிழல் *
தண்ணருட்சந் திரமௌலி தடக்கைக் கேற்க *
வேதகசின் மாத்திரமா யெம்ம னோர்க்கும் *
வெளியாக வந்தவொன்றே விமல வாழ்வே. (௪)

விமலமுதற் குணமாகி நூற்றெட் டாதி *
யேகமெடுத் தெடுத்துரைத்த விருத்திக் கேற்க *
அமையுமிலக் கணவடிவா யதுவும்போதா *
தப்பாலுக் கப்பாலா யருட்கண் ணாகிச் *
சமமுமுடன் கலப்புமவிழ் தலுமியாங் காணத் *
தன்னருடந் தமைக்காக்குஞ் சாக்ஷிப் பேறே *
இடையவரவு முபகார மல்லால் வேறொன் *
றியக்காநிர்க் குணக்கடலா யிருந்த வொன்றே. (௫)

ஒன்றாகிப் பலவாகிப் பல்வாக் கண்ட *
ஒளியாகி வெளியாகி யுருவு மாகி *
நன்றாகித் தீதாகி மற்று மாகி *
நாசமுட னுற்பத்தி நண்ணா தாகி *
இன்றாகி நாளையுமாய் மேலு மான *
எந்தையே யெம்மானே யென்றென் றேங்கிக் *
கன்றாகிக் கதறினர்க்குச் சேதா வாகிக் *
கடிதினில்வந் தருள்கூருங் கருணை விண்ணே. (௬)

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே *
ஆரமிர்தே யென்கண்ணே யரிய வான *
பொருளனைத்துந் தரும்பொருளே கருணை நீங்காப் *
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே *
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக் *
காலமுந்தே சமும்வகுத்துக் கருவி யாதி *
விதிவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும் *
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங்கேளே.

விண்ணவரிந் திரன்முதலோர் நார தாதி *
விளங்குசப்த ருஷிகளென வினை வல்லோர் *
எண்ணரிய சித்தர்மனு வாதி வேந்தர் *

இருக்காதி மறைமுனிவ ரெல்லா மிந்தக் ❊
கண்ணகன்ஞா லம்மதிக்கத் தானே யுள்ளங் ❊
கையினெல்லிக் கனிபோலக் காக்ஷி யாகத் ❊
திண்ணியநல் லறிவாலிச் சமயத் தன்றோ ❊
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தா ரென்றும். (௮)

செப்பரிய சமயநெறி யெல்லாந் தன்றன் ❊
தெய்வமே தெய்வமென்னுஞ் செயற்கை யான ❊
அப்பரிசா ரருமஃதே பிடித்தா லிப்பால் ❊
அடுத்ததந் நூல்களும்விரித்தே யனுமா னாதி ❊
ஒப்பவிரித் துரைப்பரிங்ஙன் பொய்மெய் யென்ன ❊
ஒன்றிலையென் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும் ❊
இப்பரிசாஞ் சமயமுமா யல்ல வாகி ❊
யாதுசம யமும்வணங்கு மியல்ப தாகி. (௯)

இயல்பென்றுந் திரியாம லியம மாதி ❊
எண்குணமுங் காட்டியன்பா லின்ப மாகிப் ❊
பயனருவப் பொருள்களுப ரிவார மாகிப் ❊
பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி ❊
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதி டாதி ❊
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி ❊
அயர்வறச்சென் னியில்வைத்து ராஜாங் கத்தில் ❊
அமர்ந்ததுவை திகசைவ மழகி தந்தோ. (௰)

அந்தோவீ ததிசயமிச் சமயம் போலின் ❊
றறிஞரெலா நடுவறிய வணிமா வாதி ❊
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம் ❊
வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்றும் ❊
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும் ❊
இதுவன்றித் தாயகம்வே றில்லை யில்லை ❊
சந்தான கற்பகம்போ லருளைக் காட்டத் ❊
தக்கநெறி யிந்நெறியே தான்சன் மார்க்கம். (௰௧)

சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு ❊
சமயசங்கே தப்பொருளுந் தானொன் றாகப் ❊
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை ❊
பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்த போதங் ❊
கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன ❊
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர் ❊
சன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே ❊
கண்டவுட னானந்தங் காண்ட லாகும். (௰௨)

காண்டல்பெறப் புறத்தினுள்ள படியே யுள்ளுங் *
காக்ஷிமெய்ந் நூல் சொலும்பதியாங் கடவுளே நீ *
நீண்டநெடு மையுமகலக் குறுக்குங் காட்டா *
நிறைபரிபூ ரணவறிவாய் நித்தமாகி *
வேண்டுவிருப் பொடுவெறுப்புச் சமீபந் தூரம் *
விலகலணு குதன்முதலாம் விவகாரங்கள் *
பூண்டவரை வைகண்மன வாக்காதி யெல்லாம் *
பொருந்தாம லகம்புறமும் புணர்க்கை யாகி. (௰௩)

ஆகியசற் காரியவூ கத்துக் கேற்ற *
வமலமாய் நடுவாகி யனந்த சத்தி *
யோகமுறு மானந்த மயமதாகி *
யுயிர்க்குயிரா யெந்நாளு மோங்கா நிற்ப *
மோகவிருண் மாயைவினை யுயிர்கட் கெல்லாம் *
மொய்த்ததென்கொ லுபகார முயற்சி யாகப் *
பாகமிக வருளவொரு சத்தி வந்து *
பதிந்ததென்கொ லென்னுமப் பான்மையென்கொல்.

நானென்னு மோரகந்தை யெவர்க்கும் வந்து *
நலிந்தவுடன் ஜகமாயை நானு வாகித் *
தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்பச் *
சாகரத்தின் பெருமையெவர் சாற்ற வல்லார் *
உளனென்று முடலென்றுங் கரணமென்றும் *
உள்ளொன்றும் புறமென்று மொழியா நின்ற *
வானென்றுங் காலென்றுந் தீநீ ரொன்றும் *
மண்ணென்று மலையென்றும் வனமதென்றும் (௰௫)

மலைமலையாங் காக்ஷிகண்கா ணுமை யாதி *
மறப்பென்று நினைப்பென்று மாயா வாரி *
அலையலையா யடிக்குமின்ப துன்ப மென்றும் *
அதைவிளைக்கும் வினைகளென்று மதனைத் தீர்க்கத் *
தலைபலவாஞ் சமயமென்றுந் தெய்வமென்றுஞ் *
சாதகமொன் றும்மதற்குச் சாக்ஷி யாகக் *
கலைபலவா நெறியென்றுந் தர்க்கமென்றுங் *
கடலுறு நுண்மணலெண்ணிக் காணும்போதும். (௰௬)

காணரிய வல்லவெல்லாந் தானே சட்டுக் *
சட்டாக விளையுமதைக் கட்டோடே தான் *
வீணினிற்கர்ப் பூரமலை படுதீப் பட்ட *
விந்தையெனக் காணவொரு விவேகங் காட்ட *
உளனுறக்க மின்பதுன்பம் பேரு ராதி *

யொவ்விடவு மென்னைப்போல வுருவங் காட்டிக் *
கோணறவோர் மான்காட்டி மானை யிர்க்குங் *
கொள்கையென வருண்மௌன குருவாய்வந்து (௰௭)

வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை *
வசமெனவே யத்துவா மார்க்க நோக்கி *
ஐந்துபுல னைம்பூதங் கரண மாதி *
யடுத்தகுண மத்தனையு மல்லை யல்லை *
இந்தவுட லறிவறியா மையுநீ யல்லை *
யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று *
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன் *
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மையேம்யாம். (௰௮)

அறிவாகி யானந்த மயமா யென்றும் *
அழியாத நிலையாகி யாதின் பாலும் *
பிறியாமற் றண்ணருளே கோயி லான *
பெரியபரம் பதியதனைப் பெறவே வேண்டில் *
நெறியாகக் கூறுவன்கே ளெந்த நாளும் *
நிர்க்குணநிற் குளம்வாய்த்து நீடு வாழ்க *
செறிவான வறியாமை யெல்லா நீங்க *
சிற்சுகம்பெற் றிடுகபந்தந் தீர்க வென்றே. (௰௯)

பந்தமறு மெய்ஞ்ஞான மான மோனப் *
பண்பொன்றை யருளியந்தப் பண்புக் கேதான் *
சிந்தையில்லை நானென்னும் பான்மை யில்லை *
தேசமில்லை காலமில்லை திக்கு மில்லை *
தொந்தமில்லை நீக்கமில்லை பிரிவு மில்லை *
சொல்லுமில்லை யிராப்பகலாந் தோற்ற மில்லை *
அந்தமில்லை யாதியில்லை நடுவு மில்லை *
அகமுமில்லை புறமுமில்லை யனைத்து மில்லை (௨௰)

இல்லையில்லை யென்னினொன்று மில்லா தல்ல *
இயல்பாகி யென்றுமுள்ள வியற்கை யாகிச் *
சொல்லரிய தன்மையதா யான்று னென்னத் *
தோன்றுதெல் லாம்விழுங்குஞ் சொரூப மாகி *
அல்லையுண்ட பகல்போல வவித்தை யெல்லாம் *
அடையவுண்டு தடையறவுன் னறிவைத் தானே *
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னாகக் கொண்டு *
வேதகமாய்ப் பேசாமை விளக்குந் தானே. (௨௧)

தானான தன்மயமே யல்லா லொன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனாலுங் கர்ப்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்வே றின்று
ஞானா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவு நழுவாம னழுவி நிற்கும்
ஆனாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வார்
அதுவானா லதுவாவ ரதுவே சொல்லும். (௨௨)

அதுவென்று லெதுவெனவொன் றடுக்குஞ் சங்கை
யாதலினா லதுவெனலு மறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் ஜனகனாதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா றொன்றும்
பதியிந்த நிலையெனவு மென்னை யாண்ட
படிக்குநிரு விகற்பத்தாற் பரமா னந்த
கதிகண்டு கொள்ளவுநின் னருள் கூர்ந்தக்
கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன். (௨௩)

பாராதி விண்ணனைத்து நீயாச் சிந்தை
பரியமட லாவெழுதிப் பார்த்துப் பார்த்து
வாராயோ வென்ப்ராண நாதா வென்பேன்
வளைத்துவளைத் தெனைநீயா வைத்துக்கொண்டு
பூராய மாமேலொன் றறியா வண்ணம்
புண்ணுளர் போலநெஞ்சம் புலம்பி யுள்ளே
நீராள மாயுருகிக் கண்ணீர் சோர
நெட்டுயிர்த்து மெய்மறந்தோர் நிலையாய் நிற்பேன்.

ஆயுமறி வாகியுன்னைப் பிரியா வண்ணம்
அணைந்துசுகம் பெற்றவன்ப னாயோ வென்னத்
தீயகொலைச் சமயத்துஞ் செல்லச் சிந்தை
தெளிந்திடவுஞ் சமாதானஞ் செய்வேன் வாழ்வான்
காயிலைபுன் சருகாதி யருந்தக் கானஞ்
சடமலையெங் கேயெனவுங் கவலை யாவேன்
வாயில்கும்பம் போற்கிடந்து புரள்வேன் வானின்
மதிகதிரை முன்னிலையா வைத்து நேரே. (௨௫)

நேரோதா னிரவுபகல் கோடா வண்ணம்
நித்தம்வர வுஞ்சளையித் நிலைக்கே வைச்சார்
ஆரேயங் கவர்பெருமை யென்னே யென்பேன்
அடிக்கின்ற காற்றேநீ யாரா லேதான்
பேராதே சுழல்கின்று யென்பேன் வந்து

பெய்கின்ற முகில்காளெம் பெருமா னும்போல்த் ※
தாரார மாக்கருணை பொழியச் செய்யுஞ் ※
சாதகமென் னேசுருதிச் சாற்று மென்பேன். (௨௬)

கருதரிய விண்ணேநீ யெங்கு மாகிக் ※
கலந்தனையே யுன்முடிவின் காட்சி யாக ※
வருபொருளைப் படியிருக்குஞ் சொல்லா யென்பேன் ※
மண்ணேயுன் முடிவிலெது வயங்கு மாங்கே ※
துரியவறி வுடைச்சேட னீற்றி னுண்மை ※
சொல்லானே சொல்லென்பேன் சுருதி யேநீ ※
ஒருவரைப்போ லனைவருக்கு முண்மை யாமுன் ※
னுரையன்றோ வுன்முடிவை யுரைநீ யென்பேன் (௨௭)

உரையிறந்து பெருமைபெற்றுத்திரைக்கை நீட்டி ※
யொலிக்கின்ற கடலேயிவ் வுலகஞ் சூழக் ※
கரையுமின்றி யுன்னைவைத்தா ரியாரோ வென்பேன் ※
கானகத்திற் பைங்கிளிகாள் கமல மேவும் ※
வரிசிறைவண் டினங்காளோ திமங்கா ளேது ※
மார்க்கமன்றோ நீங்களிது வரையிலேயும் ※
பெரியபரி பூரணமாம் பொருளைக் கண்டு ※
பேசியதுண் டோவொருகாற் பேசுமென்பேன் (௨௮)

ஒருவனவன் யானைகெடக் குடத்துட் செங்கை ※
யோட்டுதல்போ லுன்பேதை யுப்போ டப்பை ※
மருவவிட்டுங் கர்ப்பூர மதனிற் றீபம் ※
வயங்கவிட்டு மைக்கியமுன் னி வருந்தி நிற்பேன் ※
அருளுடைய பரமென்றோ வன்று தானே ※
யானுளனென் றும்மெனக்கே யாணவாதி ※
பெருகுவினைக் கட்டென்று மென்னுற் கட்டிப் ※
பேசியதன் றேயருணூல் பேசிற்றன்றே (௨௯)

அன்றுமுத லின்றைவரைச் சனனகோடி , ※
யடைந்தடைந்திங் கியாதனையா லழிந்ததல்லால் ※
இன்றைவரை முத்தியென்றே யெடுத்த தேசம் ※
எப்போதோ தெரியாதே யிப்போ தேதான் ※
துன்றுமனக் கவலைகெடப் புலைநாயேனைத் ※
தொழும்புகொளச் சீகாழித் துரையே தானு ※
சென்றிடவே பொருளைவைத்த நாவலோய்நஞ் ※
சிவனப்பா வென்றவருட் செல்வத் தேவே. (௩௰)

தேவர்தொழும் வாதவூர்த் தேவே யென்பேன் ※
திருமூலத் தேவேயிச் சகத்தோர் முத்திக் ※

காவலுநச் சிவவென்வாக் குடனே வந்த *
வரசேசும் மாவிருந் துன் னருளைச் சாரப் *
பூவுலகில் வரைருணை கிரியே மற்றைப் *
புண்ணியர் காளோ வென்பேன் புரையொன் றில்லா *
ஓவியம்போ லசைவறவுந் தானே நிற்பேன் *
ஓதரிய துயர்கெடவே யுரைக்கு முன்னே. (௫௧)

ஓதரிய சுகர்போல வேனே னென்ன *
ஒருவரிலை யோவெனவு முரைப்பேன் முனே *
பேதமபே தங்கெடவு மொருபே சாகமே *
பிறவாதோ வாலடியிற் பெரிய மோன *
நாதனொரு தரமுலகம் பார்க்க விச்சை *
நண்ணுனே வென்றென்றே நானு வாகிக் *
காதன்மிகு மணியிழையா ளொனவா டுற்றேன் *
கருத்தறிந்து புரப்பதுன்மேற் கடன்முக்காலும் (௫௨)

காலமொடு தேசவர்த்த மான மாதி *
கலந்துநின்ற நிலைவாழி கருணை வாழி *
மாலறவுஞ் சைவமுதன் மதங்க ளாகி *
மதாதீத மானவருண் மரபுவாழி *
சாலமிகு மெளியேனிவ் வழக்குப் பேசத் *
தயவுவைத்து வளர்த்தவருட் டன்மை வாழி *
ஆலடியிற் பரமகுரு வாழி வாழி *
அகண்டிதா காரவரு ளடியார் வாழி. (௫௩)

ஆகாரபுவனம் சிதம்பரரகசியம் - முற்றுப்பெற்றது. ஆ௨ாசுமச.

தேன்முகம்.

தேன்முகம்பிலிற்றும்பைந்தாட்செய்யபங்கயத்தின்மேவும் *
நான்முகத்தேவேநின்னுனட்டியவகிலமாயை *
கான்முயற்கொம்பேயென்கோகானலம்புனலேயென்கோ *
வான்முகமுளரியென்கோமற்றென்கோவிளம்பல்வேண்டும். (௧)

வேண்டுவபடைத்தாய்நுந்தைவிதிப்படிபுரந்தானத்தைக் *
காண்டகவழித்தான்முக்கட்கடவுடானினையவாற்றல் *
ஆண்டவனெவனோவன்னவறிகிலாதகிலநீயே *
ஈண்டியவல்லதிரவும்மனோர்க்கியம்புகண்டாய். (௨)

கண்டனவல்லவென்றேகழித்திடுமிறுதிக்கண்ணே *
கொண்டதுபரமானந்தக்கோதிலாமுத்தியத்தால் *
பண்டையிற்படைப்புங்காப்பும்பறந்தனமாயையோடே *
வெண்டலைவிழிகைகாலில்விளங்கிடநின்றான்யாவன். (௩)

விளங்கவெண்ணீறுபூசிவிரிசடைக்கங்கைதாங்கித் *
துளங்குநன்னுதற்கண்டோன்றச்சுழல்வளிநெடுமூச்சாகக் *
களங்கமிலுருவந்தானேககனமாய்ப்பொலியப்பூமி *
வளர்ந்ததாளென்னவுள்ளமன்றெனமறையொன்றின்றி.' (௪)

மறைமுழக்கொலிப்பத்தானேவரதமோடபயக்கைகண் *
முறைமையினோங்கநாதமுரசெனக்கறங்கவெங்கும் *
குறைவிலாவண்ணிறைந்துகோதிலாநடனஞ்செய்வான் *
இறையவனெனலாமியார்க்குமிதயசம்மதமீதல்லால் (௫)

அல்லலாந்தொழில்படைத்தேயடிக்கடியுருவெடுத்தே *
மல்லன்மாஞாலங்காக்கவருபவர்கடவுளென்னில் *
தொல்லையாம்பிறவிவேலைதொலைந்திடாதிருணீங்காது *
நல்லதுமாயைதானுநானெனவந்துநிற்கும். (௬)

நானெனநிற்குஞானஞானமன்றந்தஞானம் *
மோனமாயிருக்கவொட்டாமோனமின்றாகவேதான் *
தேனெனருசிக்குமன்பாற்சிந்தைநைந்துருகும்வண்ணம் *
வானெனநிறைந்தானந்தமாகடல்வளவதின்றே. (௭)

இன்றெனவிருப்போமென்னினென்றுஞ்சூனியமாமுத்தி *
நன்றொடுதீதுமன்றிநாமுன்னேபெறுமவித்தை *
நின்றதுபெத்தந்தானேநிரந்தரமுத்தியென்னில் *
ஒன்றொருவனைநான்கேட்கவுணர்வில்லைகுருவுமில்லை. (௮)

இல்லையென்றிடினிப்பூமியிருந்தவாறிருப்போமென்னில் *
நல்லவன்சாருவாகநான்சொலுநெறிக்குவீணில் *
தொல்லையேனுகமாதிதொடுப்பதேன்மயக்கமேதிங் *
கொல்லைவந்திருமினென்னவுறவுசெய்திடுவனந்தோ. (௯)

அந்தணர்நால்வர்காணவருட்குருவாகிவந்த *
எந்தையேயெல்லாந்தானென்றியம்பினனெமைப்படைத்த *
தந்தைநீயெம்மைக்காக்குந்தலைவனேநுந்தையன்றோ *
பந்தமில்சித்திமுத்திபடைக்கநின்னருள்பாலிப்பாய். (௰)

தேன்முகம் முற்றுப்பெற்றது. ஆ௱௭௪.

பன்மாலை.

பன்மாலைத்திரளிருக்கத்தமையுணர்ந்தோர் *
பாமாலைக்கேநீதான்பக்ஷமென்று *
நன்மாலையாவெடுத்துச்சொன்னார்நல்லோர் *
நலமறிந்துகல்லாதநானுஞ்சொன்னேன் *
சொன்மாலைமாலையாக்கண்ணீர்சோரத் *
தொண்டனேனெந்நாளுந்துதித்துநிற்பேன் *
என்மாலையறிந்திங்கேவாவாவென்றே *
எனைக்கலப்பாய்திருக்கருணையெம்பிரானே. (௧)

கருணைமொழிசிறிதில்லேனீதவில்லேன் *
கண்ணீர்கம்பலையென்றன்கருத்துக்கேற்க *
ஒருபொழுதும்பெற்றறியேனென்னையாளும் *
ஒருவாவுன்னடிமைநானொருத்தனுக்கோ *
இருவினையுமுக்குணமுங்கரணநான்கும் *
இடர்செயுமைம்புலனுங்காமாதியாறும் *
வரவரவுமேமைழக்கோவொட்டதான *
மதத்தொடும்வந்தெதிர்த்தநவவடிவமன்றே. (௨)

வடிவனைத்துந்தந்தவடிவில்லாச்சுத்த *
வான்பொருளேயெளியனேன்மனமாமாயைக் *
குடிகெடுக்கத்துசங்கட்டிக்கொண்டமோன *
குருவேயென்றெய்வமேகோதிலாத *
படியெனக்கானந்தவெள்ளம்வந்துதேக்கும் *
படியெனக்குன்றிருக்கருணைபற்றுமாறே *
அடியெடுத்தென்முடியிலின்னம்வைக்கவேண்டும் *
அடிமுடியொன்றில்லாதவகண்டவாழ்வே. (௩)

வாழ்வனைத்துமயக்கமெனத்தேர்ந்தேன்றேர்ந்த *
வாறேநானப்பாலோர்வழிபாராமல் *
தாழ்வுபெற்றிங்கிருந்தேனீதென்னமாயம் *
தடையுற்றால்மேற்கதியுந்தடையதாமே *
ஊழ்வலியோவல்லதுன்றன்றிருக்கூத்தோவிங் *
கொருதமியேன்மேற்குறையோவுணர்த்தாயின்னம் *
பாழவதிப்படவெனக்குமுடியாதெல்லாம் *
படைத்தளித்துத்துடைக்கவல்லபரிசினானே. (௪)

நானானிங்கெனுமகந்தையெனக்கேன்வைத்தாய் *
நல்வினைதீவினையெனவேநடுவேநாட்டி *
ஊனாருமுடற்சுமையென்மீதேன்வைத்தாய் *
உய்யொணவுமென்னையொன்றுவுள்ளேன்வைத்தாய் *

ஆணவமாயாமல நிகிலபேதம் *
அனைத்தினுள்ளுந்தானாகியறிவானந்தத் *
தேனாகிப்பாலாகிக்கனியாய்க்கன்னற் *
செழும்பாகாய்க்கற்கண்டாய்த்திகழ்ந்தவொன்றே (௫)

ஒன்றியொன்றிநின்றுநின்றுமென்னையென்னை *
உன்னியுன்னும்பொருளைநீயுன்பாலன்பால் *
நின்றதன்மைக்கிரங்கும்வைராக்கியனல்லேன் *
நிவர்த்தியவைவேண்டுமிந்தநிலனுக்கே *
என்றுமென்றுமிந்நெறியோர்குணமுமில்லை *
இடுக்குவார்கைப்பிள்ளையேதோவேதோ *
கன்றுமனத்துடனுடுதழைதின்றாற்போல் *
கல்வியுங்கேள்வியுமாகிக்கலக்குற்றேனே. (௬)

உற்றதுணைநீயல்லாற்பற்றுவேறுன் *
றுன்னேன்பன்னூலுலகத்தோடியாடிக் *
கற்றதுங்கேட்டதுமிதனுக்கேதுவாகும் *
கற்பதுங்கேட்பதுமமையுங்காணுநீத *
நற்றுணையேயருட்டாயேயின்பமான *
நாதாந்தபரம்பொருளேநாரணாதி *
சுற்றமுமாய்நல்லன்பர்தமைச்சேயாகத் *
தொழும்புகொள்ளுங்கனகனமேசோதிக்குன்றே (௭)

குன்றாதமூவுருவாயருவாய்ஞானக் *
கொழுந்தாகியறுசமயக்கூத்துமாடி *
நின்றாயேமாயையெனுந்திரையைநீக்கி *
நின்னையாரறியவல்லார்நினைப்போர்நெஞ்சம் *
மன்றாகவின்பக்கூத்தாடவல்ல *
மணியேயென்கண்ணேமாமருந்தேநால்வர்க் *
கன்றாலின்கீழிருந்துமோனஞானம் *
அமைத்தசின்முத்திரைக்கடலேயமரரேறே. (அ)

திரையில்லாக்கடல்போலச்சலனந்தீர்ந்து *
தெளிந்துருகும்பொன்போலச்செகத்தையெல்லாம் *
கரையவேகனிந்துருக்குமுகத்திலேநீ *
கனிந்தபரமானந்தக் கட்டியிந்நாள் *
வரையிலேவரக்காணேனென்னுற்சுட்டி *
வார்த்தைசொன்னாற்சுகம்வருமோவஞ்சனேனை *
இரையிலேயிருத்திநிருவிகற்பமான *
இன்பநிஷ்டைகொடுப்பதையாவெந்தநாளோ. (௯)

எந்தநாளுனக்கடிமையான நாளோ *
எந்நாளோகதிவருநாளெளியனேன்றன் *
சிந்தைநாவதுவரைக்குமயங்கிற்றல்லால் *
தெளிந்ததுண்டோமௌனியாய்த்தெளியவோர்சொல்
தந்தநாண்முதலின்பக்கால்சற்றல்லால் *
தடையறவானந்தவெள்ளந்தானேபொங்கி *
வந்தநாளில்லைமெத்தவலைந்தேனுன்னை *
மறவாவின்பத்தாலேவாழ்கின்றேனே. (௰)

பன்மாலைமுற்றுப்பெற்றது. ஆ௱அசு.

நினைவொன்று.

ஞானிகளிடம்பொருளேவல்.

நினைவொன்றுநினையாமனிற்கினகமென்பார் *
நிற்குமிடமேயருளாநிஷ்டையருளொட்டும் *
தனையென்றுமறந்திருப்பவருள்வடிவானதுமேல் *
தட்டியெழுந்திருக்குமின்பந்தன்மயமேயதுவாம் *
பினையொன்றுமிலையந்தவின்பமெனுநிலயம் *
பெற்றோபிறவாமைபெற்றார்மற்றுந்தான் *
மனையென்றுமகவென்றுஞ்சுற்றமென்றுமசுத்த *
வாதனையாமாசையொழிமன்றொருசொற்கொண்டே.

ஒருமொழியேபலமொழிக்குமிடங்கொடுக்குமந்த *
ஒருமொழியேமலமொழிக்குமொழிக்குமெனமொழி
குருமொழியேமலையிலக்குமற்றைமொழியெல்லாங் [ந்த
கோடின்றிவட்டாடல்கொள்வதொக்குங்கண்டாய் *
சருமொழியிங்குனக்கில்லைமொழிக்குமொழிருசிக்கக் *
கரும்பனையசொற்கொடுனைக்காட்டவுங்கண்டனைமேல்
தருமொழியிங்குனக்கில்லையுன்னைவிட்டுநீங்காத் *
தற்பரமாயானந்தப்பொற்பொதுவாய்நில்லே. (௨)

நில்லாதவாக்கைநிலையன்றெனவேகண்டாய் *
நேயவருண்மெய்யன்றோநிலயமதாநிற்கக் *
கல்லாதேயேன்படித்தாய்கற்றதெல்லாமூடம் *
கற்றதெல்லாமூடமென்றேகண்டனையுமன்று *
சொல்லாதேபயனில்லைசொன்முடிவைத்தானே *
தொடர்ந்துபிடிமர்க்கடம்போற்றொட்டதுபற்றுநில்
எல்லாருமறிந்திடவேவாய்ப்பறைகொண்டடிநீ *
[illegible] மேயுமக்கிடமென்றிர்கே (௩)

இடம்பொருளேவலைக்குறித்துமடம்புகுநாயென்வே *
எங்கேநீயகப்பட்டாயிங்கேநீவாடா *
மடம்பெறுபாழ்நெஞ்சாலேயஞ்சாதேநிராசை *
மன்னிடமேயிடமந்தமானிலத்தேபொருளுந் *
திடம்பெறவேநிற்கினெல்லாவுலகமும்வந்தேவல் *
செய்யுமிந்தநிலைநின்றோர்ஜனகன்முதன்முனிவர் *
கடம்பெறுமாமதயானையென்னவுநீபாசக் *
கட்டானநிகளபந்தக்கட்டவிழப்பாரோ. (௪)

பாராதியண்டமெலாம்படர்கானற்சலம்போல் *
பார்த்தனையேமுடிவினின்றுபாரொதுதானின்ற *
தாராலுமறியாதசத்தன்றேவதுவாய் *
அங்கிருநீயெங்கிருந்துமதுவாவைகண்டாய் *
பூராயமாகவுநீ மற்றொன்றைவிரித்துப் *
புலம்பாதேசஞ்சலமாப்புத்தியைநாட்டாதே *
ஓராதேயொன்றையுநீமுன்னிலைவையாதே *
உள்ளபடிமுடியுமெலாமுள்ளபடிகாணே. (௫)

உள்ளபடியென்னவுநீமற்றொன்றைத்தொடர்ந்திட் *
டுளங்கருதவேண்டாநிஷ்களங்கமதியாகிக் *
கள்ளமனத்துறவைவிட்டெல்லாந்துறந்ததுறவோர் *
கற்பித்தமொழிப்படியேகங்குல்பகலற்ற *
வெள்ளவெளிக்கடன்மூழ்கியின்பமயப்பொருளாய் *
விரவியெடுத்தெடுத்தெடுத்துவிள்ளவும்வாயின்றிக் *
கொள்ளைகொண்டகண்ணீருங்கம்பலையுமாகிக் *
கும்பிட்டுச்சகம்பொயெனத்தம்பட்டமடியே. (௬)

அடிமுடியுநடுவுமற்றபரவெளிமேற்கொண்டால் *
அத்துவிதவானந்தசித்தமுண்டாரமது *
குடிமுழுதும்பிழைக்குமொருகுறையுமில்லையெடுத்த *
கோலமெல்லாநன்றாகுங்குறைவுநிறைவறவே *
விடியுமுதயம்போலவருளுதயம்பெற்ற *
வித்தகரோடுங்கூடிவிளையாடலாகும் *
படிமுழுதும்விண்முழுதுந்தந்தாலுங்களியாப் *
பாலருடனுன்மத்தர்பிசாசர்குணம்வருமே. (௭)

வரும்போமென்பனவுமின்றியென்றுமொருபடித்தாய் *
வானுதிதத்துவத்தைவளைந்தருந்திவெளியாம் *
இரும்போகல்லோமரமோவென்னுநெஞ்சைக்கனன்மேல் *
இட்டமெழுகாவுருக்குமின்பவெள்ளமாகிக் *

கரும்போகண்டோசீனிச்சருக்கரையோதேனே *
கனியமிர்தோவெனருசிக்குங்கருத்தவிழ்ந்தோருணர்வார்
அரும்போநன்மணங்காட்டுங்காமரசங்கன்னி *
அறிவாளோவபக்குவர்க்கோவந்நலந்தான்விளங்கும் (௮)

தானேயுமிவ்வுலகமொருமுதலுமாகாத் *
தன்மையினாற்படைத்தளிக்குந்தலைமையதுவான *
கோனாகவொருமுதலிங்குண்டெனவும்பூகம் *
கூட்டியதுஞ்ஜசமுடிவிற்குலவுறுமெய்ஞ்ஞான *
வானாகவம்முதலேநிற்குநிலைநம்மால் *
மதிப்பரிதாமெனமோனம்வைத்ததுமுன்மனமே *
ஆனாலுமனஞ்சடமென்றழுங்காதேயுண்மை *
அறிவித்தவிடங்குருவாமருளிலதொன்றிலையே. (௯)

நினைவொன்று முற்றிற்று. ஆ ௱௯௩.

பொன்னைமாதரை.

பொன்னைமாதரைப்பூமியைநாடிடேன் *
என்னைநாடியவென்னுயிர்நாதனே *
உன்னைநாடுவனுன்னருட்டுவெளி *
தன்னைநாடுவென்றன்னந்தனியனே. (௧)

தன்னதென்றுரைசாற்றுவனவெலாம் *
நின்னதென்றனைநின்னிடத்தேதந்தேன் *
இன்னமென்னையிடருறக்கூட்டினல் *
பின்னையுய்கிலன்பேதையனாவியே. (௨)

ஆவியேயுனையானறிவாய்நின்று *
சேவியேன்கரைச்சிந்தைதிறைகொடேன் *
பாவியேனுரைபான்மையைக்கண்டுநீ *
கூவியாளெனையாட்கொண்டகோலமே. (௩)

கோலமின்றிக்குணமின்றிநின்னருட் *
சீலமின்றிச்சிறியன்பிழைப்பனே *
ஆலமுண்டமமிர்துருவாய்வந்த *
காலமெந்தைசதிநிலைகாண்பதே. (௪)

காணுங்கண்ணிற்கலந்தகண்ணேயுனைச் *
சேணும்பாருந்திரியவர்காண்பரோ *
ஆணும்பெண்ணுமதுவெனும்பான்மையும் *
பூணுங்கோலம்பொருந்தியுணிற்கவே. (௫)

நிற்குநன்னிலைநிற்கப்பெற்றாரருள் *
வர்க்கமன்றிமனிதரன்றேயையா *
துர்க்குணக்கடற்சோங்கன்னபாவியேற் *
கெற்குணங்கண்டெனபெயர்சொல்வதே. (௬)

சொல்லையுன்னித்துடித்ததலாலருள் *
எல்லையுன்னியெனையங்குவைத்திலேன் *
வல்லைநீயென்னைவாவென்றிடாவிடில் *
கல்லையாமிக்கருமிநடக்கையே. (௭)

கையுமெய்யுங்கருத்துக்கிசையவே *
ஐயதந்ததற்கையமினியுண்டோ *
பொய்யனேன்சிந்தைப்பொய்கெடப்பூரண *
மெய்யதாமின்பமென்றுவிளைவதே. (௮)

என்றுமுன்னையிதயவெளிக்குளே *
துன்றவைத்தனனேயருட்சோதிநீ *
நின்றதன்மைநிலைக்கென்னைநேர்மையா *
நன்றுதீதறவைத்தநடுவதே (௯)

வைத்ததேகம்வருந்தவருந்திடும் *
பித்தனருள்பெற்றுந்திடமிலேன் *
சித்தமோனசிவசின்மயானந்தம் *
வைத்தவையவருட்செம்பொற்சோதியே. (௰)

செம்பொன்மேனிச்செழுஞ்சுடரோமுழு *
வம்பனேனுனைவாழ்த்துமதியின்றி *
இம்பர்வாழ்வினுக்கிச்சைவைத்தென்மனம் *
நம்பிவாவெனினென்கொல்செய்வதே. (௰௧)

செய்யுஞ்செய்கையுஞ்சிந்திக்குஞ்சிந்தையும் *
ஐயநின்னதென்றெண்ணுமறிவின்றி *
வெய்யகாமவெகுளிமயக்கமாம் *
பொய்யிலேசுழன்றேனென்னபுன்மையே. (௰௨)

புன்புலானரம்பென்புடைப்பொய்யுடல் *
அன்பர்யார்க்குமருவருப்பல்லவோ *
என்பொலாமணியேயிறையேயித்தால் *
துன்பமன்றிச்சுகமொன்றுமில்லையே. (௰௩)

இல்லையுண்டென்றெவர்பக்கமாயினுஞ் *
சொல்லவோவறியாததொழும்பன்யான் *
செல்லவேறொருதிக்கறியேனெலாம் *
வல்லநீயெனைவாழ்விக்கவேண்டுமே. (௰௪)

வேண்டுஞ்சீருண்மெய்யன்பர்க்கேயன்பு *
பூண்டநானென்புலமறியாததோ *
ஆண்டைநீயுன்னடியவனானென்று *
தூண்டுவேனன்றித்தொண்டனென்சொல்வதே (௰௫)

எனக்குளேயுயிரென்னவிருந்தநீ *
மனக்கிலேசத்தைமாற்றல்வழக்கன்றோ *
கனத்தசீருட்காக்ஷியலாதொன்றை *
நினைக்கவோவறியாதென்றனெஞ்சமே. (௰௬)

நெஞ்சகந்துணைநேசித்தமார்க்கண்டர்க் *
கஞ்சலென்றவருரைநிந்தேனையா *
தஞ்சமென்றுன்சரணடைந்தேனெனக்குஞ் *
செஞ்செவேநின்றசிற்சுகவாரியே. (௰௭)

வாரியேழுமலையும்பிறவுந்தான் *
சீரிதானநின்சின்மயத்தேயென்றால் *
ஆரிலேயுரசாவித்திரலதை *
ஓரிலேனெனையாண்டவொருவனே. (௰௮)

ஒருவரொன்னுரைத்துள்குங்குறிப்பறிந் *
தருள்வரோவெனையாளுடையண்ணலே *
மருளனேன்பட்டவாதைவிரிக்கினோ *
பெருகுநாளினிப்பேசவிதியின்றே. (௰௯)

இன்றுனக்கன்பிழைத்திலனானென்றே *
அன்றுதொட்டெனையாளரசேயென்று *
நின்றரற்றியநீலனைக்கைவிட்டால் *
மன்றமெப்படிநின்னருள்வாழ்த்துமே. (௨௰)

வாழ்த்துநின்னருள்வாரம்வைத்தாலன்றிப் *
பாழ்த்தசிந்தைப்பதகனுமுய்வனோ *
சூழ்த்துநின்றதொழும்பனையானந்தத் *
தாழ்த்துமுக்கணருட்செம்பொற்சோதியே, (௨௧)

சோதியேசுடரேசுகமேதுணை *
நீதியேநிசமேநிறைவேநிலை *
ஆதியேயுனையானடைந்தேனகம் *
வாதியாதருள்வாயருள்வானையே. (௨௨)

வானைப்போலவளைந்துகொண்டானந்தத் *
தேனைத்தந்தெனைச்சேர்ந்துகலந்தமெய்ஞ் *
ஞானத்தெய்வத்தைநாடுவனானெனும் *
ஈனப்பாழ்கெடவென்றுமிருப்பனே. (௨௩)

இரும்பைக்காந்தமிழுக்கின்றவாறெனைக் *
திரும்பிப்பார்க்கவொட்டாமற்றிருவடிக் *
கரும்பைத்தந்துகண்ணீர்கம்பலையெலாம் *
அரும்பச்செய்யெனதன்னையொப்பாமனே. (௨௪)

அன்னையப்பனென்றுவித்துணையெனும் *
தன்னையொப்பற்றசற்குருவென்பதென் *
என்னைப்பூரணவின்பவெளிக்குளே *
துன்னவைத்தசுடரெனத்தக்கதே. (௨௫)

தக்ககேள்வியிற்சார்ந்தநற்பூமியில் *
மிக்கதாகவிளங்குமுதலொன்றே *
எக்கணுந்தொழயாவையும்பூத்துக்காய்த் *
தொக்கநின்றுமொன்றாய்நிறைவானதே. (௨௬)

ஆனமானசமயங்களாறுக்கும் *
தானமாய்நின்றுதன்மயங்காட்டிய *
ஞானபூரணநாதனைநாடியே *
தீனனேனின்பந்தேக்கித்திளைப்பனே. (௨௭)

தேக்கியின்பந்திளைக்கத்திளைக்கவே *
ஆக்கமாயெனக்கானந்தமாகியே *
போக்கினொடுவரவற்றபூரணம் *
தாக்கிநின்றவாதன்மயமாமதே. (௨௮)

அதுவென்றுன்னுமதுவுமறநின்ற *
முதியஞானிகண்மோனப்பொருளது *
எதுவென்றெண்ணியிறைஞ்சுவனேழையேன் *
மதியுணின்றின்பவாரிவழங்குமே (௨௯)

வாரிக்கொண்டெனைவாய்மடுத்தின்பமாய் *
பாரிற்கண்டவையாவும்பருகினை *
ஓரிற்கண்டிடுமுமன்களவென *
ஆருக்குஞ்சொலவாயிலையையனே. (௩௰)

ஐயமற்றவதிவருணர்க்கெலாம் *
கையிலாமலகக்கனியாகிய *
மெய்யனேயிந்தமேதினிமீதுழல் *
பொய்யனேற்குப்புகலிடமெங்ஙனே. (௩௧)

எங்ஙனேயுய்யயானெனதென்பதற் *
றங்ஙனேயுன்னருண்மயமாகிலேன் *
திங்கள்பாதிதிகழப்பணியணி *
கங்கைவார்சடைக்கண்ணுதலெந்தையே. (௩௨)

கண்ணிற்காண்பதுன்சாக்ஷிகையாற்றொழில் *
பண்ணல்பூசைபகர்வதுமந்திரம் *
மண்ணுடைந்தும்வழங்குயிர்யாவுமே *
அண்ணலேநின்னருள்வடிவாகுமே. (௫௩)

வடிவெலாநின்வடிவெனவாழ்த்திடாக் *
கடியனேனுமுன்காரணங்காண்பனோ *
நெடியவானெனவெங்குநிறைந்தொளிர் *
அடிகளேயரசேயருளத்தனே. (௫௪)

அத்தனேயகண்டானந்தனேயருட் *
சுத்தனேயெனவுன்னைத்தொடர்ந்திலேன் *
மத்தனேன்பெறுமாமலமாயவான் *
கத்தனேகல்வியாததுகற்கவே. (௫௫)

கற்றுமென்பலன்சற்றிடுநான்முறை *
சொற்றசொற்கள்சுகாரம்பமோநெறி *
நிற்றல்வேண்டுநிருவிகற்பச்சுகம் *
பெற்றபேர்பெற்றபேசாப்பெருமையே. (௫௬)

பெருமைக்கேயிறுமாந்துபிதற்றிய *
கருமிக்கையசதியுமுண்டாங்கொலோ *
அருமைச்சிரன்பர்க்கன்னையொப்பாசவே *
வருமப்பேரொளியேயுன்மனாந்தமே. (௫௭)

உன்மனிக்குளொளிர்பரஞ்ஜோதியாம் *
சின்மயப்பொருளேபழஞ்செல்வமே *
புன்மலத்துப்புழுவனபாவியேன் *
சன்மனத்தைக்களைக்கக்கடவதே. (௫௮)

களையிலின்பக்கடலமுதேயிது *
வளையினானுனைவந்துகலந்திலேன் *
உளையிலாவின்பமுள்ளவர்போலவித் *
தளையிலேநடித்தேனென்னதன்மையே. (௫௯)

மையுலாம்விழிமாதர்கடோதகப் *
பொய்யிலாழும்புலையினிப்பூனைகாண் *
கையிலாமலகக்கனிபோன்றவென் *
னையனேயெனையாளுடையண்ணலே. (௬௰)

அண்ணலேயுன்னடியவர்போலருட் *
கண்ணினாலுனைக்காணவும்வாவெனப் *
பண்ணினாலென்பசுத்துவம்போயுயும் *

வாய்க்குங்கைக்குமௌனமௌனமென் *
றேய்க்குஞ்சொற்கொண்டிராப்பகலற்றிடா *
நாய்க்குமின்பமுண்டோநல்லடியரைக் *
தோய்க்குமானந்தத்தூவெளிவெள்ளமே. (௪௨)

தூயதானதுரியவறிவெனும் *
தாயுநீயின்பத்தந்தையுநீயென்றால் *
சேயதாமிந்தச்சீவத்திரளன்றோ *
ஆயும்பேரொளியானவகண்டமே. (௪௩)

அகண்டமென்னவருமறையாகமம் *
புகன்றநின்றன்மைபோதத்தடங்குமோ *
ஜெகங்களெங்குந்திரிந்துநன்மோனத்தை *
உகந்தபேருனையொன்றுவலாயனே. (௪௪)

ஐயனேயுனையன்றியொருதெய்வம் *
கையினாற்றொழவுங்கருதேன்கண்டாய் *
பொய்யனாகிலும்பொய்யுரையேன்சுத்த *
மெய்யனாமுனக்கேவெளியாகுமே. (௪௫)

வெளியினின்றவெளியாய்விளங்கிய *
ஒளியினின்றவொளியாமுன்றன்னைநான் *
தெளிவுதந்தகல்லாலடித்தேவென்று *
களிபொருந்தவன்றோகற்றகல்வியே. (௪௬)

கல்லையுற்றகருத்தினர்கார்நிறத் *
தல்லையொத்தகுழலினராசையால் *
எல்லையற்றமயல்கொளவோவெழில் *
தில்லையிற்றிகழுந்திருப்பாதனே. (௪௭)

திருவருட்டெய்வச்செல்விமலைமகள் *
உருவிருக்கின்றமேனியொருபரங் *
குருவைமுக்கணெங்கோவைப்பணிநெஞ்சே *
கருவிருக்கின்றகன்மமிங்கில்லையே. (௪௮)

கன்மமேதுகடுநரகேதுமேற் *
சென்மமேதெனைத்தீண்டக்கடவதோ *
என்மனோரதமெய்தும்படிக்கருள் *
நன்மைகூர்முக்கணாதனிருக்கவே (௪௯)

நாதகீதனென்னாதன்முக்கட்பிரான் *
வேதவேதியன்வெள்விடையூர்திமெய்ப் *
போதமாய்நின்றபுண்ணியன்பூந்திருப் *

மற்றுனக்குமயக்கமென்வன்னெஞ்சே *
கற்றைவார்சடைக்கண்ணுதலோனருள் *
பெற்றபேரவரோபெரியோரெலாம் *
முற்றுமோர்ந்தவர்மூதுரையர்த்தமே. (௫௧)

உரைபிறந்துளக்குள்ளவிகாரமாம் *
திரைகடந்தவர்தேடுமுக்கட்பிரான் *
பரைநிறைந்தபரப்பெங்ஙனங்ஙனே *
கரைகடந்தின்பமாகக்கலப்பனே, (௫௨)

கலந்தமுத்திகருதினுங்கேட்பினும் *
நிலங்களாதியுநின்றெமைப்போலவே *
அலந்துபோயினமென்னுமருமறை *
மலர்ந்தவாய்முக்கண்மாணிக்கச்சோதியே. (௫௩)

சோதியாதெனைத்தொண்டருட்கூட்டியே *
போதியாதவெல்லாமெனைப்போதிக்க *
ஆதிகாலத்திலுன்னடிக்காந்தவம் *
ஏதுநான்முயன்றேன்முக்கணெந்தையே. (௫௪)

எந்தநாளைக்குமீன்றருடாயென *
வந்தசிரருள்வாழ்கவென்றுன்னுவேன் *
சிந்தைநோக்கந்தெரிந்துகுறிப்பெலாந் *
தந்துகாக்குந்தயாமுக்கணாதியே. (௫௫)

கண்ணகன்றவிக்காசினியூடெங்கும் *
பெண்ணொடாண்முதலாமென்பிறவியை *
எண்ணவோவரிதேழைகதிபெறும் *
வண்ணமுக்கண்மணிவந்துகாக்குமே. (௫௬)

காக்குநின்னருட்காட்சியல்லாலொரு *
போக்குமில்லையென்புந்திக்கிலேசத்தை *
நீக்கியாளுகைநின்பரமன்பினர் *
ஆக்கமேமுக்கணானந்தமூர்த்தியே. (௫௭)

ஆனந்தங்கதியென்னவென்னானந்த *
மோனஞ்சொன்னமுறைபெறமுக்கணெங் *
கோனிங்கீந்தகுறிப்பதனால்வெறும் *
தீனன்செய்கைதிருவருட்செய்கையே. (௫௮)

கையினாற்றொழுதேத்திக்கசிந்துளம் *
மெய்யினாலுனைக்காணவிரும்பினேன் *
ஐயனேயரசேயருளேயருட் *
[illegible]

ஜகத்தின்வாழ்வைச்சதமெனவெண்ணியே *
யிருக்கதீமைவிளையவிளைக்கின்றேன் *
அகத்துளாரமுதாமையநின்முத்தி *
சுகத்தினுன்வந்துதோய்வதெக்காலமே. (௬௰)

காலமூன்றுங்கடந்தொளிராநின்ற *
சீலமேநின்றிருவருளாலிந்த்ர *
ஜாலமாமிச்சகமெனவெண்ணிநின் *
சோலநாடுதலென்றுகொடியனே. (௬௧)

கொடியவெவ்வினைக்கூற்றைத்துரந்திடும் *
அடிகளாம்பொருளேநினக்கன்பின்றிப் *
படியிலேழைமைபற்றுகின்றேன்வெறு *
மிடியினேன்கதிமேவும்விதியின்றே. (௬௨)

விதியையும்விதித்தென்னைவிதித்திட்ட *
மதியையும்விதித்தம்மதிமாயையில் *
பதியவைத்தபசுபதிநின்னருட் *
சதியையெப்படிகண்டுகளிப்பதே. (௬௩)

கண்டகண்ணுக்குக்காட்டுங்கதிரெனப் *
பண்டுமின்றுமென்பானின்றுணர்த்திடும் *
அண்டனேயுனக்கோர்பதினாயிரந் *
தெண்டனென்பொய்மைதீர்த்திடல்வேண்டுமே (௬௪)

வேண்டும்யாவுமிறந்துவெளியிடைத் *
தாண்டுவாரற்றசோதிப்பிரானின்பால் *
பூண்டவன்பர்தம்பொற்பணிவாய்க்குமேல் *
ஈண்டுஜன்மமெடுப்பனனந்தமே. (௬௫)

எடுத்ததேகமிறக்குமுனேயெனைக் *
கொடுத்துநின்னையுங்கூடவுங்காண்பனோ *
அடுத்தபேரறிவாயறியாமையைக் *
கெடுத்தவின்பக்கிளர்மணிக்குன்றமே. (௬௬)

குன்றிடாதகொழுஞ்சுடரோமணி *
மன்றுளாடியமாணிக்கமேயுனை *
அன்றியார்துணையாருறவார்கதி *
என்றுநீயெனக்கின்னருள்செய்வதே. (௬௭)

அருளெலாந்திரண்டோர்வடிவாகிய *
பொருளெலாம்வல்லபொற்பொதுநாதவென் *
மருளெலாங்கெடுத்தேயுளமன்னலால் *
இருளெலாமிரிந்தெங்கொளித்திட்டதே. (௬௮)

எங்குமென்னையிகலுறவாட்டியே *
பங்கஞ்செய்தபழவினைபற்றற்றால் *
அங்கணவுன்னடியிணையன்றியே *
தங்கவேறிடமுண்டோஜகத்திலே. (௬௯)

உண்டவர்க்கன்றியுட்பசியோயுமோ *
கண்டவர்க்கன்றிக்காதலடங்குமோ *
தொண்டருக்கெளியானென்றுதோன்றுவான் *
வண்டமிழ்க்கிசைவாகமதிக்கவே. (௭௰)

மதியுங்கங்கையுங்கொன்றையுமத்தமும் *
பொதியுஞ்சென்னிப்புனிதநின்பொன்னடிக் *
கதியைவிட்டிந்தக்காமத்திலாழ்ந்தவென் *
விதியையெண்ணிவிழிதுயிலாதன்றே. (௭௧)

அன்றெனச்சொலவாமெனவற்புதம் *
நன்றெனச்சொலநண்ணியநன்மையை *
ஒன்றெனச்சொனவொண்பொருளேயொளி *
இன்றெனக்கருள்வாயிருளேகவே. (௭௨)

இருவரோபுகழ்ந்தேத்தற்கினியராம் *
ஒருவரோதுணையென்றுணராய்நெஞ்சே *
வருவரோகொடுங்காலர்கள்வந்தெதிர் *
பொருவரோவவர்க்கென்கொல்புகல்வதே. (௭௩)

புகழுங்கல்வியும்போதமும்பொய்யிலா *
அகமும்வாய்மையுமன்புமளித்தவே *
சுகவிலாசத்துணைப்பொருடோற்றமாம் *
ககனமேனியைக்கண்டனகண்களே. (௭௪)

கண்ணுணின்றவொளியைக்கருத்தினை *
விண்ணுணின்றுவிளங்கியமெய்ப்பினை *
எண்ணியெண்ணியிரவும்பகலுமே *
நண்ணுகின்றவர்நான்றொழுந்தெய்வமே. (௭௫)

தெய்வம்வேறுளதென்பவர்சிந்தனை *
நைவதென்பதுநற்பரதற்பர *
சைவசிற்சிவனேயுனைச்சார்ந்தவர் *
உய்வதென்பதும்யானுணர்ந்தேனற்றே. (௭௬)

உற்றவேளைக்குறுதுணையாயிந்தச் *
சுற்றமோநமக்காக்குஞ்சொலாய்நெஞ்சே *
கற்றைவார்சடைக்கண்ணுதல்பாதமே *

பற்றலாம்பொருளேபரம்பற்றினல் ✻
உற்றமாதவர்க்குண்மையைநல்குமே ✻
மற்றும்வேறுளமார்க்கமெலாமெடுத்: ✻
தெற்றுவாய்மனமேகதியெய்தவே. (௭௮)

பொன்னைமாதரை - முற்றிற்று. ஆ௨ ௨௱௭௧.

ஆரணம்.

ஆரணமார்க்கத்தாகமவாசி ✻
　　அற்புதமாய்நடந்தருளும் ✻
காரணமுணர்த்துங்கையுநின்மெய்யும் ✻
　　கண்கண்மூன்றுடையவென்கண்ணே ✻
பூரணவறிவிற்கண்டிலமதனல் ✻
　　போற்றியிப்புந்தியோடிருந்து ✻
தாரணியுள்ளமட்டுமேவணங்கத் ✻
　　தமியனேன்வேண்டிடத்தகுமே. (௧)

இடமொருமடவாளுலகனைக்கீந்திட் ✻
　　டெவ்வுலகத்தையுமீன்றும் ✻
தடமுறுமகிலமடங்குநாளம்மை ✻
　　தன்னையுமொழித்துவிண்ணெனவே ✻
படருறுசோதிக்கருணையங்கடலே ✻
　　பாயிருட்படுகிரிக்கிடக்கக் ✻
கடனதோநினைப்புமறப்பெனுந்திரையைக் ✻
　　கவர்ந்தெனைவளர்ப்பதுன்கடனே. (௨)

வளம்பெறுஞானவாரிவாய்மடுத்து ✻
　　மண்ணையும்விண்ணையுந்தெரியா ✻
தளம்பெறுந்துரும்பொத்தாவியோடாக்கை ✻
　　யானந்தமாகவேயலந்தேன் ✻
களம்பெறுவஞ்சநெஞ்சினர்காணுக் ✻
　　காக்ஷியேசாக்ஷியேயறிஞர் ✻
உளம்பெறுந்துணையேபொதுவினினடிக்கும் ✻
　　உண்மையேயுள்ளவாறிதுவே. (௩)

உள்ளமேநீங்காவென்னைவாவாவென் ✻
　　றுலப்பிலாவானந்தமான ✻
வெள்ளமேபொழியுங்கருணைவான்முகிலே ✻

கள்ளமேதுரக்குந்தாவெளிப்பரப்பே *
கருவெனக்கிடந்தபாழ்மாயப் *
பள்ளமேவிழாதெனைக்கரையேற்றிப் *
பாவிப்பதுன்னருட்பரமே. (௪)

பரம்பரமாகிப்பக்குவம்பழுத்த *
பழவடியார்க்கருள்பழுத்துச் *
சுரந்தினிதிரங்குந்தானகற்பகமே *
சோதியேதொண்டனேனின்னை *
இரந்துநெஞ்சுடைந்துகண்டுயில்பொருமல் *
இருந்ததுமென்கணிவிருட்டைக் *
கரந்துநின்சண்ணுற்றுயில்பெறல்வேண்டிக் *
கருதினேன்கருத்திதுதானே. (௫)

கருத்தினுட்கருத்தாயிருந்துநீயுணர்த்துங் *
காரணங்கண்டுசும்மாதான் *
வருத்தமற்றிருந்துசுகம்பெறுவண்ணம் *
வருந்தினேன்மதியின்மைதீர்ப்பார் *
ஒருத்தராருளரப்பாடுணர்பவர்யாவர் *
உலகவர்யன்னெறியெனக்குப் *
பொருத்தமோசொல்லாய்மௌனசற்குருவே *
போற்றிநின்பொன்னடிப்போதே. (௬)

அடியெனுமதுவுமருளெனுமதுவும் *
அறிந்திடினிர்க்குணநிறைவும் *
முடியெனுமதுவும்பொருளெனுமதுவும் *
மொழிந்திடிற்சுசமனமாயைக் *
குடிகெடவேண்டிற்பணியறநிற்றல் *
குணமெனப்புன்னகைகாட்டிப் *
படிமிசைமௌனியாகிநீயாரைப் *
பாக்கியமென்செய்தேன்பரனே. (௭)

என்செயலின்றியாவுநின்செயலென் *
றெண்ணுவேனெவ்வொருகாலம் *
புன்செயன்மாயைமயக்கினென்செயலாப் *
பொருந்துவேனஃதொருகாலம் *
பின்செயல்யாதுநினைவின்றிக்கிடப்பேன் *
பித்தனேனன்னிலைபெறநின் *
றன்செயலாகமுடித்திடல்வேண்டுஞ் *
சச்சிதானந்தசற்குருவே. (௮)

குருவுருவாகிமௌனியாய்மோனக் *
கொள்கையைப்புணர்த்தினையதனால் *
சருவுருவாவதெனக்கிலையிந்தக் *
காயமோபொய்யெனக்கண்ட *
திருவுருவாளரனுபவநிலையும் *
சேருமோவாவலோமெத்த *
அருவுருவாகியல்லவாய்ச்சமய *
அளவிலாவானந்தவடிவே. (௬)

வடிவிலாவடிவாய்மனநினைவனுசா *
மார்க்கமாய்நீக்கருஞ்சுகமாய் *
முடிவிலாவீட்டின்வாழ்க்கைவேண்டினர்க்குன் *
மோனமல்லால்வழியுண்டோ *
படியிருளகலச்சின்மயம்பூத்த *
பசுங்கொம்பையடக்கியோர்கல்லால் *
அடியிலேயிருந்தவானந்தவரசே *
அன்பனைப்பருகுமாரமுதே. (௭)

ஆரணம் - முற்றுப்பெற்றது. ஆ உஅக.

சொல்லற்கரிய.

சொல்லற்கரியபரம்பொருளேசுகவாரிதியேசுடர்க்கொழுந்தே *
வெல்லற்கரியமயலிலெனைவிட்டெங்கொளித்தாயாகெட்டேன் *
கல்விற்பசியநாருரித்துக்கடுகிற்பெரியகடலடைக்கும் *
அல்லிற்கரியவந்தகனுர்க்காளாக்கினையோவறியேனே. (௧)

அறிவிற்கறிவுதாரகமென்றறிந்தேயறிவோடறியாமை *
நெறியிற்புகுதாதோர்படித்தாய்நின்றநிலையுந்தெரியாது *
குறியற்றகண்டாதீதமயக்கோதிலமுதேநினைக்குருகிப் *
பிறிவற்றிருக்கவேண்டாவோபேயேற்கினிநீபேசாயே. (௨)

பேசாவனுபூதியையடியேன்பெற்றுப்பிழைக்கப்பேரருளால் *
தேசோமயந்தந்தினியொருகாற்சித்தத்திருளுந்தீர்ப்பாயோ *
பாசாடவியைக்கடந்தவன்பர்பற்றுமகண்டப்பரப்பான *
ஈசாபொதுவினடமாடுமிறைவாகுறையாவின்னமுதே. (௩)

இன்பக்கடலிற்புகுந்திடுவானிரவும்பகலுந்தோற்றுமல் *
அன்பிற்கரைந்துகரைந்துருகியண்ணவரசேயெனக்கூவிப் *
பின்புற்றழுஞ்சேயெனவிழிநீர்பெருக்கிப்பெருக்கிப்பித்தாகித் *
துன்பக்கடல்விட்டகல்வேனோசொரூபானந்தச்சுடர்க்கொழுந்தே (௪)

கொழுந்துதிகழ்வெண்பிறைச்சடிலக்கோவேமன்றிற்கூத்தாடற் *
கெழுந்தசுடரேயிமயவரையென்றாய்கண்ணுக்கினியானே *
தொழுந்தெய்வமுநீகுருவுநீதுணைநீதந்தைதாயுநீ *
அழுந்தும்பவநீநன்மையுநீயாவியாக்கைநீதானே. (௫)

தானேயகண்டாகாரமயந்தன்னிலெழுந்துபொதுநடஞ்செய் *
வானேமாயப்பிறப்பறுப்பான்வந்துன்னடிக்கேகரங்கூப்பித் *
தேனேயென்னைப்பருகவல்லதெள்ளாரமுதேசிவலோகக் *
கோனேயெனுஞ்சொன்னினதுசெவிகொள்ளாதென்னேகூறாயே. (௬)

கூறாநின்றவிடர்க்கவலைக்குடும்பக்கூத்துட்டுளைந்துதடு *
மாறாநின்றபாவியைநீவாவென்றழைத்தாலாகாதோ *
நீறார்மேனிமுக்கணுடைநிமலாவடியார்நினைவினிடை *
ஆறாய்ப்பெருகும்பெருங்கருணையரசேயென்னையாள்வானே. (௭)

வானேமுதலாம்பெரும்பூதம்வகுத்துப்புரந்துமாற்றவல்ல *
கோனேயென்னைப்புரக்குநெறிகுறித்தாயிலையேகொடியேனைத் *
தானேபடைத்திங்கென்னபலன்றன்னைப்படைத்தாயுன்கருத்தை *
நானேதென்றிங்கறியேனேநம்பினேன்கண்டருள்வாயே. (௮)

கண்டார்கண்டகாக்ஷியுநீகாணார்காணுக்கள்வனுநீ *
பண்டாருயிர்நீயாக்கையுநீபலவாஞ்சமயப்பகுதியுநீ *
எண்டோண்முக்கட்செம்மேனியெந்தாய்நினக்கேயெவ்வாறு *
தொண்டாய்ப்பணிவரவர்பணிநீசூட்டிக்கொள்வதெவ்வாறே. (௯)

சூட்டியெனதென்றிடுஞ்சுமையைச்சுமத்தியெனையுஞ்சுமையாளாக் *
கூட்டிப்பிடித்துவினைவழியேகூத்தாட்டினையேநினதருளால் *
வீட்டைக்கருதுமப்போதுவெளியாமுலகவியப்பனைத்தும் *
ஏட்டுக்கடங்காச்சொற்பனம்போலெந்தாயிருந்ததென்சொல்வேன் (௰)

சொல்லற்கரிய முற்றுப்பெற்றது - ஆ ௨௯௧.

வம்பனேன்.

வம்பனேன்கள்ளங்கண்டுமன்னருள்வெள்ளராய *
உம்பர்பாலேவல்செய்யென்றுணர்த்தினையோகோவானோர் *
தம்பிரானேநீசெய்ததயவுக்குங்கைம்மாறுண்டோ *
எம்பிரானாய்ந்தேனாய்ந்தேனினியொன்றுங்குறைவிலேனே. (௧)

குறைவிலாநிறைவாய்ஞானக்கோதிலானந்தவெள்ளத் *
துறையிலேபடிந்துமூழ்கித்துளைந்துநான்றோன்றாவாறுள் *
உறையிலேயுணர்த்திமோனவொண்சுடர்வைவாடந்த *
இறைவனேயுனைப்பிரிந்திங்கிருக்கிலேனிருக்கிலேனே. (௨)

இருநிலமாதிநாதமீறதாமிவைகடந்த *
பெருநிலமாயதூயபேரொளிப்பிழம்பாய்நின்று *
கருதருமகண்டானந்தக்கடவுணின்காக்ஷிகாண *
வருகவென்றழைத்தாலன்றிவாழ்வுண்டோவஞ்சனேற்கே. (௩)

வஞ்சனையழுக்காறுதிவைத்திடும்பாண்டமான *
நெஞ்சனைவலிதின்மேன்மேனெக்குநெக்குருகப்பண்ணி *
அஞ்சலிசெய்யுங்கையுமருவிநீர்விழியுமாகத் *
தஞ்சமென்றிரங்கிக்காக்கத்தற்பராபரமுனக்கே. (௪)

உனக்குநானடித்தொண்டாகியுன்னடிக்கன்புசெய்ய *
எனக்குநீதோற்றிபஞ்சேலென்னுநாளெந்தநாளோ *
மனக்கிலேசங்கடீர்ந்தமாதவர்க்கிரண்டற்றோங்கும் *
தனக்குநேரில்லாவொன்றேசச்சிதானந்தவாழ்வே. (௫)

வாழ்வெனவயங்கியென்னைவசஞ்செய்துமருட்டும்பாழ்த்த *
ஊழ்வினைப்பகுதிகெட்டிங்குன்னையுங்கிட்டுவேனோ *
தாழ்வெனுஞ்சமயநீங்கித்தமையுணர்ந்தோர்கட்செல்லாம். *
சூழ்வெளிப்பொருளேமுக்கட்சோதியேயமரரேறே. (௬)

ஏறுவாம்பரியாவாடையிருங்கலையுரியாவென்றும் *
நாறுநற்சாந்தநீறுநஞ்சமேயமுதாக்கொண்ட *
கூறருங்குணத்தோயுன்றன்குரைகழல்குறுகினல்லால் *
ஆறுமோதாபசோபமகலுமோவல்லலுறேனே. (௭)

தானமுந்தவமும்யோகத்தன்மையுமுணராவென்பால் *
ஞானமுந்தெவிட்டாவின்பநன்மையுநல்குவாயோ *
பானலங்கவர்ந்ததீஞ்சொற்பச்சிளங்கிள்ளைகாண *
வானவரிறைஞ்சமன்றுள்வயங்கியநடத்தினானே. (௮)

நடத்தியிவ்வுலகையெல்லாநாதநீநிறைந்ததன்மை *
திடத்துடனறிந்தானந்தத்தெள்ளமுதருந்திடாதே *
விடத்திரளனையகாமவேட்கையிலழுந்திமாயைச் *
சடத்தினைமெய்யென்றெண்ணித்தளரவோதனியனேனே. (௯)

தனிவளர்பொருளேமாறாத்தண்ணருங்கருணைபூத்த *
இனியகற்பகமேமுக்கணெந்தையேநினக்கன்பின்றி *
நனிபெருங்குடிலங்காட்டுநயனவேற்கரியகூந்தல் *
வனிதையர்மயக்கிலாழ்ந்துவருந்தவோவம்பனேனே. (௰)

———

வம்பனேன் முற்றுப்பெற்றது. அ. ௩௭௪.

சிவன்செயல்.

சிவன்செயலாலேயாதும்வருமெனக்கேறேனாளும் *
அவந்தருநினைவையெல்லாமகற்றிலேனாசைவெள்ளம் *
கவர்ந்துகொண்டிழுப்பவந்தக்கட்டிலேயகப்பட்டையோ *
பவந்தனைமிட்டிமிட்டிப்பதைக்கின்றேன்பாவியேனே. (௧)

பாவியேனினியென்செய்கேன்பரமனேபணிந்துன்பாதம் *
சேவியேன்விழிநீர்மல்கச்சிவசிவவென்றுதேம்பி *
ஆவியேநிறையவந்தவமுதமேயென்னேனந்தோ *
சாவிபோஞ்சமயத்தாழ்ந்துஜகத்திடைத்தவிக்கின்றேனே. (௨)

இடைந்திடைந்தேங்கிமெய்புளகிப்ப வெழுந்தெழுந்தையநின்சரணம்
அடைந்தனனினிநீகைவிடேலுனக்கேயபயமென்றஞ்சலிசெய்துள் *
ளுடைந்துடைந்தெழுதுசித்திரப்பாவையொத்துநானசைவறநிற்பத் *
தொடர்ந்துநீயெனையாட்கொள்ளுநாளென்றோ சோதியேயாதிநாயகனே (௩)

ஆதியாய்நடுவாயந்தமாய்ப்பந்தம்யாவுமற்றகம்புறநிறைந்த *
சோதியாய்ச்சுகமாயிருந்தவெம்பெருமான்றொண்டனேன்சுகத்திலேயிருக்கப்
போதியாவண்ணங்கைவிடன்முறையோபுன்மையேனென்செய்கேன்மனமோ
வாதியாநின்றதன்றியும்புலன்சேர்வாயிலோதீயினுங்கொடிதே (௪)

வாயிலோரைந்திற்புலனெனும்வேடர்வந்தெனையீர்த்துவெங்காமத் *
தீயிலேவெதுப்பியுயிரொடுந்தின்னச்சிந்தைநைந்துருகிமெய்மறந்து *
தாயிலாச்சேய்போலலைந்தலைப்பட்டேன்றாயினுங்கருணையாமன்றுள் *
நாயகமாகியொளிவிடுமணியேநாதனேஞானவாரிதியே. (௫)

ஞானமேவடிவாய்த்தேடுவார்தேடுநாட்டமேநாட்டத்துணிறைந்த *
வானமேயெனக்குவந்துவந்தோங்குமார்க்கமேமருவார்தாமறியா *
மோனமேமுதலேமுத்திநல்வித்தேமுடிவிலாவின்பமேசெய்யும் *
தானமேதவமேநின்னைநானினைந்தேன் றமியனேன்றனைமறப்பதற்கே. (௬)

மறமலியுலகவாழ்க்கையேவேண்டும்வந்துநின்னன்பர்தம்பணியாம் *
அறமதுகிடைக்கினன்றியானந்தவற்புதநிஷ்டையினிமித்தம் *
துறவதுவேண்டுமௌனியாயெனக்குத்தூயநல்லருடரினின்னம் *
பிறவியும்வேண்டும்யானெனதிறக்கப்பெற்றவர்பெற்றிடும்பேறே (௭)

பெற்றவர்பெற்றபெருந்தவக்குன்றேபெருகியகருணைவாரிதியே *
நற்றவத்துணையேயானந்தக்கடலேஞாதுருஞானஞேயங்கள் *
அற்றவர்க்கருத்தநட்புடைக்கலப்பேயனேகமாய்நின்னடிக்கன்பு *
கற்றதுங்கேள்விகேட்டதுநின்னைக்கண்டிடும்பொருட்டன்றோகாணே (௮)

அன்றுநால்வருக்குமொளிநெறிகாட்டுமன்புடைச்சோதியேசெம்பொன் *
மன்றுண்முக்கண்ணுஞ்சாரகண்டமுமாய்வயங்கியவானமேயென்னுள்
துன்றுகூரிருளைத்துரந்திடுமதியேதுன்பமுமின்பமுமாகி *
நின்றவாதனையைக்கடந்தவர்நினைவேநேசமேநின்பரம்யானே. (௯)

யானெனல்காணேன்பூரணநிறைவில்யாதினுமிருந்தபேரொளிநீ *
தானெனநிற்குஞ்சமத்துறவென்னைத்தன்னவனாக்கவுந்தகுங்காண் *
வானெனவயங்கியொன்றிரண்டென்னுமார்க்கமாநெறிதந்துமாறுத் *
தேனெனருசித்துளன்பரைக்கலந்தசெல்வமேசிற்பரசிவமே. (௰)

சிவன்செயல்முற்றுப்பெற்றது ஆ ௱௰௧.

தன்னையொருவர்.

தன்னையொருவர்க்கறிவரிதாய்த்தானேதானாயெங்குநிறைந் *
துன்னற்கரியபரவெளியாயுலவாவமுதாயொளிவிளக்காய் *
என்னுட்கலந்தாயானறியாதிருந்தாயிறைவாவினியேனும் *
நின்னைப்பெறுமாறெனக்கருளானிலையைக்கொடுக்கநினையாயோ. (௧)

நினையுநினைவுக்கெட்டாதநெறிபெற்றுணர்ந்தநெறியாளா *
வினையைக்களைக்கும்பரமவின்பவெள்ளப்பெருக்கேநினதருளால் *
மனைவிபுதல்வரன்னைபிதாமாடுவீடென்றிடுமயக்கந் *
தனையுமறந்திங்குனைமறவாத்தன்மைவருமோதமியேற்கே. (௨)

வரும்போமென்னுமிருநிலைமைமன்னாதொருதன்மைத்தாகிக் *
கரும்போதேனோமுக்கனியோவென்னவென்னுட்கலந்துநலம் *
தரும்பேரின்பப்பொருளேநின்றன்னைநினைந்துநெக்குருகேன் *
இரும்போகல்லோமரமோவென்னிதயமியாதென்றறியேனே. (௩)

அறியுந்தரமோநானுன்னையறிவுக்கறிவாய்நிற்கையினால் *
பிறியுந்தரமோநீயென்னைப்பெம்மானேபேரின்பமதாய்ச் *
செறியும்பொருணீநின்னையன்றிச்செறியாப்பொருளுண்பெறும்பேற்றை
நெறிநின்றொழுகவிசாரித்தானினக்கோவில்லையெனக்காமே. (௪)

எனதென்பதும்பொய்யானெனல்பொய்யெல்லாமிறந்தவிடங்காட்டும்
நினதென்பதும்பொய்நீயெனல்பொய்நிற்குநிலைக்கேநேசித்தேன் *
மனதென்பதுமோவென்வசமாய்வாராதையநின்னருளோ *
தனதென்பதுக்குமிடங்காணேன்றமியேனெவ்வாறுய்வேனே. (௫)

உய்யும்படிக்குன்றிருக்கருணையொன்றைக்கொடுத்தாளுடையாய்பாழ்ம்
பொய்யுமவாவுமழுக்காறும்புடைபட்டோடநன்னெறியாம் *
மெய்யுமறிவுபெறும்பேறும்விளங்குமெனக்குன்னடியார்பால் *
செய்யும்பணியுங்கைகூடுஞ்சிந்தைத்துயருந்தீர்ந்திடுமே. (௬)

சிந்தைத்துயரொன்றொருபாவிசினந்துசினந்துபோர்முயங்க *
நிந்தைக்கிடமாய்ச்சகவாழ்வைநிலையென்றுணர்ந்தேநிற்கின்றேன் *
எந்தப்படியுன்னருள்வாய்க்குமெனக்கெப்படிநீயருள்செய்வாய் *
பந்தத்துயரற்றவர்க்கெளியபரமானந்தப்பழம்பொருளே. (௭)

பொருளைப்பூவைப்பூவையனைப்பொருளென்றெண்ணுமொருபாவி *
இருளைத்துரந்திட்டொளிநெறியையென்னுட்பதிப்ப தென்றுகொலோ
தெருளாத்தெருளாவன்பர்நெஞ்சந்தித்தித்துருகத்தெவிட்டாத *
அருளைப்பொழியுங்குணமுகிலேயறிவானந்தத்தாரமுதே. (௮)

ஆராவமிர்தம்விரும்பினர்களறியவிட்டத்தையமிர்தாக்கும் *
பேரானந்தசித்தனெனும்பெரியோயாவிக்குரியோய்கேள் *
காராகிரகவலையினிடைக்கட்டுண்டிருந்தகளைகளெல்லாம் *
ஊராலொருநாள்கையுணவேற்றுண்டாலெனக்கிங்கொழிந்திடுமே (௯)

எனக்கென்றிருந்தவுடல்பொருளும்யானுநினவென்றீந்தவண்ணம் *
அனைத்துமிருந்துமிலதாகவருளாய்நில்லாதழிவழக்காய் *
மனத்துட்புகுந்துமயங்கவுமென்மதிக்குட்களங்கம்வந்ததென்னே *
தனக்கொன்றுவமையறநிறைந்ததனியேதன்னந்தனிமுதலே. (௰)

தன்னையொருவர்-முற்றுப்பெற்றது. ஆ ௱௨௧.

ஆசையெனும்.

ஆசையெனும்பெருங்காற்றூடிலவம்பஞ்செனவுமனதலையுஞ்சாலம் *
மோசம்வருமிதனாலேகற்றதுங்கேட்டதுந்தூர்ந்துமுத்திக்கான *
நேசமுநல்வாசமும்போய்ப்புலனாயிற்கொடுமைபற்றிநிற்பரந்தோ *
தேசுபழுத்தருள்பழுத்தபராபரமேநிராசையின்றேற்றெய்வமுண்டோ

இரப்பானங் சொருவனவன் வேண்டுவகேட் டருள்செயென வேசற் றேதான், புரப்பான்றனருணாடி யிருப்பதுபோ லெங்குநிறை பொருளேகேளாய், மரப்பான்மை நெஞ்சினன்யான் வேண்டுவகேட்டிரங்கெனவே மௌனத்தோடம், தரப்பான்மை யருணிறைவி லிருப்பதுவோ பராபரமே சகசநிட்டை. - - - - - (௨)

சாட்டையிற்பம்பரசாலம்போலெலாம் *
ஆட்டுவானிறையெனவறிந்துநெஞ்சமே *
தேட்டமொன்றறவருட்செயலினிற்றியேல் *
வீட்டறத்துறவறமிரண்டுமேன்மையே. (௩)

தன்னெஞ்ச நினைப்பொழியா தறிவிலிநான் ஞானமெனுந் தன்மை பேச, உன்னெஞ்ச மகிழ்ந்தொருசொல் லுரைத்தனையே யதனையுன்னி யுருகேனையா, வன்னெஞ்சோ விரங்காத மரநெஞ்சோ விருப்புநெஞ் சோவைரமான, கன்னெஞ்சோவலதுமண்ணாங்கட்டிநெஞ்சோவெனது நெஞ்சங் கருதிற்றுனே. - - - - - (ச)

வாழிசோபனம்வாழிநல்லன்பர்கள் *
சூழவந்தருடோற்றமுஞ்சோபனம் *
ஆழிபோலருளையன்மௌனத்தால் *
ஏழையேன்பெற்றவின்பமுஞ்சோபனம். (ரு)

கொடுக்கின்றோர்கள்பாற்குறவையாதியானெனுங்குதர்க்கம் *
விடுக்கின்றோர்கள்பாற்பிறிவிலாதுள்ளன்புவிடாதே *
அடுக்கின்றோர்களுக்கிரங்கிடுந்தண்டமிழலங்கல் *
தொடுக்கின்றோர்களைச்சோதியாததுபரஞ்சோதி. (சு)

உலகமாயையிலேயெளியேன்றனைபுழலவிட்டனையேயுடையாயருள்- இலகுபேரின்பவீட்டினிலென்னையு மிருத்திவைப்ப தெக்காலஞ்சொலா யெழில் - திலகவாணுதற்பைந்தொடிகண்ணிணை தேக்கநாடகஞ்செய்த டியார்க்கெலாம் - அலகிலாவினைதீர்க்கத்துஜங்கட்டுமப்பனேயருளானந் தசோதியே. - - - - - - - (எ)

முந்நிலைச்சுட் டொழிதியெனப் பலகாலு நெஞ்சேநான் மொழிந்தே னேநின் - தன்னிலையைக்காட்டாதேயென்னையொன்றுச்சூட்டாதே சர ணன்போந்த - அந்நிலையேநிலையந்த நிலையிலேசித்திமுத்தி யனைத்துந் தோன்றும் - நன்னிலையீதன்றியிலைசுகமென்றேசுகர்முதலோர்நாடினரே (அ)

அத்துவிதம்பெறும்பேறென்றறியாமல்யானெனும்பேயகந்தையோடு அத்திமதியினர்போலமனங்கிடப்பவின்னமின்னம்வருந்துவேனோ [ம் சுத்தபரிபூரணமாய்நின்மலமாயகண்டிதமாய்ச்சொரூபானந்த *
சத்திகணீங்காதவனந்தன்மயமாயருள்யழுத்துத்தழைத்தவொன்றே. கூ

தந்தைதாயுநீயென்னுயிர்த்துணையுநீசஞ்சலமதுதீர்க்க *
வந்ததேசிகவடிவுநீபுனையலான்மற்றொருதுணைகாணேன் *
அந்தமாதியுமளப்பருஞ்சோதியேயாதியேயடியார்தம் *
சிந்தைமேவியதாயுமானவனெனுஞ்சிரகிரிப்பெருமானே. (ய)

காதிலோலையைவளைத்துமேற்குமிழையுங்கறுவிவேள்கருநீலப் *
போதுபோன்றிடுங்கண்ணியர்மயக்கிலெப்போதுமேதவராமல் *
மாதுகாதலியங்கனையபங்கனேமாடமாளிகைசூழும் *
சேதுமேவியராமநாயகன்றனைச்சிந்தைசெய்மடநெஞ்சே. (யக)

அண்டமுமாய்ப்பிண்டமுமாயளவிலாத *
ஆருயிருக்கோருயிராயமர்ந்தாயானால் *
கண்டவரார்கேட்டவராருன்னாலுன்னைக் *
காண்பதல்லாலென்னறிவாற்காணப்போமோ *
வண்டுளபமணிமார்பன்புதல்வனோடும் *
மனைவியொடுங்குடியிருந்துவணங்கிப்போற்றும் *
புண்டரிகபுரத்தினாதாந்தமௌன *
போதாந்தநடம்புரியும்புனிதவாழ்வே (௧௨)

பொறியிற்செறியைம்புலக்கனியைப்புந்திக்கவராற்புகுந்திழுத்து *
மறுகிச்சுழலுமனக்குரங்குமாளவாளாவிருப்பேனோ *
அறிவுக்கறிவாய்ப்பூரணமாயகண்டானந்தமயமாகிப் *
பிறிவற்றிருக்கும்பெருங்கருணைப்பெம்மானேயெம்பெருமானே (௧௩

உரையுணர்விறந்துதம்மையுணர்பவருணர்வினூடே *
கரையிலாவின்பவெள்ளங்காட்டிடுமுகிலேமாறாப் *
பரையெனுங்கிரணஞ்சூழ்ந்தபானுவேநின்னைப்பற்றித் *
திரையிலாநீர்போற்சித்தந்தெளிவனோசிறியனேனே. (௧௪)

கேவலசகலமின்றிக்கீழொடுமேலாயெங்கும் *
மேவியவருளின்கண்ணாய்மேவிடமேலாயின்பம் *
தாவிடவினைபாதீதத்தனியிடையிருத்திவைத்த *
தேவெனுமௌனிசெம்பொற்சேவடிசிந்தைசெய்வாம். (௧௫)

நேற்றுளாரின்றுமாளாநின்றனரதனைக்கண்டும் *
போற்றிலேனின்னையந்தோபோக்கினேன்வீணேகாலம் *
ஆற்றிலேன்கண்டானந்தவண்ணலேயளவின்மாயைச் *
சேற்றிலேயின்னம்வீழ்ந்துதிளைக்கவோசிறியனேனே. (௧௬)

போதமென்பதேவிளக்கொவ்வுமவித்தைபொய்யிருளாம் *
தீதிலாவிளக்கெடுத்திருடேடவுஞ்சிக்கா *
தாதலாலறிவாய்நின்றவிடத்தறியாமை *
ஏதுமில்லையென்றெம்பிரான்சுருதியேயியம்பும். (௧௭)

சுருதியேசிவாகமங்களேயுங்களாற்சொல்லும் *
ஒருதனிப்பொருளைவையீதென்னவாயுண்டோ *
பொருந்திநாக்கடனுண்மணலெண்ணினும்புகலக் *
கருதவெட்டிடாநிறைபொருளைவையார்காண்பார். (௧௮)

மின்னைப்போன்றனவகிலமென்றறிந்துமெய்ப்பொருளா *
முன்னைப்போன்றநற்பரம்பொருளில்லையென்றோர்ந்து *
பொன்னைப்போன்றநின்போதங்கொண்டுன்பணிபொருந்தா *
என்னைப்போன்றுளரேழையனாயவிங்கெவரோ. (௧௯)

தாயுந்தந்தையுமெனக்குறவாவதுஞ்சாற்றில் *
ஆயுநீயுநின்னருளுநின்னடியருமன்றோ *
பேயனேன்றிருவடியிணைத்தாமரைபிடித்தேன் *
நாயனேயெனையாளுடைமுக்கணாயகனே. (௨௰)

காந்தமதையெதிர்காணிற்கருந்தாதுசெல்லுமந்தக்காந்தத்தொன்றா *
தேய்ந்தவிடமெங்கேதானங்கேதான்சலிப்பறவுமிருக்குமாபோல் *
சாந்தபதப்பரம்பொருளேபற்றுபொருளிருக்குமத்தாற்சலிக்குஞ்சித்தம்
வாய்ந்தபொருளில்லையெனிற்பேசாமைநின்றநிலைவாய்க்குமன்றே. ௨௧

பொற்புறுங்கருத்தேயகமாயதிற்பொருந்தக் *
கற்பின்மங்கையொனவிழிகதவுபோற்கவினச் *
சொற்பனத்தினுஞ்சோர்வின்றியிருந்தநான்சோர்ந்து *
நிற்பதற்கிந்தவினைவந்தவாறென்கொனிமலா. (௨௨)

வந்தவாறிந்தவினைவழியிதுவெனமதிக்கத் *
தந்தவாருண்டோவுள்ளுணர்விலையன்றித்தமியேன் *
நொந்தவாறுகண்டிரங்கவுமிலைகற்றநூலால் *
எந்தவாறினித்தற்பராவுய்க்குவேனேழை. (௨௩)

சொல்லாலும்பொருளாலுமளவையாலும் *
தொடரவொண்ணாவருநெறியைத்தொடர்ந்துநாடி *
நல்லார்களைவையகத்தேயிருக்கவைத்தாய் *
நன்னர்நெஞ்சந்தன்னலமுநணுகுவேனோ *
இல்லாளியாயுலகோடுயிரையீன்றிட் *
டெண்ணரியயோகினுக்குமிவனேயென்னக் *
கல்லாலின்கீழிருந்தசெக்கர்மேனிக் *
கற்பகமேபராபரமேகைலைவாழ்வே. (௨௪)

சாக்கிரமாநுதலினிந்திரியம்பத்தும் *
சத்தாதிவசனாதிவாயுபத்தும் *
நீக்கமிலந்தக்கரணம்புருடனோடும் *
நின்றதுமுப்பானைந்துநிலவுங்கண்டத் *
தாக்கியசொற்பனமதனில்வாயுபத்தும் *
அடுத்தனசத்தாதிவசனாதியாக *
நோக்குகரணம்புருடனுடனேகூட *
நுவல்வரிருபத்தைந்தாநுண்ணியோரே. (௨௫)

சுழுத்தியிதயந்தனிற்பிராணஞ்சித்தம் *
சொல்லரியபுருடனுடன்மூன்றதாகும் *
வழுத்தியநாபியிற்றுரியம்பிராணனோடும் *
மன்னுபுருடனுங்கூடவயங்காநிற்கும் *

அழுத்திடுமூலந்தன்னிற்றுரியாதீதம் *
அதன்கடையேபுருடனென்றியமருஞானம் *
பழுத்திடும்பக்குவரறிவரவத்தையைந்தில் *
பாங்குபெறக்கருவிநிற்கும்பரிசுதானே. (உசு)

இடத்தைக்காத்திட்டசுவானெனப்புன்புலாலிறைச்சிச் *
சடத்தைக்காத்திட்டநாயினேனுன்னன்பர்தயங்கும் *
மடத்தைக்காத்திட்டசேடத்தால்விசேடமாய்வாழ *
விடத்தைக்காத்திட்டகண்டத்தோய்நின்னருள்வேண்டும். (உஎ)

வாதனைப்பழக்கத்தினன்மனமந்தமனத்தால் *
ஓதவர்த்திடுமுறையுரைப்படிதொழிலுளவாம் *
ஏதமம்மனமாயையென்றிடிற்கண்டவெல்லாம் *
ஆதரஞ்செயாப்பொய்யதற்கையமுண்டாமோ. (உஅ)

ஐயவாதனைப்பழக்கமேமனநினைவதுதான் *
வையமீதினிற்பரம்பரையாதினுமருவும் *
மெய்யினின்றொளிர்பெரியவர்சார்வுற்றுவிளங்கிப் *
பொய்யதென்பதையொருவிமெய்யுணருதல்போதம். (உகூ)

குலமிலான்குணங்குறியிலான்குறைவிலான்கொடிதாம் *
புலமிலான்றனக்கென்னவோர்பற்றிலான்பொருந்தும் *
இலமிலான்மைந்தர்மனைவியில்லானெனவனவன்சஞ் *
சலமிலான்முத்திதரும்பரசிவனெனத்தகுமே. (ஙய)

கடத்தைமண்ணெனவுடைந்தபோதோவிந்தக்கருமச் *
சடத்தைப்பொய்யெனவிறந்தபோதோசொலத்தருமம் *
விடத்தைநல்லமிர்தாவுண்டுபொற்பொதுவெளிக்கே *
நடத்தைக்காட்டியெவ்வுயிரையுநடப்பிக்குநலத்தோய். (ஙக)

நானெனவுநீயெனவுமிருதன்மைநாடாமனடுவேசும்மா *
தானமருநிலையிதுவேசத்தியஞ்சத்தியமெனநீதமியனேற்கு *
மோனகுருவாகியுங்கைகாட்டினையேதிரும்பவுநான்முளைத்துத்தோன்றி
மானதமார்க்கம்புரிந்திங்கலைந்தேனேபரந்தேனேவஞ்சனேனே. (ஙஉ)

தன்மயஞ்சுபாவஞ்சுத்தந்தண்ணருள்வடிவஞ்சாந்தம் *
மின்மயமானவண்டவெளியுருவானபூர்த்தி *
என்மயமெனக்குக்காட்டாதெனையபகரிக்கவந்த *
சின்மயமகண்டாகாரந்தக்ஷிணாதிக்கமூர்த்தம். (ஙங)

சிற்றரும்பனசிற்றறிவாளரனேதெளிந்தால் *
மற்றரும்பெனமலரெனப்பேரறிவாகிக் *
கற்றரும்பியகேள்வியான்மதித்திடக்கதிச்சீர் *

மயக்குசிந்தனைதெளிவெனவிருநெறிவகுப்பால் *
நயக்குமொன்றன்பாலொன்றிலையெனனலவழக்கே *
இயக்கமுற்றிடுமயக்கத்திற்றெளிவுறலினிதாம் *
பயக்கவல்லதோர்தெளிவுடையவர்க்கெய்தஃ பண்போ. (௩௫)

அருள்வடிவேழுமூர்த்தமவைகள்சோபானமென்றே *
சுருதிசொல்லியவாற்றாலேதொழூத்தெய்வமெல்லாமொன்றே *
மருளெனக்கில்லைமுன்பின்வருநெறிக்கிவ்வழக்குத் *
தெருளின்முத்நிலையாமுன்னைச்சேர்ந்தியான்றெளிகின்றேனே (௩௬)

எத்தனைப்பிறப்போ வெத்தனையிறப்போ வெளியனேற்கிதுவரையமை
தத்தனையெல்லாமறிந்தநீயறிவையறிவிலியறிகிலேனந்தோ [த்த
சித்தமும்வாக்குந்தேகமுநினவேசென்மமுமினியெனலாற்று *
வைத்திடிங்கென்னைநின்னடிக்குடியாமறைமுடியிருந்தவான்பொருளே

வான்பொருளாகியெங்குநீயிருப்பவத்தெனைக்கொடுத்துநியாகா *
தேன்பொருள்போலக்கிடக்கின்றேன்முன்னையிருவினைவாதனையன்றோ
தீன்பொருளானவமிர்தமேநின்னைச்சிந்தையிற்பாவனைசெய்யும் *
நான்பொருளானேனல்லனல்லரசேநானிறந்திருப்பதுநாட்டம் (௩௮)

நாட்டமூன்றுடையசெந்திறமணியேநடுவுறுநாயகவிளக்கே *
கோட்டமில்குணத்தோர்க்கெளியநிர்க்குணமேகோதிலாவமிர்தமேநின்னை
வாட்டமினெஞ்சங்கிண்ணமாச்சேர்த்துவாய்மடுத்தருந்தினனுங்கே *
பாட்டளிநறவமுண்டயர்ந்தது போற்பற்றயர்ந்திருப்பதெந் நாளோ.

என்னுடையுயிரோயென்னுளத்தறிவேயென்னுடையன்பெனுநெறியாய்
கன்னன்முக்கனிதேன்கட்டமிர்தென்னக்கலந்தெனைமேவிடக்கருணை *
மன்னியவுறவேயுன்னைநான்பிரியாவண்ணமென்மனமெனுங்கருவி *
தன்னதுவழியற்றென்னுழைக்கிடப்பத் தண்ணருள்வரமதுவேண்டும். (௪௰)

ஆசையெனும்-முற்றுப்பெற்றது. ஆ ௩௱௪௰௧.

எனக்கெனச்செயல்.

எனக்கெனச்செயல்வேறிலையாவுமிங்கொருநின் *
றனக்கெனத்தகுமுடல்பொருளாவியுந்தந்தேன் *
மனத்தகத்துளவழுக்கெலாமாற்றியெம்பிரானீ *
நினைத்ததெப்படியப்படியருளுதனீதம். (௧)

உளவறிந்தெலாநின்செயலாமெனவுணர்ந்தோர்க் *
களவிலானந்தமளித்தனையறிவிலாப்புன்மைக் *
களவுநாயினேற்கிவ்வணமமைத்தனைகருத்துத் *

என்னைத்தானின்னவண்ணமென்றறிகிலாவேழை *
தன்னைத்தானறிந்திடவருள்புரிதியேற்றக்கோய் *
பின்னைத்தானின்றனருள்பெற்றமாதவப்பெரியோர் *
நின்னைத்தானிகரானெனவாழ்த்துவர்நெறியால். (௩)

ஏதமின்றித்தன்னடியிணைக்கன்புதானீட்டும் *
காதலன்பர்க்குக்கதிநிலையிதெனக்காட்டும் *
போதநித்தியபுண்ணியவெண்ணரும்புவன *
நாததற்பரநானெவ்வாறுய்க்குவேனவிலாய். (௪)

வேதமெத்தனையத்தனைசிரத்தினும்விளங்கும் *
பாதநித்தியபரம்பரநிரந்தரபரம *
நாததற்பரசிற்பரவடிவமாய்நடிக்கும் *
நீதநிர்க்குணநினையன்றியொன்றுநானினையேன். (௫)

நெறிகடாம்பலபலவுமாயந்தந்தநெறிக்காம் *
செறியுந்தெய்வமும்பலபலவாகவுஞ்செறிந்தால் *
அறியுந்தன்மையிங்காருனையறிவினாலறிந்தோர் *
பிறியுந்தன்மையில்லாவகைகலக்கின்றபெரியோய். (௬)

பெரியவண்டங்களெத்தனையமைத்திற்பிறங்கும் *
உரியபல்லுயிரெத்தனையமைத்திற்குறுதி *
வருவதெத்தனையமைத்தனையமைத்தருள்வளர்க்கும் *
அரியதத்துவவெனக்கிந்தவண்ணமேனமைத்தாய். (௭)

கணமதேனுநின்சாரணந்தன்னையேகருத்தில் *
உணருமாதவர்க்கானந்தமுதவினையொன்றும் *
குணமிலாதபொய்வஞ்சனுக்கெந்தைநிர்க்குணமா *
மணமுலாமலர்ப்பதந்தரின்யாருனைமறுப்பார். (௮)

கன்னன்முக்கனிகண்டுதேன்சருக்கரைகலந்த *
தென்னமுத்தியிற்கலந்தவர்க்கின்பமாயிருக்கும் *
நன்னலத்தநின்னற்பதந்துணையெனநம்பச் *
சொன்னவர்க்கெனலாங்கைம்மாறில்லையென்சொல்வேன். (௯)

தந்தைதாய்தமர்மகவெனுமவையெலாஞ்ஜகத்தில் *
பந்தமாமென்றேயருமறைவாயினாற்பகர்ந்த *
எந்தைநீயெனையின்னமவ்வல்லலிலிருத்திச் *
சிந்தைதான்றெளிந்தெவ்வணமுய்வணஞ்செப்பாய். (௰)

துய்யநன்னருள்வடிவின்பொறுமையாற்றுலங்கு *
மெய்யனென்றுனையையனேயடைந்தனன்மெத்த *
நொய்யனண்ணியவறிவிலனென்னைநாணக்கும் *

ஒன்றதாய்ப்பலவாயுயிர்த்திரட்கெலாமுறுதி
என்றதாயென்றுமுள்ளதாயெவற்றினுமிசைய
நின்றதாய்நிலைநின்றிடுமறிஞவென்னெஞ்சம்
மன்றதாயின்பவுருக்கொடுநடித்திடின்வாழ்வேன். (௰௨)

தனியிருந்தருட்சகசமேபொருந்திடக்சமியேற்
கினியிரங்குதல்கடனிதுசமயமென்னிதயக்
கனிவுமப்படியாயினதாதலாற்கருணைப்
புனிதநீயறியாததொன்றுள்ளதோபுகலாய். (௰௩)

திருந்துசீரடித்தாமரைக்கன்புதான்செய்யப்
பொருந்துநாணல்லபுண்ணியஞ்செய்யுநாள்பொருந்தா
திருந்தநாள்வெகுதீவினையிழைத்தநாளென்றால்
அருந்தவாவுனைப்பொருந்துநாளெந்தநாளடிமை. (௰௪)

பின்னுமுன்னுமாய்நடுவுமாயாதினும்பெரிய
தென்னுந்தன்மையாயெவ்வுயிர்த்திரளையுமியக்கி
மன்னுந்தண்ணருள்வடிவமேயுனக்கன்புவைத்தும்
துன்னுமின்னலேன்யானெனுமகந்தையேன்சொல்லாய். (௰௫)

மின்னையன்னபொய்வாழ்க்கையேநிலையெனமெய்யாம்
உன்னைநான்மறந்தெவ்வணமுய்வணமுனையாய்
முன்னைவல்வினைவேரறமுடித்தென்றுமுடியாத்
தன்னைத்தன்னடியார்க்கருள்புரிந்திடுந்தக்கோய். (௰௬)

எம்பராபரவெம்முயிர்த்துணைவவென்றிறைஞ்சும்
உம்பரிம்பர்க்குமுரைக்கணேநடிக்கின்றாயுன்றன்
அம்பொன்மாமலர்ப்பதத்தையேதுணையெனவடிமை
நம்பினேனினிப்புரப்பதெக்காலமோநவிலாய். (௰௭)

பாடியாடிநின்றிரங்கிநின்பதமலர்முடிமேல்
சூடிவாழ்ந்தனரமலநின்னடியர்யான்றொழும்பன்
நாடியேயிந்தவுலகத்தைமெய்யெனநம்பித்
தேடினேன்வெறுந்தீமையேயென்னினிச்செய்வேன். (௰௮)

கரவுவஞ்சனைகாமமென்றிவையெலாங்காட்டும்
அரவுமாயையிங்கானெனக்கமைத்தனையாயா
உளவிலேயெனக்குள்ளவாறுணர்த்தினுன்னடிமை
வளருமாமதிபோன்மதிவளர்வின்றிவாழ்வேன். (௰௯)

வானநாயகவானவர்நாயகவளங்கூர்
ஞானநாயகநான்மறைநாயகநலஞ்சேர்
மோனநாயகநின்னடிக்கன்பின்றிமுற்றுந்
தீனனாயகம்வாடவோவென்செய்வேன்செப்பாய். (௨௰)

ஏதமற்றவர்க்கின்பமேபொழிகின்றவிறையே *
பாதகக்கருங்கன்மனங்கோயிலாப்பரிந்து *
சூதகத்தனுயாதினுமிச்சைமேற்றோன்றும் *
வாதனைக்கிடமாயினேனெவ்வணம்வாழ்வேன். (௨௧)

தெளிவொடுகையோவறிவிலானறிவிலான்சிறிதும் *
அளியிலானிவன்றிருவருட்கயலெனவறிந்தோ *
எளியனுக்கினையென்செய்வேனென்செய்வேனெல்லாம் *
ஒளியுமாய்நிறைவெளியுமாயாவுமாமுரவோய். (௨௨)

கண்ணினுண்மணியென்னவேதொழுமன்பர்கருத்துள் *
நண்ணுகின்றநின்னருளெனக்கெந்தநாணணுகும் *
மண்ணுவிண்ணுமற்றுள்ளனபூதமுமாருப் *
பெண்ணுமாணுமாயல்லவாய்நிற்கின்றபெரியோய். (௨௩)

ஜகமெலாந்தனிபுரந்தனைதகவுடைத்தக்கோர் *
அகமெலாநிறைந்தானந்தமாயினையரவில் *
மகமெலாம்புரிந்தோரைவாழ்வித்தனைமாறு *
இகமெலாமெனைப்பிறந்திடச்செய்ததேனெந்தாய். (௨௪)

ஏய்ந்தநல்லருள்பெற்றவர்க்கேவலாயெளியேன் *
வாய்ந்தபேரன்புவளர்க்கவுங்கருணைநீவளர்ப்பாய் *
ஆய்ந்தமாமறையெத்தனையத்தனையறிவால் *
தோய்ந்தபேர்கட்குந்தோன்றிலாத்தோன்றலாந்தூயோய். (௨௫)

தக்கநின்னருட்கேள்வியோசிறிதின்றித்தமியேன் *
மிக்கதெய்வமேநின்னின்பவெள்ளத்தில்வீழேன் *
ஒக்கருய்தந்தைமகவெனும்பாசக்கட்டுடனே *
துக்கவெள்ளத்திலாழ்கின்றேனென்செய்வான்றுணிந்தேன். (௨௬)

பவம்புரிந்திடும்பாவியேற்கருணிலைபதியத் *
தவஞ்செயும்படித்தயவுசெய்தருள்வதேகருமம் *
அவம்புரிந்திடார்க்கானந்தவமிர்தத்தையளிக்க *
நவங்கொடுத்துவத்திரையெறிகடலெனுநலத்தோய். (௨௭)

உற்றுணர்ந்தெலாநீயலதில்லையென்றுனையே *
பற்றுகின்றனரெந்தைநின்னடியர்யான்பாவி *
முற்றுமாயமாஞ்ஜகத்தையேமெய்யெனமுதருன் *
நற்றிருந்திடத்தொழில்செய்வான்றனைநிகரானேன். (௨௮)

எனக்கெனச்செயல் - முற்றுப்பெற்றது. ஆ ஙா அகூ.

மண்டலத்தின்.

மண்டலத்தின்மிசையொருவன் செய்தவித்தையகோவெளவும்வாரணாதி
அண்டமவையடுக்கடுக்காயந்தரத்தினிறுத்துமவதானம்போல *
எண்டருநல்லகிலாண்டகோடியைத்தன்னருள்வெளியிலிலகவைத்துச் *
கொண்டுநின்றவற்புதத்தையெவராலுநிச்சயிக்கக்கூடாவொன்றை. (௧)

ஒன்றிரண்டாய்விவகரிக்கும்விவகாரங்கடந்தேழாம்யோகபூமி *
நின்றுதெளிந்தவர்பேசாமௌனநியாயத்தைநிறைநிறைவைத்தன்னை *
அன்றியொருபொருளிலதாவெப்பொருட்குந்தான்முதலாயசலமாகி *
என்றுமுள்ளவின்பத்தைத்தண்ணென்றசாந்தபதவியற்கைதன்னை. (௨)

பதமூன்றுங்கடந்தவர்க்குமேலானஞானபதப்பரிசுகாட்டிச் *
சதமாகிநிராலம்பசாக்ஷியதாயாரம்பத்தன்மையாகி *
விதம்யாவுங்கடந்தவித்தையெனுமிருளைக்கீண்டெழுந்துவிமலமாகி *
மதமாறுங்காணாதவானந்தசாகரத்தைமௌனவாழ்வை. (௩)

வாழ்வனைத்துந்தந்தவின்ப மாகடலைநல்லமிர்தைமணியைப்பொன்னைத்
தாழ்வறவென்னுளத்திருந்ததத்துவத்தையத்துவிதசாரந்தன்னைச் *
சூழ்பெரும்பேரொளியையொளிபரந்தபரவெளியையின்பசுகத்தைமாறு
ஏழுலகுங்கலந்தின்றாய்நாளையாயென்றுமாமியற்கைதன்னை. (௪)

தன்னையறிந்தவர்தம்மைத்தானாகச்செய்தருளுஞ்சமத்தைலோக *
மின்னைநிகர்த்திடவழியாச்சொரூபானந்தச்சுடரைவேதமாதி *
என்னையறிவரிதென்னச்சமயகோடிகளிடையவிடையறாத *
பொன்னைவிரித்திடுமுலகத் தும்பரும்பரும்பரவும் புனிதமெய்யை.
(௫)

பரவரியபரசிவமாயதுவெனலாய்நானெனலாய்பாசசாலம் *
விரவிநின்றவிசித்திரத்தையைக்யபதத்தினிதிருந்தவிவேகந்தன்னை *
இரவுபகனினைப்புமறப்பெனுந்தொந்தமறியார்களிதயம்வேதச் *
சிரமெனவாழ்பராபரத்தையானந்தநீங்காதசிதாகாசத்தை. (௬)

அத்துவிதவனுபவத்தையனந்தமறையின்னமின்னமறியேமென்னும் *
நித்தியத்தைநிராமயத்தைநிர்க்குணத்தைத்தன்னருளா நினைவுக்குள்ளே
வைத்துவைத்துப்பார்ப்பவரைத் தானாகவெந்நாளும்வளர்த்துக்காக்குஞ்
சித்தினைமாதூவெளியைத்தன்மயமாமானந்தத்தெய்வந்தன்னை. (௭)

தன்னிலேதானாகநினைந்துகனிந்தவிழ்ந்துசுகசமாதியாகப் *
பொன்னிலேபணிபோலுமாயைதருமனமேயுன்புரைகடந்தாய் *
என்னிலேயான்பிழைப்பேனெனக்கினியாருன்போல்வாரில்லையில்லை *
உன்னிலோ திருவருளைக் கொய்யாவா யென்னுயிர்க்கோ ருறவுமாவாய்
(௮)

உறவுடலையெடுத்தவரிற்பிரமாதியேனுமுனையொழிந்துதவீரற் *
கறவுமரிதரிதன்றேவிகபரமுமுன்னையன்றியாவதுண்டோ *
வறிதிலுன்னையசத்தென்னல்வழக்கன்றுசத்தெனவும்வாழ்த்துவேனென்
சிறுமைகெடப்பெருமையினின் சென்மமதேயத்தினிற்செல்லல்வேண்
[டும் (௯)

வேண்டியநாளென்னோடும்பழகியநீயெனைப்பிரிந்தவிசாரத்தாலே *
மாண்டுகிடக்கினுமந்தவெல்லையையும்பூரணமாவணக்கஞ்செய்வேன் *
ஆண்டகுருமௌனிதன்னுல்பாலெனதற்றவனருணுணுவேன்பூவில் *
காண்டகவெண்சித்திமுத்தியெனக்குண்டாமுன்னுலென்கவலைதீர்வேன்.

தீராதவென்ஜனனவழக்கெல்லாந்தீருமிந்தச்சனனத்தோடே *
ஆரேனுமறிவரியசீவன்முக்தியுண்டாகுமையவையோ *
காரேனுங்கற்பகப்பூங்காவேனுமுனக்குவமைகாட்டப்போமோ *
பாராதியாகவெழுமண்டலத்தினின்மகிமைபகரலாமோ. (௰௧)

மண்டலத்தின் - முற்றுப்பெற்றது. ஆ௲சா.

பாயப்புலி.

பாயப்புலிமுனமான்கன்றைக்காட்டும்படியகில *
மாயைப்பெரும்படைக்கோயிலக்காவெனைவைத்தனையோ *
நீயெப்படிவகுத்தாலுநன்றேநின்பெருங்கருணை *
தாயொத்தடியர்க்கருள்சச்சிதானந்ததற்பரமே. (௧)

தற்பரமாஞ்சிற்பரமாகிமன்றந்தனினடித்து *
நிற்பரம்போருகன்மால்பணிநீதனென்னெஞ்சகமாம் *
கற்பரந்தாங்குகரைந்திடவானுத்தகாக்ஷிநல்கும் *
பொற்பரமாயென்வினைக்கருந்தாதைப்பொடிசெய்ததே (௨)

செய்யுந்தவஞ்சற்றுமில்லாதநானுன்றிருவடிக்கே *
கொய்யும்புதுமலரிட்டுமெய்யன்பர்குழாத்துடனே *
கையுஞ்சிரமிசைக்கூப்பிநின்றாடிக்கசிந்துருகி *
உய்யும்படிக்கருள்செய்வதென்றோபுலியூரத்தனே. (௩)

அத்தனைச்சிற்றம்பலவனையென்னுயிராகிநின்ற *
சுத்தனைச்சுத்தவெளியானவனைச்சுகவடிவாம் *
நித்தனைநித்தநிராதாரமாகியநின்மலனை *
எத்தனைநாள்செல்லுமோமனமேகண்டிறைஞ்சுதற்கே. (௪)

கண்டாருளத்தினிற்கானன்றிப்பெய்யுங்கருணைமுகில் *
அண்டார்புரத்துக்குமன்பர்வினைக்குமசனிதன்னைக் *
கொண்டாடினர்முனங்கூத்தாடுமத்தன்றன்கோலமெல்லாம் *

வெளியானநீயென்மனவெளிபூடுவிரவினையா *
ஒளியாருங்கண்ணுமிரவியும்போனின்றுலாவுவன்சான் *
அளியாருங்கொன்றைச்சடையாடவம்புலியாடக்கங்கைத் *
துளியாடமன்றுணடமாடுமுக்கட்சுடர்க்கொழுந்தே. (௬)

கொழுந்தாதுறைமலர்க்கோதையர்மோகக்குரைகடலில் *
அழுந்தாதவண்ணநின்பாதப்புணைதந்தருள்வதென்றோ *
எழுந்தாதரவுசெயெம்பெருமானென்றிறைஞ்சிவிண்ணோர் *
தொழுந்தாதையேவெண்பொடிபூத்தமேனிச்சுகப்பொருளே. (௭)

சுகமாகுஞானந்திருமேனியாநல்லதொண்டர்தங்கள் *
அகமேபொற்கோயிலெனமகிழ்ந்தேமன்றுளாடியகற் *
பகமேயுன்பொன்னடிநீழல்கண்டாலன்றிப்பாவிக்கிந்தச் *
செகமாயையானவருங்கோடைநீங்குந்திறமிலையே. (௮)

நீங்காதுயிருக்குயிராகிநின்றநினையறிந்தே *
தூங்காமற்றூங்கினல்லாதேயெனக்குச்சுகமுமுண்டோ *
ஓங்காரமாமைந்தெழுத்தாற்புவனத்தையுண்டுபண்ணிப் *
பாங்காநடத்தும்பொருளேயகண்டபரசிவமே. (௯)

சிவமாதிநான்முகக்கோவந்தமாமறைசெப்புகின்ற *
நவமாயிலங்கியவொன்றேயிரண்டற்றநன்மைபெறு *
தவமேதருமைம்புலப்பொறிக்கேயென்னறிவுபொல்லாப் *
பவமேவிளைக்கவென்றோவெளிமானெனப்பாய்ந்ததுவே. (௰)

ஆறொத்திலங்குசமயங்களாறுக்குமாழ்கடலாய் *
ஊறிப்பரந்தபரமானவானந்தவெள்ளமொன்று *
தேறித்தெளிந்துநிலைபெற்றமாதவர்சித்தத்திலே *
ஊறிப்பரந்தண்டகோடியெல்லாநின்றுலாவியதே. (௰௧)

நடக்கினுமோடினுநிற்கினும்வேறொருநாட்டமின்றிக் *
கிடக்கினுஞ்செவ்விதிருக்கினுநல்லருட்கேள்வியிலே *
தொடக்குமென்னெஞ்சமனமற்றபூரணத்தொட்டிக்குளே *
முடக்குவன்யான்பரமானந்தநித்திரைமூடிடுமே (௰௨)

எண்ணாதவெண்ணியநெஞ்சேதுயரொழியென்னிரண்டு *
கண்ணேயுறங்குறங்கென்னுமுக்கட்கருணைப்பிரான் *
தண்ணார்கருணைமௌனத்தினன்முத்திசாதிக்கலாம் *
நண்ணாததொன்றில்லையெல்லாநலமுநமக்குறவே. (௰௩)

நானென்றொருமுதலுண்டென்றநான்றலைநாணவென்னுட் *
டானென்றொருமுதல்பூரணமாகத்தலைப்பட்டொப்பில் *
ஆனந்தந்தந்தென்னறிவையெல்லாமுண்டவசநல்கி *
மோனந்தனைவிளைத்தாலினியாதுமொழிகுவதே. (௰௪)

தானந்தவஞ்சற்றுமில்லாதநானுண்மைதானறிந்து *
மோனம்பொருளெனக்கண்டிடச்சற்குருமோனனுமாய்த் *
தீனன்றனக்கிங்கிரங்கினையேயினிச்சிந்தைக்கென்றும் *
ஆனந்தந்தானல்லவோபரமேசச்சிதானந்தமே. (௧௫)

எனக்கோர்சுதந்தரமில்லையப்பாவெனக்கெய்ப்பில்வைப்பாய் *
மனக்கோதகற்றும்பரம்பொருளேயென்னைவாழ்வித்திட *
நினக்கேபரநின்னைநீங்காதபூரணநீள்கருணை *
தனக்கேபரமினிச்சும்மாவிருக்கத்தகுமென்றுமே. (௧௬)

இடம்பெறுவீடுமின்னார்சேயுறவுமிருநிதியும் *
உடம்பைவிட்டாருயிர்போம்போதகூடியுடன்வருமோ *
மடம்பெறுமாயைமனமேயினியிங்குவாமவுனி *
திடம்பெறவைத்தமவுனஞ்சகாயந்தெரிந்துகொள்ளே. (௧௭)

நாற்றச்சடலத்தையொன்பதுவாசனடைமனையைச் *
சோற்றுப்பசையினைமும்மல்பாண்டத்தொடக்கறையை *
ஆற்றுப்பெருக்கன்னகன்மப்பெருக்கையடர்கிருமிச் *
சேற்றைத்துணையென்றநாய்க்குமுண்டோகதிசேர்வதுவே (௧௮)

பொய்யாருலகநிலையல்லகானற்புனலெனவே *
மெய்யாவறிந்தென்னவென்னுவிஃதுவிடப்படுமோ *
கையான்மவுனந்தெரித்தேகல்லானிழற்கண்ணிருந்த *
ஐயாவப்பாவென்னரசேமுக்கண்ணுடையாரமுதே. (௧௯)

ஆராவமுதெனமோனம்வகித்துக்கல்லானிழற்கீழ்ப் *
பேராதுநால்வருடன்வாழ்முக்கண்ணுடைப்பேரரசே *
நீராயுருகவுள்ளன்புதந்தேசுகநிட்டையைநீ *
தாராவிடினென்பெருமூச்சுத்தானத்தனஞ்சயனே. (௨௰)

வாயுண்டுவாழ்த்தவுமவுனஞ்செய்போதுமவுனவருட் *
டாயுண்டுசேயென்னவென்னைப்புரக்கச்சதானந்தமா *
நீயுண்டுநின்னைச்சரண்புகநானுண்டென்னெஞ்சமையா *
தீயுண்டிருந்தமெழுகல்லவோர்கதிசேர்வதற்கே. (௨௧)

கல்லாலெறிந்துங்கைவில்லாலடித்துங்கனிமதுரச் *
சொல்லாற்றுதித்துநற்பச்சிலைதூவியுந்தொண்டரினம் *
எல்லாம்பிழைத்தனரன்பற்றநானினியேதுசெய்வேன் *
கொல்லாவிரதியர்நேர்நின்றமுக்கட்குருமணியே. (௨௨)

முந்நிலைச்சுட்டொழிநெஞ்சேநின்போதமுளைக்கினையோ *
பின்னிலைச்சன்மம்பிறக்குங்கண்டாயிந்தப்பேய்த்தனமேன் *
தன்னிலையேநில்லுதானேதனிச்சச்சிதானந்தமாம் *

சொல்லான்மவுனமவுனமென்றேசொல்லிச்சொல்லிக்கொண்ட
தல்லான்மனமறப்பூரணநிட்டையிலாழ்ந்ததுண்டோ
கல்லாதமூடனினியென்செய்வேன்சசற்காரணமாம்
வல்லாரஞானமவுனசதானந்தமுராசடலே. (௨௪)

ஆரணமாகமமெல்லாமுரைத்தவருண்மவுன
காரணமூலங்கல்லாலடிக்கேயுண்டுகாணப்பெற்ருல்
பாரணங்கோடுசுழனெஞ்சமாகியபாதரச
மாரணமாய்விடுமெண்சித்திமுத்தியும்வாய்த்திடுமே. (௨௫)

சித்தமவுனிவடபான்மவுனிநந்தீபகுண்ட
சுத்தமவுனியெனுமூவருக்குந்தொழும்புசெய்து
சத்தமவுனமுதன்மூமவுனமுந்தான்படைத்தேன்
நித்தமவுனமல்லாலறியேன்மற்றைநிட்டைகளே. (௨௬)

கண்டேனினதருளவ்வருளாய்நின்றுகாண்பதெல்லாம்
உண்டேயதுவுநினதாக்கினேனுவட்டாதவின்பம்
மொண்டேபருந்தியிளைப்பாறினேனல்லமுத்திபெற்றுக்
கொண்டேன்பராபரமேயெனக்கேதுங்குறைவில்லையே. (௨௭)

மேற்கொண்டவாயுவுங்கீழ்ப்படமூலத்துவெந்தழலைச்
சூற்கொண்டமேகமெனவூமைநின்றுசொரிவதையென்
னூற்கண்டதன்றுமவுனேபதேசியளிக்கையினிப்
பாற்கண்டுகொண்டனன்மேலேயமிர்தம்பருகுவனே. (௨௮)

சொல்லாலச்சொற்பொருளாற்றெருடராப்பரஞ்சோதிநின்னை
வல்லாவர்கண்டவழிகண்டிலேன்ஜகமார்க்கத்திலும்
செல்லாதென்சிந்தைநடுவேகிடந்துதிகைத்துவிம்மி
அல்லானதும்பகலானதும்வாய்விட்டரற்றுவனே. (௨௯)

அறியாதவென்னையறிவாயுநீயென்றகம்புறமும்
பிறியாதறிவித்தபேரறிவாஞ்சுத்தப்பேரொளியோ
குறியாதவானந்தக்கோவேவமுதருள்குண்டலியோ
சிறியேன்படுந்துயர்கண்டுகல்லானிழற்சேர்ந்ததுவே. (௩௰)

எல்லாமுதவுமுனையொன்றிற்பாவனையேனுஞ்செய்து
புல்லாயினுமொருபச்சிலையாயினும்போட்டிறைஞ்சி
நில்லேனல்யோகநெறியுஞ்செயேனருணீதியொன்றுங்
கல்லேனெவ்வாறுபரமேபரகதிகாண்பதுவே. (௩௧)

ஒன்றுந்தெரிந்திடவில்லையென்னுள்ளத்தொருவவெனக்
கென்றுந்தெரிந்தவிவையவைகேளிரவும்பகலும்
குன்றுங்குழியும்வனமுமலையுங்குளாகடலும்

பழுதுண்டுபாவையர்மோகவிகாரப்பரவையிடை *
விழுகின்றபாவிக்குந்தன்றாட்புணையைவியந்தளித்தான் *
தொழுகின்றவன்பருளங்களிகூரத்துலங்குமன்றுள் *
எழுகின்றவானந்தக்கூத்தனென்கண்மணியென்னப்பனே. (௩௩)

அழுக்சார்ந்தநெஞ்சுடையேனுக்கையாநின்னருள்வழங்கின் *
இழுக்காகுமென்றெண்ணியோவிரங்காதவியல்புகண்டாய் *
முழுக்காதலாகிவிழிநீர்பெருக்கியமுக்தரொனும் *
குழுக்காணநின்றுநடமாடுந்தில்லைக்கொழுஞ்சுடரே. (௩௪)

ஆலம்படைத்தவிழியார்கண்மால்கொண்டவர்செயிந்த்ர *
சாலம்படைத்துத்தளர்ந்தனையேயென்றுந்தண்ணருள்கூர் *
கோலம்படைத்துக்கல்லாலடிக்கீழ்வைகுங்கோவுக்கன்பாம் *
காலம்படைக்கத்தவம்படையாதென்கொல்கன்னெஞ்சமே. (௩௫)

சும்மாவிருக்கச்சுகஞ்சுகமென்றுசுருதியெல்லாம் *
அம்மாநிரந்தரஞ்சொல்லவுங்கேட்டுமறிவின்றியே *
பெம்மான்மவுனிமொழியையுந்தப்பியென்பேதைமையால் *
வெம்மாயக்காட்டிலலைந்தேனந்தோவென்விதிவசமே. (௩௬)

தினமேசெலச்செல்வாழ்நாளுநீங்கச்செகத்திருள்சொற் *
பனமேயெனவெளிகண்டேயிருக்கவும்பாசபந்த *
இனமேதுணையென்றிருந்தோநமன்வரினென்செய்குவோம் *
மனமேநம்போலவுண்டோசுத்தமூடரிவ்வையகத்தே. (௩௭)

கடலெத்தனைமலையெத்தனையத்தனைகன்மமதற் *
குடலெத்தனையத்தனைகடனுண்மணலொக்குமிந்தச் *
சடலத்தைநான்விடுமுன்னேயுனைவந்துசாரவிருட் *
படலத்தைமாற்றப்படாதோநிறைந்தபராபரமே. (௩௮)

நினையுநினைவுநினையன்றியில்லைநினைக்கிடுங்கால் *
வினையென்றொருமுதனின்னையல்லாதுவிளைவதுண்டோ *
தனையுந்தெளிந்துன்னைச்சார்ந்தோர்களுள்ளச்செந்தாமரையா *
மனையும்பொன்மன்றமுநின்றாடுஞ்சோதிமணிவிளக்கே, (௩௯)

உள்ளத்தையுமிங்கெனையுநின்கையினிலொப்புவித்துங் *
கள்ளத்தைச்செய்யும்வினையால்வருந்தக்கணக்குமுண்டோ *
பள்ளத்தில்வீழும்புனல்போற்படிந்துன்பரமவின்ப *
வெள்ளத்தின்மூழ்கினர்க்கேயெளிதாந்தில்லைவித்தகனே. (௪௰)

கள்ளம்பொருந்துமடநெஞ்சமேகொடுங்காலர்வந்தால் *
உள்ளன்பவர்கட்குண்டோவில்லையேயுலகின்றவனை *
வள்ளம்பொருந்துமலரடிகாணமன்றாடுமின்ப *

தன்மயமானசுபாபத்தின்மெள்ளச்சலைப்படுங்கால் *
மின்மயமானஜகம்யாதுனைத்தென்வெளியினுய்க்க *
சின்மயமுத்திரைக்கையேமெய்யாகத்தெளிந்தநெஞ்சே *
நின்மயமென்மயமெல்லாநிறைந்தநிராமயமே. (௪௨)

ஆயுங்கலையுஞ்சுருதியுங்காண்டற்கரியவுனைத் *
தோயும்படிக்குக்கருணைசெய்வாய்சுகவான்பொருளே *
தாயும்பிதாவுந்தமருங்குருவுந்தனிமுதலும் *
நீயும்பரையுமென்றேயுணர்ந்தேனிது நிச்சயமே. (௪௩)

அல்லும்பகலுமுனக்கேயபயமபயமென்று *
சொல்லுஞ்சொலின்னந்தெரிந்ததன்றோதுதிப்பார்கண்மனக் *
கல்லுங்கரைக்குமௌனவுனதுகருணையென்பால் *
செல்லும்பொழுதல்லவோசெல்லுவேனந்தசிற்சுகத்தே. (௪௪)

எல்லாஞ்சிவன்செயலென்றறிந்தாலவனின்னருளே *
அல்லாற்புகலிடம்வேறுமுண்டோவதுவேநிலையா *
நில்லாயுன்னாற்றமியேற்குக்கதியுண்டிந்நீணிலத்தில் *
பொல்லாமயக்கத்திலாழ்ந்தாவதென்னபுகனெஞ்சமே, (௪௫)

ஒளியேயொளியினுணர்வேயுணர்வினுவகைபொங்கும் *
களியேகளிக்குங்கருத்தேகருத்தைக்கவரங்கொண்ட *
வெளியேவெளியின்விளைசுகமேசுகர்வீறுகண்டும் *
தெளியேன்றெளிந்தவரைப்போற்றிடேனென்னசெய்குவனே. (௪௬)

மறக்கின்றதன்மையிறத்தலொப்பாகுமனமதொன்றில் *
பிறக்கின்றதன்மைபிறத்தலொப்பாகுமிப்பேய்ப்பிறவி *
இறக்கின்றவெல்லைக்கரைவில்லையேயிந்தச்சன்மவல்லல் *
துறக்கின்றநாளெந்தநாள்பரமேநின்றொழும்பனுக்கே. (௪௭)

காட்டியவந்தக்கரணமுமாயையிக்காயமென்று *
சூட்டியகோலமுநானுவியங்கத்துறையிதனுள் *
நாட்டியநான்றனக்கென்றோரறிவற்றநானிவற்றைக் *
கூட்டிநின்றாட்டினையேபரமேநல்லகூத்திதுவே. (௪௮)

பொல்லாதமாமர்க்கடமனமேயெனைப்போலடுத்த *
எல்லாற்றையும்பற்றிக்கொண்டனையேயென்னைநின்மயமா *
நில்லாயருள்வெளிநீநானிற்பேனருணிட்டையொரு *
சொல்லாற்பதிந்துபரிபூரணானந்தந்தோய்குவனே. (௪௯)

வாராய்நெஞ்சேயுன்றன்றுன்மார்க்கம்யாவையும்வைத்துக்கட்டிங் *
காராயடிக்கடிசுற்றுகின்றாயுன்னவலமதிக் *
கோராயிரம்புத்திசொன்னாலுமோர்கிலையோகெடுவாய் *
பாராயுனைக்கொல்லுவேன்வெல்லுவேனருட்பாங்குகொண்டே. (௫௰)

மாதத்திலேயொருதிங்களுண்டாகிமடிவதைநின் *
போதத்திலேசற்றும்வைத்திலையேவெறும்புன்மைநெஞ்சே *
வேதத்திலேதர்க்கவாதத்திலேவிளங்காதுவிந்து *
நாதத்திலேயடங்காதந்தவான்பொருணாடிக்கொள்ளே. (௫௧)

எங்கும்வியாபித்துணர்வாயுனக்கென்னிதயத்துளே *
தங்குந்துயரந்தெரியாதவண்ணந்தடைசெய்ததார் *
அங்கங்குழைந்துள்ளுருகுமன்பாளர்க்கணைகடந்து *
பொங்குங்கருணைக்கடலேசம்பூரணபோதத்தனே. (௫௨)

வையகமாதர்சுகத்தையும்பொன்னையுமாயைமல *
மெய்யையுமெய்யென்றுநின்னடியார்தம்விவேகத்தையும் *
ஐயமில்வீட்டையுமெய்ந்நூலையும்பொய்யதாகவெண்ணும் *
பொய்யர்தந்நட்பைவிடுவதென்றோபரிபூரணமே (௫௩)

அளியுங்கனியொத்தருவினையாலெனுந்தயர்வுறுவேன் *
தெளியும்படிக்கிப்பரிபாககாலமுஞ்சித்திக்குமோ *
ஒளியுங்கருணையுமாறுதவின்பமுமோருருவாய் *
வெளிவந்தடியர்களிக்கநின்றாடும்விழுப்பொருளே. (௫௪)

அடையார்புரஞ்செற்றதேவேநின்பொன்னடிக்கன்புசற்றும் *
படையாதவென்னைப்படைத்திந்தப்பாரிற்படர்ந்தவினைத் *
தடையாற்றளையிட்டுநெஞ்சம்புண்ணாகத்தளரவைத்தாய் *
உடையாயுடையபடியன்றியான்செய்ததொன்றிலையே. (௫௫)

ஆடுங்கறங்குந்திரிகையும்போலவலைந்தலைந்து *
காடுங்கரையுந்திரிவதல்லானின்கருணைவந்து *
கூடும்படிக்குத்தவமுயலாதகொடியனெமன் *
தேடும்பொழுதென்னசெய்வார்பரானந்தசிற்சுடரே. (௫௬)

கற்றும்பலபலகேள்விகள்கேட்டுங்கறங்கெனவே *
சுற்றுந்தொழில்கற்றுச்சிற்றின்பத்தாடுசுழலினென்னும் *
குற்றங்குறைந்துகுணமேவிடுமன்பர்கூட்டத்தையே *
முற்றுந்துணையெனநம்புகண்டாய்சுத்தமூடநெஞ்சே. (௫௭)

நீயெனநானென்னவேறில்லையென்னுநினைவருளத் *
தாயெனமோனகுருவாகிவந்துதடுத்தடிமைச் *
சேயெனக்காத்தனையேபரமேநின்றிருவருளுக் *
கேயென்னசெய்யுங்கைம்மாறுவரதோசுத்தவேழையனே. (௫௮)

ஆத்திரம்வந்தவர்போலலையாமலரோகதிட *
காத்திரந்தந்தென்னையேயன்னைபோலுங்கருணைவைத்திம் *
மாத்திரமுன்னின்றுணர்த்தினையேமவுனாயினிநான் *
சாத்திரஞ்சொன்னபடியியமாதியுஞ்சாதிப்பனே. (௫௯)

பாயப்புலி-முற்றுப்பெற்றது. ஆ. ௬௫௯

வெண்பா.

உடல்பொய்யுறவாயினுண்மையுறவாகக் *
கடவாரார்தண்ணருளேகண்டாய் - திடமுடனே *
உற்றுப்பார்மோனவொருசொல்லேயுண்மைநன்றாப் *
பற்றிப்பார்மற்றவெல்லாம்பாழ். (௧)

பாராதிபூதமெல்லாம்பார்க்குங்காலப்பரத்தின் *
சீராகநிற்குந்திறங்கண்டாய் - நேராக *
நிற்குந்திருவருளினெஞ்சேயானிற்பதல்லால் *
கற்குநெறியாதினிமேற்காண். (௨)

மெய்யானதன்மைவிரங்கினல்யார்க்கேனும் *
பொய்யானதன்மைபொருந்துமோ - ஐயாவே *
மன்னுநிராசையின்னம்வந்ததல்லவுன்னடிமை *
என்னுநிலையெய்துமாறென். (௩)

அறியாமைமேலிட்டறிவின்றிநிற்கும் *
குறியேற்கறிவென்றகோலம் - வறிதேயாம் *
நீயுணர்த்தநானுணருநேசத்தாலோவறிவென் *
றேயெனக்கோர்நாமமிட்டதே. (௪)

ஏதுக்குச்சும்மாவிருமனமேயென்றுனக்குப் *
போதித்தவுண்மையெங்கேபோகவிட்டாய் - வாதுக்கு *
வந்தெதிர்த்தமல்லனைப்போல்வாதாடினையேயுன் *
புத்தியென்னபோதமென்னபோ. (௫)

ஜசமனைத்தும்பொய்யெனவேதானுணர்ந்தாற்றுக்க *
சுகமனைத்தும்பொய்யன்றோசோரா - திகபரத்தும் *
விட்டுப்பிரியாதமேலானவத்துவிதக் *
கட்டுக்குளாவதென்றோகாண். (௬)

சற்கண்டோதேனோகனிரசமோபாலோவென் *
சொற்கண்டாதேதெனநான்சொல்லுவேன் - விற்கண்ட *
வானமதிகாணமௌனிமௌனத்தளித்த *
தானமதிலூறுமமிர்தம். (௭)

கேட்டலுடன்சிந்தித்தல்கேடிலாமெய்த்தெளிவால் *
வாட்டமருவுற்பவநோய்மாறுமோ-நாட்டமுற்று *
மெய்யானநிட்டையினைமேவினர்கட்கன்றோதான் *
பொய்யாம்பிறப்பிறப்புப்போம். (௮)

மாயாஜகத்தைமதியாதார்மண்முதலா *
ஏயானதத்துவத்திலெய்துவரோ - நேயானு *
பூதிநிலைநிற்கப்பொருந்துவர்களென்னவர்தம் *
நீதியையேயோர்மனமேநீ. (௯)

இகமுழுதும்பொய்யெனவேயேய்ந்துணர்ந்தாலாங்கே *
மிகவரரவந்தவருண்மெய்யே - அகநெகிழப் *
பாரீரொருசொற்படியேயனுபவத்தைச் *
சேரீரதுவேதிறம். (௰)

ஆரணங்களாகமங்கள்யாவுமேயானந்த *
பூரணமேயுண்மைப்பொருளென்னும் - காரணத்தை *
ஓராயோவுள்ளுள்ளேயுற்றுணர்ந்தவ்வுண்மையினைப் *
பாராயோநெஞ்சேபகர். (௰க)

நேராயம்மௌனநிலைநில்லாமல்வாய்பேசி *
ஆராயலைந்தீர்நீராகெடுவீர் - தேரீர் *
திரையுந்திரையுநதிச்சென்னியனைநாவால் *
கரையுங்கரையுமனக்கல். (௰௨)

அற்பமனமேயகிலவாழ்வத்தனையும் *
சொற்பனங்கண்டாயுண்மைசொன்னேனுன் - கற்பனையொன் *
றில்லாவிடத்தேயெனைச்சும்மாவைத்திருக்கக் *
கல்லாய்நீதானோர்கவி. (௰௩)

ஏதுந்திருவருளினிச்சையாமென்றென்றெப் *
போதும்பொருந்தும்புனிதர்பால் - தீதுநெறி *
செல்லுமோசெல்லாதேசெல்லுமிடமின்பமலால் *
சொல்லுமோவேதத்தொனி. (௰௪)

கல்லேறுஞ்சில்லேறுங்கட்டியேறும்போலச் *
சொல்லேறப்பாழ்த்ததுளைச்செவிகொண் - டல்லேறும் *
நெஞ்சமெனநிற்கவைத்தாய்நீதியோதற்பரமே *
வஞ்சனல்லேனீயேமதி. (௰௫)

அப்பொருளுமான்மாவுமாரணநூல்சொன்னபடி *
தப்பிலாச்சித்தொன்றுஞ்சாதியினால் - எப்படியும் *
தேரிற்றுவிதஞ்சிவாகமமேசொல்லுநிட்டை *
ஆருமிடத்தத்துவிதமாம். (௰௬)

வேதமுதலாய்விளங்குஞ்சிவவடிவாம் *
போதநிலையிற்பொருந்தாமல் - ஏதமிகும் *
மோகாதிபல்லலிலேமூழ்கினையேநெஞ்சேயித் *

நோக்கற்கரிதான நுண்ணியவான்மோன நிலை *
தாக்கற்குபாயஞ்சமைத்தபிரான் - காக்குமுயிர் *
அத்தனைக்குநானடிமையாதலினால்யானெனதென் *
றித்தனைக்கும்பேசவிடமில். (௰௮)

ஒன்றுமறநில்லென்றுணர்த்தியநம்மோனகுரு *
தன்றுணைத்தாணீடூழிதான்வாழ்க - வென்றென்றே *
திக்கனைத்துங்கைகுவிக்குஞ்சின்மயராந்தன்மையர்க்கே *
கைக்குவருமின்பக்கனி. (௰௯)

மனத்தாலும்வாக்காலுமன்னவொண்ணாமோன *
இனத்தாரோநல்வினைத்தார் - கனத்தபுகழ் *
கொண்டவருமன்னவரோகூறரியமுத்திநெறி *
கண்டவருமன்னவரோகாண். (௨௰)

கண்ணொளியேமோனக்கரும்பேசவலையறப் *
பண்ணொளிக்குமுள்ளொளியாம்பான்மையினை - நண்ணிடவுன் *
சித்தமிரங்கிலதென்சித்தந்தெளியாவே *
றித்தனைக்குமாதரவுமில். (௨௧)

அறியாமைசாரினதுவாயறிவாம் *
நெறியானபோததுவாய்நிற்கும் - குறியால் *
சதசத்தருளுணர்த்தத்தானுணராநின்ற *
விதமுற்றறிவெனும்பேர்மெய். (௨௨)

குருலிங்கசங்கமமாக்கொண்டதிருமேனி *
கருவொன்றுமேனிநம்பாற்காட்டா - தருளென்று *
கண்டவர்க்கேயானந்தங்கண்டுகொளலாமலது *
கொண்டவர்க்கிங்கென்னகிடைக்கும். (௨௩)

புலியினதளுடையான்பூதப்படையான் *
பலியிரந்துமெல்லாம்பரிப்பான் - மலிபுனல்சேர் *
பொன்முடியான்முக்கட்புனிதன்சரண்புகுந்தோர்க் *
கென்முடியாதேதுமுளதே (௨௪)

சொல்லுக்கடங்காச்சுகப்பொருளைநாமெனவே *
அல்லும்பகலுமரற்றுவதென் - நல்லசிவ *
ஞானமயம்பெற்றோர்களுமில்லையென்பரந்தோ *
மோனமயமானமுறை. (௨௫)

ஐயாவருணகிரியப்பாவுனைப்போல *
மெய்யாகவோர்சொல்விளம்பினர்யார் - வையகத்தோர் *
சாற்றரிதென்றேசற்றோர்தன்னையாய்முக்கணொத்தை *
நாற்றிசைக்குங்கைகாட்டினான். (௨௬)

காதற்றுப்போனமுறிகட்டிவைத்தாலாவதுண்டோ *
தீதற்றகாயமுமச்செய்கையே - போதமாய் *
நிற்பரல்லாவிச்சகத்தினேரார்கணேரிடினுந் *
தற்பரமாக்கண்டிருப்பார்தாம். (௨௭)

வெள்ளங்குலாவுசடைவெள்ளக்கருணையினான் *
கள்ளங்குலாவுவஞ்சக்கள்ளனேன் - உள்ளத்தில் *
இல்லனென்றாலன்னவன்றானெங்கும்வியாபகத்தான் *
அல்லனென்றுஞ்சொல்லவழக்காம் (௨௮)

தத்துவப்பேயோடேதலையடித்துக்கொள்ளாமல் *
வைத்தவருண்மௌனவள்ளலையே - நித்தமன்பு *
பூணக்கருதுநெஞ்சுபோற்றக்கரமெழும்பும் *
காணத்துடிக்குமிருகண். (௨௯)

தொல்லைவினைக்கீடாய்ச்சுழல்கின்றநானொருவன் *
எல்லையிலாநின்கருணையெய்துவனோ - வல்லவனா *
மோனகுருவேமுழுதினையுந்தானுணர்ந்த *
ஞானகுருவேநவில். (௩௰)

மூன்றுகண்ணுமுத்தொழிலாமும்முதலாமூவுலகும் *
தோன்றக்கருணைபொழிதோன்றலே - ஈன்றவனை *
தன்னைப்போலன்புதழைத்தோயொருதெய்வம் *
உன்னைப்போலுண்டோவுரை. (௩௧)

நேசிக்குஞ்சிந்தைநினைவுக்குளுன்னைவைத்துப் *
பூசிக்குந்தானிறைந்துபூரணமா - யோசித்து *
நின்றல்லான்மோனாநிருவிகற்பநிட்டைநிலை *
என்றுவருமோவறியேனே. (௩௨)

அறிவிலறியாமையற்றறிவாய்நின்று *
பிறிவறவானந்தமயம்பெற்றுக் - குறியவிழ்ந்தால் *
அன்றைக்குடல்வேண்டேனையாவிவ்வாக்கையையே *
என்றைக்கும்வேண்டுவனேயான். (௩௩)

உடலைப்பழித்திங்குணவுங்கொடாமல் *
விடவிடவேநாடுவரோமெய்யைப் - படபடென *
வேண்டுவேனித்தவுடன்மெய்யுணராப்பொய்யனான் *
ஆண்டநீதானேயறி. (௩௪)

அறியாயோவென்னையுநீயாண்டநீசுத்த *
வெறியாய்மயங்கவுமேன்விட்டாய் - நெறிமயங்கிக் *
குன்றுஞ்செடியுங்குறுகுமோஐயாவே *
கன்றுகெட்டாற்றாயருகேகாண் (௩௫)

ஏதுக்குடற்சுமைகொண்டேனிருந்தேனையனே *
ஆதிக்கமோனவருட்டாயே - சோதியா *
மன்னநிருவிகற்பவானந்தநிட்டையிலே *
பின்னமறநில்லாதபின். (௩௬)

பின்னுமுடற்சுமையாப்பேசும்வழக்கதனால் *
என்னபலனாடுற்றிருந்தோமே - அன்னதனால் *
ஆனந்தந்தானேதானாகுமெம்மையனே *
ஏனிந்தத்துன்பமினி. (௩௭)

துன்பக்கடலிற்றுளைந்ததெல்லாந்தீர்ந்ததே *
இன்பக்கடலிவிருமென்ன - அன்பிற் *
கரைந்துகரைந்துருகிக்கண்ணருவிகாட்ட *
விரைந்துவருமானந்தமே. (௩௮)

கரைந்துகரைந்துருகிக்கண்ணீராறாக *
விரைந்தேநிருவிகற்பமெய்த - நிரந்தரமும் *
நின்னையேசிந்திக்கநீகொடுத்தாய்மோனாநான் *
என்னைமுழுதுங்கொடுத்தேனே. (௩௯)

அல்லும்பகலும்பேரன்புடனேதானிருந்தால் *
கல்லுமுருகாதோகன்னெஞ்சே - பொல்லாத *
தப்புவழியேனினைந்தாய்சந்ததமுநீயிறந்த *
வெப்பிலேயானந்தமே. (௪௰)

கொடுத்தேனேயென்னைக்கொடுத்தவுடனின்பம் *
[illegible]த்தேனேநீடூழிவாழ்ந்தே - அடுத்தேனே *
பெற்றேனேபெற்றுப்பிழைத்தேனேசன்மவல்லல் *
இற்றேனேயேழையடியேன். (௪௧)

பெற்றாரும்பிறவாமைபேசாமையாயிருக்கக் *
கற்றாருமெனவுரைக்கக்காரியமேன் - சற்றேனும் *
நீக்கற்றவின்பநிலைபொருந்தியேசற்று *
வாக்கற்றாற்பேசுமோவாய். (௪௨)

காலன்றனையுதைத்தான்காமன்றனையெரித்தான் *
பாலன்பசிக்கிரங்கிப்பாற்கடலை - ஞாலமெச்சப் *
பின்னேநடக்கவிட்டான்பேரருளைநாடாதார்க் *
கென்னேநடக்கையினி. (௪௩)

விண்ணருவிமேன்மேல்விளங்குவபோலேயிரண்டு *
கண்ணருவிவெள்ளமொடுகைகூப்பித் - தண்ணமிர்த *
வெள்ளமேயானந்தவெற்பேயெனத்தொழுவோர் *

பிள்ளைமதிச்செஞ்சடையான்பேசாப்பெருமையினான் *
கள்ளவிழும்பூங்கொன்றைக்கண்ணியான் - உள்ளபடி *
கல்லாலின்கீழிருந்துகற்பித்தானோர்வசனம் *
எல்லாருமீடேறவே. (௪௫)

புலனைந்துந்தானேபொரமயங்கிச்சிந்தை *
அலமந்துழலுமடிமை - நலமிகுந்த *
சித்தானமோனசிவனே நின்சேவடிக்கே *
பித்தானாலுண்டோபிறப்பு. (௪௬)

நிறைகுடந்தானீர்கொளுமோநிச்சயமாமோன *
முறையுணர்ந்தார்யாதைமுயல்வார் - பிறையணிந்த *
மிக்ககைலாயமலைவித்தகனேவேதியனே *
செக்கரணிமேனியனேசெப்பு. (௪௭)

துங்கமழுமானுடையாய்சூலப்படையுடையாய் *
திங்களணிசெஞ்சடையாய்சேவுடையாய்-மங்கையொரு *
பாலுடையாய்செங்கட்பணியாயென்சென்னியின்மேல் *
காலுடையாய்நீயேகதி. (௪௮)

இனியகருணைமுகிலெம்பிரான்முக்கட் *
கனியமிர்தவாரியின்பக்கட்டி-தனிமுதல்வன் *
நித்தன்பரமனிமலனிறைவாய்நிறைந்த *
சுத்தனமக்கென்றுந்துணை. (௪௯)

நீதியாய்க்கல்லாலினிழலின்கீழேயிருந்து *
போதியாவுண்மையெல்லாம்போதித்தான்-ஏதில் *
சனகாதியாயதவத்தோர்க்குஞான *
தினகரனாமௌனசிவன். (௫௰)

தேகச்செயலறுனுஞ்சிந்தையுடனேகுழையில் *
போகநிலைஞானிகளுக்கொப்புவதோ-மோகநிலை *
அல்லிலேவாழ்வாரோவப்பனேநீயற்ற *
எல்லையிலேசும்மாவிரு. (௫௧)

சும்மாவிருக்கச்சுகமுதயமாகுமே *
இம்மாயாயோகமினியேனடா-தம்மறிவின் *
சுட்டாலேயாகுமோசொல்லவேண்டாங்கன்ம *
நிட்டாசிறுபிள்ளாய்நீ. (௫௨)

நீயற்றவத்நிலையேநிட்டையதினீயிலையோ *
வாயற்றவனேமயங்காதே - போயற் *
றிருந்தாலுநீபோகாயென்றுமுள்ளாய்சும்மா *
[illegible] (௫௩)

வாவாவென்றின்பம்வரவழைக்குங்கண்ணீரோ
டாவாவென்றேயழுதவப்பனே - நீவாடா
எல்லாநமக்கெனவேயீந்தனையேயிந்தபடி
நில்லாயதுவேநிலை. (௫௪)

நில்லாப்பொருளைநினையாதேநின்னையுள்ளோர்
சொல்லாப்பொருட்டிரளைச்சொல்லாதே - கல்லாத
சிந்தைகுழைந்துசுகஞ்சேரக்குருவருளால்
வந்தவழிநல்லவழி. (௫௫)

வழியிதென்றுமல்லாவழியிதென்றுஞ்சொல்லில்
பழிபழியாநல்லருளாற்பார்த்தோர் - மொழியுனக்கே
ஏற்றிருக்கச்சொன்னவன்றேயெங்கும்பெருவெளியாம்
பார்த்தவிடமெல்லாநீபார். (௫௬)

பாரனைத்தும்பொய்யெனவேபட்டினத்துப்பிள்ளையைப்போல்
ஆருந்துறக்கையரிதரிது - நேரே
மனத்துறவுமப்படியேமாணவிவற்றில்
உனக்கிசைந்தவாறென்றேயோர். (௫௭)

ஓராமலேயொருகாலுன்னுமலுள்ளொளியைப்
பாராமலுள்ளபடிப்பார்த்திருந்தால் - வாராதோ
பத்துத்திசையும்பரந்தெழுந்தானந்தவெள்ளந்
தத்திக்கரைபுரண்டுதான். (௫௮)

தானானதன்மைவந்துதாக்கினாலவ்விடத்தே
வானாதிமாயைவழங்காதோ - ஞானாகேள்
உன்னுள்ளேதோன்றாவுறவாகின்றதென
என்னுள்ளேயென்றுமிரு. (௫௯)

என்னையுன்னையின்னதிதுவென்னாமனிற்குநிலை
தன்னையருளென்றதருணத்தில் - அன்னைபெற்ற
பிள்ளைக்குஞ்சொல்லாதபெற்றிகண்டாயையனே
உள்ளத்தினுள்ளேயுணர் (௬௰)

சொன்னவர்தாநிட்டைதொகுத்திராநிட்டையிலே
மன்னினவர்போதியார்மாமௌனன் - தன்னுள்
இருப்பாகக்கைகாட்டிமிக்கவடநீழல்
இருப்பானிருவிகற்பத்தே (௬௧)

இந்தநிருவிகற்பத்தெந்தையிருக்கநிட்டை
சிந்தைநீசேராய்செகமனைத்தும - வந்தொடர்ப்
பாடுகெடவன்றோவோர்பாத்திரத்துக்காடலல்லால்
ஆடுவதேனாட்டுமவன். (௬௨)

அவனேபரமுமவனேகுருவும் *
அவனேயகிலமனைத்தும் - அவனேதாம் *
ஆனவரோசொன்னலவரோகுருவெனக்கு *
நானவனுய்நிற்பதெந்தநாள். (௬௩)

நாளவங்கள்போகாமனுடோறுநந்தமையே *
ஆளவந்தார்தாளின்கீழாட்புகுந்தாய் - மீளவுன்னைக் *
காட்டாமலிற்குங்கருத்தறிந்தானெஞ்சேயுன் *
னுட்டானனையமில்லையால். (௬௪)

யான்றானெனலறவேயின்பநிட்டையென்றருணைக் *
கோன்றானுரைத்தமொழிகொள்ளாயோ - தோன்றி *
இழுக்கடித்தாய்நெஞ்சேநீயென்கலைகள்சோர *
அழுக்கடிக்கும்வண்ணார்போலாய். (௬௫)

எங்குஞ்சிவமேயிரண்டற்றுநிற்கினெஞ்சே *
தங்குஞ்சுகநீசலியாதே - அங்கிங்கென் *
றெண்ணாதேபாழிலிறந்துபிறந்துழலப் *
பண்ணாதேயானுன்பரம். (௬௬)

மெய்யைப்பொய்யென்றிடவுமெய்யனையாப்பொய்ந்நெஞ்சே *
பொய்யைத்தான்மெய்யெனவும்போகுமோ - ஐயமறத் *
தன்மயத்தைமெய்யெனவேசார்ந்தனையேலானந்தம் *
என்மயமுநின்மயமுமே. (௬௭)

பூங்காவனநிழலும்புத்தமுதுஞ்சாந்தபதம் *
வாங்காதவானந்தமாமழையும் - நீங்காவாம் *
சொல்லிறந்துமாண்டவர்போற்றுமௌனபூமியினுள் *
இல்லையெனநின்றவிடம். (௬௮)

இடம்வானநல்லபொருளின்பமெனக்கேவல் *
அடங்காக்கருவியனைத்தும் - உடனுதவ *
மந்தாரதாருவெனவந்துமவுனகுரு *
தந்தானேர்சொற்கொண்டுதான். (௬௯)

தானந்தவஞானஞ்சாற்றரியசித்திமுத்தி *
யானவையெல்லாந்தாமேயாகுமே - மோனகுரு *
சொன்னவொருசொல்லாற்சுகமாயிருமனமே *
இன்னமயக்கமுனக்கேன். (௭௰)

உன்னையுடலையுறுபொருளைத்தாவெனவே *
என்னையடிமைக்கிருத்தினன் - சொன்னவொரு *
சொல்லைமறவாமற்றோய்ந்தானெஞ்சேயுன்னால் *

உனக்குமெனக்குமுறவில்லையெனத்தேர்ந்து *
நினைக்கவரிதானவின்பநிட்டை - தனைக்கொடுத்தே *
ஆசான்மவுனியளித்தானெஞ்சேயுனையோர் *
காசாமதியேனான்காண். (எஉ)

ஆனந்தமோனகுருவாமெனவேயென்னறிவின் *
மோனந்தனக்கிசையமுற்றியதால் - தேனுந்து *
சொல்லெல்லாமோனந்தொழிலாதியுமோனம் *
எல்லாநன்மோனவடிவே. (எங)

எல்லாமேமோனநிறைவெய்துதலாலெவ்விடத்தும் *
நல்லார்கண்மோனநிலைநாடினர் - பொல்லாத *
நானெனவிங்கொன்றைநடுவேமுளைக்கவிட்டிங் *
கேனலைந்தேன்மோனகுருவே. (எச)

மோனகுருவளித்தமோனமேயானந்த *
ஞானவருளுமதுநானுமது - வானாதி *
நின்றநிலையுமதுநெஞ்சப்பிறப்புமது *
என்றறிந்தேனானந்தமே. (எரு)

அறிந்தவறிவெல்லாமறிவன்றியில்லை *
மறிந்தமனமற்றமவுனஞ் - செறிந்திடவே *
நாட்டினானானந்தநாட்டிற்குடிவாழ்க்கை *
கூட்டினான்மோனகுரு. (எசு)

குருவாகித்தன்னருளைக்கூறுமுன்னேமோனா *
உருநீடுயிர்பொருளுமொக்கத் - தருதியென *
வாங்கினையேவேறுமுன்னைவைத்திடவுங்கேட்டிடவும் *
ஈங்கொருவருண்டோவினி (எஎ)

இனியகருப்புவட்டையென்னாவிவிட்டான் *
நனிபிரதமாறுதுநானுந் - தனிபிருக்கப் *
பெற்றிலேன்மோனம்பிறந்தவன்றேமோனமல்லால் *
கற்றிலேனேதுங்கதி. (எஅ)

ஏதுக்குஞ்சும்மாவிருநீயெனவுரைத்த *
சூதுக்கோதோன்றாத்துணையாகிப் - போதித்து *
நின்றதற்கோவென்னையாநீக்கிப்பிரியாமல் *
கொன்றதற்கோயேசாக்குறி. (எகூ)

குறியுங்குணமுமறக்கூடாதகூட்டத் *
தறிவறிவாய்நின்றுவிடவாங்கே - பிரிவறவுஞ் *
சும்மாவிருத்திசுகங்கொடுத்தமோனநின்பால *

நான்றானெனுமயக்கந்நண்ணுங்காலென்றனை *
வான்றானெனநிறையமாட்டாய்நீ- ஊன்றாமல் *
வைத்தமவுனத்தாலேமாயைமனமிறந்து *
துய்த்துவிடுஞானசுகம். (அக)

ஞானநெறிக்கேற்றகுருநண்ணரியசித்திமுத்தி *
தானந்தருமந்தவழைத்தகுரு - மானமொடு *
தாயெனவும்வந்தென்னைத்தந்தகுருவென்சிந்தை *
கோயிலெனவாழுங்குரு (அஉ)

சித்துஞ்சடமுஞ்சிவத்தைவிடவில்லையென்ற *
நித்தன்பரமகுருநேசத்தாற் - சுத்தநிலை *
பெற்றோமேநெஞ்சேபெரும்பிறவிசாராமல் *
கற்றோமேமோனக்கரு. (அ௩)

உடல்பொய்யுறவு முற்றுப்பெற்றது. ஆ ருசஉ.

ஏசற்றவந்நிலை.

கொச்சகக்கலிப்பா.

ஏசற்றவந்நிலையேயெந்தைபரிபூரணமாய் *
மாசற்றவானந்தவாரிவழங்கிடுமே *
ஊசற்சுழல்போலுலகநெறிவாதனையால் *
பாசத்துட்செல்லாதேபல்காலும்பாழ்நெஞ்சே. (க)

பாழாகியண்டப்பரப்பையெல்லாம்வாய்மடுத்தும் *
ஆழாழியின்பத்தழுந்தப்படியாயோ *
தாழாயோவெந்தையருட்டாட்கீழ்நெஞ்சேயெனைப்போல் *
வாழாதுவாழ்ந்தழியாவண்ணமிருப்பாயே. (உ)

இருப்பாயிருந்திடப்பேரின்பவெளிக்கேநமக்குக் *
குருப்பார்வையல்லாமற்கூடக்கிடைத்திடுமோ *
அருட்பாய்நமக்காகவாரவந்தார்பொன்னடிக்கீழ் *
மருட்பேயர்போலிருக்கவாகண்டாய்வஞ்சநெஞ்சே. (௩)

வஞ்சமோபண்டையுளவாதனையானீயலைந்து *
கொஞ்சமுற்றாயுன்னைக்குறைசொல்லவாயுமுண்டோ *
அஞ்சலஞ்சலென்றிரங்குமானந்தமாகடற்கீழ் *
நெஞ்சமேயென்போலநீயமர்ந்தவாராயோ (௪)

வாராவரவாய்வடநிழற்கீழ்வீற்றிருந்த *
பூராயநம்மைப்புலப்படுத்தவேண்டியன்றோ *
வோராயோநெஞ்சேயுருகாயோவுற்றிருந்து *
பாராயோவவ்வுருவைப்பார்க்கநிறைவாய்விடுமே. (௫)

வாயாதோவின்பவெள்ளம்வந்துன்வழியாசப் *
பாயாதோநானும்பயிராய்ப்பிழையேனோ *
ஓயாமலுன்னியுருகுநெஞ்சேயந்நிலைக்கே *
தாயானமோனனருள்சந்திக்கவந்திடுமே. (௬)

வந்தவரவைமரந்துலகாய்வாழ்ந்துகன்ம *
பந்தமுறவுன்னைப்படிப்பிக்கச்சற்றவர்யார் *
இந்தமதியேனுனக்கிங்கென்மதிகேளென்றுவே *
சந்ததநெஞ்சேபரத்திற்சாரினின்பமுண்டாமே. (௭)

இன்பமயமாயுலகமெல்லாம்பிழைப்பதற்குன் *
அன்புநிலையென்யாரதுவுநினையன்றியுண்டோ *
உன்பூலத்தையோரினருட்கொப்பாவாய்நெஞ்சேநீ *
தென்புலத்தாரோடிருந்துசெய்பூசைகொண்டருளே. (௮)

அருளேயோராலயமாவானந்தமாயிருந்த *
பொருளோடியானிருக்கப்போயொளித்தநெஞ்சேநீ *
மருடீர்முயற்கோடோவான்மலரோபேய்த்தேரோ *
இருடீரநீயுறைந்ததெவ்விடமோகாணேனே. (௯)

எவ்விடத்தும்பூரணமாமெந்தைபிரான்றண்ணருளே *
அவ்விடத்தேயுன்னைநெஞ்சேயாராயிற்கண்டிலனே *
அவ்விடததுமாயையிலேமாண்டனையோவவ்விடமுஞ் *
செவ்விடமேநீயுஞ்செனனமற்றுவாழியவே. (௰)

ஏசற்றவந்நிலை - முற்றுப்பெற்றது. ஆ௫௱௫௨.

காடுங்கரையும்.

காடுங்கரையுமனக்குரங்குகால்விட்டோடவதன்பிறகே *
ஓடுந்தொழிலாற்பயனுளதோவொன்றாய்ப்பலவாயுயிர்க்குயிரா *
யாடுங்கருணைப்பரஞ்சோதியருளைப்பெறுதற்கன்புநிலை *
தேடும்பருவமிதுகண்டீர்சேரவாருஞ்சகத்தீரே. (௧)

சைவசமயமெச்சமயஞ்சமயாதீதப்பழம்பொருளைக் *
கைவந்திடவேமன்றுள்வெளிகாட்டுமிந்தக்கருத்தைவிட்டுப் *
பொய்வந்துழலுஞ்சமயநெறிபுகுதவேண்டாமுத்திதருந் *
தெய்வசபையைக்காண்பதற்குச்சேரவாருஞ்சகத்தீரே. (௨)

காசமுறவுகலந்துண்ணக்கண்டீரகண்டாகாரசிவ *
போகமெனும்பேரின்பவெள்ளம்பொங்கித்ததும்பிப்பூரணமா *
யேகவுருவாய்க்கிடக்குதையோவின்புற்றிடநாமினியெடுத்த *
தேகம்விழுமுன்புசிப்பதற்குச்சேரவாருஞ்சகத்திரே. (௩)

காடுங்கரையும்-முற்றுப்பெற்றது. ௲௫௱௫௫.

எடுத்ததேகம்.

கட்டளைக்கலிப்பா.

எடுத்ததேகம்பொருளாவிமூன்றுநீ *
யெனக்கொன்றில்லையெனமோனநன்னெறி *
கொடுத்தபோதுகொடுத்ததன்றேயினுங் *
குறைநானென்றுகூத்தாடமாயையை *
விடுத்தவாறுங்கண்ணீரொடுகம்பலை *
விலகுமாறுமென்வேட்கைப்ரவாகத்தைத் *
தடுத்தவாறும்புகலாய்சிரகிரித் *
தாயுமானதயாபரமூர்த்தியே. (௧)

நோயும்வெங்கலிப்பேயுந்தொடரநின் *
னூலிற்சொன்னமுறையியமாதிநான் *
றேயும்வண்ணமெனைக்காக்குங்காவலுந் *
தொழும்புகொள்ளுஞ்சுவாமியுநீகண்டாய் *
ஓயுஞ்சன்மமினியஞ்சலஞ்சலென் *
றுலகங்கண்டுதொழவோருருவிலே *
தாயுந்தந்தையுமானேய்சிரகிரித் *
தாயுமானதயாபரமூர்த்தியே (௨)

எடுத்ததேகம்-முற்றுப்பெற்றது. ௫௱௫௭.

முகமெலாம்.

முகமெலாங்கணீர்முத்தரும்பிடச்செங்கைமுகிழ்ப்ப *
அகமெலாங்குழைந்தானந்தமாகநல்லறிஞர் *
இகமெலாந்தவமிழைக்கின்றரொன்செய்கோவேழை *
ஜகமெலாம்பெறநல்லருளுதரமாச்சமைந்தோய். (௧)

முகமெலாம்- முற்றுப்பெற்றது. ௲௫௱௫௮.

திடமுறவே.

கொச்சகக்கலிப்பா.

திடமுறவேநின்னருளைச்சேர்த்தென்னைக்காத்தாளக் *
கடனுனக்கென்றெண்ணிநின்னைக்கைகுவித்தோனானன்றே *
அடைவுகெட்டபாழ்மாயையாழியிலேயின்னமல்லல் *
படமுடியாதென்னுவிப்பற்றேபராபரமே. (௧)

ஆராமைகண்டிங்கருட்குருவாய்நீயொருகால் *
வாராயோவந்துவருத்தமெல்லாந்தீராயோ *
பூராயமாகவருட்பூரணத்திலண்டமுதல் *
பாராதிவைத்தபதியேபராபரமே. (௨)

வாழாதுவாழவுனைவந்தடைந்தோரெல்லாரும் *
ஆழாழியென்னவருளானாரழுக்காற்றே *
பேழாயெனவுலகமேசுமினிநாமொருவன் *
பாழாகாவாறுமுகம்பார்நீபராபரமே. (௩)

உள்ளத்தினுள்ளேயொளித்தென்னையாட்டுகின்ற *
கள்ளக்கருணையையான்காணுந்தரமாமோ *
வெள்ளத்தைமாற்றிவிடக்குண்பார்நஞ்சூட்டும் *
பள்ளத்தின்மீன்போற்பதைத்தேன்பராபரமே. (௪)

வாவிக்கமலமலர்வண்டாய்த்துவண்டுதுவண் *
டாவிக்குணின்றவுனக்கன்புவைத்தார்ச்சஞ்சலென்பாய் *
பூவிற்கும்வான்கடையிற்புல்விற்போர்போலவொன்றைப் *
பாவிக்கமாட்டேன்பதியேபராபரமே. (௫)

விண்ணுறுவெற்பின்விழுந்தாங்கௌமாரிபிற் *
கண்ணுறுபாய்ச்சிடுமென்காதல்வெள்ளங்கண்டிலையோ *
தண்ணுறுசாந்தபதந்தற்பரமேநால்வேதப் *
பண்ணுறுமின்பப்பதியேபராபரமே. (௬)

கூடியநின்சீரடியார்கூட்டமென்றோவாய்க்குமென *
வாடியவென்னெஞ்சமுகவாட்டமுநீகண்டிலையோ *
தேடியநின்சீரருளைத்திக்கனைத்துங்கைகுவித்துப் *
பாடியநான்கண்டாய்பதியேபராபரமே. (௭)

நெஞ்சத்தினூடேநினைவாய்நினைவூடும் *
அஞ்சலெனவாழுமெனதாவித்துணைநீயே *
சஞ்சலமாற்றினையினிமேற்றாய்க்குபசாரம்புகன்று *
[illegible]ஞ்சரிக்கநா[illegible]பதியேபராபரமே. (௮)

புத்திநெறியாகவுனைப்போற்றிப்பலகாலும் *
முத்திநெறிவேண்டாதமூடனேனுங்கெடுவேன் *
சித்திநெறிக்கென்கடவேன்சீரடியார்க்கேவல்செயும் *
பத்திநெறிக்கேனுமுகம்பார்நீபராபரமே. (௯)

கண்டறியேன்கேட்டறியேன்காட்டுநினையோவிதயங் *
கொண்டறியேன்முத்திகுறிக்குந்தரமுமுண்டோ *
தொண்டறியாப்பேதைமையேன்சொல்லேனின்றன்மையெல்லாம் *
பண்டறிவாய்நீயேபகராய்ப்பராபரமே. (௰)

திடமுறவே முற்றுப்பெற்றது ஆ௲௬௮

தன்னை.

கொச்சகக்கலிப்பா.

தன்னையறியத்தனக்கருளாற்றானுணர்த்தும் *
அன்னைப்பொருளெனவேவாழாமற்பாழ்நெஞ்சே *
பொன்னைப்புவியைமடப்பூவையரைமெய்யெனவே *
என்னைக்கவர்ந்திழுத்திட்டென்னபலன்கண்டாயே. (௧)

தன்னை - முற்றுப்பெற்றது. ஆ௲௬௯.

ஆக்குவை.

ஆக்குவைமாயையபாவுநொடிதனிலதனைமாள *
நீக்குவைநீக்கமில்லாநினைப்பொடுமறப்புமாற்றிப் *
போக்கொடுவரவுமின்றிப்புனிதநல்லருளானந்தந் *
தாக்கவுஞ்செய்வாயன்றேசச்சிதானந்தவாழ்வே (௧)

ஆக்குவை - முற்றுப்பெற்றது ஆ௲௭௰.

கற்புறுசிந்தை.

கற்புறுசிந்தைமாதர்க்கணவனையன்றிவேறோர் *
இற்புறத்தவனைநாடார்யாங்களுமின்பவாழ்வுந் *
தற்பொறியாகநல்குந்தலைவநின்னலதோர்தெய்வம் *
பொற்புறக்கருதோங்கண்டாய்பூரணானந்தவாழ்வே (௧)

முருந்திளநகையார்பாரமுலைமுகந்தழுவிச்செவ்வாய்
விருந்தமிர்தெனவருந்திவெறியாட்டுக்காளாய்நாளும்
இருந்தலோகாயுதப்பேரினத்தனாயிருந்தவேழை
பொருந்தவுங்கதிமேலுண்டோபூரணானந்தவாழ்வே. (௨)

தீதெலாமொன்றும்வன்மைசெறிந்திருட்படலம்போர்த்த
பாதகசிந்தைபெற்றபதகனுன்பாதநீழல்
ஆதரவடையவுள்ளன்பருள்கிலையாயின்மற்றியார்
போதனைசெய்யவல்லார்பூரணானந்தவாழ்வே. (௩)

நாதனைநாதாதீதநண்பனைநடுவாய்நின்ற
நீதனைக்கலந்துநிற்கநெஞ்சமேநீவாவென்றால்
வாதனைபெருக்கியென்னைவசஞ்செய்துமனந்துன்மார்க்க
போதனைசெய்தனன்றோபூரணானந்தவாழ்வே. (௪)

எண்ணியவெண்ணமெல்லாமிறப்புமேற்பிறப்புக்காசை
பண்ணியென்னறிவையெல்லாம்பாழாக்கியெனைப்பாழாக்கும்
திண்ணியவினையைக்கொன்றுசிறியனையுய்யக்கொண்டால்
புண்ணியநினக்கேயன்றோபூரணானந்தவாழ்வே. (௫)

பத்திநீபத்திக்கானபலனுநீபலவாச்சொல்லும்
சித்திநீசித்தர்சித்தித்திறமுநீதிறமார்மோன
முத்திநீமுத்திக்கானமுதலுநீமுதன்மையான
புத்திநீயெனக்கொன்றுண்டோபூரணானந்தவாழ்வே. (௬)

தாயினுமினியநின்னைச்சரணெனவடைந்தநாயேன்
பேயினுங்கடையனாகிப்பிதற்றுதல்செய்தனன்றோ
தீயிடைமெழுகாய்நொந்தேன்றெளிவிலேன்வீணேகாலம்
போயினதாற்றுகில்லேன்பூரணானந்தவாழ்வே. (௭)

கற்புறுசிந்தை - முற்றுப்பெற்றது. ஆக ௫௭௭.

மலைவளர்காதலி.

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கண் மித்திரர்கள்
    பக்கமுண் டெக்கா லமும்
பசுவுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
    படனொணுந் திமிர மணுகாக்
சதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதுருண்டு
    காயசித் திகளு முண்டு

கறையுண்ட கண்டர்பா லம்மைநின் றுளிற் *
  கருத்தொன்று முண்டாகு மேல் *
நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர *
  ஞானவா னந்த வொளியே *
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே *
  நானெனு மகந்தை தீர்த்தென் *
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே *
  மதுசூத னன்றங் கையே *
வளாராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை *
  வளர்காத லிப்பெ ணுமையே. (௪)

தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே *
  சிற்றிடையி லேநடையி லே *
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே *
  சிறுபிறை நுதற் கீற்றிலே *
பொட்டிலே யவர்கட்டு பட்டிலே புனைசந்த *
  பொடியிலே யடியி லேமேற் *
பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே *
  புத்திதனை நுழைய விட்டு *
நெட்டிலே யலையாம லறிவிலே பொறையிலே *
  நின்னடியர் கூட்டத் திலே *
நிலைபெற்ற வன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான *
  ஞேயத்தி லேயு னிருதாள் *
மட்டிலே மனதுசெல நினதருளு மருள்வையோ *
  வரமருவு தேவை யரசே *
வளாராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை *
  வளர்காத லிப்பெ ணுமையே. (௨)

பூதமுத லாகவே நாதபரி யந்தமும் *
  பொய்யென் றெனைக்காட் டியென் *
போதத்தி னடுவாகி யடிமீறு மில்லாத *
  போதபூ ரணவெ ளிக்குள் *
ஏதுமற நில்லென் றுபாயமா வைத்துநினை *
  வெல்லாஞ்செய் வல்ல சித்தாம் *
இன்பவுரு வைத்தந்த வன்னையே நின்னையே *
  எளியேன் மறந்துய் வனோ *
வேதமுத லானநல் லாகமத் தன்மையை *
  விளக்குமுட் கண்ணி லார்க்கும் *
மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும் *
  வீறுவா தம் புகலும்வாய் *

வாதநோ யாளர்க்கு மெட்டாத முக்கணுடை
மாமருந் துக்க மிர்தமே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெ ணுமையே. (௩)

மிடியிட்ட வாழ்க்கையா லுப்பிட்ட கலமெனவு
மெய்யெலா முள்ளு டைந்து
வீறிட்ட செல்வர்தந் தலைவாயில் வாசமாய்
வேதனைக ளுறவே தனும்
துடியிட்ட வெவ்வினையை யேவினுன் பாவிநான்
தொடரிட்ட தொழில்க ளெல்லாம்
துண்டிட்ட சாண்கும்பி யின்பொருட் டாயதுன்
தொண்டர்பணி செய்வ தென்றோ
அடியிட்ட செந்தமிழி னருமையிட் டாருரில்
அரிவையோர் பரவை வாயில்
அம்மட்டு மடியிட்டு நடைநடந் தருளடிகள்
அடியிது முடியி தென
வடியிட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே
வரமருவு தேவை யரசே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெ ணுமையே. (௪)

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றி ருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சத்தி யென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச் சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் சங்கைபுகழ்
வரமருவு தேவை யரசே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெ ணுமையே. (௫)

யாகமோ பெறவுனைப் பாடவறி யேன்மல
பரிபாகம் வரவு மனதில்

பண்புமோ சற்றுமில்லை நியமமோ செய்திடப் *
பாவியேன் பாப ரூப *
தேகமோ திடமில்லை ஞானமோ கனவிலுஞ் *
சிந்தியேன் பேரின்ப மோ. *
சேரவென் றுற்கள்ள மனதுமோ மெத்தவுஞ் *
சிந்திக்கு தென்செய்கு வேன் *
மோகமோ மதமோகு ரோதமோ லோபமோ *
முற்றுமாற் சரிய மோதான் *
முறியிட் டெனைக்கொள்ளு நிதியமோ தேடவெனின் *
மூசுவரி வண்டு போல *
மாகமோ டவும்வல்ல னெனையாள வல்லையோ *
வளமருவு தேவை யரசே *
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை *
வளர்காத லிப்பெ ணுமையே. (௬)

தூளேறு தூசிபோல் வினையேறு மெய்யெனும் *
தொக்கினுட் சிக்கி நாளும் *
சுழலேறு காற்றினிடை யழலேறு பஞ்செனச் *
சூறையிட் டறிவை யெல்லாம் *
நாளேற நாளேற வார்த்திக மெனுங்கூற்றின் *
நட்பேற வுள்ளு டைந்து *
நயனங்க ளற்றதோ ரேறு போலவே *
நானிலந் தனிலலைய வோ *
வேளேறு தந்தியைக் கனதந்தி யுடன்வென்று *
விரையேறு மாலை சூடி *
விண்ணேறு மேகங்கள் வெற்பேறி மறைவுற *
வெருட்டிய கருங்கூந் தலாய் *
வாளேறு கண்ணியே விடையேறு மெம்பிரான் *
மனதுக் கிசைந்த மயிலே *
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை *
வளர்காத லிப்பெ ணுமையே. (௭)

பூதமொடு பழகிவள ரிந்திரிய மாம்பேய்கள் *
புத்திமுத லான பேய்கள் *
போராடு கோபாதி ராக்ஷசப் பேய்களென் *
போதத்தை யூட ழித்து *
வேதனை வளர்த்திடச் சதுர்வேத வஞ்சன் *
விதித்தானி வல்ல லெல்லாம் *
வீழும் படிக்குனது மௌனமந் த்ராதிக்ய *
வித்தையை வியந்தருள்வை யோ *

நாதவடிவாகிய மஹாமந்த்ர ரூபியே *
நாதாந்த வெட்ட வெளியே *
நற்சமய மானபயிர் தழையவரு மேகமே *
ஞானவா னந்த மயிலே *
வாதமிடு பரசமயம் யாவுக்கு முணர்வரிய *
மகிமைபெறு பெரிய பொருளே *
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை *
வளர்காத லிப்பெ ணுமையே. (அ)

மலைவளர்காதலி - முற்றுப்பெற்றது. ஆ௳அ௫.

அகிலாண்டநாயகி - சந்தவிருத்தம்.

வட்ட மிட்டொளிர் பிராண வாயுவெனு *
நிகள மோடுகம னஞ்செயும் *
மனமெ னும்பெரிய மத்த யானையையென் *
வசம டக்கிடின்மு மண்டலத் *
திட்டமுற் றவள ராஜ யோகமிவன் *
யோகமென் றறிஞர் புகழவே *
ஏழை யேனுலகி னீடு வாழ்வனினி *
யிங்கி தற்குமநு மானமோ *
பட்டவர்த்தனர் பராவு சக்ரதர *
பாக்ய மானசுப யோகமும் *
பார காவிய கவித்வ நான்மறை *
பராய ணஞ்செய்மதி யூகமும் *
அட்ட சித்தியுந லன்பருக் கருள *
விருது கட்டியபொ னன்னமே *
அண்டகோடிபுகழ் காவை வாழுமகி *
லாண்ட நாயகியெ னம்மையே. (க)

அகிலாண்டநாயகிசந்தவிருத்தம் - முற்றுப்பெற்றது. ஆ௳அ௬.

பெரியநாயகிவிருத்தம்.

காற்றைப் பிடித்துமட் சரகத் தடைத்தபடி *
கன்மப் புனற்கு ளூறும் *
கடைகெட்ட நவவாயில் பெற்றபசு மட்கலக் *
காயத்து ளெனையி ருத்திச் *

சோற்றைச் சுமக்கிநீ பத்தித்து வைக்கத்
துருத்திக்குண் மதுவென் னவே
துள்ளித் துடித்தென்ன பேறுபெற் றேனருட்
டோயநீ பாய்ச்சல் செய்து
நாற்றைப் பதித்ததென ஞானமாம் பயிரதனை
நாட்டிப் புலப்பட் டியும்
நமனென தீப்பூடு மனுகாமன் முன்னின்று
நாடுசிவ போக மான
பேற்றைப் பகுந்தருளி யெனையாள வல்லையோ
பெரியவகி லாண்ட கோடி
பெற்றநாயகிபெரிய கயிலைமா நகர்மருவு
பெரியநா யகியம் மையே. (௧)

பெரியநாயகிவிருத்தம்-முற்றுப்பெற்றது. ஆ ௫௱௮௭.

தந்தைதாய்.

தந்தைதாய்மகவுமனைவாழ்க்கையாக்கை
ஜகமனைத்துமௌனியருடழைத்தபோதே
இந்திரஜாலங்கனவுகானனீரா
யிருந்ததுவேயிவ்வியற்கையென்னேயென்னே. (௧)

என்னைநான்கொடுக்கவொருப்பட்டகாலம்
இயாதிருந்தென்னைவைபோயென்னென்னைநீங்கா
அன்னைபோலருள்பொழியுங்கருணைவாரி
ஆனந்தப்பெருமுகிலேயரசேசொல்லாய். (௨)

அரசேநின்றிருக்கருணையல்லாதொன்றை
அறியாதசிறியேனைதனுன்முத்திக்
கரைசேரும்படிக்குனருட்புணையைக்கூட்டும்
கைப்பிடியேகடைப்பிடியாக்கருத்துட்கொண்டேன். (௩)

கண்டேனிங்கென்னையுமென்றனையுநீங்காக்
கருணையுநின்றன்னையுநான்கண்டேன்கண்டேன்
விண்டேனென்றெனைப்புறம்பாத்தள்ளவேண்டாம்
விண்டதுநின்னருட்களிப்பின்வியப்பாலன்றே (௪)

ஒவென்றசுத்தவெளியொன்றேநின்றிங்
குபினாயெல்லாம்வம்மினெனவுவட்டாவின்பத்
தேவென்றநீகலந்துகலந்துமுத்தி
சேர்த்தனையேற்குறைவாமோஜெகவிலாசம் (௫)

ஜெகத்தையெல்லாமணுவளவுஞ்சிதருவண்ணம் *
　　சேர்த்தணுவில்வைப்பையணுத்திரளையெல்லாம் *
மகத்துவமாப்பிரமாண்டமாகச்செய்யும் *
　　வல்லவாநீநினைந்தவாறேயெல்லாம். (௬)

சொல்லாலேவாய்துடிப்பதல்லாநெஞ்சம் *
　　துடித்திருகணீரருவிசொரியத்தேம்பிக் *
கல்லாலேயிருந்தநெஞ்சுங்கல்லான்முக்கட் *
　　கனியேநெக்குருகிடவுங்காண்பேன்கொல்லோ. (௭)

தந்தைதாய்-முற்றுப்பெற்றது. ஆ௵ ௫௱௯௪.

—0*0*0*0—

பெற்றவட்கே.

பெற்றவட்கேதெரியுமந்தவருத்தம்பிள்ளை *
　　பெருப்பேதையறியாளோபேரானந்தம் *
உறறவர்க்கேகண்ணீர்கம்பலையுண்டாகும் *
　　உருதவரோகன்னெஞ்சமுடையராவார். (௧)

ஆவாவென்றழுதுதொழுங்கையராகி *
　　அப்பனேயானந்தவடிகளேநீ *
வாவாவென்றவர்க்கருளுங்கருணையெந்தாய் *
　　வன்னெஞ்சர்க்கிரங்குவதெவ்வாறுநீயே. (௨)

நீயேயிங்கெளியேற்குந்தாகமோக *
　　நினைவூடேநின்றுணர்த்திநிகழ்த்தலாலே *
பேயேற்குந்தனக்கெனவோரன்புமுண்டோ *
　　பெம்மானேயின்னமன்புபெருகப்பாராய். (௩)

பாராயோவென்றுயரமெல்லாமையா *
　　பகருமுன்னேதெரியாதோபாவியேன்முன் *
வாராயோவின்னமொருகாலானும் *
　　மலர்க்காலென்சென்னிமிசைவைத்திடாயோ. (௪)

வைத்திடுங்காலைப்பிடித்துக்கண்ணின்மார்பில் *
　　வைத்தணைத்துக்கொண்டுகையால்வளைத்துக்கட்டிச் *
சித்தமிசைப்புகவிருத்திப்பிடித்துக்கொண்டு *
　　தியக்கமறவின்பசுகஞ்சேர்வதென்றோ. (௫)

சேராமற்சிற்றினத்தைப்பிரித்தெந்நாளும் *
　　திருவடிப்பேரினத்துடனேசேரவண்ணம் *
ஆராகநானலைந்தேனரசேநீதான் *
　　அறிந்திருந்து மாயையிலேனழுந்தவைத்தாய். (௬)

வைத்தபொருளுடலாவிமூன்றுநின்கை *
வசமெனவேயானீகொடுக்கவாங்கிக்கொண்டு *
சித்தமிசைப்புகுந்ததுதான்மெய்யோபொய்யோ *
சிறியேற்கிங்குரைவுரையாய்திகையாவண்ணம். (எ)

திகையாதோவெந்நாளும்பேரானந்தத் *
தெள்ளமுதமுதவாமற்றிவலைகாட்டி *
வகையாகவலக்கழித்தாயுண்டுடுத்து *
வாழ்ந்தேனுனிரண்டுகான்மாடுபோலே. (அ)

மாடுமக்கள்சிற்றிடையார்செம்பொனுடை *
வைத்தகனதனமேடைமாடகூடம் *
விடுமென்பாற்றொடர்ச்சியோவிடைவிடாமல் *
மிக்கதிவிடன்றேவிளங்கல்வேண்டும். (கூ)

விளங்கவெனக்குள்ளுள்ளேவிளங்காநின்ற *
வேதகமேபோதகமேவிமலவாழ்வே *
களங்கரகிதப்பொருளேயென்னைநீங்காக் *
கண்ணுதலேநாதாந்தக்காக்ஷிப்பேறே. (ய)

நாதமேநாதாந்தவெளியேசுத்த *
ஞாதுருவேஞானமேஞேயமேநல் *
வேதமேவேதமுடிவானமோன *
வித்தேயிங்கென்னையினிவிட்டிடாதே. (யக)

பெற்றவட்கேமுற்றுப்பெற்றது-ஆகசாடு.

கல்லாலின்.

கல்லாலினிழறனிலொருநால்வர்க்கும் *
கடவுணீயுணர்த்துவதுங்கைக்காட்டென்றால் *
சொல்லாலேசொலப்படுமோசொல்லுந்தன்மை *
துரும்புபற்றிக்கடல்கடக்குந்துணிபேயன்றே. (க)

அன்றேவாமோவெனவுஞ்சமயகோடி *
அத்தனையும்வெவ்வேறாயரற்றநேரே *
நின்றேயேநினைப்பெறுமாறெவ்வாறங்கே *
நின்னருள்கொண்டறிவதல்லானெறிவேறுண்டோ. (உ)

நெறிபார்க்கினின்னையன்றியகிலம்வேறோ ✱
நிலநீர்தீக்கால்வானுநீயலாத ✱
குறியாதுமில்லையென்றால்யாங்கள்வேறோ ✱
கோதையொருகூறுடையாய்கூறாய்கூறாய். (௩)

கூறாயவைம்பூதச்சுமையைத்தாங்கிக் ✱
குணமிலாமனமெனும்பேய்க்குரங்கின்பின்னே ✱
மாறாகசவலையுடன்சுழலவென்னை ✱
வைத்தனையேபரமேநின்மகிமைநன்றே. (௪)

நன்றெனவுந்தீதெனவுமெனக்கிங்குண்டோ ✱
நானாகிநீயிருந்தநியாயஞ்சற்றே ✱
இன்றெனக்குவெளியானாலெல்லாம்வல்ல ✱
இறைவாநின்னடியருடனிருந்துவாழ்வேன். (௫)

வாழ்வெனவுந்தாழ்வெனவுமிரண்டாப்பேசும் ✱
வையகத்தார்கற்பனையாமயக்கமான ✱
பாழ்வலையைக்கிழித்துதறிச்செயல்போய்வாழப் ✱
பரமேநின்னானந்தப்பார்வையெங்கே (௬)

எங்கேயெங்கேயருளென்றெனமயிரந்தான் ✱
ஏழையிவனெனவுமெண்ணியிச்சைகூரும் ✱
அங்கேயெங்கேயெளிவந்தென்னையாண்ட ✱
ஆரமுதேயுனைக்காண்பானலந்துபோனேன். (௭)

போனநாட்கிரங்குவதேதொழிலாவிங்ஙன் ✱
பொருந்துநாரைத்தனையும்போக்கினேனென் ✱
ஞானநாயகனேநின்மோனஞான ✱
நாட்டமுற்றுவாழ்ந்திருக்குநாளெந்நாளோ. (௮)

நாட்பட்டகமலமென்னவிதயமேவு ✱
நறுந்தேனேதுன்மார்க்கநாரிமார்கண் ✱
வாட்பட்டகாயமிந்தக்காயமென்றோ ✱
வன்கூற்றுமுயிர்பிடிக்கவருமந்நீதி (௯)

நீதியெங்கேமறையெங்கேமண்விண்ணெங்கே ✱
நித்தியராமவர்களெங்கேநெறிதப்பாத ✱
சாதியெங்கேயொழுக்கமெங்கேயாங்கமெங்கே ✱
தற்பரநீபின்னுமொன்றைச்சமைப்பதானால். (௰)

ஆனாலும்யானெனதிங்கற்றவெல்லை ✱
அதுபோதுமதுகதிதானல்லவென்று ✱
போனாலும்பான்போவனல்லான்மோனப் ✱
புண்ணியனேவேறுமொருபொருளைநாடேன். (௰௧)

பொருளேநின்பூரணமேவிட்டகாலம்
 போக்குவரவுண்டோதற்போதமுண்டோ
இருடானுண்டோவல்லால்வெளிதானுண்டோ
 இன்பமுண்டோதுன்பமுண்டோயாமங்குண்டோ. (௰௨)

உண்டோநீபடைக்கவுயிர்த்திரளிலென்போல்
 ஒருபாவிதேகாதியுகைம்பொய்பாக்
கண்டேபமெள்ளளவுக்துறவுமின்றிக்
 காசினிக்குளலைந்தவரார்காட்டாய்தேவே. (௰௩)

தேவரெல்லாந்தொழச்சிவந்தசெந்தாண்முக்கட்
 செங்கரும்பேமொழிக்குமொழிதித்திப்பாக
மூவர்சொலுந்தமிழ்கேட்குந்திருச்செவிக்கே
 மூடனேன்புலம்பியசொன்முற்றுமோதான். (௰௪)

முற்றுமோவெனக்கினியானந்தவாழ்வு
 மூதறிவுக்கினியாய்நின்முளரித்தாளிற்
பற்றுமோசற்றுமில்லையைபோவையோ
 பாவிபடுங்கட்கலக்கம்பார்த்திலாயோ. (௰௫)

பார்த்தனவெல்லாமழியுமதனுற்சுட்டிப்
 பாராதேபார்த்திருக்கப்பரமேமோன
மூர்த்திவடிவாயுணர்த்துங்கைக்காட்டுண்மை
 முற்றியெனதல்வல்வினைமுடிவதென்றோ. (௰௬)

என்றுன்னைநியன்றுளம்யாமென்பதென்னை
 இதுநிற்கவெல்லாந்காமில்லையென்றே
பொன்றிடச்செய்வல்லவனீயெமைப்படைக்கும்
 பொற்புடையாயென்னினதுபொருந்திடாதே. (௰௭)

பொருந்துஜகமனைத்தினையும்பொய்பொய்யென்று
 புகனறபடிமெய்யென்றேபோதரூபத்
திருந்தபடியென்றிருப்பதன்றேயன்றோ
 எம்பெருமான்யான்கவலையெய்தாககாலம். (௰௮)

காலமேகாலமொருமூன்றுங்காட்டும்
 காரணமேகாரணகாரியங்களில்லாக்
கோலமேயெனைவாவாவென்றுகூவிக்
 குறைவறநின்னருள்கொடுத்தாற்குறைவோசொல்லாய் (௰௯)

சொல்லாயதகுதியெல்லாங்கடந்துநின்ற
 சொரூபானந்தச்சுடரேதொண்டனேனைக்
கல்லாகப்படைத்தாலுமெத்தநன்றே
 சரணமடைந்த[illegible]

கலங்காதநெஞ்சுடையஞானதீரர் *
கடவுளுனைக்காணவேகாயமாதி *
புலங்காணார்நானொருவன்ஞானம்பேசி *
பொய்க்கூடுகாத்ததென்னபுதுமைகண்டாய். (௨௧)

கண்டிலையோயான்படும்பாடெல்லாமூன்று *
கண்ணிருந்துந்தெரியாதோகசிந்துள்ளரன்பார் *
தொண்டரடித்தொண்டனன்றோகருணைநீங்காச் *
சுத்தபரிபூரணமாஞ்சோதிநாதா. (௨௨)

சோதியாயிருட்பிழம்பைச்சூறையாடும் *
தூவெளியேயெனைத்தொடர்ந்துதொடர்ந்தெந்நாளும் *
வாதியாய்நின்றவினைப்பகையைவென்ற *
வாழ்வேயிங்குனைப்பிரிந்துமயங்குகின்றேன். (௨௩)

மயக்குறுமென்மனமணுகாப்பாதைகாட்டி *
வல்வினையைப்பறித்தனையேவாழ்வேநானென் *
செயக்கடவேன்செயலெல்லாநினதேயென்று *
செங்கைகுவிப்பேனல்லாற்செயல்வேறில்லை. (௨௪)

வேறுபடுஞ்சமயமெல்லாம்பகுத்துபார்க்கில் *
விளங்குபரம்பொருளேநின்விளையாட்டல்லால் *
மாறுபடுங்கருத்தில்லைமுடிவின்மோன *
வாரிதியினதித்திரள்போல்வயங்கிற்றம்மா. (௨௫)

அம்மாவிததிசயந்தானன்றோவன்றோ *
அகண்டநிலையாக்கியென்னையறிவாம்வண்ணம் *
சும்மாவேயிருக்கவைத்தாயையாவாங்கே *
சுகமயமாயிருப்பதல்லாற்சொல்வானென்னே. (௨௬)

என்னேநான்பிறந்துழலவந்தவாறிங் *
கெனக்கென்னவோர்செயலிலையேயேழையேன்பால் *
முன்னேசெய்வினையெனவும்பின்னேவந்து *
மூளும்வினையெனவும்வரமுறையேனெந்தாய். (௨௭)

தாயானதண்ணருளைநிரம்பவைத்துத் *
தமியேனைப்புரவாமற்றள்ளித்தள்ளிப் *
பேயானதென்கொலையாவேகதேசம் *
பூரணத்துக்குண்டோதான்புகலல்வேண்டும் (௨௮)

புகலரியநின்விளையாட்டென்னேயெந்தாய் *
புன்மையறிவுடையவென்னைப்பொருளாப்பண்ணி *
இசல்விளைக்குமலமாயைகன்மத்தாடே *
[illegible] (௨௯)

இரக்கமொடுபொறைநிதலறிவாசாரம் *
இல்லேனனல்லோர்களீட்டங்கண்டால் *
கரக்குமியல்புடையேன்பாழ்நெஞ்சமெந்தாய் *
கருந்தாதோவல்லுருக்கோகரியகல்லோ. (௩0)

கல்லாவின்-முற்றுப்பெற்றது ஆ-௬௱௩௫.

பராபரக்கண்ணி.

சீராருந்தெய்வத்திருவருளாம்பூமிமுதல் *
பாராதியாண்டபதியேபராபரமே (௧)

கண்ணாரக்கண்டோர்கருப்பொருள்காணமலருள் *
விண்ணூடிருந்தவின்பவெற்பேபராபரமே (௨)

சிந்தித்தவெல்லாமென்சிந்தையறிந்தேயுதவ *
வந்தகருணைமழையேபராபரமே. (௩)

ஆராவமுதேயரசேயானந்தவெள்ளப் *
பேராறேமோனப்பெருக்கேபராபரமே. (௪)

ஆறிவாறொன்னவனந்தமறையோலமிடும் *
பேரறிவேயின்பப்பெருக்கேபராபரமே. (௫)

உடைாபிறந்தவன்பருவரத்தோங்கொளியாயோங்கிக் *
கரையிறந்தவின்பக்கடலேபராபரமே (௬)

எத்திக்குந்தானாகியென்னிதயத்தேயூறித் *
தித்திக்குமானந்தத்தேனேபராபரமே (௭)

திக்கொடுகீழ்மேலுந்திருவருளாம்பொற்பறிந்தோர் *
கைக்குள்வரர்நெல்லிக்கனியேபராபரமே. (௮)

முத்தேபவளமேமொய்த்தபசும்பொற்சுடரோ *
சித்தேயென்னுள்ளத்தெளிவேபராபரமே. (௯)

கண்ணேகருத்தேயென்கற்பகமேகண்ணிறைந்த *
விண்ணேயானந்தவியப்பேபராபரமே. (௰)

வாக்காய்மனதாய்மனவாக்கிறந்தவர்பால் *
தாக்காதேதாக்குந்தனியேபராபரமே, (௰௧)

பார்த்தவிடமெல்லாம்பரவெளியாய்த்தோன்றவொரு ❊
வார்த்தைசொல்லவந்தமனுவேபராபரமே. (௰௨)

வானந்தமன்னினந்தம்வைத்துவைத்துப்பார்க்கவெனக் ❊
கானந்தந்தந்தவரசேபராபரமே. (௰௩)

அன்பைப்பெருக்கியெனதாருயிரைக்காக்கவந்த ❊
இன்பப்பெருக்கேயிறையேபராபரமே (௰௪)

வானமெல்லாங்கொண்டமௌனமணிப்பொட்டகத்துக் ❊
கானபணியானவணியேபராபரமே (௰௫)

ஓடுமிருநிதியுமொன்றாகக்கண்டவர்கள் ❊
நாடும்பொருளானநட்பேபராபரமே (௰௬)

சித்தநினைவுஞ்செயுஞ்செயலுநீயெனவாழ் ❊
உத்தமர்கட்கானவுறவேபராபரமே. (௰௭)

போதாந்தப்புண்ணியர்கள்போற்றிஜயபோற்றியெனும் ❊
வேதாந்தவீட்டில்விளக்கேபராபரமே. (௰௮)

முத்தாந்தவீதிமுளரிதொழுமன்பருக்கே ❊
சித்தாந்தவீதிவருந்தேவேபராபரமே. (௰௯)

ஊனந்தருமுடலமென்னதியானென்பதற ❊
ஆனந்தம்வேண்டியலந்தேன்பராபரமே. (௨௰)

என்புருகிநெஞ்சமிளகிக்கரைந்துகரைந் ❊
தன்புருவாய்நிற்கவலந்தேன்பராபரமே. (௨௧)

சுத்தவறிவாய்ச்சுகம்பொருந்தினல்லாலென் ❊
சித்தந்தெளியாதென்செய்வேன்பராபரமே. (௨௨)

மாறாவனுபூதிவாய்க்கினல்லாலென்மயக்கம் ❊
தேறாதென்செய்வேன்சிவமேபராபரமே (௨௩)

தாகமறிந்தின்பநிட்டைதாராயேலாகெடுவேன் ❊
தேகம்விழுந்திடினென்செய்வேன்பராபரமே. (௨௪)

அப்பாவென்னெய்ப்பில்வைப்பேயாற்றுகிலேன்போற்றியென்று ❊
செப்புவதல்லால்வேறென்செய்வேன்பராபரமே. (௨௫)

உற்றறியுமென்னறிவுமுட்கருவிபோற்சவிமாண் ❊
டற்றுமின்பத்திலேயையாபராபரமே. (௨௬)

சொல்லாலடங்காச்சுகக்கடலில்வாய்மடுக்கில் ❊
அல்லாலென்றாகமறுமோபராபரமே. (௨௭)

பாராயோவென்னைமுகம்பார்த்தொருகாலென்கவலை *
தீராயோவாய்திறந்துசெப்பாய்பராபரமே (௨௮)

ஓயாதோவென்கவலையுள்ளேயானந்தவெள்ளம் *
பாயாதோவையாபகராய்பராபரமே (௨௯)

ஓகோவுனைப்பிரிந்தாருள்ளங்கனலில்வைத்த *
பாகோமெழுகோபகராய்பராபரமே (௩௰)

கூர்த்தவறிவத்தனையுங்கொள்ளைகொடுத்துன்னருளைப் *
பார்த்தவனாவென்னைமுகம்பாராய்பராபரமே (௩௧)

கடலமுதேதேனேயென்கண்ணேகவலைப் *
படமுடியாதென்னைமுகம்பார்நீபராபரமே. (௩௨)

உள்ளமறிவாயுழப்பறிவாய்நானேழை *
தள்ளிவிடின்மெத்தத்தவிப்பேன்பராபரமே. (௩௩)

கன்றினுக்குச்சேதாகனிந்திரங்கல்போலவெனக் *
கென்றிரங்குவாய்கருணையெந்தாய்பராபரமே. (௩௪)

எண்ணாதவெண்ணமெலாமெண்ணியெண்ணியேழைநெஞ்சம் *
புண்ணாகச்செய்ததினிப்போதும்பராபரமே (௩௫)

ஆழித்துரும்பெனவேயங்குமிங்குமுன்னடிமை *
பாழிற்றிரிவதென்னபாவம்பராபரமே (௩௬)

கற்றவறிவாலுனைநான்கண்டவன்போற்கூத்தாடில் *
குற்றமென்றென்னெஞ்சேகொதிக்கும்பராபரமே. (௩௭)

ஐயோவுனைக்காண்பானாசைகொண்டதத்தனையும் *
பொய்யோவெளியாப்புகலாய்பராபரமே. (௩௮)

துன்பக்கண்ணீரிற்றுளைந்தேற்குன்னானந்த *
இன்பக்கண்ணீர்வருவதெந்நாள்பராபரமே. (௩௯)

வஞ்சனையும்பொய்யுமுள்ளேவைத்தழுக்காறுயுரறும் *
நெஞ்சனுக்குமுண்டோநெறிதான்பராபரமே. (௪௰)

பாசம்போய்நின்றவர்போற்பாராட்டியானாலும் *
மோசம்போனேனுன்முறையோபராபரமே. (௪௧)

நன்றறியேன்தீதறியேனானென்றுநின்றவனார் *
என்றறியேனானேழையென்னேபராபரமே. (௪௨)

இன்றுபுதிதன்றேயெளியேன்படுந்துயரம் *
ஒன்றுமறியாபோவுளாயாய்பராபரமே. (௪௩)

எத்தனைதான்ஜன்மமெடுத்தெத்தனைநான்பட்டதுயர் *
அத்தனையுநீயறிந்ததன்றோபராபரமே. (௪௪)

இந்தநாட்சற்றுமிரங்கிலையேற்காலன்வரும் *
அந்தநாட்காக்கவல்லாரார்காண்பராபரமே. (௪௫)

உற்றுற்றுநாடியுளமருண்டபாவியைநீ *
சற்றிரங்கியாளத்தகாதோபராபரமே (௪௬)

எள்ளளவுநின்னைவிடவில்லாவெனைமயக்கில் *
தள்ளுதலாலென்னபலன்சாற்றாய்பராபரமே. (௪௭)

பாடிப்படித்துலகிற்பாராட்டிநிற்பதற்கோ *
தேடியெனையடிமைசேர்த்தாய்பராபரமே. (௪௮)

சொன்னத்தைச்சொல்வதல்லாற்சொல்லறவென்சொல்லிறுதிக் *
கென்னத்தைச்சொல்வேனெளியேன்பராபரமே (௪௯)

சொல்லும்பொருளுமற்றுச்சும்மாவிருப்பதற்கே *
அல்லும்பகலுமெனக்காசைபராபரமே. (௫௰)

நேசநிருவிகற்பநிட்டையல்லாலுன்னடிமைக் *
காசையுண்டோநீயறியாதன்றேபராபரமே. (௫௧)

துச்சனெனவேண்டாமித்தொல்லுலகிலல்லல்கண்டால் *
அச்சமிகவுடையேனையாபராபரமே. (௫௨)

கண்ணாவாரேனுமுனைக்கைகுவியாராயினந்த *
மண்ணாவார்நட்பைமதியேன்பராபரமே. (௫௩)

கொல்லாவிரதங்குவலயமெல்லாமோங்க *
எல்லார்க்குஞ்சொல்லுவதென்னிச்சைபராபரமே. (௫௪)

எத்தாற்பிழைப்பேனோவெந்தையேநின்னருட்கே *
பித்தானேன்மெத்தவுநான்பேதைபராபரமே. (௫௫)

வாயினாற்பேசாமௌனத்தைவைத்திருந்தும் *
தாயிலார்போலானேன்றளர்ந்தேன்பராபரமே. (௫௬)

அன்னைபிலாச்சேய்போலலக்கணுற்றேன்கண்ணார *
என்னகத்திற்றாய்போலிருக்கும்பராபரமே (௫௭)

உற்றுநினைக்கிற்றுயரமுள்ளுள்ளேசெந்தீயாய்ப் *
பற்றநொந்தேனென்னைமுகம்பார்நீபராபரமே. (௫௮)

பொய்யனிவனென்றுமெள்ளப்போதிப்பார்சொற்கேட்டுக் *
கைவிடவும்வேண்டாமென்கண்ணேபராபரமே. (௫௯)

எண்ணமறிந்தேயிளைப்பறிந்தேபேழையுய்யும் *
வண்ணந்திருக்கருணைவையாய்ப்பராபரமே. (௬௰)

நாட்டாதேயென்னையொன்றினாட்டியிதமகிதம் *
காட்டாதேயெல்லாநீகண்டாய்ப்பராபரமே. (௬௰௧)

உன்னைநினைந்துன்னிறைவனுள்ளேயுலாவுமென்னை *
அன்னைவயிற்றின்னமடைக்காதேபராபரமே. (௬௰௨)

பரமுனக்கென்றெண்ணும்பழக்கமேமாறா *
வரமெனக்குத்தந்தருளென்வாழ்வேபராபரமே. (௬௰௩)

வந்தித்துநின்னைமறவாக்கடனாகச் *
சிந்திக்கநின்னதருள்செய்யாய்ப்பராபரமே. (௬௰௪)

எவ்வுயிருமென்னுயிர்போலெண்ணியிரங்கவுநின் *
தெய்வவருட்கருணைசெய்யாய்ப்பராபரமே. (௬௰௫)

வெட்டவெளிப்பேதையன்யான்வேறுகபடொன்றறியேன் *
சிட்டருடன்சேர்ந்ததெண்டன்பராபரமே. (௬௰௬)

இரவுபகலற்றவிடத்தேகாந்தயோகம் *
வரவுந்திருக்கருணைவையாய்ப்பராபரமே. (௬௰௭)

மால்காட்டிச்சிந்தைமயங்காமனின்றுசுகக் *
கால்காட்டிவாங்காதேகண்டாய்ப்பராபரமே. (௬௰௮)

எப்பொருளுநீயெனவேயெண்ணிநான்றோன்றாத *
வைப்பையழியாநிலையாவையாய்ப்பராபரமே. (௬௰௯)

சும்மாவிருப்பதுவேசுட்டற்றபூரணமென் *
றெம்மாலறிதற்கெளிதோபராபரமே (௭௰)

முன்னொடுபின்பக்கமுடியடிநாப்பண்ணறநின் *
றன்னொடுநானிற்பதென்றோசாற்றாய்ப்பராபரமே. (௭௰௧)

மைவ்வண்ணந்தீர்ந்தமௌனிசொன்னதெவ்வண்ணம் *
அவ்வண்ணநிட்டையருளாய்ப்பராபரமே (௭௰௨)

வித்தன்றியாதும்விளைவதுண்டோநின்னருளாம் *
சித்தன்றியாங்களுண்டோசெப்பாய்ப்பராபரமே. (௭௰௩)

ஆங்காரமற்றுன்னறிவானவன்பருக்கே *
தாங்காததுக்கமதுதாக்கும்பராபரமே. (௭௰௪)

சிந்தையவிழ்ந்தவிழ்ந்துசின்மயமாநின்னடிக்கே *
வந்தவர்க்கேயின்பநிலைவாய்க்கும்பராபரமே. (௭௰௫)

சொல்லாடாவூமனைப்போற்சொல்லிறந்துநீயாகில் *
அல்லாலெனக்குமுத்தியாமோபராபரமே. (௭௬)

டேச்சாசாமோனம்பிறவாமுளைத்தென்றற் *
காச்சாச்சுமேற்பயனுண்டாமோ பராபரமே (௭௭)

செட்டியென்றுன்னன்பர்மலங்கெட்டயர்ந்தோர்பூரணமாம் *
தொட்டிலுக்குட்சேய்போற்றுயின்றார்பராபரமே (௭௮)

காட்டவருளிருக்கக்காணதிருண்மலத்தும் *
நாட்டமெனக்குவரனன்றோபராபரமே (௭௯)

எத்தன்மைக்குற்றமியற்றிடினுந்தாய்பொறுக்கும் *
அத்தன்மைநின்னருளுமன்றோபராபரமே. (௮௰)

எத்தனையோதேர்ந்தாலுமென்றோலேயின்பமுண்டோ *
சித்துருவேயின்பச்சிவமேபராபரமே (௮௧)

மண்ணொடுவிண்காட்டிமறைந்துமறையாவருளைக் *
கண்ணொடுகண்ணாசவென்றுகாண்பேன்பராபரமே. (௮௨)

பஞ்சரித்துநின்னைப்பலகாலிரந்ததெல்லாம் *
அஞ்சலெனும்பொருட்டேயன்றோபராபரமே. (௮௩)

எங்கெங்கேபார்த்தாலுமெவ்வுயிர்க்குமவ்வுயிராய் *
அங்கங்கிருப்பதுநீயன்றோபராபரமே (௮௪)

அனைத்துமாய்நின்றாயேயான்வேறோநின்னை *
நினைக்குமாறெங்கேநிகழ்த்தாய்பராபரமே (௮௫)

நின்போதத்தாலேநினைப்புமறப்புமென்றால் *
என்போதமெங்கேயியம்பாய்பராபரமே (௮௬)

ஒன்றைநினைந்தொன்றைமறந்தோடுமனமெல்லாநீ *
என்றறிந்தாலெங்கேயியங்கும்பராபரமே (௮௭)

கொழுந்தில்வயிரமெனக்கோதறவுள்ளன்பில் *
அழுந்துமவர்க்கேசுகமுண்டாகும்பராபரமே. (௮௮)

பற்றும்பயிர்க்குப்படர்கொழுந்துபோற்பருவம் *
பெற்றவர்க்கேநின்னருடான்பேறும்பராபரமே (௮௯)

யோகியர்க்கேஞானமொழுங்காம்பேரன்பான *
தாகியரும்யோகமுன்னேசார்ந்தோர்பராபரமே. (௯௰)

அல்லும்பகலுமறிவாகிநின்றவர்க்கே *
சொல்லும்பொருளுஞ்சுமைகாண்பராபரமே. (௯௧)

எச்சிலென்றுபூவையிகழ்ந்தோர்க்குனைப்போற்றப் *
பச்சிலையுங்கிள்ளப்படுமோபராபரமே. (கூஉ)

அந்தக்கரணமடங்கத்துறப்பதுவே *
எந்தத்துறவினுநன்றெந்தாய்பராபரமே. (கூஈ)

தன்னையறிந்தாற்றலைவன்மேற்பற்றலது *
பின்னையொருபற்றுமுண்டோபேசாய்பராபரமே. (கூச)

அன்பாற்கரைந்துகண்ணீராறுகண்டபுண்ணியருக் *
குன்பால்வரவழிதானுண்டோபராபரமே. (கூரு)

தன்னையறிந்தருளேதாரகமாநிற்பதுவே *
உன்னையறிதற்குபாயம்பராபரமே. (கூசா)

கற்றகலையானிலைதான்காணுமோகாண்பதெல்லாம் *
அற்றவிடத்தேவெளியாமன்றோபராபரமே. (கூள)

கண்மூடிக்கண்விழித்துக்காண்பதுண்டோநின்னருளாம் *
விண்மூடினெல்லாம்வெளியாம்பராபரமே (கூஅ)

நேரோநினதருளென்னெஞ்சைக்கவரினென்றும் *
பாரோன்சுகமும்படைப்பேன்பராபரமே. (கூகூ)

வான்காணவேண்டின்மலையேறவொக்குமுன்னை *
நான்காணப்பாவனைசெய்நாட்டம்பராபரமே (ா)

வாதனைவிட்டுன்னருளின்மன்னினல்லால்வேறுமொரு *
சாதனைதானுண்டோநீசாற்றாய்பராபரமே. (ாக)

பாரகமும்விண்ணகமும்பற்றாகநிற்பதருள் *
தாரகத்தைப்பற்றியன்றோசாற்றாய்பராபரமே. (ாஉ)

விளக்குந்தகளியையும்வேறென்றார்நின்னைத் *
துளக்கமறச்சீவனென்றுசொல்வார்பராபரமே. (ாஈ)

பாராதிநீயாப்பகர்ந்தாலகமெனவும் *
ஆராயுஞ்சிவனுநீயாங்காண்பராபரமே. (ாச)

பொய்யைப்பொய்யென்றறியும்போதத்துக்காதரவுன் *
மெய்யருளேயன்றோவிளம்பாய்பராபரமே. (ாரு)

வருவான்வந்தேனெனல்போன்மன்னியழியுஞ்ஜகத்தைத் *
தெரிவாகவில்லையென்றதிரம்பராபரமே. (ாசா)

மாயாஜசமிலையேன்மற்றெனக்கோர்பற்றுமிலை *
நீயேநானென்றுவந்துநிற்பேன்பராபரமே. (ாள)

வாருதிநீயெனவேவைத்தமறையென்னையுநீ *
தாருகச்செல்லாதோசாற்றாய்ப்பராபரமே. (௱௮)

வெள்ளக்கருணைமதவேழமா நின்னருட்சென் *
கள்ளக்கருத்தேகவரம்பராபரமே. (௱௯)

வண்டாய்த்துவண்டுமௌனமலரணைமேற் *
கொண்டார்க்கோவின்பங்கொடுப்பாய்ப்பராபரமே. (௱௰)

மாயைமுதலாம்வினைநீமன்னுயிர்நீமன்னுயிர்தேர்ந் *
தாயுமறியானதுநீயன்றோபராபரமே (௱௰௧)

என்னறிவும்யானுமெனதென்பதுவுமாமிவைகள் *
நின்னவையேயன்றோநிகழ்த்தாய்ப்பராபரமே. (௱௰௨)

யாரறியாதண்டப்பரப்பறியாதுன்பெருமை *
யாரறிவார்நானேவறியேன்பராபரமே. (௱௰௩)

அண்டமனைத்திலுமாயப்பாலுக்கப்பாலும் *
கொண்டநின்னையாரறிந்துகொள்வார்பராபரமே. (௱௰௪)

ஒப்புயர்வொன்றின்றியொலிபுகாமோனவட்டக் *
கப்பலுக்காம்வான்பொருணீகண்டாய்ப்பராபரமே. (௱௰௫)

என்போலெளியவருமெங்கெங்கும்பார்த்தாலும் *
உன்போல்வலியவருமுண்டோபராபரமே. (௱௰௬)

பார்க்கினண்டபிண்டப்பரப்பனைத்துநின்செயலே *
யார்க்குஞ்செயலிலையேயையாபராபரமே. (௱௰௭)

ஒன்றேபலவேயுருவேயருவேயோ *
வென்றேயழைப்பதுன்னையென்றுபராபரமே. (௱௰௮)

செப்புவதெல்லாஞ்செயநான்சிந்திப்பதெல்லாநின் *
னைப்பிரியானமெனவோர்ந்தேன்பராபரமே. (௱௰௯)

ஆரிருந்தென்னூர்போயென்னாரமுதா நின்னருளின் *
சீரிருந்தாலுய்வேன்சிவமேபராபரமே. (௱௨௰)

வஞ்சநமன்வாதனைக்கும்வன்பிறவிவேதனைக்கும் *
அஞ்சியுனையடைந்தேனையாபராபரமே. (௱௨௰௧)

எந்தப்படியுன்னிதயமிருந்ததெமக் *
கந்தப்படிவருவதன்றோபராபரமே. (௱௨௰௨)

எந்தெந்தநாளுமெனைப்பிரியாதென்னுயிராய்ச் *
சிந்தைகுடிகொண்டவருட்டேவேபராபரமே. (௱௨௰௩)

அஞ்சலஞ்சலென்றடிமைக்கப்போதைக்கப்போதே *
நெஞ்சிலுணர்த்துநிறைவேபராபரமே (௩௨௪)

என்னையுன்றன்கைக்களித்தார்யாவரென்னையான்கொடுத்துப் *
பின்னையுன்னாற்பெற்றநலம்பேசேன்பரர்பரமே (௩௨௫)

வாய்பேசாவூமையெனவைக்கவென்றோநீமௌனத் *
தாயாகவந்தருளைத்தந்தாய்பராபரமே. (௩௨௬)

தன்னைத்தந்தென்னைத்தடுத்தாண்டநின்கருணைக் *
கென்னைக்கொண்டென்னபலனெந்தாய்பராபரமே. (௩௨௭)

மார்க்கண்டர்க்காகமறலிபட்டபாட்டையுன்னிப் *
பார்க்கினன்பர்க்கென்னபயங்காண்பராபரமே. (௩௨௮)

சுட்டியுணராமற்றுரியநிலையாய்வெளியில் *
விட்டநின்னையானேவியப்பேன்பராபரமே (௩௨௯)

சூதொன்றுமின்றியென்னைச்சும்மாவிருக்கவைத்தா *
யேதொன்றும்போதாதோவின்பம்பராபரமே (௩௩௰)

வாயொன்றும்பேசாமௌனியாய்வந்தாண்ட *
தேயொன்றும்போதாதோவின்பம்பராபரமே. (௩௩௧)

என்றுமிருந்தபடிக்கென்னையெனக்களித்த *
தொன்றும்போதாதோவின்பம்பராபரமே (௩௩௨)

எண்டிசைகீழ்மேலானவெல்லாம்பெருவெளியாக் *
கண்டவிடத்தென்னையுநான்கண்டேன்பராபரமே (௩௩௩)

பித்தனையேதும்மறியாப்பேதையனையாண்டவுனைக் *
கெத்தனைநான்றெண்டனிடுவேன்பராபரமே (௩௩௪)

தாயர்கர்ப்பத்தூடனமுந்தண்ணீருந்தந்தருளும் *
நேயவுனையாரோநினையார்பராபரமே (௩௩௫)

விரிந்தமனமொடுங்கும்வேளையினானகப் *
பரந்தவருள்வாழிபதியேபராபரமே (௩௩௬)

சிந்தனைபோய்நானெனல்போய்த்தேக்கவின்பமாமழையை *
வந்துபொழிந்தனைநீவாழிபராபரமே (௩௩௭)

தந்தேனையோர்வசனந்தந்தபடிக்கின்பமுமாய் *
வந்தேனையென்றனைநீவாழிபராபரமே. (௩௩௮)

மண்ணும்விண்ணும்வந்துவணங்காவோநின்னருளைக் *
கண்ணுறவுட்கண்டவரைக்கண்டாற்பராபரமே. (௩௩௯)

என்றுங்கருணைபெற்றவின்பர்தபோதனர்சொல் *
சென்றசென்றதிக்கனைத்துஞ்செல்லும்பராபரமே. (௨௪௰)

ஆடுவதும்பாடுவதுமானந்தமாகநின்னைக் *
தேடுவதுநின்னடியார்செய்கைபராபரமே. (௨௪௧)

பொங்கியநின்றண்ணருளைப்புட்கலமாப்பெற்றவர்கட் *
கெங்கெழுந்தன்ஞாயிறியம்பாய்பராபரமே. (௨௪௨)

பாலரொடுபேயர்பித்தர்பான்மையெனநிற்பதுவே *
சீலமிகுஞானியர்தஞ்செய்கைபராபரமே (௨௪௩)

உண்டுடுத்துப்பூண்டிங்குலகத்தார்போற்றிரியும் *
தொண்டர்விளையாட்டேசுகங்காண்பராபரமே. (௨௪௪)

கங்குல்பகலற்றதிருக்காட்சியர்கள்கண்டவழி *
எங்குமொருவழியேயெந்தாய்பராபரமே. (௨௪௫)

காயநிலையல்லவென்றுகாண்பாருறங்குவரோ *
தூயவருட்பற்றுத்தொடர்வார்பராபரமே. (௨௪௬)

அப்புமுப்பும்போன்றவயிக்யபரானந்தர்தமக் *
கொப்புவமைசொல்லவும்வாயுண்டோபராபரமே. (௨௪௭)

சித்தந்தெளிந்துசிவமானஞானியர்க்கும் *
கொத்தடிமையானகுடிநான்பராபரமே. (௨௪௮)

தம்முயிர்போலெவ்வுயிருந்தாமென்றுதண்ணருள்கூர் *
செம்மையருக்கேவலென்றுசெய்வேன்பராபரமே. (௨௪௯)

விண்ணுக்கும்விண்ணாகிமேவுமுனக்கியான்பூசை *
பண்ணிநிற்குமாறுபகராய்பராபரமே. (௨௫௰)

நெஞ்சகமேகோயினினைவேசுகந்தமன்பே *
மஞ்சனநீர்பூசைகொள்ளவாராய்பராபரமே. (௨௫௧)

கெட்டவழியாணவப்பேய்கீழாகமேலான *
சிட்டருனைப்பூசைசெய்வார்பராபரமே. (௨௫௨)

கால்பிடித்துமூலக்கனலைமதிமண்டலத்தின் *
மேலெழுப்பிற்றேகம்விழுமோபராபரமே. (௨௫௩)

பஞ்சசுத்திசெய்துநின்னைப்பாவித்துப்பூசைசெய்தால் *
விஞ்சியஞானம்விளங்கும்பராபரமே (௨௫௪)

அன்பர்பணிசெய்யவெனையாளாக்கிவிட்டுவிட்டால் *
இன்பநிலைதானேவந்தெய்தும்பராபரமே. (௨௫௫)

மூர்த்திதலந்தீர்த்தமுறையாற்றொடங்கினர்க்கோர் *
வார்த்தைசொலச்சற்குருவும்வாய்க்கும்பராபரமே. (௱௫௬)

விரும்புஞ்சரியைமுதன்மெய்ஞ்ஞானநான்கும் *
அரும்புமலர்காய்கனிபோலன்றோபராபரமே (௱௫௭)

தானந்தவந்தருமஞ்சந்தசமுஞ்செய்வர்சிவ *
ஞானந்தனையணையநல்லோர்பராபரமே. (௱௫௮)

சொன்னத்தைச்சொல்லித்துடிக்கின்றவாணவப்பேய்க் *
கின்னல்வருவதெந்நாளெந்தாய்பராபரமே (௱௫௯)

இன்றோவிருவினைவந்தேறியதுநானென்றோ *
அன்றேவிளைந்ததன்றோவாற்றேன்பராபரமே (௱௬௰)

எண்ணமுந்தானின்னைவிடவில்லையென்றாலியான்முனமே *
பண்ணல்வினையேதுபகராய்பராபரமே. (௱௬௧)

என்னையின்னதென்றறியாவேழைக்குமாகெடுவேன் *
முன்னைவினைகூடன்முறையோபராபரமே (௱௬௨)

அறியாநான்செய்வினையையாநீகூட்டும் *
குறிபேதெனக்குரவுகூறாய்ப்பராபரமே. (௱௬௩)

என்னைக்கெடுக்கவிசைந்தவிருவினைநோய் *
தன்னைக்கெடுக்கத்தகாதோபராபரமே. (௱௬௪)

வல்லமையேகாட்டுகின்றமாமாயைநானொருவன் *
இல்லையெனினெங்கேயிருக்கும்பராபரமே. (௱௬௫)

முக்குணத்தாலெல்லாமுளைக்கப்பிரகிருதிக் *
கிக்குணத்தைநல்கியதாரெந்தாய்பராபரமே (௱௬௬)

ஆற்றப்படாத்துன்பமையவென்றாலென்மனது *
தேற்றப்படாதினியென்செய்வேன்பராபரமே (௱௬௭)

பூராயமாய்மனதைப்போக்கவறியாமலையோ *
யாராயலந்தேனரசேபராபரமே. (௱௬௮)

சினமிறக்கக்கற்றாலுஞ்சித்தியெல்லாம்பெற்றாலும் *
மனமிறக்கக்கல்லார்க்குவாயேன்பராபரமே. (௱௬௯)

வாதுக்குவந்தெதிர்த்தமல்லரைப்போற்பாழ்த்தமனம் *
ஏதுக்குக்கூத்தாடுதெந்தாய்பராபரமே. (௱௭௰)

சூதாடுவார்போற்றுவண்டுதுவண்டுமனம் *
வாதாடினென்னபலன்வாய்க்கும்பராபரமே. (௱௭௧)

கொள்ளித்தேள்கொட்டிக்குதிக்கின்றபேய்க்குரங்காய்க் *
கள்ளமனந்துள்ளுவதென்கண்டாய்பராபரமே (௩௭௨)

வந்ததையும்போனதையும்வைத்துவைத்துப்பார்த்திருந்தால் *
சிந்தையிதமகிதஞ்சேரும்பராபரமே. (௩௭௩)

ஏறுமயிர்ப்பாலமுணர்விந்தவிடயங்கணெருப் *
பாறெனவுநன்றுவறிந்தேன்பராபரமே. (௩௭௪)

பொறிவழியேயேழைபொறிபாயுழல்வதுநின் *
அறிவின்விதித்தவிதியாமோபராபரமே. (௩௭௫)

பாசசாலங்களெல்லாம்பற்றுவிடஞானவைவாள் *
வீசுநாளெந்நாள்விளம்பாய்பராபரமே. (௩௭௬)

எந்தவுடலேனுமெடுத்தவுடனல்லதென்று *
சிந்தைசெயவந்ததிறஞ்செப்பாய்பராபரமே. (௩௭௭)

பொய்யெல்லாமென்றுப்பொருத்திவைத்தபொய்யுடலை *
மெய்யென்றுன்மெய்யாய்விடுமோபராபரமே (௩௭௮)

மின்னனையபொய்யுடலைமெய்யென்றுநம்பியையோ *
நின்னைமறக்கைநெறியோபராபரமே (௩௭௯)

நித்தியமொன்றில்லாதநீர்க்குமிழிபோன்றவுடற் *
கித்தனைதான்றுன்பமுண்டோவென்னேபராபரமே. (௩௮௰)

தேகமிறுமென்றுசடர்தேம்புவதென்னித்திரையின் *
ஊகமறிந்தாற்பயந்தானுண்டோபராபரமே. (௩௮௧)

ஏதைச்சுமையாவெடுப்பாரெடுத்தவுடற் *
சேதமுறின்யாதுபின்னேசெல்லும்பராபரமே. (௩௮௨)

தோற்பாவைநாலாட்சுமையாகுஞ்சீவனென்றிங் *
கார்ப்பாலெடுத்ததெவராலேபராபரமே. (௩௮௩)

ஞாலத்தைமெய்யெனவேநம்பிநம்பிநாளுமென்றன் *
காலத்தைப்போக்கியென்னகண்டேன்பராபரமே. (௩௮௪)

பொய்யுலகவாழ்க்கைப்புலைச்சேரிவாதனைநின் *
மெய்யருளின்மூழ்கின்விடுங்காண்பராபரமே. (௩௮௫)

நூலேணிவிண்ணேறநூற்குப்பருத்திவைப்பார் *
போலேகருவிநன்னூற்போதம்பராபரமே. (௩௮௬)

சின்னஞ்சிறியார்கள்செய்தமணற்சோற்றையொக்கும் *
மன்னுங்கலைஞானமார்க்கம்பராபரமே. (௩௮௭)

வாசகஞானத்தால்வருமோக்கம்பார்த்த *
பூசலென்றுபோமோபுகலாய்ப்பராபரமே. (௱௮௮)

சேட்டதையேசொல்லுங்கிளிபோலநின்னருளின் *
நாட்டமின்றிவாய்ப்பேசனன்றேபராபரமே. (௱௮௯)

வெளியாயருளில்விரவுமன்பர்தேகம் *
ஒளியாய்ப்பிறங்கியதுமுண்டோபராபரமே. (௱௯௰)

காலமொருமூன்றுங்கருத்திலுணர்ந்தாலுமனத *
ஞாலந்தனக்குனாயார்நல்லோர்பராபரமே (௱௯௧)

கொல்லாவிரதமொன்றுகொண்டவரேநல்லோர்மற் *
றல்லாதார்யாரோவறியேன்பராபரமே (௱௯௨)

இல்லாதகாரியத்தையிச்சித்துச்சிந்தைவழி *
செல்லாமைநல்லோர்திறங்காண்பராபரமே. (௱௯௩)

ஏதுவந்துமேதொழிந்துமென்னதியானென்னார்கள் *
போதநிலைகண்டபுலத்தோர்பராபரமே. (௱௯௪)

ஆயிரஞ்சொன்னாலுமறியாதவஞ்சநெஞ்சப் *
பேயொடுகூடிற்பிழைகாண்பராபரமே. (௱௯௫)

மாயமயக்கொழிந்தார்மற்றொன்றைநாடுவரோ *
நேயவருணிலையினிற்பார்பராபரமே. (௱௯௬)

நித்திரையிற்செத்தபிணநேருமுடற்கிச்சைவையாச் *
சுத்தர்களேநல்லதுறவோர்பராபரமே. (௱௯௭)

எந்நெஞ்சமேனுமிரங்குமேநின்னருட்குக் *
கன்னெஞ்சருமுளரோகாட்டாய்பராபரமே. (௱௯௮)

மந்தவறிவாகியின்பம்வாயாதிருந்தலைந்தாற் *
சிந்தைமயங்காதோவென்செய்வேன்பராபரமே. (௱௯௯)

தேடினேன்றிக்கனைத்துந்தெண்டனிட்டேன்சிந்தைநைந்து *
வாடினேனென்மயக்கமாற்றாய்பராபரமே. (௨௱)

மடிமையெனுமொன்றைமறுத்தன்றேவென்னை *
அடிமைகொளல்வேண்டுமரசேபராபரமே. (௨௱௧)

காலர்பயந்தீரவின்பக்காற்கபயமென்றெழுத்த *
மாலைவரைத்தனையேவாழிபராபரமே. (௨௱௨)

நீர்ப்புற்புதமாய்நினைவருட்கேநின்றழியப் *
பார்ப்பதல்லால்வேறுமொன்றைப்பாரேன்பராபரமே. (௨௱௩)

நீர்க்குமிழிபோலென் நினைவுவெளியாய்க்கரையப் ✻
பார்க்குமிடமெல்லாமென்பார்வைபராபரமே. (௨௱௪)

ஆடியோப்பம்பரம்போலாசையுடனெங்குமுனைத் ✻
தேடியோய்கின்றேனென்செய்வேன்பராபரமே (௨௱௫)

வேதாந்தஞ்சித்தாந்தசம்வேமிறன்னோர்கள்களிக்கும் ✻
நாதாந்தமோனநலமேபராபரமே. (௨௱௬)

ஆனந்தமானநின்னையன்றியொன்றையுன்னாத ✻
மோனந்தமியேற்குமுத்திபராபரமே (௨௱௭)

எதுக்குமுன்னைவிடவில்லையென்றேலென்கருத்தைச் ✻
சோதிக்கவேண்டாநான்சொன்னேன்பராபரமே. (௨௱௮)

முத்தியிலுந்தேகமிசைமூவிதமாஞ்சித்திபெற்றோர் ✻
எத்தனைபேரென்றுரைப்பதெந்தாய்பராபரமே. (௨௱௯)

நீயன்றிநானோர்நினைவாரென்னெஞ்சசமார் ✻
தாயன்றிச்சூலுண்டோசாற்றாய்பராபரமே. (௨௱௰)

அங்கமேநின்வடிவமானசுகர்கூப்பிடநீ ✻
எங்குமேனேனென்றதென்னேபராபரமே. (௨௱௰௧)

கொள்ளைவெள்ளத்தண்ணருண்மேற்கொண்டுசுழித்தார்த்திழுத்தாற் ✻
கள்ளமனக்கப்பலெங்கேகாணும்பராபரமே. (௨௱௰௨)

எக்கலையுங்கற்றுணர்ந்தோமென்றவர்க்குஞ்சம்மதஞ்சொல் ✻
வக்கணையாலின்பம்வருமோபராபரமே (௨௱௰௩)

கல்லெறியப்பாசிகலைந்துநன்னீர்காணுநல்லோர் ✻
சொல்லுணரின்ஞானம்வந்துதோன்றும்பராபரமே. (௨௱௰௪)

நின்னையுணர்ந்தோர்கடமைநிந்தித்தபேயறிஞர் ✻
என்னகதிபெறுவாரெந்தாய்பராபரமே. (௨௱௰௫)

என்னதியானென்னலற்றோரொங்கிருந்துபார்க்கினுநின் ✻
சன்னிதியாநீபெரியசாமிபராபரமே. (௨௱௰௬)

சோற்றுத்துருத்திச்சுமைசுமப்பக்கண்பிதுங்கக் ✻
காற்றைப்பிடித்தலைந்தேன்கண்டாய்பராபரமே (௨௱௰௭)

உள்ளபடியொன்றையுணர்க்கினவர்க்குள்ளுறவாய்க் ✻
கள்ளமின்றியன்பாய்க்களிப்பேன்பராபரமே. (௨௱௰௮)

அடுத்தவியல்பாகவொன்றையான்பகர்வதல்லால் ✻
தொடுத்ததொன்றையான்வேண்டிச்சொல்லேன்பராபரமே. (௨௱௰௯)

உள்ளமறியாதொருவரொன்றையுன்னிப்பேசிலையோ *
துள்ளியிளங்கன்றாய்த்துடிப்பேன்பராபரமே. (௨௱௰)

எல்லாருமின்புற்றிருக்கநினைப்பதுவே *
அல்லாமல்வேறொன்றறியேன்பராபரமே. (௨௱௧)

முந்நாண்மெய்ஞ்ஞானமுனிவர்தவமீட்டுதல்போல் *
இந்நாளிற்காணவெனக்கிச்சைபராபரமே (௨௱௨)

கன்மமென்பதெல்லாங்கரிசறவேமெய்ஞ்ஞான *
தன்மநிலைசார்ந்ததன்பர்தன்மைபராபரமே (௨௱௩)

கண்டுயிலாதென்னறிவின்கண்ணூடேகாட்சிபெற *
மண்டியபேரொளிநீவாழிபராபரமே. (௨௱௪)

நானானதன்மையென்றுநாடாமனாடவின்ப *
வானாகிநின்றனைநீவாழிபராபரமே. (௨௱௫)

அகத்தாடணுவணுவாயண்டமெல்லாந்தானாய் *
மகத்தாகிநின்றனைநீவாழிபராபரமே (௨௱௬)

காரகமாங்கர்ப்பவறைறக்கண்ணூடுமென்கண்ணே *
வாரம்வைத்துக்காத்தனைநீவாழிபராபரமே. (௨௱௭)

புரந்தோர்தந்தேசமென்பார்பூமியைப்போராடி *
இரந்தோருந்தம்மதென்பாரென்னேபராபரமே. (௨௱௮)

மூர்த்தியெல்லாம்வாழியெங்கண்மோனகுருவாழியருள் *
வார்த்தையென்றும்வாழியன்பர்வாழிபராபரமே (௨௱௯)

சொல்லும்பொருளுந்தொடராவருணிறைவிற் *
செல்லும்படிக்கருணீசெய்தாய்பராபரமே. (௨௱௨௰)

இற்றைவரைக்குள்ளாகவெண்ணரியசித்திமுத்தி *
பெற்றவர்களெத்தனைபேர்பேசாய்பராபரமே. (௨௱௨௰௧)

நாடுநகருநிசாணுட்டியபாளயமும் *
ஈடுசெயுமேமுடிவிலெந்தாய்பராபரமே. (௨௱௨௰௨)

தேடுந்திரவியமுஞ்சேர்ந்தமணிப்பெட்டகமும் *
கூடவருந்துணையோகூறாய்பராபரமே (௨௱௨௰௩)

தேடாததேட்டினரோசெங்கைத்துலாக்கோல்போல் *
வாடாச்சமனிலையில்வாழ்வார்பராபரமே. (௨௱௨௰௪)

நீராய்க்கசிந்துருகிநெட்டுயிர்த்துநின்றேனைப் *
பாராததென்னேபகராய்பராபரமே. (௨௱௨௰௫)

உள்ளபொருளாவியுடன்மூன்றுமன்றேதான்
கொள்ளைகொண்டநீயென்குறைதீர்பராபரமே. (௨௩௬)

ஆழ்ந்தாயேயிவ்வுலகிலல்லலெல்லாந்தீர்ந்தருளால்
வாழ்ந்தாயேயென்றனைநீவாழிபராபரமே. (௨௩௭)

தாராவருளையெல்லாந்தந்தெனையுநின்னருளில்
வாராயோவென்றனைநீவாழிபராபரமே. (௨௩௮)

ஆசையுன்மீதல்லாலருளறியவேறுமொன்றில்
பாசம்வையேனின்கருணைப்பாங்காற்பராபரமே. (௨௩௯)

ஆதியந்தநீகுருவாயாண்டதல்லானிலையன்றிப்
போதனையுமுண்டோபுகலாய்ப்பராபரமே. (௨௪௰)

நானாகவந்துதடுத்தாண்டெனையின்ப
வானாகச்செய்தவின்பவானேபராபரமே. (௨௪௧)

பற்றற்றிருக்குநெறிபற்றிற்சடன்மலையும்
சுற்றநினைக்குமனஞ்சொன்னேன்பராபரமே (௨௪௨)

படிப்பற்றுக்கேள்வியற்றுப்பற்றற்றுச்சிந்தைத்
துடிப்பற்றார்க்கன்றோசுகங்காண்பராபரமே. (௨௪௩)

சத்தாகிநின்றோர்சடங்களிலிங்கமென
வைத்தாருமுண்டேயென்வாழ்வேபராபரமே. (௨௪௪)

சித்தநிருவிகற்பஞ்சேர்ந்தாருடற்றீபம்
வைத்தகர்ப்பூரம்போல்வயங்கும்பராபரமே. (௨௪௫)

ஆதிகாலத்திலெனையாண்டனையேயிப்பானீ
போதியெனினெங்கேநான்போவேன்பராபரமே. (௨௪௬)

நாவழுத்துஞ்சொன்மலரோநாளுதிக்கும்பொன்மலரோ
தேவையுனக்கின்னதென்றுசெப்பாய்ப்பராபரமே. (௨௪௭)

கன்னறரும்பாகாய்க்கருப்புவட்டாய்க்கற்கண்டாய்
இன்னமுதாயொன்றாயிருந்தாய்ப்பராபரமே. (௨௪௮)

சிற்பரமேதற்பரமேதெய்வசுருதிசொன்ன
அற்புதமேயன்பேயறிவேபராபரமே. (௨௪௯)

அறிவிப்பானீயென்றாலைம்புலன்கடந்த
நெறிநிற்பார்யாரோநிகழ்த்தாய்ப்பராபரமே. (௨௫௰)

அந்தக்கரணமெனுமாகாதபேய்களெனை
வந்துபிடித்தாட்டவழக்கோபராபரமே. (௨௫௧)

ஐவரொடுங்கூடாமலந்தரங்கசேவைதந்த *
தெய்வவறிவேசிவமேபராபரமே. (௨௫௨)

அருளாகிநின்றசுகமாகாமலையோ *
இருளாகிநிற்கவியல்போபராபரமே. (௨௫௩)

அன்பரெல்லாமின்பமருந்திடவும்யானொருவன் *
துன்புறுதனன்றோநீசொல்லாய்பராபரமே. (௨௫௪)

சந்ததமுநின்கருணைசாற்றுவதல்லால்வேறு *
சிந்தையறியேனுன்சித்தம்பராபரமே. (௨௫௫)

நானெனெனக்கூறுநாட்டத்தாலென்னைவிட்டுப் *
போனாலுமுன்னைவிட்டுப்போகேன்பராபரமே. (௨௫௬)

இக்காயம்பொய்யென்றோரீட்டத்துனக்கபயம் *
புக்காதாருண்டோபுகலாய்பராபரமே (௨௫௭)

தானாதல்பூரணமேசாருமிடமுண்டுயிரும் *
வானாதியுமொழுங்காய்மன்னும்பராபரமே. (௨௫௮)

உன்னுமனங்கர்ப்பூரவுண்டைபோலேகரைய *
மின்னுமானந்தவிரக்கேபராபரமே. (௨௫௯)

நாட்பட்டலைந்தநடுக்கமெல்லாந்தீரவுனக் *
காட்பட்டுந்துன்பமெனக்காமோபராபரமே. (௨௬௰)

பாவிபடுங்கண்கலக்கம்பார்த்துமிரங்காதிருந்தால் *
ஆவிக்குறுதுணையாரையாபராபரமே. (௨௬௧)

நின்னிறைவேதாரகமாய்நின்றுசுகமெய்தாமல் *
என்னிறைவேபாவித்தேனென்னேபராபரமே (௨௬௨)

நின்னைச்சரண்புகுந்தானீகாக்கல்வேண்டுமல்லால் *
என்னைப்புரம்விடுதலென்னேபராபரமே (௨௬௩)

மாறாததுன்பமெல்லாம்வந்துறைத்தாநின்செவியில் *
ஏறாதவாறேதியம்பாய்பராபரமே (௨௬௪)

விஞ்சுபுலப்பாடனைத்தும்வீறுதுன்பஞ்செய்யவந்த *
அஞ்சுபுலவேடருக்குமாற்றேன்பராபரமே. (௨௬௫)

கன்னங்கரியநிறக்காமாதிராக்ஷசப்பேய்க் *
கென்னையிலக்காகவைத்ததென்னேபராபரமே. (௨௬௬)

சித்திநெறிகேட்டல்ஜெகமயக்கஞ்சன்மமற *
முத்திநெறிகேட்டன்முறைகாண்பராபரமே. (௨௬௭)

சிந்தைசிதையச்சிதையாதவானந்தம் ❋
எந்தவகையாலேவந்தெய்தும்பராபரமே (உ௬௮)

கூர்த்தவறிவாலறியக்கூடாதெனக்குரவன் ❋
தேர்த்தபடிதானேதிரிந்தேன்பராபரமே. (உ௬௯)

பத்தருந்தும்பரமசுகம்யானருந்த ❋
எத்தனைநாள்செல்லுமியம்பாய்பராபரமே. (உ௭௰)

தீரத்தினுற்றுறவுசேராமலிவ்வுலகில் ❋
பாரத்தனம்பேசல்பண்போபராபரமே. (உ௭௧)

இந்தவெளியினையுண்டேப்பமிடப்பேரறிவாத் ❋
தந்தவெளிக்கேவெளியாய்ச்சார்ந்தேன்பராபரமே. (உ௭௨)

உணர்த்துமுனைநாடாதுணர்ந்தவையேநாடி ❋
இணக்குறுமென்னேமனமைதானென்னேபராபரமே. (உ௭௩)

உண்டுபோலின்றுமுலகைத்திரமெனவுட் ❋
கொண்டுநான்பெற்றபலன்கூறாய்பராபரமே (உ௭௪)

உள்ளபடியாதுமெனவுற்றுணர்ந்தேனக்கணமே ❋
கள்ளமனம்போனவழிகாணேன்பராபரமே. (உ௭௫)

சித்தமவுனஞ்செயல்வாக்கெலாமவுனம் ❋
சுத்தமவுனமென்பாற்றோன்றிற்பராபரமே. (உ௭௬)

எண்ணில்பலகோடியுயிரெத்தனையோவத்தனைக்கும் ❋
கண்ணிற்கலந்தவருட்கண்ணேபராபரமே (உ௭௭)

எனக்கினியாருன்போலுமில்லையென்றால்யானும் ❋
உனக்கினியானாகாவுளவேன்பராபரமே. (உ௭௮)

அண்டபிண்டங்காணாகமும்புறமுமொன்றாக் ❋
கண்டவென்னைநீகலந்தகாலம்பராபரமே. (உ௭௯)

எத்தனையோகோடியெடுத்தெடுத்துச்சொன்னாலும் ❋
சித்தமிரங்கிலையென்செய்வேன்பராபரமே. (உ௮௰)

அன்றந்தநால்வருக்குமற்புதமாநீயுரைத்த ❋
தொன்றந்தவார்த்தையெனக்குண்டோபராபரமே. (உ௮௧)

அப்பனென்றுமன்னையென்றுமாரியனென்றும்முனையே ❋
செப்புவதுமுன்னிலையின்சீர்காண்பராபரமே (உ௮௨)

கட்டுங்கனமுமந்தக்காலர்வரும்போதெதிர்த்து ❋
வெட்டுந்தவமோவிளம்பாய்பராபரமே. (உ௮௩)

பேசாதமோனநிலைபெற்றன்றோநின்னருளாம் *
வாசாமகோசரந்தான்வாய்க்கும்பராபரமே. (௨௮௪)

கற்றாலுங்கேட்டாலுங்காயமழியாதசித்தி *
பெற்றாலுமின்பமுண்டோபேசாய்பராபரமே. (௨௮௫)

கண்டவடிவெல்லாங்கனாக்கின்றவஞ்சனம்போல் *
அண்டமெல்லாநின்னருளேயன்றோபராபரமே. (௨௮௬)

தன்செயலாலொன்றுமிலைதானென்றுனன்பாவி *
நின்செயலாய்நில்லாநினைவேன்பராபரமே. (௨௮௭)

கொலைகளவுகட்காமங்கோபம்விட்டாலன்றோ *
மலையிலக்காநின்னருடான்வாய்க்கும்பராபரமே. (௨௮௮)

தன்னையறியாதுஜகந்தானுயிருந்துவிட்டால் *
உன்னையறியவருளுண்டோபராபரமே (௨௮௯)

ஒன்றிரண்டென்றுன்னுவுணர்வுகொடுத்துள்ளபடி *
என்றுமென்னைவையாயிறையேபராபரமே. (௨௯௦)

சருதுமடியார்களுளங்காணவெளியாகும் *
துரியநிறைவானசுகமேபராபரமே (௨௯௧)

பொய்குவித்தநெஞ்சனருட்பொற்பறிந்துதிக்கனைத்தும் *
கைகுவித்துநிற்பதெந்தக்காலம்பராபரமே. (௨௯௨)

அத்துவிதமானவயிக்யவனுபவமே *
சுத்தநிலையந்நிலையார்சொல்வார்பராபரமே. (௨௯௩)

வைத்தசுவரலம்பின்மண்போமோமாயைபினோர்க் *
கெத்தனைபோதித்துமென்னுமெந்தாய்பராபரமே (௨௯௪)

பூட்டற்றுத்தேகமற்றுப்போகுமுன்னே நின்னருளைக் *
காட்டத்தகாதோவென்கண்ணேபராபரமே. (௨௯௫)

சொல்லிற்பதர்களைந்துசொன்முடிவுகாணாதார் *
நெல்லிற்பதர்போலநிற்பார்பராபரமே. (௨௯௬)

அழுக்காற்றானெஞ்சமழுங்கியபுன்மாக்கள் *
இழுக்காற்றாவின்பநலமெய்தார்பராபரமே. (௨௯௭)

தேகாதிபொய்யெனவேதேர்ந்தவுபசாந்தருக்கு *
மோகாதியுண்டோமொழியாய்பராபரமே (௨௯௮)

சாதனையெல்லாமவிழத்தற்போதங்காட்டாதோர் *
போதனைநீநல்குவதெப்போதோபராபரமே. (௨௯௯)

ஒன்றுமறியாவிருளாமுள்ளம்படைக்தவெனக் *
கென்றுகதிவருவதெந்தாய்பராபரமே. (௩௱)

சிந்திக்குந்தோறுமென்னுட்சிற்சுகமாயூற்றூறிப் *
பூர்த்திக்குணின்றவருட்பொற்பேபராபரமே (௩௱௧)

என்றுமடைந்தோர்கட்கிரங்கார்குறிப்பனைத்தும் *
கன்றையுதைகாலிகதைகாண்பராபரமே. (௩௱௨)

குற்றங்குறையக்குணமேவிடவருளை *
உற்றவரோயாவிக்குறவாம்பராபரமே. (௩௱௩)

ஒருணாயால்வாய்க்குமுண்மைக்கோரனந்தநூல்கோடிப் *
பேருணாயாற்பேசிலென்னபேறும்பராபரமே (௩௱௪)

சொல்லுஞ்சமயநெறிச்சுற்றுக்குளேசுழலும் *
அல்லலொழிவதென்றைக்கையாபராபரமே. (௩௱௫)

பிடித்ததையேஸ்தாபிக்கும்பேராணவத்தை *
அடித்துத்துரத்தவல்லாரார்காண்பராபரமே. (௩௱௬)

நேசத்தானின்னைநினைக்குநினைவுடையார் *
ஆசைக்கடலிலழுந்தார்பராபரமே. (௩௱௭)

கள்ளாதுகட்டுணவுங்காரியமோநானொருசொல் *
கொள்ளாததோஷமன்றோகூறாய்பராபரமே. (௩௱௮)

சென்றவிடமெல்லாந்திருவருளேதாரகமா *
நின்றவர்க்கேயானந்தநிட்டைபராபரமே. (௩௱௯)

நீட்சிகுறுகலில்லாநித்யசுகாரம்பசக *
சாக்ஷியாமுன்னைவந்துசார்ந்தேன்பராபரமே. (௩௱௰)

வானாதிதத்துவமாய்மன்னிநின்றகாரணநீ *
தானாகிநிற்பதெந்தநாளோபராபரமே. (௩௱௰௧)

காட்டத்திலங்கிகடையவந்தாலென்னவுன்னும் *
நாட்டத்தினூடுவந்தநட்பேபராபரமே. (௩௱௰௨)

நித்திரையாய்த்தானேநினைவயர்ந்தானித்தநித்தம் *
செத்தபிழைப்பானதெங்கள்செய்கைபராபரமே (௩௱௰௩)

இன்பநிட்டையெய்தாமல்யாதெனினுஞ்சென்றுமனம் *
துன்புறுதல்வன்பிறவித்துக்கம்பராபரமே. (௩௱௰௪)

பொய்யகலமெய்யானபோதநிலைகண்டோர்க்கோர் *
ஐயமில்லையையமில்லையையாபராபரமே. (௩௱௰௫)

மந்திரத்தையுன்னிமயங்காதெனக்கினியோர் *
தந்திரத்தைவைக்கத்தகாதோபராபரமே. (௫௰௬)

விண்கருணைபூத்ததென்னமேவியுயிர்க்குயிராய்த் *
தண்கருணைதோன்றவருடாய்நீபராபரமே. (௫௰௭)

தன்மயமாய்நின்றநிலைதானேதானாகிநின்றால் *
நின்மயமாயெல்லாநிகழும்பராபரமே. (௫௰௮)

ஏங்கியிடையுநெஞ்சவேழையைநீவாவென்றே *
பாங்குபெறச்செய்வதுன்மேற்பாரம்பராபரமே. (௫௰௯)

ஆண்டநின்னைநீங்காவடிமைகள்யாமாணவத்தைப் *
பூண்டதென்னகன்மம்புகலாய்பராபரமே. (௬௰)

எங்கணுநீயென்றாலிருந்தபடியெய்தாமல் *
அங்குமிங்குமென்றலையலாமோபராபரமே (௬௰௧)

கற்குமதுவுண்டுகளித்ததல்லாநின்னருளில் *
நிற்குமதுதந்ததுண்டோநீதான்பராபரமே. (௬௰௨)

அண்டபகிரண்டமறியாதநின்வடிவைக் *
கண்டவரைக்கண்டாற்கதியாம்பராபரமே. (௬௰௩)

கலக்கமுறநெஞ்சைக்கலக்கித்திரும்பத் *
துலக்குபவனியலையோசொல்லாய்பராபரமே, (௬௰௪)

சிந்தையுமென்போலச்செயலற்றடங்கிவிட்டால் *
வந்ததெலாநின்செயலாவாழ்வேன்பராபரமே. (௬௰௫)

பந்தமெலாந்தீரப்பரஞ்சோதிநீகுருவாய் *
வந்தவடிவைமறவேன்பராபரமே. (௬௰௬)

தானந்தமானசகசநிருவிகற்ப *
வானந்தநிட்டையருளையாபராபரமே. (௬௰௭)

அல்லலெல்லாந்தீரவெனக்கானந்தமாகவொரு *
சொல்லையென்பால்வைத்ததையென்சொல்வேன்பராபரமே. (௬௰௮)

சிந்தைமயக்கமறச்சின்மயமாய்நின்றவுன்னைத் *
தந்தவுனக்கென்னையுநான்றந்தேன்பராபரமே. (௬௰௯)

மைகாட்டுமாயைமயக்கமறநீகுருவாய்க் *
கைகாட்டவுங்கனவுகண்டேன்பராபரமே. (௭௰)

மால்வைத்தசிந்தைமயக்கறவென்சென்னிமிசைக் *
கால்வைக்கவுங்கனவுகண்டேன்பராபரமே. (௭௰௧)

மன்னுனமாயையெல்லாமாண்டுவெளியாகவிரு *
கண்ணுரவுங்கனவுகண்டேன்பராபரமே. (௩௩௨)

மண்ணீர்மையாலேமயங்காதுன்கையாலென் *
கண்ணீர்துடைக்கவுநான்கண்டேன்பராபரமே. (௩௩௩)

உள்ளதுணராவுணர்விலிமாயாவியென்றே *
மெள்ளமெள்ளக்கைநெகிழவிட்டாய்பராபரமே. (௩௩௪)

எல்லாநினதுசெயலென்றெண்ணுமெண்ணமுநீ *
அல்லாலெனக்குளதோவையாபராபரமே. (௩௩௫)

பந்தமயக்கிருக்கப்பற்றொழிந்தேனென்றாலும் *
இந்தமயக்கமெனக்கேன்பராபரமே. (௩௩௬)

காட்சியெல்லாங்கண்ணைவிடக்கண்டதுண்டோயாதினுக்கும் *
ஆட்சியுனதருளேயன்றோபராபரமே. (௩௩௭)

எட்டுத்திசையுமொன்றாயின்பமாய்நின்றவுன்னை *
விட்டுப்பிரியவிடம்வேறோபராபரமே. (௩௩௮)

பிறியாதுயிர்க்குயிராய்ப்பின்னமறவோங்கும் *
செறிவேயறிவேசிவமேபராபரமே. (௩௩௯)

ஏதேதுசொன்னாலுமெள்ளளவுநீயிரங்காச் *
சூதேதெனக்குளவுசொல்லாய்பராபரமே. (௩௪௰)

கற்பனையாப்பாடுகின்றேன்கண்ணீருங்கம்பலையும் *
சொற்பனத்துங்காணேனென்சொல்வேன்பராபரமே. (௩௪௧)

வன்பொன்றுநீங்காமனதிறப்பமாறாப்பேர் *
அன்பொன்றும்போதுமெனக்கையாபராபரமே. (௩௪௨)

ஏதுந்தெரியாவெளியேனவாவெனநின் *
போதநிலைகாட்டிற்பொறாதோபராபரமே (௩௪௩)

ஓராமலெல்லாமொழிந்தேதற்குன்றெய்வவருள் *
தாராதிருக்கத்தகுமோபராபரமே. (௩௪௪)

மோனந்தருஞானமூட்டியெனக்குவட்டா *
ஆனந்தவாழ்க்கையருளாய்பராபரமே. (௩௪௫)

வாடுமுகங்கண்டென்னைவாடாமலேகாத்த. *
நீடுங்கருணைநிறைவேபராபரமே (௩௪௬)

புந்தியினுனின்னடியைப்போற்றுகின்றமெய்யடியார் *
சிந்தையிரப்போநின்றியானம்பராபரமே. (௩௪௭)

உனக்குவமையாக்கருணையுள்ளவரும்வன்மைக் *
கெனக்குவமையானவருமில்லைபராபரமே (௩௪௮)

தாயிருந்தும்பிள்ளைதளர்ந்தாற்போலெவ்விடத்தும் *
நீயிருந்துநான்றளர்ந்து நின்றேன்பராபரமே. (௩௪௯)

வாயாற்கிணறுகெட்டவாறேபோல்வாய்ப்பேசிப் *
பேயானார்க்கின்பமுண்டோபேசாய்பராபரமே. (௩௫௰)

பாவமென்றாலே தும்பயமின்றிச்செய்யவிந்தச் *
சீவனுக்கார்போதந்தெரித்தார்பராபரமே. (௩௫௧)

இன்பநிருவிகற்பமின்றேதாவன்றெனிலோ *
துன்பம்பொறுப்பரிதுசொன்னேன்பராபரமே. (௩௫௨)

கற்குநிலைகற்றாற்கருவியவிழாதருளாய் *
நிற்குநிலைகற்பதுவேநீதம்பராபரமே (௩௫௩)

காச்சச்சுடர்விடும்பொற்கட்டிபோனின்மலமாய்ப் *
பேச்சற்றவரோபிறவார்பராபரமே (௩௫௪)

பற்றொழிந்துசிந்தைப்பதைப்பொழிந்துதானேதான் *
அற்றிருப்பதென்றைக்கமைப்பாய்பராபரமே. (௩௫௫)

உருவெளிதான்வாதவூருத்தமர்க்கல்லாலினமும் *
குருவழிநின்றார்க்குமுண்டோகூறாய்பராபரமே (௩௫௬)

தேகமியாதேனுமொருசித்திபெறச்சீவன்முத்தி *
யாகுநெறிநல்லநெறியையாபராபரமே. (௩௫௭)

உலகநெறிபோற்சடலமோயவுயிர்முத்தி *
இலகுமெனல்பந்தவியல்போபராபரமே. (௩௫௮)

பரமாப்பரவெளியாப்பார்ப்பதல்லான்மற்றெவர்க்கும் *
திரமேதமில்லைநன்றாத்தேர்ந்தேன்பராபரமே. (௩௫௯)

தேடுவேனின்னருளைத்தேடுமுன்னேயெய்தினடம் *
ஆடுவேனானந்தமாவேன்பராபரமே (௩௬௰)

உள்ளங்குழையவுடல்குழையவுள்ளிருந்த *
கள்ளங்குழையவென்றுகாண்பேன்பராபரமே. (௩௬௧)

பட்டப்பகற்போலப்பாழ்த்தசிந்தைமாளினெல்லாம் *
வெட்டவெளியாகவிளங்கும்பராபரமே. (௩௬௨)

பார்க்கினணுப்போற்கிடந்தபாழ்ஞ்சிந்தைமாளினென்னை *
யார்க்குச்சரியிடலாமையாபராபரமே. (௩௬௩)

பாட்டுக்கோவன்பினுக்கோபத்திக்கோவன்பர்தங்கள் *
நீட்டுக்கெல்லாங்குறுகிநின்றாய்பராபரமே. (௱௬௪)

முத்தாந்தவித்தேமுளைக்குநிலமாயெழுந்த *
சித்தாந்தமார்க்கச்சிறப்பேபராபரமே. (௱௬௫)

உன்னுவெளியாயுறங்காசபேருணர்வாய் *
என்னுவிக்குள்ளேயிருந்தாய்பராபரமே. (௱௬௬)

தத்துவமெல்லாமகன்றதன்மையர்க்குச்சின்மயமாம் *
நித்தமுத்தசுத்தநிறைவேபராபரமே. (௱௬௭)

உள்ளக்கொதிப்பகலவுள்ளுள்ளேயானந்த *
வெள்ளமலர்கருணைவேண்டும்பராபரமே. (௱௬௮)

என்னைப்புரப்பதருளின்கடனுமென்கடனும் *
நின்னிற்பணியறவேநிற்கைபராபரமே (௱௬௯)

தானேயானநிலையைத்தந்தவருளானந்த *
வானேமனாதீதவாழ்வேபராபரமே. (௱௭௰)

மண்ணாதிபூதமெல்லாம்வைத்திருந்தநின்னிலையைக் *
கண்ணாரக்கண்டுகளித்தேன்பராபரமே. (௱௭௧)

அறியாமையீதென்றறிவித்தவன்றேதான் *
பிறியாவருணிலையும்பெற்றேன்பராபரமே. (௱௭௨)

ஈதெனவுநன்றெனவுந்தேர்ந்துநான்றேர்ந்தபடி *
எதுநடக்கவொட்டாதென்னேபராபரமே. (௱௭௩)

கண்டவறிவகண்டாகாரமெனமெய்யறிவில் *
கொண்டவர்க்கேமுத்திகொடுப்பாய்பராபரமே. (௱௭௪)

ஈறுகவல்வினைநானென்னுமவின்பசுகம் *
பேறும்படிக்கடிமைபெற்றேன்பராபரமே. (௱௭௫)

பெற்றாரனுபூதிபேசாதமோனநிலை *
கற்றாருனைப்பிரியார்கண்டாய்பராபரமே. (௱௭௬)

நீயேநானென்றுநினைப்புமறப்புமறத் *
தாயேயனையவருடந்தாய்பராபரமே. (௱௭௭)

சஞ்ஜலமற்றெல்லாநீதானென்றுணர்ந்தேனென் *
அஞ்ஜலியுங்கொள்ளாயரசேபராபரமே. (௱௭௮)

பூதமுதனாதவனாபொய்யென்றமெய்யரெல்லாம் *
காதலித்தவின்பக்கடலேபராபரமே. (௱௭௯)

வாக்குமனமொன்றுபட்டவார்த்தைபல்லால்வெவ்வேறுப்ப் *
போக்குடையவார்த்தைபொருந்தேன்பராபரமே (௬அ௰)

வன்மையின்றியெல்லாமதித்துணர்வாய்க்காகெடுவேன் *
தன்மையொன்றுந்தோயாத்தடையோபராபரமே (௬அக)

பத்தர்சித்தர்வாழிபரிபக்குவர்கள்வாழிசெங்கோல் *
வைத்தவர்கள்வாழிகுருவாழிபராபரமே (௬அஉ)

கல்லாதேனனுலுங்கற்றுணர்ந்தமெய்யடியார் *
சொல்லாலேநின்னைத்தொடர்ந்தேன்பராபரமே. (௬அ௩)

சொல்லிறப்பசச்சற்குருவாய்த்தோன்றிச்சுகங்கொடுத்த *
நல்லுனக்கேகொத்தடிமைநான்காண்பராபரமே. (௬அச)

முத்திக்குவித்தானமோனக்கரும்புவழி *
தித்தித்திடவிளைந்ததேனேபராபரமே. (௬அரு)

நித்திரையும்பாழ்த்தநினைவுமற்றுநிற்பதுவோ *
சுத்தவருணிலைநீசொல்லாய்பராபரமே. (௬அ௬)

பண்ணுமறிகடலுமற்றுரைவுமெல்லாமுன் *
கண்ணிலிருக்கவுநான்கண்டேன்பராபரமே. (௬அ௭)

பூட்டிவைத்துவஞ்சப்பொறிவழியேயென்றனைநீ *
ஆட்டுகின்றதேதோவறியேன்பராபரமே (௬அஅ)

பொய்யுணர்வாயிந்தப்புழுக்கூட்டைக்காத்திருந்தேன் *
உய்யும்வகையுமுரைதோபராபரமே. (௬அக௬)

பராபரக்கண்ணிமுற்றுப்பெற்றது. ஆ௲ ௬௨ச.

பைங்கிளிக்கண்ணி.

அந்தமுடனாதியளவாமலென்னறிவிற் *
சுந்தரவான்சோதிதுலங்குமோபைங்கிளியே. (௧)

அகமேவுமண்ணலுக்கென்னல்லலெல்லாஞ்சொல்லிச் *
சுகமானநீயோய்ச்சுகங்கொடுவாபைங்கிளியே. (௨)

ஆவிக்குளாவியெனுமற்புதனார்சிற்சுகந்தான் *
பாவிக்குங்கிட்டுமோசொல்லாய்நீபைங்கிளியே. (௩)

அருமறியாமலெனையந்தரங்கமாகவந்து *
சேரும்படியிறைக்குச்செப்பிவாபைங்கிளியே. (௪)

ஆறானகண்ணீர்க்கென்னங்கபங்கமானதையுங் *
கூறாததென்னோகுதலைமொழிப்பைங்கிளியே. (௫)

இன்பருளவாடையழுக்கேறுமெமக்கண்ணல்சுத்த *
அம்பரமாமாடையளிப்பானோபைங்கிளியே (௬)

உன்னாமலொன்றிரண்டென்றோராமல்விட்டுநெறி *
சொன்னான்வரவும்வகைசொல்லாய்நீபைங்கிளியே. (௭)

ஊருமிலார்பேருமிலாருற்றார்பெற்றாருடனே *
யாருமிலாரென்னையறிவாரோபைங்கிளியே. (௮)

ஊனைப்பாராமலெனக்குள்ளகத்துநாயகனார் *
சீனைப்பார்த்தாற்கருணைசெய்வாரோபைங்கிளியே. (௯)

என்றுவிடியுமிறைவாவோவென்றென்று *
நின்றநிலையெல்லாநிகழ்த்தாய்நீபைங்கிளியே. (௰)

எந்தமடலூடுமெழுதாவிறைவடிவைச் *
சிந்தைமடலாவெழுதிச்சேர்ப்பேனோபைங்கிளியே. (௰௧)

கண்ணுண்மணிபோலின்பங்காட்டியெனைப்பிரிந்த *
திண்ணியருமின்னம்வந்துசேர்வாரோபைங்கிளியே. (௰௨)

ஏடார்மலர்சூடேனெம்பெருமான்பொன்னடியாம் *
வாடாமலர்முடிக்குவாய்க்குமோபைங்கிளியே. (௰௩)

கலலேன்மலரோன்கனிந்தவன்பேபூசையென்ற *
நல்லோர்பொல்லாவெனையுநாடுவரோபைங்கிளியே. (௰௪)

கண்டதனைக்கண்டுகலக்கந்தவிரெனவே *
விண்டபெருமானையுநான்மேவுவனோபைங்கிளியே. (௰௫)

காணாதகாட்சிகருத்துவந்துகாணாமல் *
வீணாள்கழித்துமெலிவேனோபைங்கிளியே. (௰௬)

காந்தமிரும்பைக்கவர்ந்திழுத்தாலென்னவருள் *
வேந்தனெனையிழுத்துமேவுவனோபைங்கிளியே. (௰௭)

காதலால்வாடினதுங்கண்டனையேயெம்மிறைவர் *
போதரவாயின்பம்புசிப்பேனோபைங்கிளியே. (௰௮)

கிட்டிக்கொண்டன்பருண்மைகேளாப்பலவடிகொள் *
பட்டிக்குமின்பமுண்டோசொல்லாய்நீபைங்கிளியே. (௰௯)

கிட்டுராய்நெஞ்சிற்கிளர்வார் தழுவவென்றால் *
நெட்டுரராவரவர்நேசமென்னோபைங்கிளியே. (௨௰)

கூறுங்குணமுமில்லாக்கொள்கையினானென்கவலை *
ஆறும்படிக்குமணைவாரோபைங்கிளியே. (௨௧)

சின்னஞ்சிறியேன் றன்சிந்தைகவர்ந்தாரிறைவர் *
தன்னந்தனியேதவிப்பேனோபைங்கிளியே. (௨௨)

சிந்தைமருளைத்தெளிவித்தெனையாள *
வந்தகுருநாதனருள்வாய்க்குமோபைங்கிளியே. (௨௩)

சொல்லிறந்துநின் றசுகரூபப்பெம்மானை *
அல்லும்பகலுமணைவேனோபைங்கிளியே. (௨௪)

தற்போதத்தாலேதலைகீழதாகவையன் *
நற்போதவின்புவரநாள்செலுமோபைங்கிளியே. (௨௫)

தன்னையறியுந்தருணந்தனிற்றலைவர் *
என்னையணையாதவண்ணமெங்கொளித்தார்பைங்கிளியே. (௨௬)

தாங்கரியமையலெல்லாந்தந்தெனைவிட்டின்னருளாம் *
பாங்கியைச்சேர்ந்தாரிறைக்குப்பண்போசொல்பைங்கிளியே. (௨௭)

சாவியதோர்மர்க்கடமாந்தன்மைவிட்டேயண்ணலிடத் *
தோவியம்போனிற்கினெனையுள்குவரோபைங்கிளியே (௨௮)

தீராக்கருவழக்கைத்தீர்வையிட்டங்கென்னையினிப் *
பாரோருதாண்டானைப்பற்றுவனோபைங்கிளியே (௨௯)

தூங்கிவிழித்தென்னபலன் றூங்காமற்றூங்கிநிற்கும் *
பாங்குகண்டாலன்றோபலன்காண்பேன்பைங்கிளியே. (௩௰)

தொல்லைக்கவலைதொலைத்துத்தொலையாத *
எல்லையிலாவின்பமயமெய்துவனோபைங்கிளியே. (௩௧)

நன்னெஞ்சத்தன்பரெல்லாநாதனைச்சேர்ந்தின்பணைந்தார் *
வன்னெஞ்சத்தாலேநான்வாழ்விழந்தேன்பைங்கிளியே. (௩௨)

நானேகருதின்வரநாடார்சும்மாவிருந்தால் *
தானேயணைவரவர்தன்மையென்னோபைங்கிளியே. (௩௩)

நீர்க்குமிழிபோன் றவுடனிற்கையிலேசாகுவதஞ் *
சேர்க்கவறியாமற்றிகைப்பேனோபைங்கிளியே. (௩௪)

நெஞ்சகத்தில்வாழ்வார்நினைக்கின்வேறென் றணையார் *
வஞ்சகத்தாரல்லரவர்மார்க்கமென்னோபைங்கிளியே. (௩௫)

பன்முத்திரைச்சமயம்பாழ்படக்கல்லாலடிவாழ் *
சின்முத்திரையரசைச்சேர்வேனோபைங்கிளியே. (௫௬)

பச்சைகண்டநாட்டிற்பறக்குமுனைப்போற்பரந்தேன் *
இச்சையெல்லாமண்ணற்கியம்பிவாபைங்கிளியே. (௫௭)

பாசபந்தஞ்செய்ததுன்பம்பாராமலெம்மிறைவர் *
ஆசைதந்ததுன்பமதற்காற்றேனுன்பைங்கிளியே. (௫௮)

பாராசையற்றிறையைப்பற்றநான்பற்றிநின்ற *
பூராயமெல்லாம்புகன்றுவாபைங்கிளியே (௫௯)

பேதைப்பருவத்தேபின்றொடர்ந்தென்பக்குவமும் *
சோதித்தவண்ணல்வந்துதோய்வாரோபைங்கிளியே. (௬௰)

பைம்பயிரைநாடுமுன்போற்பார்பூத்தபைங்கொடிசேர் *
செம்பயிரைநாடித்திகைத்தேனுன்பைங்கிளியே. (௬௧)

பொய்க்கூடுகொண்டுபுலம்புவனோவெம்மிறைவர் *
மெய்க்கூடுசென்றுவிளம்பிவாபைங்கிளியே. (௬௨)

பொய்ப்பணிவேண்டேனைப்பொருட்படுத்தியண்ணலென்பால் *
மெய்ப்பணியுந்தந்தொருகான்மேவுவனோபைங்கிளியே. (௬௩)

மண்ணுறங்கும்விண்ணுறங்குமற்றுரைவேலாமுறங்கும் *
கண்ணுறங்கேனெம்மிறைவர்காதலாற்பைங்கிளியே. (௬௪)

மட்டுப்படாதமயக்கமெல்லாந்தீரவென்னை *
வெட்டவெளிவீட்டிலண்ணன்மேவுவனோபைங்கிளியே. (௬௫)

மாலைவளர்த்தென்னைவளர்த்திறைவர்பன்னெறியாம் *
பாலைவனத்தில்விட்டபாவமென்னோபைங்கிளியே. (௬௬)

மெய்யினோய்மாற்றவுஞ்சமைத்தவுண்டெம்மண்ணறந்த *
மையனோய்தீர்க்கமருந்துமுண்டோபைங்கிளியே (௬௭)

மேவுபஞ்சவண்ணமுற்றாய்விண்சிறையாலல்லலுற்றாய் *
பாவிபஞ்சவண்ணம்பகர்ந்துவாபைங்கிளியே (௬௮)

வாய்திறவாவண்ணமெனைவைத்தாண்டார்க்கென்றுயரை *
நீதிறவாச்சொல்லினிசமாங்காண்பைங்கிளியே. (௬௯)

வாட்டப்படாதமவுனவின்பங்கையாலே *
காட்டிக்கொடுத்தானைக்காண்பேனோபைங்கிளியே. (௭௰)

வாராவரவாகவந்தருளுமோனருக்கென் *
பேராசையெல்லாம்போய்ப்பேசிவாபைங்கிளியே. (௭௧)

விண்ணவர்தம்பாலமுதம்வேப்பங்காயாகவென்பால் *
பண்ணியதெம்மண்ணன்மயல்பார்த்தாயோபைங்கிளியே. (௫௨)

விண்ணுள்வளியடங்கிவேறற்றதென்னவருட் *
கண்ணுளடங்கிடவுங்காண்பேனோபைங்கிளியே. (௫௩)

விண்ணோர்நிலவுதவழ்மேடையிலெல்லாருமுற *
மண்ணானவீட்டிலென்னைவைத்ததென்னோபைங்கிளியே. (௫௪)

உள்ளத்தினுள்ளேயொளித்திருந்ததென்கள்ளமெல்லாம் *
வள்ளலறிந்தாலெனக்குவாயுமுண்டோபைங்கிளியே. (௫௫)

ஆகத்தைநீக்குமுன்னேயாவித்துணைவனை நான் *
தாகத்தின்வண்ணந்தழுவுவனோபைங்கிளியே. (௫௬)

தானேசுபாவந்தலைப்படநின்றான்ஞான *
வானானவரும்வருவாமோபைங்கிளியே. (௫௭)

கள்ளத்தலைவரவர்கைகாட்டிப்பேசாமல் *
உள்ளத்தில்வந்தவுபாயமென்னோபைங்கிளியே. (௫௮)

பைங்கிளிக் கண்ணி - முற்றுப்பெற்றது ஆக ௯௮௨.

எந்நாட்கண்ணி.

தெய்வவணக்கம்.

நீர்பூத்தவேணிநிலவெறிப்பமன்றாடும் *
கார்பூத்தகண்டனையான்காணுநாளெந்நாளோ. (௧)

பொன்னூருமன்றுண்மணிப்பூவைவிழிவண்டுசுற்றும் *
என்னாரமுதினலமிச்சிப்பதெந்நாளோ. (௨)

நீக்கமலக்கட்டறுத்துநேரேவெளியிலெம்மைத் *
தூக்கிவைக்குந்தாளைத்தொழுதிடுநாளெந்நாளோ. (௩)

கருமுகங்காட்டாமலென்றுங்கற்பூரம்வீசும் *
திருமுகமேநோக்கித்திருக்கறுப்பதெந்நாளோ. (௪)

வெஞ்சேலெனும்விழியார்வேட்கைநஞ்சுக்கஞ்சினனை *
அஞ்சேலெனுங்கைக்கபயமென்பதெந்நாளோ. (௫)

ஆறுசமயத்துமதுவதுவாய்நின்றிலங்கும் *
வீறுபனார்திருத்தாண்மேவுநாளெந்நாளோ. (௬)

பச்சைநிறமாய்ச்சிவந்தபாகங்கலந்துலகை ※
இச்சையுடனின்றானையாங்காண்பதெந்நாளோ. (௭)

ஆதியந்தங்காட்டாதகண்டிதமாய்நின்றுணர்த்தும் ※
போதவடிவானடியைப்போற்றுநாளெந்நாளோ. (௮)

கங்கைநிலவுசடைக்காட்டானைத்தந்தையெனும் ※
புங்கவெண்கோட்டானைபதம்புந்திவைப்பதெந்நாளோ. (௯)

அஞ்சுமுகங்காட்டாமலாறுமுகங்காட்டவந்த ※
செஞ்சரணச்சேவடியைச்சிந்தைவைப்பதெந்நாளோ. (௰)

தந்தையிருதாடுணித்துத்தம்பிரான்றாள்சேர்ந்த ※
எந்தையிருதாளிணைக்கேயின்புறுவதெந்நாளோ. (௰௧)

முற்றிற்று. ஆ. ௩௬௩.

குருமரபின்வணக்கம்.

துய்யகரமலராற்சொல்லாமற்சொன்னவுண்மை ※
ஐயனைக்கல்லாலரசையாமணைவதெந்நாளோ. (௧)

சிந்தையினுக்கெட்டாதசிற்சுகத்தைக்காட்டவல்ல ※
நந்தியடிக்கீழ்க்குடியாய்நாமணைவதெந்நாளோ. (௨)

எந்தைசனற்குமரனாதியெனையாட்கொள்வான் ※
வந்ததவத்தினைவாழ்த்துநாளெந்நாளோ. (௩)

பொய்கண்டார்காணப்புனிதமெனுமத்துவித ※
மெய்கண்டநாதனருண்மேவுநாளெந்நாளோ. (௪)

பாதிவிருத்தத்தாலிப்பார்விருத்தமாகவுண்மை ※
சாதித்தார்பொன்னடியைத்தான்பணிவதெந்நாளோ. (௫)

சிற்றம்பலமன்னுஞ்சின்மயராத்தில்லைநகர்க் ※
கொற்றங்குடிமுதலைக்கூறுநாளெந்நாளோ. (௬)

குறைவிலருண்ஞானமுதல்கொற்றங்குடியடிகள் ※
நறைமலர்த்தாட்கன்புபெற்றுநாமிருப்பதெந்நாளோ, (௭)

நாளவங்கள்போகாமனன்னெறியைக்காட்டியெமை ※
ஆளவந்தகோலங்கட்கன்புவைப்பதெந்நாளோ. (௮)

என்னறிவையுள்ளடக்கியென்போல்வருமவுனி ※
தன்னறிவுக்குள்ளேநான்சாருநாளெந்நாளோ. (௯)

ஆறுமொன்றைநாடினதற்காறுமுண்டாமென்றெமக்குக் *
கூறுமவுனியருள்கூடுநாளெந்நாளோ. (௰)

நில்லாமனின்றருளேநேரேபாரென்றவொரு *
சொல்லான்மவுனியருடோற்றுநாளெந்நாளோ. (௰௧)

வைதிகமாஞ்சைவமவுனிமவுனத்தளித்த *
மெய்திகழ்ந்தென்னல்லல்விடியுநாளெந்நாளோ. (௰௨)

வாக்குமனமற்றமவுனிமவுனத்தருளே *
தாக்கவுமென்னல்லலெல்லாந்தட்டழிவதெந்நாளோ. (௰௩)

முற்றிற்று, ஆ தாசு.

அடியார்வணக்கம்.

வெம்பந்தந்தீர்த்துலகாள்வேந்தன்றிருஞான *
சம்பந்தனையருளாற்சாருநாளெந்நாளோ. (௧)

ஏரின்சிவபோகமிங்கிவர்க்கேயென்னவுழ *
வாரங்கொள்செங்கையர்தாள்வாரம்வைப்பதெந்நாளோ. (௨)

பித்தரிறையென்றறிந்துபேதைபாற்றூதனுப்பு *
வித்ததமிழ்ச்சமர்த்தர்மெய்ப்புகழ்வதெந்நாளோ. (௩)

போதவூர்நாடறியப்புத்தர்தலைமவாதில்வென்ற *
வாதவூரையனன்பைவாஞ்சிப்பதெந்நாளோ. (௪)

ஒட்டுடன்பற்றின்றியுலகைத்துறந்தசெல்வப் *
பட்டினத்தார்பத்ரகிரிபண்புணர்வதெந்நாளோ. (௫)

கண்டதுபொய்யென்றகண்டாகாரசிவமெய்யெனவே *
விண்டசிவவாக்கியர்தாண்மேவுநாளெந்நாளோ. (௬)

சக்கரவர்த்திதவராசயோகியெனு *
மிக்கதிருமூலனருண்மேவுநாளெந்நாளோ. (௭)

கந்தானுபூதிபெற்றுக்கந்தரனுபூதிசொன்ன *
எந்தையருணடியிருக்குநாளெந்நாளோ. (௮)

எண்ணரியசித்தரிமையோர்முதலான *
பண்ணவர்கள்பத்தரருள்பாவிப்பதெந்நாளோ. (௯).

யாக்கையைப்பழித்தல்.

சுக்கிலமுநீருஞ்சொரிமலமுநாறுமுடல் *
புக்குழலும்வாஞ்சையினிப்போதுமென்பதெந்நாளோ. (௧)

நீர்க்குமிழிபூணமைக்குநின்றாலுநில்லாமெய் *
பார்க்குமிடத்திதன்மேற்பற்றறுவதெந்நாளோ. (௨)

காக்கைநரிசெந்நாய்கழுகொருநாள்கூடியுண்டு *
தேக்குவிருந்தாமுடலைச்சீயென்பதெந்நாளோ. (௩)

செங்கிருமியாதிசெனித்தசென்மபூமியினை *
இங்கெனுடலென்னுமிழுக்கொழிவதெந்நாளோ. (௪)

தத்துவர்தொண்ணூற்றறுவர்தாமாய்வாழிந்நாட்டைப் *
பித்தனானென்னும்பிதற்றொழிவதெந்நாளோ. (௫)

ஊனொன்றிநாதனுணர்த்துமதைவிட்டறிவேன் *
நானென்றபாவிதலைநாணுநாளெந்நாளோ. (௬)

வேலையிலாவேதன்விதித்தவிந்த்ரஜாலவுடல் *
மாலைவியாபாரமயக்கொழிவதெந்நாளோ. (௭)

ஆழ்ந்துநினைக்கினரோசிகமாமிவ்வுடலில் *
வாழ்ந்துபெறும்பேற்றைமதிக்குநாளெந்நாளோ. (௮)

மும்மலச்சேறானமுழுக்கும்பிபாகமெனும் *
இம்மலகாயத்துளிகழ்ச்சிவைப்பதெந்நாளோ. (௯)

நாற்றமிகக்காட்டுநவவாயில்பெற்றபசும் *
சோற்றுத்துருத்திசுமையென்பதெந்நாளோ. (௰)

உருவிருப்பவுள்ளேதானூறுமலக்கேணி *
அருவருப்புவாழ்க்கையைக்கண்டஞ்சுநாளெந்நாளோ. (௰௧)

முற்றிற்று. ஆ தூஉ௬.

மாதரைப் பழித்தல்.

மெய்வீசுநாற்றமெல்லாமிக்கமஞ்சளான்மறைத்துப் *
பொய்வீசும்வாயார்புலையொழிவதெந்நாளோ. (௧)

திண்ணியநெஞ்சப்பறவைசிக்கக்குழற்காட்டில் *
கண்ணிவைப்போர்மாயங்கடக்குநாளெந்நாளோ. (௨)

கண்டுமொழிபேசிமனங்கண்டுகொண்டுகைவிலையாக் *
கொண்டுவிடுமானார்பொய்க்கூத்தொழிவதெந்நாளோ. (௩)

காமனைவாவென்றிருண்டகண்வலையைவீசுமின்னார் *
நாமமறந்தருளை நண்ணுநாளெந்நாளோ. (௪)

கண்களில்வெண்பூளைகாப்பக்கருமையிட்ட *
பெண்கண்மயறப்பிப்பிழைக்குநாளெந்நாளோ. (௫)

வீங்கித்தளர்ந்துவிழுமுலையார்மேல்வீழ்ந்து *
தூங்குமதன்சோம்பைத்துடைக்குநாளெந்நாளோ. (௬)

கச்சிருக்குங்கொங்கைக்கரும்பிருக்குமின்மாற்றம் *
வைச்சிருக்குமாதர்மயக்கொழிவதெந்நாளோ. (௭)

பச்சென்றகொங்கைப்பசப்பியர்பாழானமயல் *
நச்சென்றறிந்தருளை நண்ணுநாளெந்நாளோ. (௮)

உந்திச்சுழியாழத்தைச்சுழித்தகன *
சந்தித்தனத்தார்தமைமறப்பதெந்நாளோ (௯)

தட்டுவைத்தசேலைகொய்சகத்திற்சிந்தையெல்லாம் *
கட்டிவைக்குமாயமின்னார்கட்டழிவதெந்நாளோ. (௰)

ஆழாழியென்னவரவுபடாவஞ்சநெஞ்சப் *
பாழானமாதர்மயற்பற்றொழிவதெந்நாளோ. (௰௧)

தூயபனித்திங்கள்சுடுவதெனப்பித்தேற்றும் *
மாயமடவார்மயக்கொழிவதெந்நாளோ. (௰௨)

ஏழைக்குறும்புசெயுமேந்திழையார்மோகமெனும் *
பாழைக்கடந்துபயிராவதெந்நாளோ. (௰௩)

விண்டுமொழிகுளறிவேட்கைமதுமொண்டுதரும் *
தொண்டியர்கள்கட்கடையிற்சுற்றொழிவதெந்நாளோ. (௰௪)

மெய்யிற்சிவம்பிறக்கமேவுமின்பம்போன்மாதர் *
பொய்யிலின்பின்றென்றுபொருந்தாநாளெந்நாளோ. (௰௫)

முற்றிற்று ஆ௲ தூ௱௪௧.

தத்துவமுறைமை.

ஐம்பூதத்தாலேயலக்கழிந்தகோஷமற *
ஐம்பூதநாதனருளெய்துநாளெந்நாளோ. (௧)

சத்தமுதலாம்புலனிற்சஞ்சரித்தகள்வரெனும் *
பித்தர்பயந்தீர்ந்துபிழைக்குநாளெந்நாளோ. (௨)

நாளும்பொறிவழியைநாடாதவண்ணமெமை *
யாளும்பொறியாலருள்வருவதெந்நாளோ. (௩)

வாக்காதியானகன்மமாயைதம்பால்வீண்காலம் *
போக்காமலுண்மைபொருந்துநாளெந்நாளோ. (௪)

மனமானவானரக்கைம்மாலையாகாமல் *
எனையாளடிகளடியெய்துநாளெந்நாளோ. (௫)

வேட்டைப்புலப்புலையர்மேவாதவண்ணமனக் *
காட்டைத்திருத்திக்களைகாண்பதெந்நாளோ. (௬)

உந்துபிறப்பிறப்பையுற்றுவிடாதெந்தையருள் *
வந்துபிறக்கமனமிறப்பதெந்நாளோ. (௭)

புத்தியெனுந்துத்திப்பொறியரவின்வாய்த்தேரை *
ஒத்துவிடாதெந்தையருளோங்குநாளெந்நாளோ. (௮)

ஆங்காரமென்னுமதயானைவாயிற்கரும்பாய் *
ஏங்காமலெந்தையருளெய்துநாளெந்நாளோ. (௯)

சித்தமெனும்பௌவத்திரைக்கடலில்வாழ்துரும்பாய் *
நித்தமலையாதருளினிற்குநாளெந்நாளோ. (௰)

வித்தியாதத்துவங்களேழும்வெருண்டோடச் *
சுத்தபரபோகத்தைத்துய்க்குநாளெந்நாளோ. (௰௧)

சுத்தவித்தைபேமுதலாத்தோன்றுமோரைந்துவகைத் *
தத்துவத்தைநீங்கியருள்சாருநாளெந்நாளோ. (௰௨)

பொல்லாதகாமப்புலைத்தொழிலிலென்னறிவு *
செல்லாமனன்னெறியிற்சேருநாளெந்நாளோ. (௰௩)

அடிகளடிக்கீழ்க்குடியாயாம்வாழாவண்ணம் *
குடிகெடுக்கும்பாழ்மடிமைக்கூறொழிவதெந்நாளோ. (௰௪)

ஆனபுறக்கருவியாறுபத்துமற்றுளவும் *
போனவழியுங்கூடப்புன்முளைப்பதெந்நாளோ. (௰௫)

அந்தகனுக்கெங்குமிருளானவாறுவறிவில் *
வந்தவிருள்வேலைவடியுநாளெந்நாளோ. (௰௬)

புன்மலத்தைச்சேர்ந்துமலபோதம்பொருந்துதல்போய் *
தின்மலத்தைச்சேர்ந்துமலநீங்குநாளெந்நாளோ. (௰௭)

கண்டுகண்டுந்தெருக்கலக்கமெல்லாந்தீர் வண்ணம் *
பண்டைவினைவேரைப்பறிக்குநாளெந்நாளோ. (௰௮)

பைங்கூழ்வினைதான்படுசாவியாகவெமக் *
கெங்கோன்கிரணவெயிலெய்துநாளெந்நாளோ. (௰௯)

குறித்தவிதமாகியாற்கூடும்வினையெல்லாம் *
வறுத்தவித்தாம்வண்ணமருள்வந்திடுநாளெந்நாளோ. (௨௰)

சஞ்சிதமேயாதிசரக்கானமுச்சேரும் *
வெந்தபொரியாகவருண்மேவுநாளெந்நாளோ. (௨௧)

தேகமுதனுன்காத்திரண்டொன்றாய்நின்றிலகு *
மோகமிகுமாயைமுடியுநாளெந்நாளோ. (௨௨)

சத்தமுதலாத்தழைத்திங்கெமக்குணர்த்தும் *
சுத்தமாமாயைதொடக்கறுவதெந்நாளோ. (௨௩)

எம்மைவினையையிறையையெம்பாற்காட்டாத *
அம்மைதிரோதையகலுநாளெந்நாளோ. (௨௪)

நித்திரையாய்வந்துநினைவழிக்குங்கேவலமாம் *
சத்துருவைவெல்லுஞ்சமர்த்தறிவதெந்நாளோ. (௨௫)

சன்னல்பின்னலானசகலமென்னுங்குப்பையிடை *
முன்னவன்ஞானக்கனலைமூட்டுநாளெந்நாளோ. (௨௬)

மாயாவிகாரமலமொழிசுத்தாவத்தை *
தோயாவருளைத்தொடருநாளெந்நாளோ. (௨௭)

முற்றிற்று. -ஆ ௩௱௫௰௮.

தன்னுண்மை.

உடம்பதியுமென்னுமந்தவூழலெல்லாந்தீரத் *
திடம்பெறவேயெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (௧)

செம்மையறிவாலறிந்துதேகாதிக்குள்ளிசைந்த *
எம்மைப்புலப்படவேயாமறிவதெந்நாளோ. (௨)

தத்துவமாம்பாழ்த்தசடவுருவைத்தான்சுமந்த *
சித்துருவாமெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (௩)

பஞ்சப்பொறியையுயிரென்னுமந்தப்பஞ்சமரச் *
செஞ்செவேயெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (௪)

அந்தக்கரணமுயிராமென்றவந்தரங்க *
சிந்தைக்கணத்திலெம்மைத்தேர்ந்தறிவதெந்நாளோ. (௫)

முக்குணத்தைச்சீவனென்னுமூடத்தைவிட்டருளால் *
அக்கணமேயெம்மையறிந்துகொள்வதெந்நாளோ. (௬)

காலையுயிரொன்னுங்கலாதிகள்சொற்கேளாமல் *
சீலமுடனெம்மைத்தெளிந்துகொள்வதெந்நாளோ. (௭)

வான்கெடுத்துத்தேடுமதிகேடர்போலவெமை *
நான்கெடுத்துத்தேடாமனன்கறிவதெந்நாளோ. (௮)

முற்றிற்று. ஆ தூஎசு.

அருளியல்பு.

ஊனந்தருநாடிதுநமக்குவேண்டாமென் *
ஞானந்தநாட்டிலவதரிப்பதெந்நாளோ. (௧)

பொய்க்காட்சியானபுவனத்தைவிட்டருளா *
மெய்க்காட்சியாம்புவனமேவுநாளெந்நாளோ. (௨)

ஆதியந்தங்காட்டாமலம்பரம்போலேநிறைந்த *
நீதிலருட்கடலைச்சேருநாளெந்நாளோ. (௩)

எட்டுத்திசைக்கீழ்மேலெங்கும்பெருகிவரும் *
வெட்டவெளிவிண்ணூற்றின்மெய்தோய்வதெந்நாளோ. (௪)

சூதானமென்றுசுருதியெல்லாமோலமிடு *
மீதானமானவெற்பைமேவுநாளெந்நாளோ. (௫)

வெந்துவெடிக்கின்றசித்தைவெப்பகலத்தண்ணருளாய் *
வந்துபொழிகின்றமழைகாண்பதெந்நாளோ. (௬)

சூரியர்கள்சந்திரர்கடோன்றாச்சொயஞ்சோதிப் *
பூரணதேயத்திற்பொருந்துநாளெந்நாளோ. (௭)

கன்றுமனவெப்பக்கலக்கமெலாந்தீரவருள் *
தென்றல்வந்துவீசுவெளிசேருநாளெந்நாளோ. (௮)

கட்டுநமன்செங்கோல்கடாவடிக்குங்கோலாக *
வெட்டவெளிப்பொருளைமேவுநாளெந்நாளோ. (௯)

சாலக்கபாடத்தடைதீரவெம்பெருமான் *
ஓலக்கமண்டபத்துளோடுநாளெந்நாளோ. (௰)

விண்ணவன்றனென்னும்விரிநிலாமண்டபத்தில் *
தண்ணீரருந்தித்தவர்வொழிவதெந்நாளோ (௰௧)

வெய்யபுவிபார்த்துவிழித்திருந்தவல்லலறத் *
துய்யவருளிற்றுயிலுநாளெந்நாளோ. (௰௨)

வெய்யபிறவிவெயில்வெப்பமெலாம்விட்டகல *
ஐயனடிநீழலணையுநாளெந்நாளோ. (௰௩)

வாதைப்பிறவிவளைகடலைநீந்தவையன் *
பாதப்புணையிணையைப்பற்றுநாளெந்நாளோ. (௰௪)

ஈனமில்லாமெய்ப்பொருளையிம்மையிலேகாணவெளி *
ஞானமெனுமஞ்சனத்தைநான்பெறுவதெந்நாளோ. (௰௫)

எல்லாமிறந்தவிடத்தெந்தைநிறைவாம்வடிவைப் *
புல்லாமற்புல்லிப்புணருநாளெந்நாளோ. (௰௬)

சடத்துளுயிர்போலெமக்குத்தானுயிராய்ஞானம் *
நடத்துமுறைகண்டுபணிநாம்விடுவதெந்நாளோ. (௰௭)

எச்சனுமாந்துன்பவிருட்கடலைவிட்டருளாம் *
மிக்ககரையேறிவெளிப்படுவதெந்நாளோ. (௰௮)

முற்றிற்று. ஆ-தொ ௱௯௪.

பொருளியல்பு

கைவிளக்கின்பின்னேபோய்க்காண்பார்போன்மெய்ஞ்ஞான *
மெய்விளக்கின்பின்னேபோய்மெய்காண்பதெந்நாளோ. (௧)

கேடில்பசுபாசமெல்லாங்கீழ்ப்படவுந்தானேமேல் *
ஆடுஞ்சுகப்பொருளுக்கன்புறுவதெந்நாளோ. (௨)

ஆணவத்தைநீக்கியறிவூடேயைவகையாக் *
காணவத்தைக்கப்பாலைக்காணுநாளெந்நாளோ. (௩)

நீக்கப்பிரியாநினைக்கமறக்கக்கூடாப் *
போக்குவரவற்றபொருளணைவதெந்நாளோ. (௪)

அண்டருக்குமெய்ப்பில்வைப்பாமாரமுதையென்னகத்தில் *
கண்டுகொண்டுநின்றுகளிக்குநாளெந்நாளோ. (௫)

காட்டுந்திருவருளேகண்ணாகக்கண்டுபர *
வீட்டின்பமெய்ப்பொருளைமேவுநாளெந்நாளோ. (௬)

நானானதன்மைநழுவியேயெவ்வுயிர்க்கும் *
தானானவுண்மைதனைச்சாருநாளெந்நாளோ. (௭)

